# யோகசுவாமிகளும் கிளிநொச்சியும்

## (ஒரு ஆன்மீக யாத்திரை)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ



# யோக சுவாமிகளும் கிளிநொச்சியும்

[ஒரு ஆன்மீக யாத்திரை]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர்:- யோக சுவாமிகளும் கிளிநொச்சியும் (ஒரு ஆன்மீக யாத்திரை)
ஆக்கம் :- க. இராசரத்தினம், 1ம் பண்ணை, கனகபுரம் , கிளிநொச்சி.
அகில இலங்கை சமாதான நீதவான்,
சத்திய மொழிபெயர்ப்பாளர்,
ஓய்வு பெற்ற நீதிமன்றப்பதிவாளர் ( தரம் -1 ).
முதற்பதிப்பு:- 19.11.2004
பதிப்புரிமை: தலைவர், மகாதேவ ஆசிரமம்,ஜெயந்திநகர், கிளிநொச்சி
அச்சுப்பதிப்பு:- சிமாட் பிறிண்ட்ஸ், 717,காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
இணை வெளியீடு:- கிளிநொச்சி ஜெயந்திநகர் மகாதேவ ஆச்சிரமமும்
வன்னேரிக்குளம் யோகசுவாமிகள் முதியோர் இல்லமும்.

கிளிநொச்சி நகர மத்தியில் யோக சுவாமிகளால் நாட்டப்பட்ட மாங்கன்று உள்ள நிலப்பரப்பில் பிரார்த்தனை மண்டபம், யாத்திரிகர் மடம் ஆகியவற்றுக்கான கட்டுமானப்பணி நடைபெறுகின்றது. (அட்டைப்படத்தை பார்க்கவும்). இந்நூல் வெளியீட்டினால் கிடைக்கப்பெறும் அன்பளிப்புக்கள் யாவும் நூல் வெளியீட்டோடு சம்பந்தப்பட்ட செலவு கழிய மிகுதி இத்திருவடி நிலைய திருப்பணிச் சபையின் கிளிநொச்சி இலங்கை வங்கி சேமிப்புக் கணக்கு ................................... இல் வைப்பில் இடப்படும்.

B.C. S/A.29425

**யோகசுவாமிகளுக்கும் அவரது வழிகாட்டலில்**
**கிளிநொச்சி ஜெயந்திநகரில் மகாதேவ ஆசிரமம்**
**அமைத்து தெய்வப்பணியாற்றிய**
**வடிவேல் சுவாமிகளுக்கும்**
**சமர்ப்பணம்.**




உ
சிவமயம்

நீ உடலன்று, மனமன்று,
புத்தியன்று, சித்தமன்று
நீ ஆத்மா. ஆத்மாவொரு
ம் அழியாது. [illegible]

[illegible]

## யாழ்ப்பாணம் சிவயோகசுவாமிகள்



அண்டமும் பிண்டமும் அகத்திற் கண்டேன்
அண்டமும் பிண்டமும் அகமாய்க் கண்டேன்
அண்டமும் பிண்டமும் அகத்திற் கண்டிலேன்
அண்டமும் பிண்டமு மாயிருந் தேனே.

- நற்சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


01. நூலறிமுகம்
02. ஆசியுரை - ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள், மகாதேவ ஆசிரமம், ஜெயந்திநகர், கிளிநொச்சி.
03. ஆசியுரை - தவத்திரு ஆத்மகனானந்தா சுவாமிகள், தலைவர், இராமகிருஷ்ண மிசன், இலங்கை கிளை, கொழும்பு - 06.
04. வாழ்த்துரை- துர்க்காதுரந்தரி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, தலைவர், தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தானம்.
05. ஆசியுரை - நல்லை ஆதீன முதல்வர்
06. ஆசியுரை - சிவஸ்ரீ கு.இரத்தினேஸ்வரக்குருக்கள், பிரதம சிவாச்சாரியார், அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம், கிளிநொச்சி.
07. வாழ்த்துரை திரு.செ.வினாசித்தம்பி, ஓய்வுபெற்ற விரிவுரையாளர், ஆசிரிய கலாசாலை, மட்டக்களப்பு. சிவத்தொண் டன் நிலையம், செங்கலடி.
08. வாழ்த்துரை சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம், உதவிப் பணிப்பாளர், இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களம்.
09. வாழ்த்துரை திரு.தி.இராசநாயகம், அரச அதிபர்,கிளிநொச்சி.
10. வாழ்த்துரை பேராசிரியர் அ. சண்முகதாஸ், யாழ். பல்கலைக்கழகம்.
11. வாழ்த்துரை பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், யாழ். பல்கலைக் கழகம்.
12. வாழ்த்துரை பேராசிரியர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் யாழ். பல்கலைக்கழகம்.
13. அணிந்துரை திரு.பொன்.நித்தியானந்தம், உதவி அரச அதிபர், கிளிநொச்சி.
14. அணிந்துரை திரு.K.சிவயோகேஸ்வரன், பொறியியலாளர், பர்மிங்காம், லண்டன், U.K.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. முகவுரை திரு.நா.சோதிநாதன்,
உதவிக் கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி.
16. விடயம் "யோக சுவாமிகளும் கிளிநொச்சியும்"
(ஒரு ஆன்மீக யாத்திரை) பக்கம் 01-70 வரை -
ஒரு சிவத்தொண்டன்
17. யோகசுவாமிகள் பாடியருளிய நற்சிந்தனைப் பாடல்களும்
திருமுகங்களும் - பக்கம் 71-80 வரை
18. காயத்திரி மந்திரமும் பதவிளக்கமும், பக். 81-82
19. சிவத்தொண்டரும் சிறுத்தொண்டரும் -
சிவத்தொண்டன் மலர் 22 இதழ் 01
மறுபிரசுரம், பக். 83-88
20. நாடும் ஈழத்து நற்தமிழ் நாட்டு ஞானப் பொக்கிஷங்களில் சிலர்
பக். 89 - 108
21. மௌனம் ஆர்.கிருஷ்ணபிள்ளை, கனடா, பக்.109
22. கிருஷ்ணமூர்த்தியின் சிந்தனைகள் (ஆங்கிலத்தில்)
ஆக்கம்:- ஆர்.கிருஷ்ணபிள்ளை, கனடா,
பக்.110-113
23. இந்திய ஜனாதிபதி மாண்புமிகு ஏ.பி.ஜே.அப்துல் கலாம் அவர்க ளின் வாழ்க்கைக் குறிப்பு - பக் 114-119
24. ஆழ்மனத் தியானத்திலிருந்தவேளை கண்டுபிடிப்பினைச் செய்தேன்- பாங்கொக் சத்தியசாயி பல்கலைக் கழகத் தலைவரும், நாஸா விஞ்ஞானியுமாகிய கலாநிதி ஆர்ற் ஒங் ஜூம் சாய், பக். 120 - 122
25. ஆத்ம விசாரத் துணுக்கு, பக். 123-138



உ
சிவமயம்

# நூலறிமுகம்

சிவயோக சுவாமிகளின் குருசீட பாரம்பரியத்தில் வந்துதித்து தெய்வீகப் பணியே தன்பணியாக வாழ்ந்து வரும் தவத்திரு செல்லத்துரை சுவாமிகள் வன்னேரிக்குளம் யோகசுவாமிகள் திருவடி நிலையத்தில் திருவடி பிரதிஷ்டை செய்யும் பொருட்டு வருகைதந்ததோடு அமையாது யோக சுவாமிகளின் அருட்பார்வைக்குட்பட்ட அமைப்புக்கள், கோவில்கள் ஆச்சிரமங்கள் அனைத்துக்கும் விஜயம் செய்தது பெரும் பேறென மக்கள் போற்றுகின்றனர். இந்தக் கருப்பொருளை முக்கியமாகக் கொண்டு யோக சுவாமிகளின் நினைவோடு ஆரம்பித்த நூல் பல தெய்வீக தத்துவக் கருத்துக்களை மேற்கோள்களாக காட்டி நீண்ட எழுத் தோவியமாக அமைந்து விட்டது. இந்நூலில் வரவேண்டிய விடயம் பற்றி சிந்திக்க சிந்திக்க திருவருள் கைகூடுது சிந்தை களி கூருது என்ற நிலையில் ஆற்றொழுக்கு போல வந்து கொண்டே இருந்தன.

இந்நூலில் உட்புகுத்தப்பட்ட கருத்துக்கள் யாவும் யோக சுவாமிகளின் அருளினால் அன்றி வேறெதுவும் இல்லை. இதனோடு சம்பந்தப்பட்ட என்ன விடயத்தைச் சிந்தித்தாலும் உடனே செயற்படக் கூடியதாக செயலுருப்பெற்றன. இங்கு குறிப்பிட்ட விடயங்கள் யாவும் உண்மை நிகழ்வுகளே அன்றி கற்பனையில் எழுந்தவை அல்ல. ஒரு அநுபூதி வாழ்வோடு சம்பந்தப்பட்டவை. ஆகவேதான் ஆதாரத்தாலே நிராதாரம் காணவேண்டும் என்ற ஆர்வமுனைப் பினால் எழுதப்பட்ட நூலுக்கு ஒரு ஆன்மீக யாத்திரை என்ற பெயரை இட வேண்டும் என்ற கருத்தை சூக்குமமாக உள்ளெழுந்த சிந்தனை அறிவுறித்தியது.

ஆகவே இந்நூலை படிக்க ஆரம்பிக்கும் போதே ஆன்மீக யாத்திரை தொடங்குகின்றோம் என்ற நோக்குடன் ஆரம்பிப் போமாகுக. முடிவில் ஆத்மவிசாரத் துணுக்கு என்ற பகுதியின் ஈற்றில் சாதனை உள்ள சத்துக்கள் காண்பரே என்ற யோக சுவாமிகளின் வாக்குக்கு அணிசேர்ப்பதாக சிவனின் திருக்கோல காட்சியை அமைத்துக் காட்டியுள்ளதும் இறை திருவருளின் செயற்பாடே. எங்கள் உள்ளத்தில் அவன் தோற்றத்தையே நிறைத்து யோகசுவாமிகளின் ஆனந்தக் களிப்பு படலை மனதில் எந்நாளும் பதித்துக் கொள்வோமாக.

- நூலாசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தவத்திரு வடிவேல் சுவாமிகள்

அசத்தெல்லாம் சத்தாக அஞ்ஞான இருள்
ஞான ஒளியதாக கொடிய அழிவெனும் சக்தி
அமுதமாக அருள்வாய் அவனிக்கெல்லாம்
அமைதி! அமைதி! அமைதி!


ஸ்ரீமத் கணேசானந்த மகாதேவ சுவாமிகள்

# மகாதேவ ஆச்சிரமம்
# Mahadeva Ashram

ஜெயந்திநகர், கிளிநொச்சி.

## சிவயோக சுவாமிகளும் கிளிநொச்சியும்
## ஒரு ஆன்மீக யாத்திரை

தவம் செய்வார் தம் கருமம் செய்வார். தவம் என்னும் பதம் குறிப்பது உலக சேமத்திற்கு செய்யும் தவம். அது தான் உத்தமம். தன்னுடைய இகலோக வாழ்க்கை மேம்பாடு ஏற்பட நினைந்து செய்வது, சாதனை பண்ணுவது காமியத்தவம் என்னும் செயல்ப்பாட்டிற்குப் பொருத்தமானது. இறைவன் உலகில் எல்லாச் சீவராசிகளிலும் ஆரோகணித்திருப்பது எவருக்கும் புரியாத புதிர். மனித ஜென்மம் கிடைப்பது மிக மிக அரிதிலும் அரிது, உத்தமர்கள், தவசிரேட்டர்கள், முனிவர்கள், முனிபுங்கவர்கள், சைவசமயிகள் பஞ்சமா பாதகங்களை செய்யாதவர்கள் மத்தியில் பிறப்பெடுத்து பிறவிப் பெருஞ்சமுத்திரத்தை கடத்தலே மானிடஜென்மத்தின் மாண்பு. சாதாரணமாகச் சாதித்து விடமுடியாது, சாதனையன்றியொன்றைச் சாதிப்பார் உலகிலில்லை. நூதன விவேகியுள்ளே நுழையுமா நுழையுமாகில், ஆகாமியம், சஞ்சிதம், பிராரப்தம், ஆகிய மூன்று வினைகள் தொடருவது யாவருக்கும் புலனாகும். நான் என்பதையும் எனதென்பதையும் அறவே ஒழித்தற்கு தயாராக வேண்டும். இதற்குத்தான் சாதனை பண்ணிக் குருவருளைத் தேடி, ஆசான் வாக்குத் தவறாது அவருக்குப்பணிவிடை செய்து குருவின் நல்லாசியைப் பெற்று சஞ்சித வினையை களைந்து பிராரப்த வினையை இறைவன் நம்மை தம் பாதபங்கயங்களில் சேர்த்து கொள்வதற்குக் கொடுத்தருளிய பரிசு என்பதாகும். என்மனம் திருக்கோயிலாய்த்தினம் குடியிருந்தருள் குருமூர்த்தி சென்ம சஞ்சித வினையை வேரறுத்திடுவீர், என மாணவன் குருவிடம் வினாவுகின்றார், குருவே சிவமெனக் கூறுகின்றார் திருமூல நாயனார் அவர்கள். விரிவுக்கஞ்சுகின்றோம். எல்லாம் **எப்பவோ முடிந்தகாரியம்** என்னும் மகாவாய்க்கியங்களை நினைவு கூர்வோமாக. இவற்றுக்கெல்லாம் பிரத்தியட்சமாக நடமாடும் குருநாதர் செல்லத்துரை சுவாமிகள், சாந்த சுவாமிகள், சிவாயசுப்பிர முனி சுவாமிகள், மார்க்கண்டு சுவாமிகள், எங்கள் குருநாதன், ஆன்மீக யாத்திரை நூலாசிரியர் அகில இலங்கை சமாதான நீதவான் திருவாளர் க. இராசரத்தினம் அவர்கள் ஓர் பக்தி சாதனம் படைத்தவர், யோகசுவாமிகளிடம் ஆன்மீக அன்பு பூண்டு பெரும் சாதனை படைக்கின்றார். கடந்த காலங்களில் இது போன்ற நூல் வெளிவரவில்லை என்றே யூகிக்கலாம், ஆன்மீக யாத்திரை போன்று அரிய பெரிய படைப்புக்களை சைவ மக்கள் அனைவரும் உய்த்தேற வழிவகுப்பாராகுக. இந்திய ஜனாதிபதியின் மனத்திலும் குடி கொண்டு விட்டார் என்பது நூல் படிப்பவர்கட்குப் புரியும். மேலும் மகாதேவ ஆச்சிரம முன்னாள் செயலாளராகவும் இப்பொழுதும் கடமை யாற்றுகின்ற புண்ணியவான் அரும் பெரும் சாதனை படைக்கின்றார், வாக்குத்தேவி இவரின் நாவில் நர்த்தனம் செய்கின்றாள், குருபக்தியில் மேம்பாடுடையவர், அன்னார் நீடூழி காலம் வாழ குருவருளும் திருவருளும் காப்பதாகுக. சித்திப்பதாகுக.

கல்லாலின் புடையமர்ந்து கற்ற கேள்வி நால்வருக்கும்
வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப்பாலாய் எல்லாமாய்
அல்லவுமாய் இருந்தனை இருந்து காட்டிச் சொல்லாமல்
சொன்னவரை நினைந்து பவத் தொடக்கை வெல்வாம்.
- திருவிளையாடற் புராணம் -

**இறைபணியில்**
**கணேசானந்த மகாதேவசுவாமிகள்**

29.08.2004





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஆசியுரை

**RAMAKRISHNA MISSION**
(Ceylon Branch)
40, Ramakrishna Road, Colombo 6.

Phone - 588253 & 075 513805
Email - rkmcey@eureka.lk
rkmlnka@lanka.ccom.lk

அன்பர் திரு. க. இராசரத்தினம் அவர்கள் எழுதி வெளியிடும் யோக சுவாமிகளும் கிளிநொச்சியும் (ஒரு ஆன்மிக யாத்திரை) என்னும் இந் நூல், ஒரு ஆன்மிக சாதகனது வாழ்க்கையை நெறிப்படுத்த உதவும் கருத்துக்களை வாரி வழங்குகின்றது.

திரு செல்லத்துரை சுவாமிகள் சென்ற ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் கிளிநொச்சிக்கு விஜயம் செய்து, அங்கு வன்னேரிக்குளம் பகுதியில் இயங்கிவரும் யோக சுவாமிகள் முதியோர் இல்லத்தில், யோக சுவாமிகளது திருவடிகளைப் பிரதிஷ்டை செய்து, பின்னர் அப்பகுதியில் உள்ள மகாதேவ ஆச்சிரமம், சைவச் சிறுவர் இல்லம், சில கோயில்களுக்கும் விஜயம் செய்து, அப் பகுதிவாழ்மக்களை ஆசீர்வதித்த விடயத்தை, திருமந்திரம், தேவாரம், பட்டினத்தார்பாடல், நற்சிந்தனை போன்ற நூல்களிலிருந்து தேர்ந்தெடுத்த பொருத்தமான மேற்கோள்களுடன் கலந்து, ஆன்மிக மணம் கமழ, சுவைபட கூறியுள்ளார்.

இந் நூலை ஒவ்வொரு ஆன்மிக சாதகனும் படித்து பயன் பெறலாம் என்பதில் ஐயமில்லை. நூலாசிரியரது முயற்சி மிகவும் பாராட்டத்தக்கது. அவருக்கு எங்கள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

(சுவாமி ஆத்மகனானந்தா)

**(சுவாமி ஆத்மகனானந்தா)**



# துர்க்கா துரந்தரியின் வாழ்த்துரை

கொழும்புத்துறை தவயோக சுவாமிகள் ஒரு மகா முனிவர். இந்த நூற்றாண்டில் வாழ்ந்து எம்மை எல்லாம் தெளிவு நிலைக்கு இழுத்துச் சென்று ஞான வெளிச்சம் காட்டிய பெரியமகான். யோக சுவாமிகளின் வரலாறு பல பெரியார்களால் எழுதி நூல்களாக வெளிவந்துள்ளன. சுவாமிகளின் பணியை சிவத்தொண்டன் சபைகள் சிறப்பாக ஆற்றி வருகின்றன. இன்று மேற்குலக நாடுகள் எல்லாம் சுவாமிகளின் சீடர் பரம்பரையினர் பல சபைகளை அமைத்து பெரும் பணிகளை ஆற்றி வருகின்றனர். திருமதி இரத்தினா நவரத்தினம் அம்மையார் யோக சுவாமிகள் பற்றி ஒரு நூல் ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். இந்த வகையில் பெரியார் திரு.க.இராசரத்தினம் அவர்கள் "யோக சுவாமிகளும் கிளிநொச்சியும்" என்னும் பெயரில் எழுதியுள்ளார். யோக சுவாமிகள் கிளிநொச்சி பிரதேசத்தில் அரச உத்தியோகத்தராக பணிபுரிந்த பல வகையான தகவல்களை முன்வைத்துள்ளார். நூலாசிரியரின் பணிகளை வாழ்த்தி, சுவாமிகள் அருள் வாக்குகள் விளங்குவதற்கு போற்றுவோம்.

**கலாநிதி. செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி,**
**சமாதான நீதிபதி,**
**தலைவர்,**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை, ஸ்ரீ லங்கா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர்: ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.
குருமஹா சந்நிதானம் ஆதி முதல்வர்.
ஆதீன முதல்வர்: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்.
பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.

தொலைபேசி: 021 - 222 2870

.19./.10../2009..

## அருளாசிச் செய்தி

அன்புள்ளவர்களிற்கு. யாழ்ப்பாணம் சித்தர் பரம்பரைக்கு வழி சமைத்த சிவயோகசுவாமிகளுடைய "யோகசுவாமிகளும் கிளிநொச்சியும்" என்கிற பெயரில் ஆன்மீக நூல் வெளிவருவது மன மகிழ்ச்சியை தருகின்றது. மனிதவாழ்வின் உயர்ந்த இலட்சியம் ஆன்ம ஈடேற்றம் ஆகும். இதனை உணர்த்தும் வகையிலேயே சமயமும் சமயத்தை சார்ந்த ஆலயங்களும் அருளாளர்களும் சித்தர்களும், ஞானிகளும் இறைவனருளால் உருவாக்கப்படுகின்றனர். இந்த வகையில் யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புத்துறைக்கும் பெருமைசேர்த்த சிவயோக சுவாமிகளை இறைவன் நமக்கு உருவாக்கி தந்துள்ளார். அவர் காட்டிய பாதையில் அன்பினூடாக இறைவனை அடைவதே இதனை பல அன்பர்களிற்கு அவர் வாயிலாகவே உணர்த்தியிருக்கின்றார். இதனை உணர்ந்து பல அன்பர்கள் வாழுந்து கொண்டிருக்கிறார்கள். உலகம் முழுவதும் பரந்து வாழும் நம் இனத்தவர் பலர் இந்த சிந்தனையோடு வாழ்ந்து வருகிறார்கள். இந்த வரிசையில் சுவாமிகளினுடைய சிஸ்சியனாக விளங்கும் செல்லத்துரை சுவாமிகள் இன்று சுவாமிகளுடைய சிவத்தொண்டை சிறப்பாக நடாத்தி "யோகசுவாமிகளும் கிளிநொச்சியும்" என்ற நூலையும் வெளியிடுவது எல்லோருக்கும் மகிழ்ச்சியை தருகின்றது. இந்நூலில் சிவத் தொண்டையும் தொண்டினூடாக கிடைக்கும் நற்பலனையும் திருவடி தத்துவத்தையும், பசுவினுடைய சிறப்பையும் இங்கு நடைபெற்ற சித்திரப் படங்களையும் சித்தர்களுடைய தத்துவக் கருத்துக்களையும் தாங்கி வெளிவருவது சிறப்பை தருகிறது. இந்நூலை தன்னுடைய பணியாக நினைத்து வெளிக்கொணரும் திரு.இராசரத்தினம் அவர்களுடைய தொண்டு பாராட்டுதற்குரியது. அனைவரிற்கும் குரு அருள் கிடைக்கப் பிராத்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"



உ

## ஆசியுரை

கிளிநொச்சி
# அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்
KILINOCHCI
ARUILMIKU KANTHASWAMY DEVASTHANAM

கிளிநொச்சி
KILINOCHCI

பதிவு இலக்கம்: HA/5/ KL/06
Regd. HA/5/KL/06

வங்கி: கிளிநொச்சி மக்கள் வங்கி 14339
Bank No. Koc Peoples Bank S A 14339

..............................200.....

சுவர்ணபூமியாக விளங்கும் ஈழமணித் திருநாட்டின் கிளிநொச்சி மாநகரில் நீண்ட வாழ்க்கைத் தொடர்பினைக் கொண்டிருந்த பல மக்களிடையே ஆன்மீக உணர்வினை தட்டியெழுப்பியவர் வள்ளல் அருட்திரு யோக சுவாமிகள் ஆவர். கிளிநொச்சியில் சிலகாலம் முகாந்திரம் வெற்றிவேலு அவர்களின் வளவில் ஒரு குடிலில் வாழ்ந்துள்ளார்கள் என்பது கர்ண பரம்பரையாகக் கூறி வரும் உண்மைச் செய்தியாகும். அவர் மக்களிடையே ஆன்மீக ஒளிச் சுடரை ஏற்றியவர் என்பது யாவரும் அறிவர்.

மனிதன் உடல் ரீதியாக ஓய்வெடுத்துக் கொண்டாலும் அவனுடைய உள்ளம் ஓய்வதில்லை. அப்படி ஓயவும் முடியாது. யாருக்கும் சும்மா இருக்கும் சுகம் கிடைப்பதரிது. ஆழ்ந்த நித்திரையில் கூட மனம் அசைவற்றிருப்பதில்லை கனவுகளைக் காண்கின்றது. மனதை ஒரு நிலைப்படுத்தலே தியானமெனப்படுகின்றது. அதுவே முதற்படியாக அமைகின்றது. இதனை அனுபூதியில் உணர்ந்த யோக சுவாமிகள் "சும்மா இருக்கும்" நிலையை அடையும் மார்க்கங்களை விளக்கமாக தனது "நற்சிந்தனை" என்ற நூலில் எடுத்துக் கூறியுள்ளார். மூவாசைகளில் இருந்து விடுபடுவதே எங்கள் முயற்சியாயமைய வேண்டும். அடிக்கு மேல் அடியடித்தால் அம்மியும் நகரும் அல்லவா? ஆகவே அதில் வெற்றி நிச்சயம்.

மனம் ஒரு குரங்கு போன்று அலை மோதிய வண்ணமிருக்கும், அதனை இறுகப் பிடித்து ஓரிடத்தில் அமரச் செய்து எது உண்மையான வழி என்பதனை இடித்துரைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலங்கரை விளக்கம் போல் மனிதனை ஈடேற்றுவது தான் சமயம். அவற்றுள் சைவசமயத்தின் சிறப்பினையும் அதன் தத்துவங்களையும் பல வேத சாஸ்த்திரங்கள் உபநிடதங்கள் மூலம் அறிந்து கொள்ள முடியும். அவற்றையெல்லாம் தெளிந்த தெளிவாகத் கரைத்து வடித்துத் தந்தவைதான் சமயகுரவர் நால்வரின் பாடல்களும், யோகசுவாமி போன்ற வர்களின் நற்சிந்தனைப் பாடல்களுமாகும். அவற்றை ஆழப் படித்து உய்த்து உணராது வேறு மார்க்கங்களை கடைப் பிடிக்க எண்ணுவோரது பேதமையை எப்படித்தான் வர்ணிப் பது. நல்ல உண்மை நெறியைக் காட்டும் வழியைப் பின்பற்றி இறையருள் பெற முயற்சிப்போமாக.

வெளியிடப்படும் இந்நூலானது சிவ தத்துவங்களையும் ஆன்மீக வளர்ச்சியையும், இறை பணியையும் மேலோங்கச் செய்யும் ஒரு ஆன்மீக யாத்திரை நூலாக அமைந்துள்ளது. கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து இப்படியான நூல் இதுவரை வெளிவரவில்லை. இதனை ஆக்கியோர்களுக்கு இறையருள் கிட்ட வேண்டுமென்று எல்லாம் வல்ல முருகனின் பாதார விந்தங்களை வேண்டி வாழ்த்தி ஆசிகூறி விடை பெறுகின் றேன்.

**வணக்கம்.**

**"நற்குஞ்சரக்கன்று நண்ணில் கலைஞானம்**
**கற்கும் சரக்கன்று காண்"**

**பிரதம சிவாச்சாரியார்**
**சிவாகமக் கிரியாநிதி.**
**சிவஸ்ரீ. கு. இரத்தினேஸ்வரக்குருக்கள்.**






## இலங்கையிலே எங்கும் இருக்கும் மணி....

இது யோகசுவாமிகள் செல்லப்பாசுவாமிகளைப் போற்றிச் சொன்ன ஒரு வாசகம். இவ்வாசகம் யோகசுவாமிகளுக்கும் பொருந்துவதே. சுவாமிகள் சோதிமயமாய் இலங்கும் ஞானப் பெருவெளியெங்கும் வெளியனாய் இலங்குவதுடன் இப்பௌ திக இலங்கையிலும் அங்கு இங்கெனாதபடி எங்கும் பிரகாச மாய் இருக்கின்றார்.

யோகசுவாமிகள் இலங்கை எங்கும் இருக்கும் மணி ஆதலினாலே கிளிநொச்சியும் சுவாமிகள் சந்நிதானம் என்பது வெளிப்படை "கிளிநொச்சிப் பகுதி சுவாமிகள் உகப்புடன் உறையும் இடம் என்பதற்கான சிறப்புக் குறிப்புகள் சிலவும் உள.

**ஒன்று :-** யோகசுவாமிகள் தவம் முயன்ற இடம் கிளி நொச்சி என்பது. சுவாமிகள் சிறிது காலம் கிளிநொச்சியில் உத்தியோகம் புரிந்தனர். உத்தியோகத்தைக் கவனமாகச் செய்ததுடன், ஓய்வு நேரங்களில் ஞானநூல்களை ஓதி உணர் வதிலும், தியானம் பயில்வதிலும் ஈடுபட்டனர், ஏகாந்தமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னதும், எழில் நிறைந்ததுமான ஆரணியச் சூழல் சுவாமிகளின் தவவாழ்வுக்கு வாய்ப்பானதாக அமைந்தது. சற்குரு தரிசனத் துக்கு பக்குவராக்கும் தவம் முயன்ற இடமாதலாலே சுவாமி கள் இப்பகுதியைப் பெரிதும் உகந்தனர்.

**இரண்டு :-** இப்பகுதியில் ஒரு சிவதொண்டன் ஆச்சிரமம் நிறுவும் சித்தம் சுவாமிகளுக்கு இருந்துள்ளது. வடக்கிலும் கிழக்கிலுமுள்ள இரு சிவதொண்டன் நிலையங்கள் பலரும் அறிந்தவை. இவை செந்நெறி பெற்ற இரு புண்ணியக்கண்கள் போன்றும், வடக்கிற்கும் கிழக்கிற்குமான ஓர் இணைப்புப் பாலம் போன்றும், திக்குத் திகாந்தமெல்லாம் ஒன்றில் ஒன்றியி ருக்கும் உண்மையை உணர்த்தும் உபாயம் போன்றும் உள் ளன. கிழக்கில் ஓர் சிவதொண்டன் நிலையம் நிறுவுதற்கு முன்பே கிளிநொச்சியில் ஒரு சிவதொண்டன் ஆச்சிரமம் அமைக்கும் திருவுளம் சுவாமிகளுக்கு இருந்தது. சுவாமிக ளின் இத்திருவுளம் 1958ம் ஆண்டில் மலர்ந்த சிவதொண்டன் இதழ்களில் அறிவித்தல்களாகவும், சிவதொண்டரும் சிறு தொண்டரும் என்னும் கட்டுரை வாயிலாகவும் வெளிப்பட்டது. இவற்றிலே உழுதொழிலைச் சிவதொண்டாகக் கொண்டு உண்மையுணர்தற்கான ஓர் சாதனா கூடமாக அமைய விருக் கும் கிளிநொச்சி ஆச்சிரமத்தின் குறிக்கோள், கொள்கைகள், நடைமுறை பற்றிய உன்னதமான திட்டம் தெளிவாய்த் தெரிந் தது. இத்திட்டம் உலகுக்கும் ஒளிநெறிகாட்டும் ஒப்பற்ற சோதி கிளிநொச்சிப் பகுதியில் உதயமாகும் என்ற நம்பிக்கையைத் தருவதாயிருந்தது.

சுவாமிகளின் திருவுளம் நிறைவுறும் தருணம் வந்துவிட்டது போலும், யோகசுவாமிகளும் கிளிநொச்சியும் ஓர் ஆன்மீக யாத்திரை என்னும் ஒரு சிவதொண்டரின் இந்நூலின் கையெ ழுத்துப்பிரதியைப் படிக்க நேர்ந்தபோது இது கிளிநொச்சி ஆச்சிரமத்திற்கான ஒரு கட்டியம் கூறுதல் என்ற எண்ணமே எழுந்தது. இச்சிவதொண்டர் ஆகம அச்சில் வார்த்தெடுக்கப் பெற்ற ஆறுமுக நாவலரவர்கள் வளம் படுத்திய சைவாசாரத்



தில் ஊறியவர். சிவதொண்டன் நிலையத்துச் செம்மை நலத்தால் கவரப்பெற்றவர். நற்சிந்தனை வேதத்தைத் தாடன மாகக் கொண்டவர். சிவதொண்டன் நிலையத்தில் வழங்கப் பெறும் ஞானதானத்தால் ஊட்டம் பெற்றவர். எல்லாவற்றுக்கும் மேலாகச் சநாதன தருமம் கூறும் உண்மையின் சாட்சியமாக விளங்கும் "நடமாடும் நம்பரைப்" பற்றிவாழ்வதன் மகத்து வத்தை உணர்ந்தவர். இந்நலமெல்லாம், சிவதொண்டன் நிலையத்துப் பெரியாரை ஆதரம் பெருக அழைத்துச் சென் றமை, அப்பெரியார் திருவடிப்பிரதிட்டை செய்த மங்கல வைப வம் பற்றிய மகிழ்ச்சி, அரச அதிகாரிகள் முதலாக அனைவ ரும் காட்டிய உற்சாகம் என்பவற்றை விவரிக்கும் இந்நூலெங் கும் கமழ்கின்றது.

இப்புண்ணியபூமி நம்மவர்க்கெல்லாம் காப்பகமாகவும், புகலிடமாகவும் அமைந்தது அண்மைக்கால வரலாறு. சைவ நன்னெறி தழைத்தோங்கியிருந்தமை பண்டைக்கால வரலாறு. பெருநகரத்தின் குணங்குறிகள் தோன்றியிருப்பது இப்பகுதி அடையவிருக்கும் எதிர்காலச் சிறப்பின் முன்னறிவிப்பு. இப் பெருநகர்ப்பகுதியில் கூடிவாழும் உத்தியோகத்தர்கள் "கட மையிற் கையும் கருத்திற் கடவுளுமாய்" உத்தியோகம் புரிந்த சுவாமிகளின் அடிச்சுவட்டில் ஒழுகுவார்கள். இவர்களெல்லாம் இப்பகுதியில் உதயமாகும் சிவதொண்டன் ஆச்சிரமத்திற்கு ஊட்டம் அளிப்பவர்களாயமைவர். எவ்வாறாயினும் உத்தியோ கம் ஓர் அடிமைத் தொழிலே. எத்தகைய கலைஞானம் பெற் றவனும் உத்தியோகப் "பொறி"யின் நிபந்தனைகளுக்கு உட் பட்டுச் செயற்படுபவனே. ஆதலால் அவனது சிந்தை சுதந்திர மாகக் கிளர்ந்தெழ வாய்ப்புக்கள் குறைவே. கலைஞானமும், சிவஞானதாகமும் கொண்ட ஆச்சிரமவாசிகள் பரநலத்துட னும், ஒன்றிப்புடனும் சுதந்திரமாகச் செய்யும் மேழிச்செல்வத் தில் சிந்தைத் தெளிவும் உயர்வும் அடைய வாய்ப்புக்கள் நிறைய உள. இயற்கை எங்கும் இறைவனே நிரம்பியுள்ளார். இதில் எமக்குத் தேவையானதையன்றி மேலதிகமான எதனை யும் வௌவிக் கொள்ளும் உரிமையில்லை என்பதைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிந்த சிவதொண்டர்கள் இயற்கை அன்னையின் வளத்தை உறிஞ்சமாட்டார்கள். இயற்கை தன் சமநிலையைப் பேனுதற்காக அமைந்த நற்கிருமிகளை நாசம் செய்யமாட்டார்கள். அவர்தம் கலைஞானமும், சிவஞானமும் தெளிந்த சிந்தையும் இயற்கையின் வளத்தைப் பேணிக் கொண்டே "உபகாரம்" எனும் பொருள்படும் வேளாண்மைத் தொழிலைச் செய்ய ஊக்குவிக்கும். இவ்வாற்றால் இவ்வாச்சிரமத்தில் உறையும் சிவதொண்டர்கள் விடும் உயிர்க்காற்று, அவத்தொழில் புரிவோரால் பரவும் நச்சுக்காற்றைத் தூய்மை செய்து உலகை நல்லோர் வாழும் படியானதாக்கும். உண்மைச் சுபாவத்தின் சிறப்புக்களான இயற்கையை அனுசரித்து வாழ்ந்துகொண்டே உண்மையில் உறைத்து நிற்கும் இச் சிவதொண்டர்களின் சோதி உலகுக்கு ஒளிநெறிகாட்டும். இத்தகைய ஓர் சிவ தொண்டன் நிலைய உதயத்தையே அடிவானத்தில் உதயஞ் செய்யும் பூரணசந்திரோதயத்தை மரக்கிளை யொன்றைக் காட்டி அதன் மூலம் காணச் செய்யுமாறு இந்நூல் காட்டி நிற்கின்றது.

திருவருள் இச்சிவபூமியினின்றும் இத்தகைய ஓர் சிவ சோதியைப் பரப்புவதாகுக.

**சிவதொண்டன் நிலையம்,**
**செங்கலடி**
**மட்டக்களப்பு.**

**செ. வினாசித்தம்பி,**
**மட்டக்களப்பு**
**ஆசிரிய கலாசாலை,**
**ஓய்வு பெற்ற விரிவுரையாளர்,**





**இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின்**
**உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர்**
**சிவ. மகாலிங்கம் விடுக்கும் வாழ்த்துச் செய்தி.**

சித்தர்களும் மகான்களும் ஞானிகளும் வாழ்ந்த சிவபூமியாகிய ஈழமணித் திருநாட்டில் நடமாடும் கோயிலாகத் தவயோகி யோக சுவாமிகள் வாழ்ந்து வந்தார். "யோக சுவாமிகளும் கிளிநொச்சியும்" (ஒரு ஆன்மீக யாத்திரை) என்ற நூலை இளைப்பாறிய மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் திரு. இராஜரட்ணம் அவர்கள் எழுதி வெளியிடுகின்றார். யோக சுவாமிகளின் பிரதம சீடனும் அவருடைய சிவப் பணிகளைத் தொடர்ந்து வழிநடாத்துபவருமாகிய மகான் செல்லத்துரை சுவாமிகளின் தலைமையில் தாங்கள் சென்ற ஆன்மீக யாத்திரையின் விபரத்தைப் பற்றி இந்நூல் பக்திச் சுவையுடன் எடுத்துக் கூறுகிறது. கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வன்னேரிக்குளத்தில் அமைக்கப்பட்டுச் செயற்படும் யோக சுவாமிகளின் முதியோர் இல்லத்தில் அவரின் திருவடி பிரதிஷ்டை செய்யப்படுவதற்காக சிவதொண்டன் நிலையத் தலைவர் செல்லத்துரை சுவாமிகளின் வழிகாட்டலில் அடியார்கள் நால்வர் ஒன்று சேர்ந்து ஆன்மீக யாத்திரை செய்தார்கள். மகான் செல்லப்பா சுவாமிகள் தவத்திரு யோக சுவாமிகளை ஆட்கொண்டு அருள் செய்த இடம் நல்லூர்த் தேரடியாகும். நல்லூர் முருகப் பெருமானிடம் அருளும் ஆசியும் பெற்றுவிட்டு அடியார்கள் தங்கள் யாத்திரையைத் தொடர்ந்தார்கள். சித்த புருஷர்களில் ஒருவராகவும் கந்தர்மடம் சிவகுருநாதபீடம் வேதாந்த மட ஸ்தாபகர்களில் ஒருவருமாகிய மகாதேவ சுவாமிகளின் பெயரால் அவருடைய சீடர் வடிவேல் சுவாமிகளால் கிளிநொச்சி ஜெயந்திநகரில் ஸ்தாபிக்கப்பட்டதே மகாதேவ ஆச்சிரமமாகும். இந்த ஸ்தாபனத்தை வடிவேலு சுவாமிகள் வழி நின்று அவரது சீடரான ஸ்ரீ கணேசானந்தசுவாமிகள் பரிபாலித்து வருகின்றார். இவரது தலைமையில் நின்ற அடியார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரும் செல்லத்துரை சுவாமிகளையும் அவருடன் சென்றவர்களையும் அன்புடன் வரவேற்றார்கள்.

தல விருட்சங்கள் தெய்வீகத் தன்மை உடையவை என்ற கருத்து இந்நூலிலே விளக்கப்பட்டுள்ளது. மகாதேவ ஆச்சிர மத்தில் இருக்கும் மாணவர்கள் சிவசின்னம் அணிந்து பஞ் சாட்சர மந்திரத்தை நாவால் உச்சரித்தபடி பணிகள் செய்து கொண்டிருந்த சிறப்பினை நூலாசிரியர் வியந்து பராட்டி எழுதியுள்ளார். வன்னேரிக்குளம் யோகசுவாமிகளின் பெயரில் அமைக்கப்பட்டு இருக்கும் முதியோர் இல்லத்தில் 65 முதி யோர்கள் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். இவர்க ளுக்குச் செய்கின்ற பணி இறைவனுக்குச் செய்யும் தொண்டு என்ற நினைப்போடு இந்த முதியோர் இல்லத்தை அன்பர்கள் சிறப்பாக நிர்வகித்து வருகிறார்கள்.

வன்னேரிக்குளம் முதியோர் இல்லத்தில் யோக சுவாமிக ளின் திருவடி அவரின் சிஷியரான செல்லத்துரை சுவாமிக ளால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. ஸ்ரீ கணேசானந்த சுவாமிக ளின் ஆச்சிரம மாணவர்கள் விநாயகர் அகவல், நற்சிந்தனை, சிவபுராணம், பஞ்சபுராணம் ஆகியன ஓத பிரதிஷ்டா வைபவம் இனிதே நடைபெற்றது.

**"திருவருளின் அடையாளச் சின்னமே திருவடி"**

எனச் செல்லத்துரை சுவாமிகள் கூடியிருந்த அடியவர் களுக்கு திருவடி பற்றி விளக்கமளித்தார்.

குருநாதனின் சிறப்பையும் திருவடியை வணங்குவதால் கிடைக்கும் பேற்றினையும்

**"என்னை எனக்கு அறிவித்தான் எங்கள் குருநாதன்**
**இணையடியென் தலை வைத்தான் எங்கள் குருநாதன்"**

என யோக சுவாமிகள் தான் அருளிய நற்சிந்தனைப் பாடலில் வெளிப்படுத்துகின்றார். தொடர்ந்து செல்லத்துரை



**சுவாமிகளும் அடியார்களும் கனகபுரம் வாலிபத் திட்டத் திலுள்ள ஸ்ரீகாந்தா சனசமூக நிலையத்திற்கு வருகை தந்தார் கள். சுவாமிகளின் அருளுரை இங்கே இடம் பெற்றது. இர ணைமடு கனகாம்பிகை அம்மன் கோயில், வட்டக்கச்சி கண் ணன் கோயில் ஆகியவற்றைத் தரிசித்து விட்டு மீண்டும் மகா தேவ ஆச்சிரமத்தை அடைந்து வடிவேல் சுவாமிகளின் சமாதி யினைத் தரிசித்தார்கள்.**

**திருநெல்வேலி மணல்தறை அம்மனின் அருளுக்குப் பாத்தி ரமான இராஜரத்தினம் அவர்கள் எழுதிய ஆன்மீக யாத்திரை என்ற நூல் மிக அருமையான அருளனுபவங்களைக் கொண்ட தெய்வீக நூலாகும். பேய் போல் திரிந்து பிணம் போல் கிடந்து நாய் போல் உழன்று பசித்தால் புசித்து வாழ் ந்த சித்தர்கள் பலர் வாழ்ந்த பூமி இந்த ஈழமணித் திரு நாடாகும். இங்கு வாழையடி வாழையாக வாழ்ந்த திருக்கூட்ட மரபின் சிறப்பினை இந்நூல் எடுத்து விளக்குகின்றது.**

**"அடியார் நடுவுள்ளிருக்கும் அருளைப் புரியாய்"**

**என்ற மணிவார்த்தைக்கு அமைய அருளாளர்களுடன் வைக்கும் இணக்கமே ஆன்மீக சாதனைக்குத் துணை செய் யும் என்ற உண்மையை இந்நூல் தெளிவாக விளக்குகின் றது.**

**சிவ. மகாலிங்கம்**
**சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம்**
**உதவிப் பணிப்பாளர்,**
**இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு,**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வாழ்த்துரை

மாவட்டச் செயலகம் - கிளிநொச்சி    දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - කිලිනොච්චි    DISTRICT SECRETARIAT - KILINOCHCHI

எனது இல. / මගේ අංකය / My No. ..................    உமது இல. / ඔබේ අංකය / Your No. ..................    Date:- 5.4.2004

யோக சுவாமிகளும் கிளிநொச்சியும் என்ற பெயரில் ஒரு ஆன்மீக நூல் வெளியிட இருப்பது கண்டு மட்டற்ற மகிழ்ச்சி. இது சிவதொண்டன் நிலையத் தலைவர் மௌனமணிப் பெட்ட கமாம் செல்லத்துரை சுவாமிகளது ஆன்மீக வருகையைச் சுற்றியதாக விருந்தாலும் இதில் சொல்லப்படும் விடயங்கள் கிளிநொச்சியின் ஆன்மீக நிலை ஆன்மீக நிறுவனங்கள் ஆற் றும் பணி ஆன்மீகத் தொண்டர்களது வாழ்வு அவர்தம் பணி கள் மூலமாக ஆன்மீக எழுச்சி நிலையைச் சுட்டி நிற்கின்றது.

எமது மாவட்ட ஆன்மீகப் பணியில் தம்மை முழுமையாக ஈடுபடத் தூண்டும் நல்ல பல கருத்துக்களையும் இன்னூல் வெளிப்படுத்தி நிற்பது மிகப் பாராட்டுக்குரியது. கிளிநொச்சி யோக சுவாமிகள் வாழ்ந்த பூமி. இப் பூமியில் அவர் விதைத்த ஆன்மீகக்கருத்துக்கள் பாரிய யுத்தங்கள் இடர்கள் வந்த போதும் கட்டிக் காக்கப்பட்டு அவற்றுக்கு செயல்வடிவம் கொடுக்கும் வகையில் அமைந்துள்ள யோக சுவாமிகள் திரு வடி நிலையம், இந்த நிலைய முதியோர் இல்லம், அறநெறிப் பாடசாலைகள் வணக்கத்துக்குரிய கணேசானந்த மகாதேவ சுவாமிகளின் வழிகாட்டலில் மகத்தான பணி புரியும் மகா தேவா ஆச்சிரமம் என்பன குறிப்பிடத்தக்கவை.



இவற்றின் பங்கும் பணியும் இந்நூல் சுட்டி நிற்கிறது. இது இம் மாவட்டத்தின் ஆன்மீக வரலாற்றுப் பதிவாக நின்று எமது வருங்கால ஆன்மீக வழிச் செல்வோருக்கு வழிகாட்ட எனது வாழ்த்துக்கள்.

தி. இராசநாயகம்,
அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளரும்
கிளிநொச்சி மாவட்டம்.

Telephone : Govt. Agent 021 - 2223945    Fax 021 - 2223945    Residency 021 - 2223964

உ
சிவமயம்

***இதோ பார். நான் உனக்கு மிகவும் அணித்தாயிருக்கிறேன். என்னைக் காண்கிறாயா? நல்ல கூர்மையாய்ப் பார். உள்ளேயிருக்கிறேன். இன்னுந் தெளிவாய்ச் சொல்லில் நான் நீயாயிருக்கிறேன். பின் நீயேன் என்னை உனக்கு வேறாய் நினைக்கிறாய்?***

***நீயொரு கெட்டிகாரனல்லவா? உனக்கு என்ன குறை? ஒரு குறைவுமில்லையல்லவா? உனது கடமையை நீ நல்லாய்ச் செய். யாவரிடத்தும் அன்பாயிரு. அதாவது உன்னைப்போல எவரையும் பார். பின்னால் வருவனவற்றைப் பாடம் பண்ணு.***

***“ அரும்பிய கொன்றை அணிந்த சென்னியன்***
***ஆறும் பிறையும் சூடிய அழகன்***
***இறையவன் மறையவன் ஏழுல காளி***
***ஈசன் மழுப்படை தாங்கிய கையன்***
***உம்பர் தலைவன் உயர்கை லாயனே”***


***- ஈசுரமாலை***

***(நற்சிந்தனை பக்கம் 372 - 4ம் பதிப்பு)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ




முக்காலமும் உணர்ந்த முனிவர்கள் எங்களுடைய தாய் மண்ணிலும் உலாவியுள்ளனர் என்பதை அறியும் போது நாம் பெருமைப்படுகிறோம். யோக சுவாமிகள் எங்களுடைய ஆன்மீக வலுவினை உலகுக்கு எடுத்துக் காட்டுபவர். சுவாமிகளுடைய கால்பட்ட இடங்களெல்லாம் புனித இடங்களாயின. அவருடைய கால்படாதா என்று பலர் ஆவலுடன் ஏங்கியதுண்டு. கிளிநொச்சி சுவாமிகளுடைய கால்பட்ட இடம். அந்த ஆன்மீக வரலாறு இங்கே கூறப்படுகின்றது. யோகசுவாமிகளும், கிளிநொச்சியும் - ஒரு ஆன்மீக யாத்திரை என்னும் இந்நூலுக்கு இச்சிறிய வாழ்த்துரையை எழுதுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

யோகசுவாமிகளின் முதன்மைச் சீடரான முனிவர் செல்லத்துரை சுவாமிகளின் கிளிநொச்சி யாத்திரையை அடிப்படையாக வைத்து இந்த ஆன்மீக பயணம் விவரிக்கப்படுகின்றது. அதனூடாக யோகசுவாமிகளின் அருளும் திருத்



தொண்டுகளும் வெளிப்படுகின்றன. செல்லத்துரை சுவாமிகள் சென்ற வாகனம் கிளிநொச்சி கனகபுரம் கிராமத்தை அடைந்தமை பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது.


"வாகனம் வலமாக வந்து மாவீரர் துயிலுமில்லத்திற்கு முன்பாக மிதந்தது. சூக்கும் உடலுடன் உலாவும் தெய்வக் குழந்தைகள் உறங்குமிடமல்லவா அப்பிரதேசம்........ வாகனம் தொடர்ந்து கிளிநொச்சி புதுமுறிப்பு வீதியால் சாதனை வீரர் முன்னாள் அரச அதிபராக, பின் நிரந்தரச் செயலாளராக இருந்து இறைபதமடைந்த திரு. ஸ்ரீகாந்தா ஐயா அவர்களால் முற்றுமுழுதாக யோகசுவாமிகளின் வழிகாட்டலில் ஆரம்பிக்கப்பட்டு உருவாக்கப்பட்ட கனகபுரம் கிராமத்தை அடைந்தது"

இவ்வாறு இந்த ஆன்மீக யாத்திரை பல வரலாற்றுச் செய்திகளைப் புலப்படுத்துவதாக அமைகின்றது. சைவ சித்தாந்த உண்மைகள், தியானம், ஆன்மீக வாழ்வுக்கு வேண்டியவை, ஆன்மீகத்தின் உயர்ந்த நிலை என்பவற்றையெல்லாம் கட்டுரைகளாக தொகுத்து நூலாக வெளியிடலாம். ஆனால், இந்நூலாசிரியர் ஒரு புதிய உத்தியைக் கையாளுகிறார். செல்லத்துரை சுவாமிகளின் கிளிநொச்சிப் பயணம் ஓர் ஆன்மீக யாத்திரையாக அமைய, அதனை உருவமாகக் கொண்டு உள்ளடக்கமாகப் பல விடயங்களைப் புகுத்தி இந்நூலை ஆக்கியுள்ளார். இத்தகைய நூலுக்கு வாழ்த்துரை எழுதும் வாய்ப்பினைத் தந்தவர்களுக்கு என் நன்றி.

**பேராசிரியர். அ. சண்முகதாஸ்**
**தமிழ்துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யோகசுவாமிகளும் கிளிநொச்சியும் - ஒரு ஆன்மீக யாத்திரை என்ற ஆன்மீக நூலுக்கு வாழ்த்துரை வழங்குவது குறித்து மட்டற்ற மகிழ்ச்சியும் திருப்தியும் அடைகிறேன். "சிவபூமி" என்று குறிப்பிடப்படும் ஈழத்தில் சித்தர்களும், சிவ ஞானிகளும் வாழையடி வாழையென வாழ்ந்து வருவது நாம் பெற்ற பெரும் பேறாகும். சித்தர்கள் தாம் பெற்ற ஆத்மீக அனுபவங்களையும் தெய்வீக அருளையும் மக்களுக்கு வழங்கி சைவ மக்களின் வாழ்வியல் நம்பிக்கைகளுக்கு வலுவூட்டியமை பெரும் பணியாகும்.

இப் பின்னணியில் ஈழத்தில் வாழ்ந்த சிவஞானிகளுள் தவத்திரு யோக சுவாமிகள் தனிப் பெருஞ் சிறப்புப் பெற்றவராக விளங்குகின்றார். அவருடைய அருட்பார்வையும், பாதமும் பட்ட இடமெல்லாம் இன்றும் ஆன்மீக மையங்களாக விளங்கி வருவது குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும்.

தவத்திரு சிவயோக சுவாமிகளின் ஆன்மீக அருள் வீழ்ச்சி யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி மட்டக்களப்பு, கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களிலும் சிறந்து விளங்குவது ஒரு தெய்வீகச் செயலன்றோ?

திருவடி வழிபாடு என்பது சித்தாந்த சைவத்தின் வாழ்வியல் நெறியாகும். ஈழத்தில் திருவழிபாட்டினைச் சிறப்பித்த பெருமை தவத்திரு யோகசுவாமிகளுக்குரியதாகும். கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வன்னேரிக்குளம் என்ற இடத்தில் தவத்திரு யோக சுவாமிகளின் முதியோர் இல்லம் வரை சென்று மகாதேவா ஆசிரமம், கனகபுரம், இரணைமடுக் குளம், உருத்திரபுரம், வட்டக்கச்சி, கனகாம்பிகைக்குளம் போன்ற இடங்களுக்கெல்லாம் சென்று யாவரையும் மெய்யியல் நாட்டத்திற்கு இட்டுச் சென்ற பெருமைக்குரியது.



நிகழ்ச்சிகளின் வெறும் தொகுப்பாக மட்டும் இராது பல ஆன்மீகக் கருத்துக்களை அங்காங்கே சந்தர்ப்பத்திற்கேற்ப கொண்டு விளங்கும் இவ் ஆத்மீக நூலில் சிவயோக சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்கள் அவர் கூறும் சீரிய கருத்துக்கள் என்பன மட்டுமன்றி திருமூலரின் திருமந்திரப் பாடல்கள், திருக்குறள் போன்றவற்றின் மேற்கோள்கள் பொருத்தமுற பொருத்தமான இடங்களில் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகவுள்ளது.

சிவயோக சுவாமிகள் மட்டுமன்றி செல்லப்பா, வடிவேற் சுவாமிகள், மகாதேவா சுவாமிகள், ஸ்ரீ கணேசானந்த மகாதேவ சுவாமிகள் என்போரது ஆன்மீக அருளியல் வெளிப்பாடுகளையும் வெளிப்படுத்தும் ஞானப் பொக்கிஷமாக இந்நூல் ஈழத்துச் சிவஞானிகளின் வரலாற்றுச் செய்திகளைச் சுட்டும் நூலாக விளங்குவதுடன் கிளிநொச்சியின் சைவ ஆத்மீக மையங்களை வெளிக்காட்டும் சைவப் பண்பாட்டுக் கருவூலமாகவும் காணப்படுகின்றது.

இன்று தேவைப்படுவது ஆத்மீகம் பற்றிய விளக்கமாகும் அதுவும் பலவாறு முக்கியம் பெற்று விளங்கும் வன்னிப் பிராந்தியத்தை இது ஆட்கொள்வது காலத்தின் தேவையாகும். ஆகையால் இந்நற்பணியை மேற்கொண்டுள்ள நூலாசிரியருக்கும் அவரோடு இவ் ஆத்மீகத் தொண்டில் ஈடுபட்டிருக்கும் அன்பர்களுக்கும் நமது வாழ்த்துக்கள்.

**பேராசிரியர் சி.க. சிற்றம்பலம்**
**வரலாற்றுத்துறைப் பேராசிரியர்.**
**யாழ் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆன்மீகம் என்பது எல்லையற்ற சக்தியாகிய பரம் பொருளுடன் மனிதன் கொள்ளும் தொடர்பினாற் கிட்டுவது. ஒவ்வொரு தனிமனிதனின் வலிமைக்கும், சமூகத்தின் வலிமைக்கும், நாட்டின் வலிமைக்கும் மூலகாரணம் ஆன்மீகமே. ஆன்மீகம் தாழ்ந்து உலகாயுதம் மேலோங்கும் போது தனிமனிதன், சமூகம், நாடு என்பன வீழ்ச்சியுறுகின்றன என்று சுவாமி விவேகானந்தர் கூறுகின்றார். ஆத்மீக மனிதன் தன்னையும் தான் சார்ந்த பிரபஞ்சம் அதன் தலைவன் என்பவற்றையும் பற்றிய தேடலின் விளைவாகும். சிவபூமி என்று கூறப்படும் நமது நாட்டில் அநுபூதிமான்களும், ஞானிகளும், சித்தர்களும் வாழையடி வாழையாக வாழ்ந்து ஆன்மீக வளத்தைப் பெருக்கிக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவ்வகையில் யாழ்ப்பாணத்து யோகசுவாமிகள் குறிப்பிடத்தக்க இடத்தினை பெறுகின்றார். யோகசுவாமிகள் பற்றி அவருடைய சீடர்கள் அவரிடம் சென்று ஆசிபெற்றவர்கள் மூலம் பெருமளவு செய்திகளை பெற முடிகின்றது. அவர் அடியார் பொருட்டு செய்த அற்புதங்கள் ஏராளம். அவரின் பிரதம சீடராகிய மௌனமணிப் பெட்டகம் என ராஜரட்ணம் ஐயா குறிப்பிடும் செல்லத்துரை சுவாமிகள் யோகரின் வழியில் ஆன்மீக பயிரை யாழ்ப்பாணத்தில் சிவதொண்டன் நிலையத்திலிருந்து வளர்த்து



வருவது நாம் செய்த பாக்கியமே. “குருவே சிவம்” என்பதற்கமைய செல்லத்துரை சுவாமிகள் மௌன குருவாக இருந்து சொல்லாமற் சொல்லும் ஆன்மீக இரகசியங்கள் அனந்தம். அவருடன் இந்நூல் ஆசிரியர் நெருங்கிப் பழகும் பேறுபெற்றவர். அதுமாத்திரமல்லாமல் ஆன்மீகத் தேடலைத் தன் வாழ்வாகக் கொண்டவர். யோக சுவாமிகளும் கிளிநொச்சியும் ஓர் ஆன்மீக யாத்திரை என்ற இந்நூல் யோகரின் உபதேசங்கள் திருமூலர், தாயுமானவர் போன்ற அருளாளர்களின் உபதேசங்களையும் சிவயோகியும் தவயோகியும் ஆகிய யோகரைத் தனது குருவாகக் கொண்டு அனுபூதி பெற்ற செல்லத்துரை சுவாமிகளின் அருள் அனுபவங்களையும் கொண்ட ஒரு ஆத்மீகத் தேடலைக் கொண்ட நூலாகும். மனிதன் தன் உண்மையை உணரும் போது தனக்கும் மற்றவர்களுக்கும் உபயோகமான வாழ்வை வாழ முடிகின்றது. அத்தகைய ஆத்மீக அனுபவங்களைக் கொண்டு விளங்குவது இந்நூல். ஆசிரியரின் விடாமுயற்சியும் தெய்வ நம்பிக்கையும் இந்நூல் வெளிவரக் காரணமாகின்றது.

பத்தினி பக்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங் கலங்க சிதைவுகள் செய்தவர்
அத்தமும் ஆவியும் ஆண்டொன்றில் மாண்டிடும்
சத்தியம் ஈது சதா நந்தி ஆணையே

என்பது திருமந்திரம். பத்தினி பக்தர்கள், தத்துவ ஞானிகள், சித்தங்கலங்க சிதைவுகள் செய்திடின் வீடும் நாடும் சேதமுறும். இவர்களைப் போற்றி அவர்கள் அருள் பெற்றால் உலகில் அனைத்து நலனும் கிட்டும். எனவே நூலாசிரியர் ஞானிகளைப் போற்றி எம்மையும் அவ்வழியில் ஆற்றுப்படுத்துகின்ற தன்மை பாராட்டப்பட வேண்டியது.

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்”

**திருமதி. நாச்சியார் செல்வநாயகம்,**
**முதுநிலை விரிவுரையாளர்,**
**தலைவர் / இந்துநாகரிகத்துறை**
**யாழ் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

දුරකථන අංකය / தொலைபேசி / Telephone

මගේ අංකය / எனது இல. / My No. KR/SS/10(4)/2001

ඔබේ අංකය / உமது இல. / Your No.

**பிரதேச செயலகம், கரைச்சி, கிளிநொச்சி**
**ප්‍රාදේශීය මහ ලේකම් කාර්යාලය, කරච්චි, කිලිනොච්චි**
**DIVISIONAL SECRETARIAT, KARACHCHI, KILINOCHCHI**

# அணிந்துரை

யோக சுவாமிகளின் திருவருளினால் அவரது நாமத்துடன் ஆரம்பித்து, நடாத்தப்பெறும் முதியோர் பராமரிப்பு இல்லத்தில் அமைக்கப் பெற்ற பிரார்த்தனை மண்டபத்தினை சுவாமிகளின் பிரதமசீடரான அருட்திரு. செல்லத்துரை சுவாமிகளினால் திறந்து வைக்கவேண்டு மென்ற விருப்பு இல்லப்பரிபாலன சபையினருக்கு ஏற்பட்டது. இவ் விருப்பினைச் சுவாமிகளும் மனமுவந்தேற்றுக்கொண்டு கிளிநொச்சிக்கு எழுந்தருளினார்.

சுவாமிகளின் இவ்விஜயத்தின் போது பல இடங்களுக்கும் சென்று அடியார்களை ஆசீர்வதித்தார். தனது திருப்பாதங் களைப் பல இடங்களில் பதித்தமையினால், அவ்விடங்க ளெல்லாம் புனித பூமிகளாயிற்று. துன்பங்கள் நீங்கி இன்பம் பெருக வழிசமைத்தது. "மேன்மைகொள் சைவநீதி" இப்பகு தியில் வளரப் பெரும் வாய்ப்பளித்தது.

இவ் விஜயத்தின்போது கனகபுரம் கிராமத்தினைக் காணும் விருப்பினைச் சுவாமிகள் தெரிவித்தார். இக் கிராமத்திற்கொரு பெருமையுண்டு. யோக சுவாமிகளின் ஆசீர்வாதத்துடன் முன் னாள் வடமாகாண அரச அதிபர் உயர்திரு. சிறீகாந்தாவினால் ஆரம்பிக்கப்பெற்றது. சுவாமிகளின் விருப்பத்திற்கமைவாக கனகபுரம் கிராம முன்னேற்றச் சங்கத்தில் மக்களைத் தரி சிக்க ஒழுங்கு செய்யப்பெற்றது. அத்தரிசிப்பின் போது ஒரு பெண் தனது குழந்தையினைச் சுவாமியிடம் கொடுத்து



ஆசிபெற்று மீளக் கையேற்ற காட்சி எனது உள்ளத்தினைத் தொட்டது. அக்குழந்தை பெரும் பாக்கியசாலியானான்.

சுவாமிகள், எமது மாவட்டத்திற்கு எழுந்தருளியமைபற்றி வெளியிடும் இம் மலருக்கு அடியேன் அணிந்துரை வழங்கு வதும் சுவாமிகளின் திருவருளே. இந்நூல், ஒரு வரலாற்று நூலாகவும், ஆன்மீக நூலாகவும் திகழ்வது பாராட்டுதற்குரி யது. யோக சுவாமிகளின் திருவாக்குகளும் அருட்பாக்களும் இதில் அடங்குவது வரவேற்பிற்குரியது.

இந்நூல் சைவசமயிகளின் கைகளில் இருக்க வேண்டிய தொரு பொக்கிஷமெனலாம்.

"எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்"

**வணக்கம்.**

(பொன். [illegible])
உதவி அரசாங்க அதிபர்/பி.செ.
கரைச்சி, கிளிநொச்சி.

---

*அப்பா பரமசிவம்*

**இராகம் - புன்னாகவராளி** **தாளம் - ஆதி**

**பல்லவி**

அப்பா பரமசிவம் (அப்பா)

**சரணங்கள்**

அன்றுதொட்டு இன்றுமட்டும் அடியேனுந் தேவரீரும்
அத்துவித மாயிருந்தவித்தைதனை யாரறிவார் (அப்பா)

ஒப்பாரும் மிக்காரு மில்லா வொருபொருளே
தப்பேது யான்செயினும் அப்பா பொறுத்தருள்வாய் (அப்பா)

அப்பாலுக் கப்பாலா யாருமறி யாதவண்ணம்
ஆடுந் திருநடனங் காண வருள்புரிவாய் (அப்பா)


(நற்சிந்தினை -பக்கம் 339 - 4ம் பதிப்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# அணிந்துரை



ஸ்ரீ சிவயோகீஸ்வரன் அவர்கள் குறிப்பிட்ட அப்பு (யோகசுவாமிகள்) சக்கர நாற்காலியில் காலஞ்சென்ற திரு.ஸ்ரீகாந்தா (அரசஅதிபர்) அவர்களுடன் காணப்படுகின்றார்.

**யோகசுவாமிகளே கீழே உள்ள சிவயோகீஸ்வரன் அவர்கட்கு இந்நாமத்தைச் சூட்டியவராவர். சுவாமி நோயுற்றிருக்குங் காலத்தில் சக்கர நாற்காலியில் யாழ் நகர வீதிகளில் கூட்டிக் கொண்டு உலா வந்துள்ளனர். அவர் இன்று லண்டனில் சிறப்புப் பெற்ற பொறியியலாளராக 1600 பேர்களுள் ஒரே ஒரு தமிழ் பொறியியலாளராக கடமையாற்றுகின்றார். அவரது கருத்தோவியம் இங்கு தரப்படுகின்றது.**

யோகசாமியாரை அப்பு என்றே நான் சிறுவயதிலிருந்து அழைப்பது வழக்கம். அப்புவின் ஆன்மீக வாழ்க்கையில் எம்மவர் பலரின் ஆன்மீக யாத்திரைகள் சந்தித்திருக்கின்றன. அதனால் எங்கள் வாழ்க்கைகள் பெரும் சிறப்புற்றிருக்கின்றன. இப்புத்தகத்தின் மூலமாக அப்புவோடு இணைந்த ஓர் ஆன்மீக யாத்திரை வர்ணிக்கப்படுகிறது. இதில் சொல்லப்



படும் திருநாவுக்கரசு என்பவர் எனது தாயாரின் தங்கையாரின் கணவராவார். இவரை நான் ஆசையையா என்றழைப்பேன் ஆசையின் மாமனார் வல்லிபுரம் - ஆசையையா உடையார், அப்பு கொழும்புத்துறையில் இலுப்பை மரத்தடியில் தியானத்திலிருப்பதைப் பார்த்து பக்கத்தில் தனது காணியிலிருந்த, ஒரு கடையாயிருந்து பாவிக்கப்படாமலிருந்த கட்டிடத்தில் அப்புவை வந்திருக்க வேண்டினார். அப்புவும் அதை ஏற்று அக்கட்டிடத்தில் இருக்கை கொண்டார். இக்கட்டிடமே அப்புவின் கொழும்புத்துறை ஆச்சிரமம் ஆகியது.

ஆசையையா, அப்புவை நாள்தோறும் அடிபணிந்த அடியார் இவர். அப்புவின் காலஞ்சென்ற சீடர் துரையப்பாவின் மகன் நவரத்தினத்திடமிருந்து ஒரு மொரிஸ் மைனர் காரை (இலக்கம்: ஈ.என். 1371) வாங்கி உபயோகித்தார். இந்தக் காரில் அப்பு பலமுறை பவனி வந்துள்ளார். இந்தக் காரைத் தான் இப்புத்தகத்தில் விளக்கியிருக்கும் ஆன்மீக யாத்திரைக்கு செல்லத்துரைச் சாமியாரால் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அப்புவின் இளவயதில், கிளிநொச்சியில் இருந்த தொடர்பையும் இந்த ஆன்மீக யாத்திரை மூலம் அறிய வருகிறோம். இந்தச் சரித்திரத்தை வாசிக்கும் போது நான் 15 வயதளவில் அப்புவைக் கதிரை ஊர்தியில் வைத்து யாழ்ப்பாண வீதிகளில் யாத்திரைகள் பல செய்தது கண்முன் வருகிறது.

மேலும் 1963ம் ஆண்டு அப்புவோடும், செல்லத்துரைச் சாமியாரோடும் யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தில் சிலநாட்கள் தங்கி நின்ற போது, செல்லத்துரைச்சாமிக்கு அப்பு ஆசீர்வாதம் கொடுத்தார். பின் அதே ஆண்டு மார்கழித் திருவாதிரையன்று நான் கொழும்புத்துறையில் அப்புவுக்குத் தொண்டுகள் செய்து கொண்டிருக்கும் போது The Right Honourable Viscount Soulbury கைதடியிலிருந்து நடந்து வந்து சேர்ந்தார். இவர் சோல்பரிப் பிரபுவின் மகனாவார். அப்புவுடன் இவரும், நானுமாக மூவருமாயிருக்கும் போது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்புவின் ஆணைக்கேற்ப, என்னைக் கிரிகைகள் செய்யப் பண்ணி, சாந்தசுவாமி என்ற நாமத்தை அப்பு சோல்பரிப் பிரபுவின் மகனுக்குச் சூட்டியதும், ஆன்மீக யாத்திரைகளே. இவற்றை எண்ணிப்பார்க்கும் போது இப்போதும் மயிர்கூச் செறிகின்றது.

நாம் எமது வாழ்க்கைகளில் எத்தனையோ அனுபவங் களை அடைவோம். ஆனால் சில அனுபவங்களை நாங்கள் மறக்கமுடியாது. இப்படியான ஆன்மீக யாத்திரைகள் நம் மனதில் என்றும் நிலைத்து நிற்கும். இப்புத்தக ஆக்கியோன் அன்பளிக்கும் ஆன்மீக யாத்திரை செல்லத்துரைச்சாமியும் அன்பர்களும், யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத் திலிருந்து வெளிக்கிட்டு, வன்னேரிக்குளத்தில் யோகசுவாமி கள் முதியோர் இல்லத்தில் திருவடிப் பிரதிஷ்டை செய்ததும், கிளிநொச்சிப் பகுதியில் அப்பு இளமையில் நட்ட மாமர தரிச னம் செய்ததும் ஸ்ரீகணேசானந்த மகாதேவ சுவாமிகள் சந்திப் பையும், உருத்திரபுர சிவாலய தரிசனம் போன்றவற்றை எம் மனக்கண் முன் காட்டி வைக்கின்றார். மேலும் நற்சிந்தனை, திருக்குறள், திருமந்திரம் போன்ற பாடல்களாலும், விளக்க வுரைகளாலும், தத்துவ விமரிசனங்களாலும், வாசிப்போர்க்கு ஞானமும், இன்பமும் பயக்கப் பண்ணுகிறார் இவ்வாசிரியர்.

அப்புவின் நேர் தரிசனமாகி சுமார் நாற்பது வரு டங்களுக்குப் பின், அப்புவைப் பற்றி ஓரிரு சொல்லெழுதக் கிடைத்த வாய்ப்புக்கு, அப்புவின் வாக்கான "எல்லாம் எப் பவோ முடிந்த காரியம்" தான் விளக்கமும் வழிகாட்டியாயும் அமையும்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி

*K.Sivayogeswaran*
*No3 New Leasaw walamley*
*Sutton Gold Field*
*Birmingham*
*B 7614 L*
*U.K*



## உருத்திரபுரீஸ்வரர் திருப்பள்ளியெழுச்சி
### (பாடல்கள் சில)

போற்றியெம் புனிதா புண்ணிய முதலே
புலர்ந்தது காலைநின் புதுமல ரடியை
ஏற்றியே இறைஞ்சி இருள்கடிந் திடவே
எழில்நன் மலர்கை யேந்திநிற் கின்றார்
சற்குரு வாகிய தாரகப் பொருளே
சஞ்சலம் தீர்த்திடென் றேசரண் புகுந்தார்
நற்றவர் வாழுருத் திரபுரி நயந்த
நாயக னேபள்ளி யெழுந்தரு ளாயே.


வண்டு பண்பாட இளமயில் ஆடும்
வனத்திடை மாமலர்ச் சோலைகள் தோறும்
தொண்டர்கள் தோத்திர இசைபல ஒலிக்கும்
தூநெடு மாளிகை மூன்றில்கள் தோறும்
கொண்டலே குமுறிடக் கோக்களும் குமுறிடும்
குறிபல கண்டுனைக் கும்பிட நினைந்தார்
மண்டிருள் விடிந்தது உருத்திர புரத்தெம்
மன்னவ னேபள்ளி யெழுந்தரு ளாயே.

கற்றவர்க் கருள்புரி கற்பகக் கனியே
மற்றவ ரறியா மாணிக்க மலையே
சுற்றமும் துணையும் பற்றற விட்டுன்
பதப்பிணை பற்றிய பழவடி யார்கள்
புற்பதம் கொழிக்கும் புனலுடை வாவியில்
பொற்புறும் சோலைப் பாங்கமர்ந் துறையும்
அற்புதர் ருத்திரக் கோயில்கொண் டருளும்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே.

- தவத்திரு வடிவேல்சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## தவத்திரு வடிவேல் சுவாமிகள்



மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்
பெண்ணில் நல்லாளோடும் பெருந்தகை இருந்ததே.

- தேவாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# முகவுரை



இந் நூலாசிரியரும் நானும் ஒரே காலத்தில் 1958 ஆகஸ்ட் 29ம் திகதியன்று இன்னும் ஒன்பது பேருடன் கனகபுரம் படித்த வாலிபர் குடியேற்றத்திட்டத்தில் இணைந்து நடுக்காட்டு மத்தியில் வாழ்வைத் தொடங்கியவர்கள், இத்திட்டம் யோக சுவாமிகளின் வழிகாட்டலில் காலஞ் சென்ற மா.ஸ்ரீகாந்தா ஐயா அவர்களால் உருவாக்கப்பட்ட முன்னோடித்திட்டமாகும். இத் திட்டத்தின் தந்தையாக மா.ஸ்ரீகாந்தா ஐயா அவர்களும் தாயாக T.முருகேசம்பிள்ளையவர்களும் கனகபுரவாசிகளால் போற்றிப் பேணப்பட்டு வந்துள்ளனர். இவர் சைவ உணவு உட்கொள்பவர் என்பதாலும் சமய அறிவு மிகுந்து இலட்சியப் பற்றுடன் காணப்பட்டவர். என்பதாலும் "குரு" என அனைவராலும் அழைக்கப்பட்டார். எமது வாலிபக் காலத்தில் கிடைத்த ஆன்மநேயர்களின் தொடர்புகளால் சமயப் பெரியார்களின் அறிவுரைகளைத்தொடர்ந்து கேட்கும் வாய்ப்புக்கள் ஏற்பட்டதால் பின்னாளில் ஆன்மீக தேடலில் ஈடுபட வாய்ப்புக் கிட்டியது. இந்நூலில் பவனி வரும், ஆன்மீகத் தலைவர்கள் எனக்கும் பரிச்சியமானவர்கள். ஊர்களும் நிறுவனங்களும் எனக்கும் தொடர்புடையவை. ஆனபடியால் இந்நூலுக்கு முகவுரை எழுதுவது பொருத்தமானதெனக் கருதுகின்றேன்.

யோக சுவாமியும் கிளிநொச்சியும் என்ற இந்த ஆன்மீக யாத்திரை நூலில் யோக சுவாமிகளுடைய அணுக்கத் தொண்டரான செல்லத்துரை சுவாமிகள் சிவதொண்டன் நிலையத்திலிருந்து புறப்பட்டது முதல், அப்பிரயாணத்தில் சந்தித்த ஊர்கள் நிறுவனங்களை விளக்குகிறார். இந்தக் காட்டுப் பகுதியில் 1952 முதல் வாழ்ந்து வந்த வடிவேலு சுவாமிகளது அணுக்கத் தொண்டரும் குருசீடபாரம்பரியத்தில் வந்தவருமான கணேசானந்த மகாதேவ சுவாமிகள் ஆற்றிய, ஆற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்ற பணிகளை விபரிக்கின்றார். இத்தகைய சம்பவங்களுக்கிடையே யோகசுவாமிகளுடைய நற்சிந்தனைப் பாடல்கள், சித்தர் பாடல்கள் தேவாரங்கள் என்பவற்றால் யோக சுவாமிகளுடைய சீரிய சிந்தனை வெளிப்பாட்டின் மூலம் மக்களுக்கு வாரிவழங்கிய சைவ சித்தாந்தப் பிழிவு என்று சொல்லக்கூடிய மகா வாக்கியங்களுக்கு ஆதாரங்களுடன் விளக்கம் அளித்துள்ளார். ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகளாலும் காலஞ்சென்ற திரு.த. நல்லதம்பி அவர்களாலும் ஆரம்பிக்கப்பட்டு கரைச்சி துணுக்காய் பகுதியெங்கும் ஓயாது உறங்காது சமயப்பணியாற்றிய திருநெறிக்கழகத்தில் நாம் இருவரும் இறுக்கமாகச் செயற்பட்ட காலத்தை விபரிக்க வார்த்தைகளே இல்லை. அத்துடன் ஆன்மீக சாதகர்களுக்கான நூல் வெளிவருவது கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவே முதல் தடவையாகுமெனக் கருதுகின்றேன்.

ஸ்ரீ கனகாம்பிகை அம்பாள் ஆலயச்சிறப்புப்பற்றிய விளக்கம் உண்மை நிகழ்வு என்பதுடன் மயிற்கூச்செறியும் சம்பவமுமாகும். யோக சுவாமிகளது நல்லாசியும் ஸ்ரீகாந்தா ஐயா அவர்களது அப்பழுக்கற்ற பணியுமே கிளிநொச்சியின் வளர்ச்சிக்கு அத்திவாரமாக அமைந்துள்ளன.

மேலும் மனிதன் யார்? அவனுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பு என்ன? பஞ்சமா பாதங்களினால் வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்கள், அதே வேளை ஒழுக்கநெறி நிற்பதனால் அடைந்த நன்மைகள் மது புலால் உணவுகளால் ஏற்படக்கூடிய பாதகங்கள் சைவ உணவு உண்பவர்களுக்கு ஏற்படும் நன்மைகள் அத்துடன் மனிதன் நோயற்று, துன்பமற்று வாழும் வழி என்பவற்றை சைவசமய நூல்களில் உள்ள இலகுவான பாடல்கள் மூலம் விளங்க வைத்துள்ளார்.

யாழ்ப்பாணச் சித்தர் பரம்பரையில் தவமுதல்வராகிய யோக சுவாமிகளுடைய சிந்தனையால் பயனடைந்தோர் கணக்கிலர். இன்றைய இந்திய ஜனாதிபதியும் அணு விஞ்ஞானியுமான அப்துல் கலாம் அவர்களும் நற்சிந்தனை பாடல்க



ளுள் ஒன்றான இன்பம் முப்பது என்ற பாடலால் நன்கு கவரப்பட்டுவிட்டார். கணேசானந்தா மாகாதேவ சுவாமிகளின் வழி காட்டலில் ஒழுக்க சீலர்களாக வளரும் பிள்ளைகள், நாட்டுப் பற்றாளர் சி. கந்தசாமி எம். ஒ.எச் (MOH) அவர்களின் மகா தேவ ஆச்சிரம அத்திவாரத்தில் எழுந்த சிந்தனையாலும் வழி காட்டலாலும் உயர்ந்து நிற்கும் முதியோர் இல்லம் என்பன வன்னியில் பண்பாட்டுப்பயிர் வளர்க்கும் பணிக்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். தர்ம சீலரும், ஆன்மீகத் தொண்டரும், இலட்சிய வேங்கையுமான அந்தோனிப்பிள்ளை (வெள்ளை) அவர்கள் தமிழர்களின் பாரம்பரிய பண்பாடு என்ன என்பதை நன்குணர்ந்து உண்மை நெறியைக் கடைப்பிடித்த சாதனை வீரர். அவரது வரலாறை எடுத்துக் காட்டிப் போற்றியது சிறப்பு அம்சமாகும்.

நிறைவாக விடுதலைப் போராட்ட காலங்களில் மக்கள் பட்ட துன்ப துயரங்கள், போராளிகள் ஈட்டிய சாதனைகள், போராட்டத்தில் வெற்றி பெற வடிவேலு சுவாமிகள் ஆற்றிய ஆன்மீகப் பணிகள், போராளிகள் செறிவாக வாழும் கிளிநொச்சி பகுதியில் ஒளிவிடும் வாழ்வியல் சிறப்புக்கள், இத்தனைக்கும் மேலாக தமிழர்களால் வழிபடப்படும் போராளிகள் அவர்கள் துயில் கொள்ளும் புனித பூமி பற்றிய குறிப்புக்களும் இடம்பெற்றுள்ளன.

இந்நூல் ஒரு ஆன்மீகப்பயணம் மட்டுமல்லாது கிளிநொச்சியின் கடந்த ஐம்பது ஆண்டு கால வரலாற்றுப்பதிவுமாகும்.

**சாந்தி**
**1ம் பண்ணை,**
**கனகபுரம்,**
**கிளிநொச்சி.**

**நா. சோதிநாதன்,**
**உதவிக் கல்விப்பணிப்பாளர்,**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகநெறி

இராகம் -மாண்டு ஏகதாளம்

இடைபிங் கலையென்னும் இருவாச லடைத்துவிட்டுக்
சடையிற் சுழுமுனையைக் கபாலந் திறந்து கொண்டு -தங்கமே
காசிதேசம் போவோம் வாராய் 01

நாசி நுனியிலே நாட்டத்தை வைத்துவிட்டு
வாசிக் குதிரையேறித் - தங்கமே
மாறிமாறிச் சிமிட்டாக்கொடு 02

ஆசுகவி மதுரகவி அழகான சித்திரகவி
பேசுந்திறம் உண்டாகும் - தங்கமே
பிராணாயாமம் செய்திடெடி 03

எட்டுத்தர மூச்சுவாசித்து எண்ணெட்டுத் தரம் நிறுத்தி
எண்ணிரண்டு நிச்சுவாசஞ்செய் - தங்கமே
இஃதோர்வகைப் பிராணாயாமம் 04

பாலும் பழமுந்தின்று பகல்நித்தி ரையைத்தள்ளு
பாலனைப்போல் தேசுண்டாகும் - தங்கமே
பரமனைநீ பத்திசெய்வாய் 05

இரவுபக லில்லாத ஏகாந்த வீட்டினிலே
பரவிப் பணிந்திடெடி - தங்கமே
பரமனைநீ பத்திசெய்வாய் 06

பன்னிரண்டு காற்புரவி பக்குவமாய் நீயேறி
உன்னிரண்டு காற்கீழே - தங்கமே
உறுதியாய் அடக்கிவிடு 07

ஆறு படிதாண்டு அப்பாலே வெள்ளிப்படி
அதுவும்நீ தாண்டிவிட்டால் - தங்கமே
ஆருனக்கு நிகராவார் 08

ஐவருமுன் ஏவல்செய்வார் தெய்வமுன்னை விரும்பிவிடும்
கைவல்ய முத்தியெடி - தங்கமே
கண்ணைத் திறந்துவிடு 09



கூறும்நாவே முதலாகக் கூறுங் கரணமெல்லாம்
கோமானுக் கொப்புக்கொடு - தங்கமே
குறைவொன்றும் வாராதெடி 10

சீமானைப் போலிருந்து செகத்தினிலே வாழ்ந்திடலாம்
ஓம்ஆம்நா மென்றுசொல்லி - தங்கமே
உருவேற்றி நின்றிடெடி 11

உருவேற வேசெபித்து ஓங்காரக் கம்பத்திலே
திருவேற நின்றிடெடி - தங்கமே
சிவன்சிவன் ஆச்சுதெடி 12

ஆச்சுதென்று நீசொல்லி அசட்டைசெய் யாதேயெடி
போச்சுதெடி யோகசித்தி - தங்கமே
பூசைசெய்ய மறவாதே 13

மறந்தாலும் பிறந்தாலும் மாண்டாலும் இருந்தாலும்
மறவாத தெய்வமெடி - தங்கமே
மற்றொன்றுமஞ் சாதேயெடி 14

நாமுமே நாமாக நமக்குள்ளும் நாமாகத்
தாமுமே தாமாகத் - தங்கமே
தனித்திருந்து பார்த்திடெடி 15

தேவர்கடம் இருப்பிடமும் திக்குத் திகாந்தமெலாம்
இச்சபையில் உள்ளதெடி - தங்கமே
இருந்திளைப் பாறிடெடி 16

ஒன்றா யிரண்டாகி ஒருமூன்றாய் நான்கைந்தாய்
நின்ற பராபரத்தைத் - தங்கமே
நீயென்று உணர்ந்திடெடி 17

கண்டுசர்க் கரைதேனும் கனிரசமும் சேர்த்தொன்றாய்
நின்றசுவை தெவிட்டுமெடி - தங்கமே
நிறைந்தசிவந் தெவிட்டாதெடி 18

மண்டலங்கள் மூன்றினிலும் மருவிநின்ற மெய்ப்பொருளைக்
கண்டவர்கள் சொல்லாரெடி - தங்கமே
காட்சியெல்லாங் கடந்ததெடி 19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறத்து வாக்களுக்கும் அப்பாலாய் இப்பாலாய்
மாறாமல் இருக்குதெடி - தங்கமே
மதிரவியை யொன்றாக்கெடி 20

முழுதுமுண்மை ஆச்சுதெடி மூச்சுப்பேச்சுப் போச்சுதெடி
பழுதின்றி வாய்ச்சுதெடி - தங்கமே
பாராமற் பார்த்திடெடி 21

ஐம்பூதம் நீயல்லை ஐம்பொறியும் நீயல்லை
ஐம்புலனும் நீயல்லை - தங்கமே
ஆன்மாநீ அறிந்திடெடி 22

என்னையுடை யானவன் தன்னையுடை யேனடியேன்
பின்னைப் பிறப்பிறப்பும் - தங்கமே
பேய்த்தேர்கனா வன்றோவெடி 23

முன்னை வினைவந்து மூண்டுதே யென்பார்கள்
தன்னை யறியாதார் - தங்கமே
சஞ்சலத்தை நீக்கிவிடு 24

சஞ்சலத்தை நீக்கிவிடு தாமரைத்தாட் கபயம்புகு
நெஞ்சில்வஞ்சம் வையாதே - தங்கமே
நித்தியமுன் விடாமறி 25

பொன்னின் குடத்துக்கெவர் பொட்டிட்டுப் பார்த்திடுவர்
உன்னை மறவாதே - தங்கமே
ஊருராய்த் திரியாதே 26

ஊருமிலான் பேருமிலான் உடன்பிறந்தார் சுற்றமிலான்
ஆருமி லானவனைத் - தங்கமே
ஆர்தா னறிவாரெடி 27

விண்ணும் மண்ணும் தண்ணீரும் விளக்கொளியும் மாருதமும்
கண்ணுதலின் வடிவடெடி - தங்கமே
காண்பாரார் காட்டாவிட்டால் 28



## இன்னும் ஒரு தரம் பார்க்க வேண்டும்

ராகம்: எதுக்குலாம்போதி தாளம்: ஆதி

### பல்லவி

இன்னு மொருதரம் பார்க்கவேண்டு
மென்றிச்சை கொள்ளுதென் மனம்

### அநுபல்லவி

பொன்னொளிர் சோதி பூரணக் காட்சியை
என்னைத் தகி வெழும் ஓம் இசை ஒழுகினை — இன்னும்

### சரணம்

கண்டவர் மகிழ்ந்திடும் கதிர்சடைக் கற்றையும்
கனிவுடன் அருள்மொழி கண்ணிணைப் போதையும் — இன்னும்


தொண்டர்கள் துதித்திடும் சுந்தரநாதனை
தூயவர் ஏத்திடும் சோதி சொரூபனை — இன்னும்

அண்டரும் அறியாத அற்புத நடனனை
இணைந்துத் தேன்மொழி ஒப்புய பாதனை — இன்னும்

கொண்டலே போன்றருள் கொடை படைத் தன்னை
கொழும்புத்துறையுறை குருமணி யோகனை — இன்னும்

— செல்லத்துரை சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ



## யோகசுவாமிகளும் கிளிநொச்சியும்

*(ஒரு ஆன்மீக யாத்திரை)*

2003 - ஏப்பிரல் - 18ம் நாள் வெள்ளிக்கிழமை புனிதமாக விரதம் இருப்பவர்கள், சிவாலயதரிசனம் செய்பவர்கள் எனப் பல தரப்பட்ட செயற்பாடு அடங்கிய நிலையில் மக்களின் அவசரம் இருக்கும். யாழ் சிவதொண்டன் நிலையத்திலும் அதிகாலை 4.30 மணி தொடக்கம் நாளாந்த நித்திய, நைமித்திய செயற்பாடுகளில் அங்கு சேவையிலுள்ள யாவரும் ஈடுபட்டு இருந்தனர். ஏதோ யோக சுவாமிகளின் அனுமதி கிடைத்துவிட்ட பூரிப்பில் அவரது பிரதம சீடரின் ஆரவாரம் இருந்தது. பகல்வேளை உணவை முடித்துக் கொண்டு புறப்படுவது என தீர்மானம் எடுக்கப்பட்டது. சாரதியாக சிற்றம்பலவனார் அமர்வதாக தீர்மானிக்கப்பட்டு விட்டது. அவருடன் சங்கீத மேதை வித்துவான் கே.ஆர். நடராசா அவர்களும் சுவாமியுடன் கூடச்செல்வதற்கு வரிந்து கட்டிக்கொண்டு நின்றார். இன்னும் சிலர் தயாரானார்கள்.

ஞாயிறு மதியம் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வன்னேரிக்குளத்தில் அமைக்கப்பட்டு திறம்பட செயற்படும் யோக சுவாமிகள் முதியோர் இல்லத்தில் திருவடி பிரதிஷ்டை செய்வதற்கு ஏற்பாடாக இருந்தது. அதற்கு சிவ தொண்டன் நிலைய தலைவர் மௌனமணிப் பெட்டகமாம் செல்லத்துரை சுவாமிகள் அழைக்கப்பட்டிருந்தார். அதற்கு செல்வதற்கான ஆயத்தங்கள் தான் மேலே குறிப்பிடப்பட்டவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவருள் கைகூடுது சிந்தை களிகூருது என்ற யோக சுவாமிகளது வாக்கு செல்லத்துரை சுவாமிகளது நாவில் நடனமாடியது. ஒரு ரூபா அதிஷ்டலாபச்சீட்டில் கொழும்புத் துறை திரு. திருநாவுக்கரசு என்பவர், சுவாமிகளின் பெயரில் எடுத்த சீட்டுக்கு விழுந்த பரிசான மொறிஸ் மைனர் மோட்டார்கார் 1962 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்பும் யோக சுவாமி களது பாவனையில் இருந்துள்ளது. இதன் இலக்கம் ஈ.என் 1371 ஆகும். அது பெருமளவில் திருத்தம் செய்யப்பட்டு தயாராக இருந்தது. சிற்றம்பலவனார் மேற்படி காரை, நிலைய வாயிலில் கொண்டு வந்து நிறுத்தினார். யோக சுவாமிகளது அனுமதி கிடைத்த பெருமிதத்துடன் திருவருள் கைகூடும் நேரம் வந்தது. நன்பகல் 12 மணி வெண்சடையும், தங்கத் தாடியும் கவின் பெறுவனப்புடன் உயர்ந்த நிமிர்ந்த தோற்றத் துடன் 92 வயது நிரம்பிய செல்லத்துரை சுவாமிகள் சாட்சாத் யோக சுவாமிகளின் மறுதோற்றம் எடுத்தது போன்ற காட்சியு டன் கையிலே ஒரு சிறு பையுடன் காருக்குள் ஏறி பின் ஆச னத்தில் அமர்ந்து கொண்டார். சாரதியான சிற்றம்பலத்துடன் எல்லாமாக நால்வர், மட்டக்களப்பு, கிளிநொச்சி, போன்ற மாவட்டங்களுக்கு ஏலவே யோக சுவாமிகளால் பாலமமைக் கப்பட்ட பிரதேசங்களில் ஒன்றான கிளிநொச்சிக்கு பயணம் ஆரம்பிக்கப்பட்டது. அருட்திரு வாகனம் நல்லூரை அடைந் தது. "தேனாரும் நல்லூரில் சீவன்முத்தனாய் வாழ்ந்த கோனா ரும் செல்லப்பனை கும்பிடும் மாணாக்கன்" வழித் தோன்றல் நல்லூரில் ஒரு வணக்கம், சதுர்வித உபாயத்தால் தானாக செய்தவனுக்கு ஒரு வணக்கம். அனைவரும் ஏறினர் வண்டி யில் செம்மணிச்சந்தியில் சுட்டெரிக்கும் வெய்யிலில் ஒரு தாமதம்.

"சூரிய காந்தமும் சூழ் பஞ்சும் போலவே
சூரிய காந்தம் சூழ்பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சந்நிதியின் சுடுமாறு போல்
சூரியன் தோற்றமுன் அற்ற மலங்களே"
- திருமந்திரம் -



காந்தக்கல்லும் (பூதக் கண்ணாடியும்) பஞ்சும் வெவ்வே றாக இருக்கும் போது ஒன்றும் பாதிப்படைவதில்லை. ஆனால் சூரியனுக்கு நேராக கீழே பஞ்சை வைத்து காந்தக்கல்லை (பூதக்கண்ணாடியை) நடுவே பிடிக்க பஞ்சு எரிவது போன்று இறையருள் கிட்டியதும் சேட்டைவிடும் மலங்கள் எரிந்து விடும், சாம்பலாகிவிடும் என்பது திருமூலரின் பாடல்தரும் அனுபோதமாகும். அந்த நடுநிசியில் சிறுதிருத்த வேலை செய்யத்துணிந்த சிற்றம்பலத்தின் மலங்கள் அறுக்கப்பட்டு விட்டனவோ! ஆரறிவார் "படமுடியாத துன்பம் வரினும் கண்டு களிப்பார் சிவனடியார்" ஓம் என்றவாறு செல்லத்துரை சுவாமி கள் முகத்தில் ஓர் புன்னகை, தொடர்ந்தது பயணம், சாவகச் சேரியில் வண்டியில் ஏற்பட்ட கோளாறை சரிசெய்ததும் அருள் நிறைந்த யோக சுவாமிகளது வண்டி வேகமாக நகர்ந் தது. பளை நகரத்தில் நீர் ஆகாரம் அருந்துவதற்கான ஓர் தரிப்பு, சுவாமிகளின் அருட்பார்வை நாலாபக்கமும் விழுந்தது. வீரசாதனைகள் புரிந்த பிரதேசத்திற்குட் பிரவேசித்து விட் டோம் அல்லவா? இயக்கச்சி வளைவை அடைந்ததும் அந்த நாட்கள் நம்மவர் பட்ட பாடும் பிரதேசம் முழுவதும் அல் லோலகல்லோலப்பட்ட நிலைகளும் ஞாபகத்திற்குவந்தன. ஆயினும் முக்காலமும் உணர்ந்த முனி 1932 ஆம் ஆண்டு படித்த பாடல் சிந்தனைக்கு எட்டியது அதில் நாலாவது பாடலான.

" பஞ்சம் படை வந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களடி கிளியே ஆறுமுகன் தஞ்சமடி"

என்றவாறு எப்பவோ முடிந்த காரியம். என்பது அமைதி யுறச் செய்தது. ஆனையிறவு தடைமுகாமில் ஈனஇரக்கமற்ற முறையில் முதியோர், சிறியோர், ஞானியர், தபசுகள் என்று பாராது மைற் கணக்கில் நடந்து ஸ்பரிச சுணக்கம் ஏற்படுத் தியது ஞாபகத்திற்கு வந்தன. ஆனையிவு சுற்றுலா விடுதி எங்கே? அங்கிருந்த பிறகட்டடங்கள் எங்கே? ஒன்றையும் காணோம் எல்லாம் தரைமட்டம் ஆயிரக்கணக்கில் மனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல்கள் மாண்ட இடமல்லவா இது, தியாக பூமியல்லவா இந்த நிலம்.

தொடர்ந்தது தியாக செம்மல்கள் செறிந்து வாழும் பிரதேசம் நோக்கிய பயணம். ஒரு வித்தியாசமான நிர்வாக கட்டமைப்பு காணப்பட்டது. சிறுவர், சிறுமியர், வாலிபர், பருவமடைந்த பிள்ளைகள் யாவரும் சுதந்திரமாக ஒரு மனப்பூரிப்புடன் நடமாடும் காட்சி மனதைக்கவர்ந்தது.


கிட்டத்தட்ட 4 மணியளவில் யோக சுவாமிகளால் நாட்டப்பட்ட மாமரம் இருக்கும் இடத்தில் ஒரு திருவடி நிலையம் அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் நடைபெறும் இடத்தை அடைந்தோம். அத்திருவடி நிலையத்துக்கென காலஞ்சென்ற மாண்புமிகு ஸ்ரீகாந்தா அவர்களின் முயற்சியால் அவர் யாழ் அரச அதிபராக இருந்து, பின்பு நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சு நிரந்தர செயலாளராக இருக்கும் வேளை ஒதுக்கி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட காணியில் அருட்திருவடி நிலையம் நிறுவ ஏற்பாடாகியுள்ளது. அங்கு கிளிநொச்சி மண்ணில் யோக சுவாமிகளின் வழிகாட்டலிலும் அவர்களது ஆசியோடும் ஜெயந்திநகரில் 1952 ஆம் ஆண்டு தொடக்கம் மகாதேவ சுவாமிகளின் பெயரால் ஆச்சிரமம் அமைத்து தெய்வத் தொண்டாற்றி வந்த வடிவேல் சுவாமிகளது சீடரான ஸ்ரீகணேசானந்த மகாதேவா சுவாமிகளும் பல அன்பர்களும் பூரண கும்பத்துடன் அத்திருவடி நிலைய சபையினரும் சமூகமாய் இருக்க செல்லத்துரை சுவாமிகளது வரவை எதிர்பார்த்து காத்து நின்றனர். சுவாமிகளது ரதத்தைக் கண்டதும் பெரும் ஆரவாரம் ஏற்பட்டது. நற்சிந்தனைப் பாடல்கள் மாணவர்களால் இசைக்கப்பட்டன. கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் கிளிநொச்சி பிரதேச செயலாளர் உட்பட அனைவரும் சுவாமியை வணங்கி வரவேற்றனர். பூரண கும்பத்தின் நீரால் சுவாமிகளின் பாதங்களை கழுவ ஒரு அடியார் தொடங்கிய போது அதனை ஏற்க மறுத்து மரத்தடியில் ஊற்றுமாறு சுவாமி கூறினார். அத்துடன் பூரண கும்பம் என்பது இறையருளின்



**யோகசுவாமிகள் திருவடிநிலைய நிர்வாகிகள், சைவச்சிறுவர்கள் சகிதம் ஸ்ரீமத் கணேசானந்த மகாதேவ சுவாமிகள் தவத்திரு செல்லத்துரை சுவாமிகளின் வரவை எதிர்பார்த்து நிற்கின்றனர்.**



**யோகசுவாமிகளுக்கு ஸ்ரீ கணேசானந்த மகாதேவ சுவாமிகள் தீபாராதனை காட்டும் போது**





**சைவச்சிறுவர்கள் பஜனை**

**சிந்தை செய்பவர்க்கு அல்லால் சென்று கைகூடுவது அன்றால்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாள சின்னமாக வைத்து வரவேற்பது. அதனை கால்களில் ஊற்றுவது நிந்தையாகும் என விளக்கம் அளித் தார். ஆகவே அது கைவிடப்பட்டு வேறு நீரினால் தனது கால் களை தானே கழுவ வேண்டும் என எண்ணம் கொண்டார், மக்கள் இடங் கொடாது கால்கழுவி வரவேற்றனர். யோக சுவாமிகளால் நாட்டப்பட்ட மாமரம் உயர்ந்து வளர்ந்து கிளிநொச்சி எங்கும் அருள் மழை பொழிந்த வண்ணம் காட்சி அளிக்கின்றது. அதனை சுவாமிகள் முதலில் சுற்றி வந்து வணக்கம் செய்தார்கள். இந்தக்கட்டத்தில் காஞ்சியில் நாலா யிரம் ஆண்டுகளாக இருக்கும். காஞ்சிமாவடி என்று அழைக் கப்படும் மாமரம் ஞாபகத்திற்கு வருகின்றது. அது ஒரு வரு டத்தில் உள்ள நான்கு பருவங்களிலும் மூன்று மாதங் களுக்கு ஒரு பக்கமாக காய்த்து குலுங்கும். வருடம் முழுவ தும் மாங்கனி கொடுத்து வருகின்றது. இதனை சுவாமிகளே நேரில் கண்டு வியந்துள்ளதாக அடிக்கடிகூறுவார். அவ்வாறு விருட்சங்களும் இறைவன் படைப்பல்லவா, அவ்வாறு திரு மந்திரப் பாடல்களை மக்கள் உய்யும் பொருட்டு வாரி வழங் கிய திருமூலநாயனாரின் திருவாவடுதுறையில் உள்ள கோயி லில் ஒரு அரசமரம் அதன் வேரில் இருந்து கிளைவிட்டு கோயிலைச் சுற்றி வளர்ந்து வருவதையும் நேரில் கண்டதாக மகிழ்ச்சி ததும்ப எடுத்துரைப்பார்கள், அது மூவாயிரம் ஆண்டு பழமை வாய்ந்தது.

"குசவன் திருகையில் ஏற்றிய மண்ணை
குசவன் மனதுற்று எல்லாம் வனைவர்
குசவனைப்போல் எங்கள் கோன்நந்தி வேண்டில்
அசைவில் உலகம் அது விதுவாமே."

- திருமந்திரம் 443 -

குசவன் தனது திருகையில் மண்ணை ஏற்றியதும் தனது மனதில் பட்ட எல்லாவற்றையும் அதாவது சட்டி பானை போன்ற பாவனைப்பொருட்கள் எல்லாவற்றையும் செய்வான். அது போன்றதே இவ்வுலகத்தில் உள்ள சகல சம்பத்துக்க ளும். இறையருளால் மரம், செடி, கொடி, மிருகங்கள் மற்றும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா சேதன அசேதனப்பொருட்களும் ஆக்கப்பட்டவையா கும். ஆகவே மேற்படி காஞ்சி மாவும், திருமூலரின் சமாதிக் கோயில் அரசமரமும், கிளிநொச்சி மாமரமும் கூட இறை யருள் பாலித்த வண்ணம் உள்ளன என்றால் வியப்பேதும் இல்லை. அதனைச் சுற்றி வந்து வணங்குவது யோக சுவாமி களை வணங்குவதற்கு சமனாகும். அண்மையில் பத்திரிகை யில் வந்த செய்தி ஒன்று பற்றியறியவருவதாவது, இந்தியா வின் ரமணாச்சிரமத்திற்கு சற்று தொலைவில் ஒரு ஆலமரம் இருக்கின்றது. அதனை வெட்டி வீழ்த்த தயாராகி ஒரு மனிதர் மரத்தில் கோடாரியால் ஒரு கொத்துக் கொத்தியதும் ரமண ஆச்சிரமச் சாதகர் ஒருவருக்கு ஒரு அவசர செய்தி அழைப்பு அருப்பிரவாகத்தால் கிடைத்துள்ளது. உடனே அவசர அவ சரமாக செயற்பட்டனர். அந்த ஆத்ம சாதகருக்கு தன்னை ஒருவன் வெட்டுவதாகவும் உடன் விரைந்து தடுக்குமாறும் அச்செய்தி வந்தது. ஒருவரை தனக்குக் கிடைத்த குறிப்பின் படி அனுப்பி இப்படி ஆத்மதரிசனத்தில் செய்திகிடைத்துள் ளது, இது ஒரு தெய்வீக விருட்சம் வெட்டவேண்டாம் எனத் தடுத்து அம்மனிதனையும் கூட்டிவந்து ஆச்சிரமத்தில் விளக்க மளித்ததாகவும், அம்மனிதன், தான் அதனை இனி வெட்ட மாட்டேன் எனச் சபதம் செய்து திரும்பியதாகவும் அப்பத்திரி கையில் வந்ததை யாவரும் அறிவோம். இச்சம்பவமானது இறைவனின் திருவருட்சக்தியின் மறுவடிவந்தான் அண்டசரா சரம் எல்லாம் என்பதனை சுட்டி நிக்கின்றதல்லவா?. மனித ருள் தேவுக்கள் என்றும், அசுரர்கள் என்றும், காணப்படுவது போன்று விருட்சங்களிடையேயும் தெய்வீகத்தின் சிறப்பினை எடுத்துக்காட்டும் தல விருட்சங்கள் பல உள. அவற்றுள் உருத்திராட்சமரம், சந்தணமரம், சிவலிங்கப்பூமரம், சாம் பிராணிமரம் எனப்பல தேவவிருட்சங்கள் உள்ளன. சிவலிங் கப் பூவில் சிவலிங்கம் ஆவுடையாரில் இருப்பதும் அதனை நாகம் படமெடுத்துக் குடைபிடித்துப் பாதுகாப்பது போன்ற நிலையையும் காணலாம். அதேபோல உருத்திராக்க மரத்தி லிருந்து விழுந்த ஒரு உருத்திராக்க மணியில் நாகம் குடை பிடிக்க சிவலிங்கம் ஆவுடையாருடன் இருக்கும் வியத்தகு



**தேவதருக்களில் ஒன்றான உருத்திராக்க மரம் மட்டக்களப்பு, செங்கலடி சிவதொண்டன் நிலையத்தில் செல்லத்துரை சுவாமிகளால் நாட்டப்பட்டு பரந்து வளர்ந்து காணப்படுகின்றது. இவ்வாறு சிவலிங்கமரம், சந்தனமரம் ஆகியனவும் காணப்படுகின்றன.**



**அண்ட சராசர மவன்வடி வாகும்**
**அண்ட சராசர மவனே யாகும்**
**அண்ட சராசரத் ததிசயந் தன்னை**
**அண்டரு மறியா ததிசயித் தாரே.**

**-திருமந்திரம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவ விருட்சம்

**இயற்கையாகவே உருத்திராட்ச மரத்தில் இருந்து வீழுந்த உருத்திராட்சம் காயில் ஆவுடையாருடன் கூடிய சிவலிங்கத்தை நாகம் படமெடுத்துக் காக்கும் காட்சியை இங்கே காண்கிறீர்கள்.**



## பூச்சிகளை கொன்று உணவாக்கும் அசுர விருட்சங்கள் கீழே காணப்படுகின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரைபோடும் மனிதருக்கே இரையாகும் பசுக்குலத்தின் சோககதை இது



கருவுற்ற நாள் முதலாய் கட்டையிலே போகும் வரை என் இரக்க ஊற்றாம் பாலினால் உடல் வளர்த்தாய் இரக்கமற்று என்னை இரையாக்க நீ யார்! நான் யார் என்று புரியுதா? இங்கே பார் என் உடல் எங்கும் பரந்திருக்கும் அருட் தோற்றங்களைப் பார். என் அங்கத்துறையும் தெய்வங்களே உனக்கு தக்க நேரத்தில் தக்க பாடம் புகட்டும். இன்றே உனது வாழ்க்கைப் பாதையை மாற்றிக் கொள். இன்றேல் என்றும் அழியா உன் ஆன்மா என்ன பாடு படப்போகின்றதோ! யார் அறிவார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சியை இங்கு படம்பிடித்துத் தருகின்றோம். இவ்வகை யான நிகழ்வுகளெல்லாம் இறையருளுக்குள்ளே நாம் அனை வரும் இருக்கிறோம் என்பதனை சுட்டிநிற்கின்றதல்லவா? நால றிவுச் சீவனான மரஞ்செடிகொடிகளே அந்நிலையில் என்றால் ஐந்தறிவு சீவன்களான மிருகங்களின், பறவைகளின் நிலை யென்ன என எண்ணிப்பார்ப்போமாக. நிலமை இவ்வாறு இருக்க பசுக்குலம் தரும் பால் முதலான ஆதார உதவிகளை அனுப வித்து இன்பமுறுவதுடன் அதனையே இரையாக்கும் மாந் தரை எப்படிச் சொல்வது? திருமூல நாயனாரே பசுவின் நிலையை எப்படிப் பாடியுள்ளார் என கீழ்க்காணும் பாடலில் பார்ப்போமாக.

"யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை
யாவருக்குமாம் பசுவிற்கொருவாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே"

- திருமந்திரம் -

பசுவிற்கு ஒரு வாய் புல் கொடுத்தாலே பெரும் புண்ணிய மென இடித்துரைக்கின்றார். அப்படியிருக்க அதனையே வெட் டிச் சாப்பிடுபவன் நிலை

"நலத்தின்கண் நாரின்மை தோன்றின்
குலத்தின் கண் ஐயப்படும்"

- திருக்குறள் -

அத்துடன்

"அவிசொந்தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர் செகுத்தண்ணாமை நன்று"

- திருக்குறள் -

என்கின்றார் வள்ளுவர். நாம் என்ன நல்வினைகளைச் செய்தாலும், யாகங்களைச் செய்தாலும் இந்தப்பாவத்தை ஈடு செய்ய முடியுமா? இந்த நிலையிலே கிளிநொச்சியிலுள்ள சைவாபிருத்திச் சங்கத்தால் நிறுவப்பட்ட சைவச் சிறுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லங்களில் மாட்டிறைச்சி தொடக்கம் புலாலுண்பதை ஊக் குவிக்கும் நிலையை எப்படியப்பா வர்ணிப்பது? காலம் பதில் சொல்லுமா? உண்மையான வாழ்க்கை முறைக்கு இட்டுச் செல்ல உதவுவோமாக. ஏன் கிளிநொச்சியில் ஒரு புனிதமான சைவச்சாப்பாடு நிலையத்தைத் தேடி அலையவேண்டியுள் ளதே, இருந்த ஓட்டல்களும் ஏதோ காரணத்தைக் கொண்டு மூடப்பட்டுவிட்டன அல்லது மூடச் செய்துவிட்டார்கள். இதற்கு யார் காரணம்? புரியாத புதிராக இருக்கின்றதே: இவ்விட யத்தை இந்துசமய அமைப்புக்கள் கவனத்திற்கொள்ளுமா?. உணவின் பாற்பட்டதே ஒருவனது உள்ளம். இது விஞ்ஞான ஆய்வல்லவா?

அடுத்து யோக சுவாமிகளது திருவுருவப்படம் இருக்கும் பிரார்த்தனை மண்டபத்திற்கு சுவாமிகள் அழைத்துச் செல்லப் பட்டார். அங்கு பாடசாலை மாணவர்கள் பஞ்சபுராணம், நற் சிந்தனைப் பாடல்கள் படித்து சுவாமிகளை ஆராதித்தனர். யாவர்க்கும் தேனீர், சிற்றூண்டி யாவும் வழங்கப்பட்டன. உதவி அரச அதிபர் திரு. பொன் நித்தியானந்தன் அவர்க ளால் முன்கூட்டியே திட்டமிடப்பட்டு ஒழுங்கு செய்யப்பட்ட வாகனத்தில் சுவாமிகள் ஏறியதும் கரைச்சி துணுக்காய் பகுதியில் அதாவது கிளிநொச்சி மாவட்டம் பூராகவும் சமயப் பணியாற்றும் கணேசானந்த மகாதேவ சுவாமிகளும் அவரு டன் வாகனத்தில் ஏறி அமர்ந்தார்கள். வண்டி நகர்ந்தது, ஒரே அரோகரா ஒலம் வானைப்பிளந்தது. " அடியார் உறவும் அரும் பூசை நேயமுமன்றி படிமீது வேறு பணியுள்ளதோ" என்பது பட்டினத்தார் பாடல். அதற்கு ஈடாக சிவனடியார்கள் ஒன்றுகூடி இருக்கும் வேளை கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. மேற்படி பாடலை சுவாமிகள் மந்திரம் போல் அடிக்கடி கூறு வார். தொடர்ந்தது பயணம் உருத்திரபுரம் சிவாலயத்திற்கு. பெருமை வாய்ந்த உருத்திரபுர சிவலிங்கம், புராதன ஆலயம் அல்லவா, புதைபொருள் ஆராட்சியாளர்களால் கண்டெடுக் கப்பட்ட சிவலிங்கத்தை அருகில் நின்று பார்த்து பரவசம் அடைந்தார் சுவாமிகள், அத்துடன் மகாதேவ ஆசிரமத்தில்



கிட்டத்தட்ட 5000 ஆண்டுகள் பழமை வாய்ந்த சிவலிங்கம் உருத்திரபுரம் காட்டுப்பகுதியில் கண்டெடுக்கப்பட்டு அதே இடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. அதனையே உருத்திரபுரம் சிவாலயம் என வழங்குவர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5000 வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்த சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்ட உருத்திரபுரம் சிவாலய முன்றலில் பரமானந்தவல்லி மாதாஜி அம்மையார் தியானத்தில்**

**தங்கப் பொம்மை போல இருப்பேன்
சாம்பசிவ சிவ என்று சொல்வேன்.- நற்சிந்தனை**

**எங்கும் அவனடா
எல்லாம் அவனடா
-மாதாஜி**





**மாதாஜி அம்மா சமாதி ஆனதும் திருமூலர் திருமந்திரத்தில் கூறியவாறு கிரியைகள் நடைபெறுகின்றன.**

**மாதாஜி அம்மாவின் சமாதியின் மேல் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து அதற்கு ஸ்ரீமத் கணேசானந்த சுவாமி அவர்கள் பாலால் அபிஷேகம் செய்யும் காட்சி**



**உள்ளம் பெருங்கோயில்
ஊன், உடம்பு, ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு
வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு
சீவன் சிவலிங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஸ்ரீ பரமானந்த வள்ளி மாதாஜி அவர்கள் தனது இறுதிக் காலத்தில் அடியார் ஒருவருக்கு எழுதிய கடிதம் இங்கே தரப்படுகின்றது.**

உ

சிவ! சிவ!

நவசக்தி ஆலய,
ஸ்ரீநெத்திரேஸ்வர
ஆலயம்
இந்திரபுரம்
வெங்கர

21-1-200

திருவருள் என்றும் பொலிக

பேரன்பிற்குரிய தெய்வமகனே!

அனேக ஆசீர்வாதங்கள்! நீங்கள் அனுப்பிய புத்தகம் 15-1-2002 கிடைத்தது. நன்றி, மகிழ்ச்சி, இந்தப்பார்சல் அனுப்பியவர் யாராயிருக்கும் என நன்றாக யோசித்தேன். பின் ஒருவாறு விளங்கிவிட்டது. இன்று எங்கள் ஸ்ரீ அவை மிகச் செல்வமாக அழைப்பார்கள். மகனே! சிவ சொரூபம் மறந்து விடாதே! ஓம், தத், சத் என்று மனதில் ஒலிக்கட்டும், இந்த உடல் பரமபதி, சின்னஞ் சிறு மாளிகையால் (உள்ளத்தில்) பிரமம் பிரகாசிக்கிறது. அதன் பிரதிபலிப்புத்தான் உடலும் இந்தமாகிய கோயில்கள், எனவே எல்லாம் பிரம்மமயம். எமது உள்ளத்தை விட்டு இவை எப்போதும் நீங்காது, அதன் அசைவே எங்கள் அசைவெல்லாம். மகனே! நீங்கள் மனைவி நரதை அம்மன் சாத்திரம் எழுதியோர் ஆசிரியர் எமக்கு பெரிய மகிழ்ச்சிக்கு மேல் மகிழ்ச்சி, சாந்தி! நிற்க. மகனே!


உங்கள் குடும்ப பிள்ளைகளைப் பற்றி அறிய ஆவல், புனித இராமன் போல என்ன செய்கிறீர், மக்கள் திருமண நிலையைப் பற்றி எனக் கனக்கிறேன், ஆசிரமத்தில் எல்லோரும் நலமே வசிக்கிறோம், மகனே! இப்போ இந்த உடலுக்கு வயதாகிவிட்டது, தொண்ணூற்று மூன்று, வாழ்க்கை வசதி மிக்க குறைவு. அரச அதிபர் திரு. தி. இராசநாயகம் அவர்களின் திருநாம விளக்கமாக எம்மை ஓர் தெய்வமாக நடத்துகிறார்கள், இப்போ அரச அதிபர் வேலை மாறி கொழும்புக்கு போய்விட்டார். திருநாகலிங்கம் போய்விட்டார்கள், எமக்கு உதவி மிக்க குறைவு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சி...........

உடலுக்குத்தான் உதவி தேவை, யுத்தகாலத்திலும் மாதவனால்
எல்லாமே அவனருள்தானே? சங்கரா, சங்கர சம்போ!
ஸ்ரீ லலிதா ஸ்ரீசக்கர மஹா மேரு பீட பூஜை ஆசிரமத்தில்
நடந்தது உங்களுக்குத் தெரியும். இப்போ என்னை
யே [illegible] எல்லாம் வியாபகமாகி விட்டேன்,
எல்லோருள்ளும் [illegible] நானே இருக்கிறேன்,
அப்பனே! அந்த உத்தரத்தில் இருந்து 25 நாள்
உண்ணாவிரதமிருந்து பல கோயில்களுக்குச் [illegible] ஓர் பெண்
[illegible] எல்லோரும் நிறையவரத்தோட்[illegible],
டார்கள். சிவன் பக்தர்கள் தனக்காக வேண்டுவதில்லை.
உலகுக்காக வேண்டுவதே வரத்தை கைவிடுங்கள் என
அன்பாக வந்து கூறுவார் உடனே வட்டக்கச்சி கண்
ணன் கோயிலுக்கு போய் அன்னப்பூஜை செய்தேன்.
அந்தக் கோயிலுக்கு அத்திவாரம் போட்டது ஸ்ரீ லலி
தாம்பிகையும் [illegible]. [illegible] உயிரோடு [illegible]
நது வாழவேண்டும். மகனே!
பார்க்குமிடமெங்கும் பரமன்காண். நீக்கமற நிறைஞ்சோதி
யாய் வாழுங்கள். இராசா உங்களை சந்திக்க முடியுமா?
எது நடந்ததோ அது நன்மைக்கே நடந்தது, எது நடக்கிறதோ அ
துவும் நன்மைக்கே நடக்கிறது. எது நடக்க இருக்கிறதோ அதுவும்
நன்மைக்கே நடக்கும். நீ எதற்காக அழுகிறாய், எதைக் கொண்டுவ
ந்தாய், எதைக் கொண்டுபோவாய்
கடமையில் தவறாதே, கடவுளை மறவாதே, கல்வியைக் கைவிடாதே
ஓம், தத்; சத், சாந்தி! சாந்தி! சாந்தி

இங்ஙனம் உங்கள் அன்புள்ள ஸ்ரீ. மாதாஜி



ஸ்ரீ பரமானந்தவல்லி மாதாஜி
அம்மாவின் சமாதிக்கோவில்
குடமுழுக்கு விழா



ஆத்மஜோதி ஆசிரியர் நா.முத்தையா அவர்கள் சமாதானம் வேண்டி
பாதை யாத்திரையில்கிளிநொச்சிக்கு வருகை தந்த போது
மக்கள் வரவேற்கும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வப்பணி செய்த மாதாஜி பரமானந்தவல்லி அம்மை யாரது சமாதியையும் பார்த்து மகிழத்தவறவில்லை. உருத் திரபுரம் சிவாலயம் பற்றி வடிவேல் சுவாமிகள் அருளிய பாடல்கள் அதிகமுண்டு, அவற்றை மகாதேவ ஆசிரமத்தில் பெற்றுக்கொள்ளலாம். மேலும் வடிவேல் சுவாமிக்கும் யோக சுவாமிக்குமிடையில் இடம்பெற்ற ஒரு சுவாரசியமான சம்ப வத்தை இங்கு கூறவிளைகின்றேன். சுவாமிகள் மருதனார் மடம் சந்தையில் மரக்கறி வாங்கிக் கொண்டு நிற்கும் வேளை அங்கு வந்த யோக சுவாமிகள் வடிவேலு சுவாமிகளின், அவ ருக்குத்தென்படாத நிலையில், மடியில் கைபோட்டார் உடனே வடிவேல் சுவாமிகள் "யாரது" என்று முறாய்த்துக்கொண்டு திரும்பிப்பார்த்தார். அதனைச் செய்தவர் யோக சுவாமிகளே என்று மிரண்டு போனார். உடனே யோக சுவாமிகள் "உம்மு டைய வேதாந்தம் எங்கே போச்சுது" என்றாராம். இது வடி வேல் சுவாமிகளுக்கு கிடைத்த ஆத்மீக சாதனைக்குரிய பாடமாகும். "அதுவே நான்" (**I AM THAT**) என்ற மகா வாக்கியத்தை ஊகித்து உணர்ந்து சாதனை பண்ணுவோர் செய்ய வேண்டியதை சுட்டி நின்றார் போலும். (தத்துவமசி) அதனை யோக சுவாமிகள் ஆத்ம விசாரனைக்கான அமுதச் சொத்தான " நற்சிந்தனை" யில் கீழ் கண்டவாறு தருகின்றார்.

"நெஞ்சகம் நின்று நினைக்கும் பொருளைப்
பஞ்சமாபாதகர் பாரினில் அறிந்திலர்
அது நாம் என்னு மகலாத்தியானத்தால்
மதுவுண்டவண்டு போல் ஆயினர் பலரே.
பேதங்கள் எல்லாமாயினும் பேதங்கள்
பேதியாவொன்றைப் பிரியவொண்ணாதே,"

என்பதாகும். (நற்சிந்தனை - 4 பக்கம் - 165) - ஆம் அவ்வாறு தற்போதுள்ள இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம் அவர்கள் "அதுவே நாம்" என்னும் அகலாத்தியானத்தால் தேனைப்பருகிய வண்டு போலாகி விட்டாரோ. அவர் ரீச் என்ற பத்திரிகையில் ஆங்கிலத்தில் ஒரு செய்தியை கூறினார். அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிவதொண்டன்" சித்திரை மாத மலர் - 67 இதழ் - 02 இல் 48 ஆம் பக்கத்தில் வெளிவந்துள்ளது. அதில் சிறுபகுதியை இங்கு தருகின்றோம். "We are all Born with a devine Fire in us. our effort should be to give wings to that fire and fill The world With the Glow of its Goodness." அவர் சரியென்று ஏற்றுக்கொண்ட இதற்கான தமிழ் ஆக்கத்தையும் இங்கு தருகின்றோம். "நாங்கள் எல்லோரும் எங்களுக்குள்ளே ஒரு தெய்வீக ஒளியுடன் பிறந்துள்ளோம். எங்கள் முயற்சிகள் யாவும் அந்த ஒளியை பிரகாசிக்க செய்வதுடன் அந்த அழகொளியின் சிறப்பை உலகெங்கும் நிறையச்செய்வோமாக" என்பதாகும். இது சம்பந்தமாக அவருடன் இருந்த நேரடிக் கடிதத் தொடர்புகளை இந்நூலில் இணைத்துள்ளோம்.

அத்துடன் நாங்கள் அவருக்கனுப்பிய நற்சிந்தனைப் புத்தகத்தையும் படித்து அதில் "இன்பம் முப்பது" என்ற பாடல் தன்னை கவர்ந்துள்ளது என எழுதிய கடிதத்தையும் இங்கே தருகின்றோம். "தங்களது கடிதமும், நற்சிந்தனை புத்தகமும், சிவதொண்டன் மாத இதழின் பிரதிகளும் கிடைத்தன. மிக்க நன்றி, நற்சிந்தனையில் இன்பம் முப்பது என்னை கவர்ந்தது வாழ்த்துக்கள்," திரு. அப்துல் கலாம் அவர்கள். அணுவைத் துளைத்து ஆராயும் ஆற்றல் படைத்த ஒரு அணு விஞ்ஞானி. அவர் முழுமையாகத் தன்னை இறைவனிடம் அர்ப்பணித்து வாழ்வதனால் அவரை உலக மேதையாக கணிக்கப்படக் கூடியளவுக்கு இறைவன் உயர்த்துகின்றானே! ஆனால் அவர் தனது நிலையில் நின்று தவறுகிறாரா? இது எப்பவோ முடிந்த காரியமோ? யாரறிவார். அப்படியான நிலையில் உள்ள ஒருவரே தெய்வீக தத்துவத்தை முழுமையாக ஏற்று செயற்படுகிறார் என்றால் அரைகுறையாக எதையும் கற்றுவிட்டு இச் சமய நெறிகளில் பொதிந்து இருக்கும் உண்மைகளை உய்த்துணராமல் இந்த சமயம் என்ன என்று இகழ்ந்து நகையாடும் திருக்கூட்டத்தின் பிராரத்த வினைதான் என்ன! இந்திய



[illegible] Newspa[illegible]

# Presider

by William de Alwis

*"EACH individual creature on this beautiful planet is created by God to fulfil a particular role. Whatever I have achieved in life is through his help, and an expression of his will. He showered his grace on me through some outstanding teachers and colleagues; and when I pay my tribute to these fine persons, I am merely praising his glory. All these rockets and missiles are his work through a small person called Kalam, in order to tell the several millions mass of India to never feel small or helpless. We are all born with a divine fire in us. Our efforts should be to give wings to that fire and fill the world with the glow of its goodness".*

(Bharat Ratna Avul Pakir Jainulabdeen Kalam, the 12th President of India in his autobiography Wings of Fire.)

Considering that these words came from the pen of a man called the 'missile man' for his close association with India's space and nuclear industries, they may seem somewhat enigmatic. But Kalam has set the priorities for India and we could agree with what he said later in his speech to the nation after he was sworn in as President a fortnight ago.

"Indeed making India [illegible] Indian as a national priority". He however warned, India would not be able to realise these goals if she did not learn to "transact with speed".

Kalam born in 1931 began life in the poorest of circumstances, the son of a boatman and was a newspaper boy in Rameshwaram, Tamil Nadu for a time. "His parents spared no pains to give him the best education they could afford". An uncle 81 year old Ibrahim Marikkar, who migrated to Sri Lanka and now lives in Chilaw says. "The boy was soon recognised for his brilliance and teachers played a big part in getting him entered into the better schools", the old man reminisces. "We had a freedom fighter named Abul Kalam in the Colonial days. The people of Rameshwaram have now named my nephew Abul as an honour to that great man".

President Kalam's profile released by the Indian High Commission in Colombo reads: "The son of a boat owner in Rameshwaram, he had an unparalleled career as a Defence Scientist culminating in the highest civilian award of India, the Bharat Ratna. As chief of the country's research and development programme, Abdul Kalam demonstrated a great potential for developing the dynamism and innovation that [illegible] reckoning.

A graduate from [illegible] Joseph's College Tiruchirapalli, Abdul Kalam later studied aeronautical enginee[illegible] the Madras Institute [of] Technology which [illegible] regarded as the crow[n] of technical educatio[n] Southern India in the [illegible] After passing out as [a] graduate aeronautic[al] engineer, Abdul Kala[m] joined the [illegible] Technical Development and Production of the Ministry of Defence.

He later joined the Indian Committee for Space Research [illegible] Rocket Engineer whi[ch] during the later half [of] 196[illegible] had decided [illegible] the Equatorial Launch Station in Thumba [illegible] became a member [illegible] team le[d by] [illegible] Sarabhai which aimed [at] organising an integr[al] national space progra[m] with the equipment fo[r] manufacture of rocket and launch facilities [illegible] indigenously.

Prof. Abdul Kalam [illegible] for the launch [illegible] Launch Vehicle [illegible]

"EACH individual creature on this beautiful planet is created by God to fulfil a particular role. Whatever I have achieved in life is through his help, and an expression of his will. He showered his grace on me through some outstanding teachers and colleagues, and when I pay my tribute to these fine persons, I am merely praising his glory. All these rockets and missiles are his work through a small person called *kalam*, in order to tell the several millions mass of India to never feel small or helpless. We are all born with a divine fire in us. Our efforts should be to give wings to that fire and fill the world with the glow of its goodness."

***Bharat Ratna Avul Pakir Jainulabdeen kalam***

**PRESIDENT OF INDIA**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் அவர்களுடனான கடிதத் தொடர்புகள்.

A.P.J. Abdul Kalam

Rashtrapati Bhavan
New Delhi - 110004

February 14, 2003

Dear Shri Rajaratnam,

Thank you for your letter and thoughts. I have gone through the translated version of my statement. It is O.K. My greetings and best wishes to you. I am enclosing two of my books in Tamil for placing it in the Ashram Library.

With regards,

Yours sincerely.

(A P J Abdul Kalam)

Shri K. Rajaratnam,
Secretary, Mahadeva Ashram,
Jeyanthinagar,
Kilinochchi (Srilanka).

Encl: Two Books.

1. இந்தியா 2020
2. எழுச்சி தீபங்கள்
(ஆ.ப.ஜெ.அப்துல் கலாம்)

Telephone : 23011915 & 23015321

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Tamil Translation

இந்த அழகான கிரகத்திலுள்ள ஒவ்வொரு தனி உயிரினமும் ஒரு குறிப்பிட்ட வாழ்க்கைப் பங்கை பூரணமாக செய்து முடிப்பதற்கென்று இறைவனால் உண்டாக்கப்பட்டுள்ளது. வாழ்கையில் இதுவரையான எனது சாதனைகள் எல்லாம் அவன் ஆணையின் வெளிப்பாட்டினாலும் உதவியினாலும் ஆகும். சில சிறப்பான ஆசிரியர்களினாலும் சம கால நண்பர்களினாலும் இறைவன் என்மீது அருளைப் பொழிந்துள்ளான். அவர்களை நான் பாராட்டுகிறேன் என்றால் அது இறைவன் புகழை போற்றுவதாகும். இந்த எல்லா ஊக்கட்டுகளும், ஏவுகணைகளும் கலாம் என்ற சிறு மனிதன் மூலமாக இறைவனின் செயற்பாடாகும். இது இந்தியாவிலுள்ள பல இலட்சம் மக்களும் தாங்கள் சிறுமையலானவர்கள் என்றோ, அனாதரவானவர்கள் என்றோ நினைக்கவேண்டாம் என்பதைச் சொல்வதற்காகவாகும். நாங்கள் எல்லோரும் எங்களுக்குள்ளோ ஒரு தெய்வீக ஒளியுடன் பிறந்துள்ளோம். எங்கள் முயற்சிகள் யாவும் அந்த ஒளியை பிரகாசிக்க் செய்வதுடன் அந்த அழகொழியின் சிறப்பை உலகெங்கும் நிறையதைச் செய்வோமாக

பாரத ரத்னா அவுல் பகீர் ஜெயினுளாவுதீன் கலாம்,
இந்திய ஜனாதிபதி.

Please incorporate the corrections made here.
18/2
Shri Rajaratnam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**A.P.J. Abdul Kalam**

**Rashtrapati Bhavan**
**New Delhi - 110004**

மார்ச் 24, 2003

திரு. இராசரத்தினம் அவர்களுக்கு,

வணக்கம்.

தங்களது கடிதமும் "நற்சிந்தனை" புத்தகமும் சிவதொண்டன் மாத இதழின் பிரதிகளும் கிடைத்தது. நன்றி.

நற்சிந்தனையில் "இன்பம் மூப்பது" என்னைக் கவர்ந்தது.

வாழ்த்துக்கள்.

அன்புடன்,

(ஆ.ப.ஜெ. அப்துல் கலாம்)

Thiru K. Rajaratnam,
Retd. Court Registrar,
Rani Illam,
958/39 KKS Road,
Jaffna,
Sri Lanka.


**Telephone : 23011915 & 23016927**
**Fax : 23018884**

" எங்கும் ஈசனை காணுதல் இன்பமே
தானே தானாய்த் தழைத்திடலின்பமே
தன்னைப் போற் பிறர்பாலன்பின் இன்பமே
எல்லாம் ஈசன் செயலெனல் இன்பமே"
- நற்சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Thavathiru Vadivel Swamy

அம்மை அப்பருக்கு அன்புசெய்ய அருட்குருவாய் வந்த எமது
அம்மை இம்மை அல்லல் அகற்றி அருள்செய்திடுவர்
பொல்லாங்களை தவிர்த்து பொன்னடிக்கீழ் சேர்த்திடுவன்
...இன்புற்றிருக்க அருள் செய்திடுவர்


Srimath Ganeshanantha Swamy

# மகாதேவ ஆச்சிரமம்

Thavathiru Ganesanantha
Mahadeva Swamigal
MAHADEVA ASHRAM
Jeyanthinagar
Kilinochchi (Srilanka)
Peoples Bank, Kilinochchi A/C No : 13704

தவத்திரு
கணேசானந்த மகாதேவ சுவாமிகள்
மகாதேவ ஆச்சிரமம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி,
இலங்கை.
............2002

**A.P.J ABDUL KALAM Esqr.** **27 - 05 - 2004.**
**HIS EXCELLENCY THE PRESIDENT OF INDIA,**
**RASHTRAPATI BHAVAN,**
**NEW DELHI.**

**HONOURED SIR,**

**PUBLICATION OF BOOK TITLED**
**"YOGASWAMY AND KILINOCHCHI"**
(A SPIRITUAL PILGRIMAGE)

May I beg of your Excellency to forgive me for disturbing you for a minute.

We propose to publish the above book as a mark of honour of the visit of the Chief Disciple of Lordship Guru Yogaswamy and the President of Sivathondan Nilayam of Jaffna and Batticaloa, to Kilinochchi.

The above book is in print at present and a proof copy of same is sent herewith for your Honours kind perusal and to consider sending in your Honours **BLESSINGS** to include same in this book.

Your **HONOURS** kind attention is drawn to the page ( flagged in the annexed book) for easy reference to our previous correspondence.

**Sorry for any inconvenience caused.**

**With kind regards.**

**Always at your service.**

.................................

**K.Rajaratnam,**
**Asst. Secretary**

மகாதேவ ஆச்சிரமம்
ஜெயந்தி நகர்
கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

राष्ट्रपति के अतिरिक्त निजी सचिव
ADDITIONAL PRIVATE SECRETARY
TO THE PRESIDENT

राष्ट्रपति भवन,
नई दिल्ली-110004.
RASHTRAPATI BHAVAN,
NEW DELHI - 110004.

ஜூன் [illegible] 2004

திரு. இராசரத்தினம் அவர்களுக்கு,

வணக்கம்.

தாங்கள் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்த 'யோகசுவாமிகளும் கிளிநொச்சியும் (ஒரு ஆன்மீக யாத்திரை) என்ற நூல் கிடைத்தது.

பொதுவாக குடியரசுத் தலைவர் எந்தவொரு நூலுக்குமே வாழ்த்துரையோ, அணிந்துரையோ வழங்குவதில்லை.

குடியரசுத் தலைவர் தங்களுக்கு தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார்.

அன்புடன்,

(ஜெ. ராதாகிருஷ்ணன்)

Thiru. K. Rajaratnam,
"Rani Illam",
958/39, K.K.S. Road,
Jaffna,
Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதி அப்துல் கலாம் அவர்கள் விஞ்ஞானியாகவும் மெய்ஞானியாகவும் விளங்கி உலகிற்கு உபகாரம் செய்வது குறிப்பிடத்தக்கதாகும்.

"நூதன விவேகியர் நுழைந்தும் காண்கிலர்
சாதனை உள்ள சத்துக்கள் காண்பரே"
-நற்சிந்தனை -

என்பது யோக சுவாமிகளது வேதவாக்கு. விவேகத்தோடு கூடிய சாதனை உண்மையை காண வைக்கும் என்பது தெட்டத்தெளிவு. இதற்கு "வைராக்கியமும் அப்பியாசமும்" மிகமிக முக்கியமானவை என சுவாமிகள் அடிக்கடி இடித் துரைப்பார். இக்கட்டத்தில் தாயுமானவர் சுவாமிகளது பாடல் உன்னற்பாலது.

" சைவசமயமே சமயம்
சமயாதீத பரம் பொருள்
கைவந்திடவே மன்றுள்
வெளிக்காட்டும் இந்த
கருத்தை விட்டு பொய்
வந்துழலும் சமய நெறி புகுத வேண்டாம்
முத்திதரும் தெய்வசபையைக்காண
சேரவாரும் செகத்தீரே"

எவ்வளவு புனிதமான மார்க்கத்தைக் காட்டுவது இச்சமய நெறி, அதிற்பிறந்ததே பூர்வபுண்ணியமென்பதை ஆறஅமர இருந்து சிந்தித்தால் புரிந்து கொள்ளலாம். மன்றில் வெளிக் காட்டும் கருத்துடையது இச்சமயம்.

"பார்ப்பதெல்லாம் சிவமாகவே கண்டுபதைப்பற்றிரு
நெஞ்சமே
பதைப்பற்ற பேர்க்கே சிவபாக்கியமுண்டு பஞ்சேந்
திரியம் ஐந்தையும் வென்று"

- நற்சிந்தனை -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று இலகு தமிழில் இலகுவழியை காட்டியிருக்கிறார் யோக சுவாமிகள். அவரது ஞான அமுதமான "நற்சிந்தனையை" மனமார படித்து அவற்றிலுள்ளவற்றை ஆத்ம சாதனைக்கு எடுத்துக்கொள்ள நாம் எத்தனைபேர் தயாராக இருக்கிறோம். சுருக்கவழியில் பணமும் பொருளும் ஈட்டி எங்களை நாங் களே ஏமாற்றிக் கொள்வது தகுமா? எங்கு நோக்கி போகின் றோம், என்று சிந்தனை செய்வோமாக.

**மகாதேவா ஆசிரமத்தில்**


மகாதேவா ஆசிரமத்தை வந்துசேர்ந்ததும், இருமருங் கிலும் பள்ளிமாணவர்களும் ஆச்சிரம நிர்வாகத்திலியங்கும் சிறுவர் இல்லப் பிள்ளைகளும், அயலவர்களும் நின்று நற்சிந் தனைப் பாடல்களை இசைக்க சுவாமிகளை ஸ்ரீ கணேஷா னந்த மகாதேவ சுவாமிகளும் நிர்வாகிகளும் மனமார வர வேற்று உபசரித்தனர். கிளிநொச்சி அரச அதிபர் திரு.இராச நாயகம் உதவி அரச அதிபர் பொன் நித்தியானந்தன் உட்பட பலர் சுற்றியிருந்து சுவாமிகளது அருள் அமுத வாக்குகளைக் கேட்டு வியந்தனர். ஓய்வெடுக்கவோ நேரமேற்படவில்லை. சுவாமிகளுக்கும் மற்றும் அடியார்களுக்கும் சிற்றூண்டி பரிமா றப்பட்டது. அங்கு சேவையிலுள்ள சிறுவர்கள் துரிதமாகவும் பண்புடனும் நடந்து கொண்டமை யாவரையும் பிரமிக்கச் செய்தது. ஸ்ரீகணேஷானந்த மகாதேவ சுவாமிகளது தரமான வழிகாட்டலே இதுவெனப் பலரும் பேசிக்கொண்டனர். தோய் த்துலர்ந்த உடை உடுத்து அனுட்டானம் பண்ணி உருத் திராக்க மாலையுடன் சிறுவர் காணப்பட்டனர். எந்த நேரமும் ஓம் நமசிவாய என்ற மந்திரமே அவர்கள் வாயில் வந்து கொண்டிருந்தது. இந்தப் புனிதவாயால் புலாலை உண்ணப் பழக்கினால் இறையருள் எப்படி ஐயா கிட்டும்? உணவின் பாற்பட்டதே ஒருவரது குணம், இது விஞ்ஞான ஆய்வு.

"தன்னூன் பெருக்கற்கு தான் பிறிது ஊன்பான்
எங்ஙனம் ஆளும் அருள்"

- திருக்குறள் -



**போரினால் அழிவுற்ற நிலையில் கிளிநொச்சி ஜெயந்தி நகரில் உள்ள மகாதேவா ஆச்சிரமம் 2000ம் ஆண்டில் நிலை**




கோயில் சுடுகாடு கொல்புரித்தோல் நல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான் தனியன் காணேடீ
தாயுமிலி தந்தையிலி தான் தனியன் ஆயிடினும்
காயில் உலகனைத்தும் கற்பொடிகாண் சாழலோ
- திருச்சாழல்




மாயம் காட்டி பிறவிகாட்டி மறவா மனங்காட்டி
காயங்காட்டி கண்ணீர் கொண்டால் வாழ்ந்து போதீரே
- சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துரித கதியில் சைவமக்களின் பங்களிப்புடன் மகாதேவ ஆச்சிரம கட்டுமானப் பணி




நூதனமான காரணமொன்றும் பூதலமீது இல்லவே இல்லை
இருந்த இருக்கின்ற இருக்கும் யாழ்ப்பாணத்தாரெல்லோருக்குமாக
கருமாதிகளெல்லாம் செய்து முடிந்து விட்டன. - காசியில் இருந்து
யோக சுவாமிகள் எழுதிய கடிதம் (30.11.1940)




மகாதேவா ஆச்சிரமத்தில் தவத்திரு செல்லத்துரை சுவாமிகளும் ஸ்ரீலஸ்ரீ கணேசானந்த மகா சுவாமிகளும் ஒன்றுகூடி இருக்கும்வேளை..

"அடியார் உறவும் அரும்பூசை நேயமுமன்றி
படிமீதில் வேறுபணி உளதோ"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பஞ்சம் படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களடி -
யோகசுவாமிகள் -1932ல்
பாடியது



மகாதேவா ஆச்சிரமத்தில் சைவச்சிறுவர்களுக்கு யோகாசனப் பயிற்சி
ஸ்ரீ நாகேஸ்வரன் அவர்களால் நடாத்தப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாதேவ ஆச்சிரமத்தில் சிறுவர்களும் ஊர்மக்களும் சமயதீட்சை பெறும் காட்சி - ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள் சமய தீட்சையின் முக்கியத்துவம் பற்றி விளக்கமளிக்கின்றார்.





மகாதேவா ஆச்சிரமத்தில் ஸ்ரீமத் ஜோதி ஸ்வாமிகள்...

ஐயமில்லா அருந்தவர் நெஞ்சில் வாழ்
தெய்வம் என்னுடைச் சித்தத்திலும் உளன்
உய்வம் உய்வம் ஒரு குறையுமிலை
வையம் எங்கும் வணங்கும் சிவாயவே. (நற்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகாதேவா ஆச்சிரமத்தில் கோமாதா பூசைக்கு பசுவை
அழைத்துச் செல்லும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்குமுறையில் சைவபோசனம் பண்ணி வாழ்பவர்கள் எல்லாம் போசாக்கின்மையால் கெட்டுப்போகிறார்களா? எல்லா இறைச்சி வகைகளையும் அதாவது ஒரு வருடத்தில் ஒரு மனிதன் எத்தனை மாட்டை, எத்தனை ஆட்டை, எத்தனை கோழியை, தொன் கணக்கில் சாப்பிடுகிறான் அவன் நோய் நொடியற்று பராக்கிரமம் பெற்று மலைபோல் வளர்ந்து விட்டானா? காற்றையே உணவாக சுவாசித்து வேறு எந்த உணவும் உண்ணாமல் இருந்து சமாதியான பவகிரி பாபா சுவாமிகள் பற்றி அறிவீர்களா? இங்கேதான் மனிதர்களை கூறு போட்டு பார்க்குமிடம் வருகின்றது. முன்பு கூறிய "நலத்தின் கண் நாரின்மை" என்ற குறளை ஞாபகப்படுத்துவோமாக. விசர் பிடித்த மாட்டிறைச்சி சாப்பிட்டதினால் BSE என்று எந்த வைத்தியத்திற்கும் மாறாத நோய் பரவுவதாகவும், அதனால் அமெரிக்க மாட்டிறைச்சி ஏற்றுமதி உடனே தடைசெய்யப்பட்டதாம். இது 25.12.2003 திகதியுடைய ஐலன்ட் பத்திரிகைச் செய்தியாகும். ஆகவே உணவின்பாற்பட்டதே குணம் என்பது உறுதியாகின்றதல்லவா? கண்டபடி சாப்பிட்டு எத்தனையோ ஜன்மத்துக்கும் மாறாதநோயை தேடிக்கொள்ளாது காத்துக் கொள்வோமாக.

மீண்டும் சுவாமிகளது தெய்வீக பயணத்துக்கு வருவோம், மகாதேவா ஆச்சிரமத்தில் நீராகாரம் அருந்தியதும் சற்று ஓய்வெடுத்தபாதியில் வன்னேரிக்குளத்து யோக சுவாமிகளது திருவடி நிலையம் நோக்கிய பயண் தொடங்கியது. சுவாமிகள் முன் ஆசனத்தில் சாரதிக்கு பக்கத்தில் அமர்ந்து கொண்டார். பின் ஆசனத்தில் சங்கீத பூஷணம் வித்துவான் கே. ஆர். நடராஜா உட்பட எல்லாமாக நால்வர் அமர்ந்து கொண்டனர். வாகனம் அரோகரா நாத ஓசை வானைப்பிளக்க புறப்பட்டது. எல்லாமாக 12 மைல்களைத் தாண்ட வேண்டும். இரவு வேளை, வீதிகளோ சொல்ல முடியாத மேடும் பள்ளமும் நிறைந்த கிறவல் பாதைகள், சாரதியோ மிகவும் கெட்டியான துணிவு மிக்க இளைஞர், வீதிகள் எல்லாம் அவருக்கு பரீட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சயமானவை. கதவுகள் பூட்டப்பட்ட குளிரூட்டியுள்ள வாகன மாகும், நடுக்கடலில் தாண்டு மிதந்து கடல் அலைமத்தியில் போவது போன்ற உணர்வு எங்களைத் தாலாட்டியது. சுவா மிகளது சிந்தனைத் தெளிவு எங்கிருந்ததோ ஆரறிவார், அமைதியாகவே இருந்து விட்டார். மோன நிலையில் இருப் பவர் இடையிடை எங்களை விழித்துக் கதை கேட்பார். நாங்க ளும் அரை நித்திரையில் ஏதோ பதில் சொல்வோம். இறைவ னையும் (டிறைவரையும்) இடையிடையே கதைகேட்பார். வயிறு குலுங்கச் சிரிக்கவைக்கும் பகிடிக்கதைகளும் இடை யிடையேகசியும். வித்துவானும் தன்னிலையில் இராகமிழுத்த படியே இருந்துள்ளார். அது யாவரையும் பரவசமடையச் செய் யும் பக்திப்பாடல்களாக இருந்தன. இரவு 10 மணியளவில் வன்னேரிக்குளம் ஐயனார் கோயிலுக்கு கிட்ட அமைந்துள்ள யோக சுவாமிகள் முதியோர் இல்லத்தை சென்றடைந்தோம். வீதியோரம் மாவிலை தோரணம் கட்டப்பட்டிருந்தது, பூரண கும்பத்துடன் முதியோரும் அதன் நிர்வாகிகளும் திரண்டு நின்று சுவாமிகளை வரவேற்க இருமருங்கிலும் நின்றனர், நுழைவாயிலை அடைந்ததும் மாலை அணிந்து திருப்பாதங் களை கழுவ உதவி உள்ளே கூட்டிச்சென்றனர். அங்குள்ள நிர்வாகச் செயலாயர் திரு. ஸ்ரீகாந்தன் ஒவ்வொருவரையும் அறிமுகம் செய்து வைத்தா. இவர் யாழ் சிவதொண்டன் நிலையத்துடன் ஏலவே தொடர்பு கொண்டிருந்தவர், இந்நிலை யத்தில் பிரதிஷ்டை செய்யவிருக்கும் திருவடியை இந்தியா வில் இருந்து எடுத்து வருவதற்கும் ஊக்கம் அழித்ததுடன், அதனை முன்கூட்டியே கொண்டு வந்து சேர்ப்பதற்கும் முன் னின்று உழைத்த செயற்திறன் படைத்தவராவர். இத்திருவடி பஞ்சலோகத்தால் செய்யப்பட்டு யோக சுவாமி திருவடி நிலையம், வன்னேரிக்குளம் என இலச்சினை இடப்பட்டதா கும். நேரம் அகால நேரமானதால் ஏற்கனவே ஏற்பாடாயி ருந்தபடி இரவு போசனம் வழங்கப்பட்டது. யாவரும் களைதீர உண்டு மகிழ்ந்தனர். ஒருபிடி குரக்கன் பிட்டு கீரைக்கறி மற்று முள்ள மரக்கறி வகைகளும் ஒரு வாழைப்பழமும் ஒரு



குவளைபாலும் மாத்திரம் சுவாமிகளது போசனமாக இருந் தது. நல்ல சைவ பாரம்பரிய முறையில் உபசரிக்கப்பட்டனர். ஒரு தனியான மண்டபத்தில் நால்வரது சயனத்திற்கும் ஒழுங்கு செய்யப்பட்டது. அப்போது அம்மண்டப வடகிழக்கு மூலையில் ஒரு மகானது படம் வைக்கப்பட்டு மலர்கள் தூவப் பட்டு இருந்தது. அப்படந்தான் இந்த யோக சுவாமிகள் முதி யோர் இல்ல ஆரம்பகர்த்தாவென அறிந்து கொண்டோம். அவர் ஏலவே யாழ்ப்பாண சிவதொண்டன் சபையுடன் தொடர் புள்ளவர். அவர் யாவரையும் தெய்வ அம்சமாகவே பேணிப் பழகும் உத்தமர். அவர்களுக்கு யோகசுவாமிகள் என்றாலே போதும் கண்கலங்கி நிற்பார். கிளிநொச்சி நகர மத்தியி லுள்ள மேற்படி யோகசுவாமிகளது திருவடி நிலையத்திற் கான திருப்பணிச் சபையை ஆரம்பித்து அரும் பணியாற்றி யவர். அவர்தான் இந்த முதியோர் இல்லத்திற்கும் யோக சுவாமிகள் முதியோர் இல்லம் என பெயரிட வேண்டும் என பரிந்துரைத்தவர். இத்தனைக்கும் மகாதேவ ஆச்சிரமத்தை அடியத்திவாரமாகக் கொண்டு கந்தசாமி என்ற அப் பெரியார் செயற்பட்டார். கணேஷானந்த மகாதேவ சுவாமிகளுடன் தோளுக்குத்தோள் கொடுத்து இறைபணிகள் ஆற்றி, அப்பணி யின் செயற்பாட்டுக் காலத்திலேயே முதியோர் இல்லத்தி லேயே இறைபதம் எய்தியவராவர். இந்தக்கட்டத்தில் மேற்படி செல்லத்துரை சுவாமிகள் அடிக்கடி கூறும் ஒரு அருள் வாக்கை இங்கு குறிப்பிடுவது தகுமென எண்ணுகின்றேன்.

**“ அதுவானால் அதுவாகி அதுவே சொல்லும்”** என்ப தாகும். இறைபணியே தன்பணியாக சதா தனது மனத்தில் நினைத்துக்கொண்ட ஒருவர் இறைபணிக்கே ஆளாகி உட லையும் உதறிவிட்டார். ஆனால் அந்தப்பணியே அவரை பற்றி எடுத்தியம்பிக் கொண்டிருக்கின்றதல்லவா? இது ஒரு சத்திய வாக்காகும். ஒருவன் சதா குடி போதையில் மனங் கொண்டவனாயிருந்தால் அந்தக்குடியிலேயே மூழ்கி அந்தக் குடிபோதையே அவனைக்காட்டிக்கொள்ளுமல்லவா! அதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதிரி நாம் எதை அடிமனதார விரும்புகின்றோமோ அதுவே யாகி அதுவே "அடுத்தது காட்டும் முகம்" என்பதற்கேற்ப முகமே காட்டி விளங்கப்படுத்திக்கொண்டு நிற்கும் என்பதா கும். ஆகவே நாம் மற்றவருக்குத்தெரியாமல் பல திருவிளை யாட்டுக்களைச் செய்வதாக பதுங்கி வாழக்கூடும். ஆனால் அவனுக்கு உள்ளே இருக்கும் இறையொளி இந்த உடல் எதற்கு ஆட்பட்டிருக் கின்றதென முகத்தின் மூலம் தெட்டத் தெளிவாகக் காட்டிக்கொண்டே இருக்கும்.

"உள்குவார் உள்ளத்தெல்லாம்
உடனிருந்தறியும் தேவே"

- நற்சிந்தனை -

என்ற நற்சிந்தனை வரிகள் மேற்படி கருத்தை உறுதிப் படுத்துகின்றன. அம் முதியோர் இல்லத்தில் 22 பெண்களும் 43 ஆண்களுமாக 65 பேர் உலக வாழ்வென்ற இராட்டினத்தில் ஆடி ஓடி முடிந்தபின்பு தளர்வெய்திய நிலையில் விசாவுக்கு விண்ணப்பித்து விட்டு காத்திருக்கும் கனிமரங்களாகும்.

"பத்தும் புகுந்து பிறந்து வளர்ந்து பட்டாடை சுற்றி
முத்தும் பவளமும் பூண்டு ஓடியாடி முடிந்த பின்பு
செத்துக்கிடக்கும் பிணத்தருகே இனிசாம்பிணங்கள்
கத்தும் கணக்கென்னகாண் கயிலாயபுரிக்காளாத்தியே."

இவ்வாறு வாழ்வின் நிலையாமை பற்றி பட்டினத்தார் பாடல் எடுத்துரைக்கின்றது. முதியோர்களில் ஒருவர் கீழக்கண்ட வாறு படித்தார்.

**பட்டினத்தார் பாடல்**

(1) "அன்னை எத்தனை எத்தனை அன்னையோ
அப்பன் எத்தனை எத்தனை அப்பனோ
பின்னை எத்தனை எத்தனை பெண்டிரோ
பிள்ளை எத்தனை எத்தனை பிள்ளையோ



**கதைத்துக் கதைத்து கரைசேர்ந்த புன்னாலைக்கட்டுவன் வடக்கில் வாழ்ந்த 91 வயது நிரம்பிய வெள்ளைவைரம் கந்தையா தாத்தாவும் பாரியார் தங்கச்சிப்பிள்ளையும் கனகபுரத்தில் சிலகாலம் வாழ்ந்து உரமூட்டியவர்கள்**



**அன்னை தந்தையும் நீயே
அரிய சகோதரர் நீயே
ஒப்பில் மனைவும் நீயே
ஓதரும் மைந்தரும் நீயே
-நற்சிந்தனை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னம் எத்தனை எத்தனை ஜன்மமோ
மூடனாய் அடியேனும் அறிந்திலேன்
இன்னும் எத்தனை எத்தனை ஜன்மமோ
என்செய்வேன் கச்சி ஏகம்பநாதனே - என்றும்''

(2) நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியந்தேடி
நலனொன்றுமறியாத நாரியரைக் கூடி
பூப்பிளக்கப் பொய்யுரைத்துப் புற்றீசல் போல
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கு வகையறியீர் கைவிடவு மாட்டீர்
கவர்பிளந்த மரத்துளையிற் கானுழைத்துக் கொண்டீர்
ஆப்பதனை யசைத்து விட்ட குரங்கதனைப்போல
அகப்பட்டீர் கிடந்துழல அகப்பட்டீரே.

இந்தக்கட்டத்திலாயினும் இப்படி ஒரு ஞானம் பேசுகிறாரே? இதுவும் இறைவன் திருவிளையாட்டே?

இந்த வேளையில் வேறு ஒரு சுவாரஸ்யமான சம்பவம் பற்றி எடுத்துக்கூறுவது பொருத்தமானதாகும். 91வது வயது தாத்தா ஒருவர் தானாகவே செவ்வரத்தம் இலை பிடுங்கி உரலில் துவைத்து தலைக்கு வைத்து முழுகினார். அதுதான் அவரது இறுதி காலமென எண்ணினாரோ என்னவோ குளிர் தலைக்கேறிவிட்டது. சாப்பாடும் குளிர்ச்சிக்கு குளிர் கொடுத்து விட்டது. படுத்துவிட்டார் எழுந்திருக்க முடியவில்லை. யாழ் வைத்தியசாலைக்கு கொண்டு சென்று வைத்தியம் நடைபெறுகின்றது. பிள்ளைகளுடன் நன்கு கதைக்கின்றார். ஆனால் மீற்றர் விழுந்து கொண்டே போகின்றது. அவரது மோதிர விரலில் ஒரு தங்க மோதிரம் அது தனது மூத்த பேரப்பிள்ளைக்குரியது என்று முன்னுக்கே கூறியிருந்தார். வைத்தியர் பரிசோதித்து விட்டு இன்று இரவுதான் அவரது இறுதியிரவு உடனடியாக வீட்டுக்கு கொண்டு போவது நல்லது என்றார். இந்ததாத்தா நல்ல படியாக கதைக்கின்றார். அப்போது ஒரு மகன் காஷ்யமாக அந்த மோதிரத்தை பேரனுக்கு களற்றிக் கொடுப்போமோ என்றார். அதற்கு தாத்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்ன பதில் "இன்னும் கொஞ்சம் பார்ப்போம் பொறுத்துக் கொள்" என்றார். வீடு சென்ற சிறிது நேரத்தில் காலம் வந்தது. காலனும் கவர்ந்து விட்டான்.

இவர்கள் கிளிநொச்சி கனகபுரத்தில் சிறிது காலம் வாழ்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் யோக சுவாமிகளது இறுக்கமான, "நல்லாயிருப்பாயடா" என்று ஆசி பெற்ற பக்தர். செல்லப்பா சுவாமிகளது குருபூசை என்றால் தனது கமத்தில் இருந்து மரக்கறி, வாழையிலை போன்ற வற்றுடன் வந்து பூசையில் தவறாது பங்கேற்கும் வெள்ளை வைரக்கடுக்கன் அணிந்த கந்தையா என்ற அன்புத்தாத்தா, செல்லப்பா சுவாமிகளின் பாரம்பரியத்திலுள்ள பிற்றில் மாஸ்ரர் சபாரத்தினத்தின் மைத்துணரே மேற் கூறப்பட்ட கந்தையா. பிற்றில் மாஸ்ரர் சபாரட்ணத்தின் மனைவி அன்னமுத்து (அப்புச்சி) மூத்தசோதரன், புன்னாலைக்கட்டுவன் வடக்கில் ஒரு பாரம்பரிய கமக்காரன். இவர் தனது இறுதியாத்திரை எப்படி அமையப்போகிறது என முன்கூட்டியே கூறிவைத்த உத்தமர் இவரது பாரியார் ஆறு மாத இடைவெளிக்கு முன்பே பேசிப் பறைந்து பிரசாதம் உண்டபின் இறைபதம் எய்தினார். இவரது பாரியாரைப்பற்றிய கதையோ சொல்லி முடியாது. ஆனால் உலகியலில் மூழ்கி வாழ்பவர்கள் பற்றி திருமூலர் பின்வருமாறு கூறுகின்றார்.

"அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடியாரோடு மந்தனம் கொண்டார்
இடப்பக்கமே இறை நொந்தது என்றார்
கிடக்கப்படுத்தார் கிடந்தொழிந்தாரே"
- திருமந்திரம் - 148 -

சமைத்து வைத்த அறுசுவை உண்டியைச் சாப்பிட்டார். மனைவியோடு சல்லாபம் போட்டார். அப்பா இந்த இடபத்தி லேதான் நோகின்றதென்றார், படுத்தார். படுக்கையிலேயே முடிந்துவிட்டார். நிலையாமையின் இலட்சணமிது.



"ஐவர்கொரு செய்விளைந்து கிடந்தது
ஐவரும் அச்செய்கையைக் காத்து வருவார்கள்
ஐவர்க்கு நாயகன் ஓலை வருதலால்
ஐவரும் அச்செய்கை காவல் விட்டார்களே"
- திருமந்திரம் - 188 -

ஐவர்க்கு நாயகனின் ஓலை வந்ததும், காலம் வந்து விட்டது. அதாவது விசா வந்துவிட்டது. காவல் புரிந்த ஐம்புலன் களும் காவலை விட்டனர். வாழ்க்கைப் படகிலிருந்து கரை யேறிவிட்டார். அந்தத்தாத்தா.

01. "பந்தல் பிரிந்து பண்டாரம் கட்டப்பெற்ற
ஒன்பது வாசலும் ஒக்க அடைத்தன
துன்புறு காலந்துரிசுவர மேன்மேல்
அன்புடையார்கள் அழுது அகன்றார்களே"

02 "ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டு
பேரினை நீக்கி பிணமென்று பேரிட்டு
சூரையங்காட்டிடை கொண்டு போய் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந்தார்களே"

கந்தையாவென்ற பேராளராய் இருந்தவர் பிணமென்று பேரிட்டு பெட்டியில் அடங்கினார். இனிச்சாம்பிணங்கள் கத்தி னர், கலங்கினர் சூரையங்காட்டினில் கொண்டு போய் சுட்ட னர். தீமூட்டியவருடன் வீட்டிற்கு வந்து வேப்பிலை சப்பி உலக்கையை கடந்து உள்ளே வந்தனர். நீரினில் மூழ்கினர் நினைப்பொ ழிந்தனரே.

**முதியோர் இல்லச்சிறப்பு.**

இனி முதியோரில்லம் திரும்புவோம். அங்கு பசுவைப் பேணி வளர்க்கிறார்கள். பாலுக்கு குறைவில்லை வாழைத் தோட்டம், தென்னந்தோட்டம், மரக்கறித்தோட்டம், பூந்தோட் டம், நிர்வாக அலுவலகப்பகுதி, அடுக்களைப்பகுதி, குளிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லறைப்பகுதி, பிரார்த்தனைப்பகுதியென பலவாறு ஒழுங்கு பட நிர்வாகம் நடைபெறுகின்றது. இதற்கு அத்திவாரம் இட்டு அயராது பாடுபட்டவர்தான் சு.வை.அ. திரு. கந்தசாமி அவர்கள். அவரது திருவுருவப்படந்தான் அலுவலகத்தில் வைத்து பூசிக்கப்படுகின்றது. முதியோர் பிரார்த்தனைக்கு என்றே யோக சுவாமிகளது திருவடி நிலையம் அழகுற அமைக்கப்பட்டது.

இதன் நிர்வாகத்தில், காட்டுப்பிரதேசத்தில் கண்ணும் கருத்துமாக கலக்கமின்றிச் செயற்படும் செயற்குழு பற்றிய குறிப்பொன்று குறிப்பிடாமலிருக்க முடியாது.

**மேற்படி ஆட்சிமன்ற புண்ணிய சீலர்களின் பட்டியலை இங்கு தருகின்றோம்.**

**பேராளர்கள் :-**

01. அருட்திரு. செல்லத்துரை சுவாமிகள்,
    சிவதொண்டன் நிலையம் யாழ்ப்பாணம்.
02. ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள்
    மகாதேவஆச்சிரமம், ஜெயந்திநகர், கிளிநொச்சி.
03. அரச அதிபர் திரு. தி. இராசநாயகம்.
04. டாக்டர் T. சத்தியமூர்த்தி டி.பி.டி.எச்.எஸ்.
05. திரு.ப. அரியரத்தினம், கல்விப் பணிப்பாளர்,
    கிளிநொச்சி.

**தாபகத்தலைவர்:-** காலஞ்சென்ற திரு. முருகேசு கந்தசாமி, எம். ஒ. எச்.

**தலைவர்:-** திரு. பொன் நித்தியானந்தன், உதவி அரசஅதிபர்.

**உபதலைவர்:-** திரு. ஆ. நவரெத்தினம்.

**செயலாளர் :-** டாக்டர் ச. முருகானந்தன்.


**உபசெயலாளர் :-** திருமதி. சிவனொளிபாதம்.


**பொருளாளர் :-** திரு. மு. சாந்தலிங்கம்.




**யோக சுவாமிகள் முதியோர் இல்ல தாபகரான M.O.H. கந்தசாமி அவர்கள் சுவாமிகளை வரவேற்று ஆசிபெறும் காட்சி.**

**எல்லாம் சிவன் செயல் என்ற**
**ங்களுக்கு குறைவுமுண்டோ?**
**நிறைவுமுண்டோ? நாம் சிவபெருமான்**
**என்ற நூலிலே கோர்க்கப்பட்ட பல**
**நிறமுள்ள மணிகளை ஒப்பவர்.**
**நூலறுவதுமில்லை, நாங்கள்**
**சிதறிப் போவதுமில்லை. பலபடக்**
**கூறுவதால் என்ன பயன் (நற்)**






**ஸ்ரீ கணேஷானந்த மகாதேவ சுவாமிகளுடன் காலஞ்சென்ற M.O.H கந்தசாமி அவர்களும் நிர்வாக அதிகாரிகளும் முதியோரும்**



வன்னேரிக்குளம் யோக சுவாமிகள் முதியோர் இல்ல நூலக திறப்பு
விழாவின் போது ஸ்ரீ கணேசானந்த மகாதேவசுவாமிகள்
விபூதிப் பிரசாதம் வழங்கும் காட்சி



கிளிநொச்சி கந்தசாமி கோவில்
சுப்பரின் பிள்ளை
சாதனைவீரன்
அந்தோணிப்பிள்ளை J.P அவர்கள்
சுவாமிகளுடன்

சாதி சமயமெல்லாம் தம்பிமாரே
சங்கற்பமென்று அறிவீர் தம்பிமாரே
- நற்சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆரம்பகால நிர்வாக உத்தியோகத்தர்கள் :-

திரு.க.திரவியச்செல்வம்,
செட்டியார் சேதுராசா நவரட்ணராசா

மற்றும் பதினாறு நிர்வாகசபை உறுப்பினர்களுமாகும். அத்துடன் நிர்வாக செயலாளராக திரு.ஸ்ரீகாந்தன் அவர்கள் இயங்கியுள்ளார். இவரது ஓய்வுறக்கமற்ற செயற்றிறனை மறக்க முடியுமா? இவர்கள் அனைவரதும் ஒட்டுமொத்தமான அயராத முயற்சியின் பயனாக 65 வயோதிபர்கள் வாழ்வோய்ந்துபோன காலத்தில் சிறப்பான முறையில் பராமரிக்கப்படுகிறார்கள் என்றால் முதியோர்கள் பாக்கியசாலிகளே. இவர்களில் குறிப்பிடத்தக்க சிலரின் முன்மாதிரியான அர்ப்பணிப்பான ஈடுபாடு யாவரையும் பிரமிக்கவைக்கும். அரச அதிபர் திரு. இராசநாயகம், உப அரசஅதிபர் பொன் நித்தியானந்தன், டாக்டர். முருகானந்தம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாகும். இங்கு ஒவ்வொருவரையும் தனித்தனியே குறிப்பிட அவகாசம் போதாததாகையால் நிர்வாகிகள் அனைவரையும் அவர்களது அர்ப்பணிப்புக்களையும் மனமார பாராட்டுகின்றோம்.

### சாதனைவீரர் கணேசன்/அந்தோனிப்பிள்ளை

இக்கட்டத்தில் இலைமறைகாயாக ஈசனார்ப்பணமாக செயற்படும் வைராக்கிய சீலர் ஒருவரைப்பற்றி சிறு குறிப்பு இங்கு காட்டவிரும்புகின்றேன். 1942 ஆம் ஆண்டு தொடக்கம் கிளிநொச்சியே தஞ்சமென வாழ்ந்த பெருமகன், அவரது தாயார் யாழ் ஸ்ரேசனடியைச் சேர்ந்தவர், தகப்பன் உரும்பிராயைச் சேர்ந்தவர், கிருஸ்ணபிள்ளை றோசம்மாவை திருமணஞ்செய்யும்போது ஞானப்பிரகாசம் என்று தன் பெயரை மாற்றி, பண்டாரவளையில் தொழிலின் நிமித்தம் வாழ்ந்து வந்தனர். அங்கும் கிருஸ்ணபிள்ளை பிள்ளையாரை மறக்கவில்லை. அவரையே வழிபட்டு வரலானார். றோசம்மாவும் அவ்வழியே பிள்ளையாரை வழிபட்டு வரலானார். இதன் கார




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணமாக யாழ்ப்பாணத்தில் ஒரு வீட்டில் நான்கு அறைகளிலும் இருந்த குடும்பங்களில் மூன்று கிறீஸ்த்தவம் ஒன்று மேற் கூறிய சைவத்தைத்தழுவியவராவர். யாவரும் சகோதரர்கள் முரண்பட்டுவிட்டது. அந்தக் காலத்தில் கிருஷ்ணபிள்ளைக் கும், றோசம்மாவுக்கும் பிறந்த ஒரு பெண்பிள்ளை இறந்து விட்டது. சிறுபிள்ளையாதலால் புதைப்பது மரபு. மற்ற மூன்று குடும்பங்களும் அந்த அமங்கல நிகழ்ச்சியில் பங்கெடுக்க வுமில்லை, பிள்ளையை புதைக்க தங்கள் இடுகாட்டில் அனும திக்கவும் இல்லை. இதனால் விரக்தியடைந்த நிலையில் சைவமுறைப்படி வாழ்ந்து எடுத்துக்காட்டாக வாழவேண்டு மென்று வரிந்து கட்டிக் கொண்டான். கிருஷ்ணபிள்ளைக்கும் றோசம்மாவுக்கும் 01.05.1935ம் திகதி அன்று பிறந்த அந்தோனிப்பிள்ளை என்ற பதிவுப்பெயர்கொண்ட விநாயகர் உபாசனையில் பிறந்ததினால் கணேசன் என்ற செல்லப்பெயர் கொண்டவராவர். அவரை வெள்ளை என்றும் அழைப்பர். இவர் கிளிநொச்சியில் 1942 ஆம் ஆண்டு தொடக்கம் வாழ்ந்து வருங்காலத்தில் கிளிநொச்சி மத்தியிலுள்ள கந்தசாமி கோவிலுடனும் ஜெயந்திநகரில் இருக்கும் மகாதேவா ஆசிர மத்தோடும் மட்டில்லா பற்றுக்கொண்டவராய் வாழ்ந்துவரலா னார். கிறீஸ்த்தவரான தேவியை துணைவியாக மகாதேவா ஆச்சிரமத்தில் வடிவேல் சுவாமி அவர்கள் முந்நிலையில் சைவமுறைப்படி மங்கள நாண் அணிந்து ஏற்றுக்கொண்டார். அது மாத்திரமின்றி வடிவேல் சுவாமிகளுக்கு திருவடித் தொண்டு செய்வதில் பேரார்வமிக்கவராக காணப்பட்டார். முருகனுக்கு தொண்டு செய்வதே தனது தொழில் முடிந்த நேரத்துப்பணியாக இயற்றி வந்தார். திருவெம்பாக் காலமென் றால் கணேசனின் குதூகலத்தை எப்படி வர்ணிப்பது பெற்றோ மாக்ஸ் விளக்கு தயார் பண்ணுவார், வீடுவீடாகக் கடைகடை யாகச் சென்று திருவெம்பா பாடல்கள் படிக்கும் அடியாரைத் திரட்டுவார். வீதி வீதியாக விடியற்புறம் 4.30 மணிக்கே பணி ஆரம்பமாகிவிடும். கிளிநொச்சி நகர வீதியெல்லாம் அப்பா லும் 3ம் வாய்க்கால் திருவையாறு, கனகபுரம், கணேஷபுரம்,



**கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலுக்கு தர்மபுர ஆதீன சுவாமிகள் வருகை தந்தபோது ...**



**1952 அம் ஆண்டில் தவத்திரு வடிவேல் சுவாமிகளாலும் கர்மவீரர் காலஞ்சென்ற த. நல்லதம்பி அவர்களாலும் தாபிக்கப்பட்டு இற்றைவரை கிளிநொச்சியில் சைவப்பணிகளை ஆற்றிவரும் திருநெறிக்கழகத்தில் தற்போதுள்ள நிர்வாகிகள், ஸ்ரீ கணேஷானந்த மகாதேவ சுவாமிகளின் பணி அன்று தொட்டு இன்று மட்டும் தொடர்கின்றது.**




**நன்நெறிக் உய்ப்பது நமச்சிவாயவே.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநகர், ஜெயந்திநகர், 4ம் வாய்க்கால், 5ம் வாய்க்கால் போன்ற எல்லா இடங்களுக்கும் திருவெம்பாவையும், திருபள் ளியெழுச்சிப் பாடல்களும் படித்தவண்ணம் ஊர்வலம் வரும் காட்சி ஒப்பற்றது. இவரது தெய்வ வைராக்கிய சித்தம் பற்றி எழுதுவதென்றால் அநேகமுண்டு. அவரது மூத்த மகனை இந் தியப் படையினர் பிடித்துவிட்டார்களென யாவரும் கவலைப் பட இவர் கூறிய வசனம் இதுதான் "அவன் சுப்பருடைய பிள்ளை, அவரே பார்த்துக் கொள்வார்" என்பதாகும். இந்த மனோநிலையின் தத்துவந்தான் என்னே. தத்துவம் படித்த கல்விமானா? இல்லை. ஆத்ம ஞானமும் அனுபூதியும் கைவ ரப்பெற்ற முருகனடியான் அல்லவா? எதைக்கேட்டாலும் முரு கன் பார்த்துகொள்வார் என்பதுவே அவர் வாயில் உதிரும் சொற்கள். ஒரு கட்டத்தில் உமது மூதாதையர் மற்றும் முன் னோர் பிறசமயத்தை தழுவ நீர் ஒரு பழுத்த முருகனடியா னாக இருக்கிறீரே என்று கேட்டபோது "தனது தாய் தந்தை யரது இரண்டு பரம்பரைக்கு முந்தியவர்கள் எல்லோரும் சுத்த சைவர்களாகவே இருந்துள்ளனர். பேராசை வசப்பட்டு எலும் புத்துண்டுக்கு இச்சைப்பட்டு தனது தாய்ச் சமயத்தையே விற்று வாழ்பவர்களைப் போல் நானும் வாழவேண்டுமா" என் றார். அசந்துபோனேன் மனிதருள் மாணிக்கமல்லவா இவர். கல்விஞானமோ கிடையாது தொழி லுமோ சிகை அலங்காரம். ஆனால் உள்ளமோ உச்சத்தில் இருக்கிறது.

கோயில் பூசகராயிருந்து பொய்யும், களவும், மாமிச உண வும் உண்ணும் பூசாரிகளை விட உயர்ந்து விட்டான் அந் தோனிப்பிள்ளை. அவர் இன்றுவரை சைவ போசனி என்பது குறிப்பிடத்தக்கதாகும். அவரில்லாத சைவசமய அமைப்புக் களில்லையென்றே கூறலாம். இவரை அணுகி நீர் இறைவ னிடம் என்ன வேண்டுகின்றனீர் என்று கேட்டேன். அவர் அத ற்கு "நான் எதுவும் கேட்பதில்லை, எல்லாம் அவருக்குத்தெரி யும், ஆனால் ஒன்றை மட்டும் எப்போதும் கேட்கின்றனான், அதாவது எந்தநாளும் அவனை மறவாதிருக்க அருள்புரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்பதாகும்'' என்றார். இதைவிட இனி என்ன சொல்ல வேண்டியிருக்கின்றது. மன்றுள் வெளிக்காட்டும் கரு த்தை அறிந்தவனல்லவா இவன். ஒரு துணிவு மிக்க வைரா க்கிய நெஞ்சத்திற்கும் அதனை அப்பியசிப்பதிலும் எடுத்துக் காட்டாய் வாழ்ந்துவரும் சிறப்பு மனிதனாகிய இவரை இங்கே குறிப்பிடாதிருக்க முடியுமா?

பூஞ்சோலைகளும், தென்னை, பலா, மா, வாழை இன்னும் பலரக மரங்களூடாக வரும் தென்றல் தாலாட்ட நுளம்புத்திரி காவல் அரண்போட பிரயாணக் களைப்பால் நலிவுற்ற அனை வரும் நிறைவான நித்திரை கொண்டெழுந்தனர். அனைவரும் காலைக் கடன் முடித்து தேனீர் அருந்தியதும் முதியோர் இல் லத்தை சுற்றிப்பார்க்க புறப்பட்டனர். சுவாமிகளுக்கு சபை உறுப்பினர்களும் நிலையச் செயலாளர்களும் ஆங்காங்கே செயற்பாட்டு முறைகள் பற்றிய விளக்கங்கள் அளித்தனர். ஆண்கள் விடுதியை பார்வையிட்ட போது அங்கு ஒரு இறை அனுபூதிமானான மாம்பழம் சுவாமிகளையும் காணக்கூடிய தாக இருந்தது. காட்டு மத்தியிலே வாழ்ந்து தியானத்தில் இருப்பதை கண்டு களிப்புற்றோம். அந்தந்த இடங்களைத் தனது குறிக்கோளுக்கு சாதகமாக பயன்படுத்தும் பண்பு. அது அவரை ஆத்மார்த்தமாக உயர்த்தாமல் இருக்க முடியுமா? முதியோர்களில் பலர் தங்களால் இயலுமான கடமை செய் யும் பொருட்டு ஆங்காங்கே கடமைகளில் ஈடுபட்டிரு ந்தனர்.

மாட்டுத்தொழுவத்தை துப்பரவு செய்பவரும், வளவை துப் பரவு செய்பவரும், சமையலுக்கு உதவுபவரும், கோயில் வேலைகளில் ஈடுபடுபவர்களும் என தம்தம் கடமைகளில் ஈடுபட்டு இருந்தனர். ஒரு சிலர் தாங்கள் சிறப்புடன் வாழ்ந்த தாகவும் தற்போது கூண்டுப்பறவை போல் ஒடுங்கியிருப்பதாக வும் ஆதங்கப்பட்டதுமுண்டு.

நேரம் ஓடிக்கொண்டிருந்தது, முதியோர் யாவரும் நீராடி தோய்த்துலர்ந்த உடையணிந்து அனுட்டானம் பண்ணி



கோயிலுக்கு புறப்படும் ஆயத்தங்கள் நடைபெற்றன. திருவ முது பொங்கும் பொருட்டு அன்னையரும் ஆடவரும் கோயில டியில் ஈடுபட்டிருந்தனர். அத்துடன் அன்னதான ஒழுங்குகளும் நடைபெற்றன. பூசைக்கான ஆயத்தங்கள் நடைபெற்றன. இறைபூசை செய்பவர் கவனிக்க வேண்டிய பிரதான விடயங் கள் என திருமந்திரம் கூறும் சுத்திகளாவன :- பஞ்ச சுத்தி கள்.

01. புறச்சுத்தி,
02. திரவிய சுத்தி,
03. மந்திர சுத்தி,
04. தான சுத்தி,
05. லிங்க சுத்தி,

இவ்வாறு பஞ்ச சுத்திகளையும் மேற்கொண்ட பின்பே ஒரு பூசகர் இறைவனுக்கு பூசை செய்ய அருகதை உடையவர் என்பதை திருமூலர் சிறப்புடன் கீழ் வருமாறு 1845 ஆம் பாடலில் எடுத்துக்கூறுகிறார். அந்த நெறிக்கமைய பஞ்ச லோகத்தால் செதுக்கப்பட்ட திருவடி இந்தியாவிலே மதுரை யில் வடிவமைத்து வார்க்கப்பட்டு மேற்படி செல்லத்துரை சுவாமிகளாலே விமானம் மூலம் கொண்டு வரப்பட்டதாகும். அது ஏற்கனவே நிருவாகச்செயலாளர் திரு. ஸ்ரீகாந்தன் அவர் களால் வன்னேரிக்கு எடுத்து வரப்பட்டிருந்தது. அதனைப் புளிக்காப்பிட்டு சிவந்த பட்டுத்துணியில் சூரிய ஒளிபட வைக் கப்பட்டிருந்தது. அதன் அழகு தனித்தங்கத்தால் ஆனது போன்று ஒளி வீசிக்காட்சி அளித்தது. அத்திருவடியின் பின் புறத்தில் ஓங்காரத்தை விளக்கி நிற்க்கும் ஒரு சிறு திருவா சியும் அமைந்தது.

"வெளியில் வெளியாய் விரவியவாறும்
அளியில் அளியாய் அடங்கியவாறும்
ஒளியில் ஒளியாய் ஒடுங்கிய வாறும்
தெளியில் அவரே சிவ சித்தராமே."

- திருமந்திரம் - 124 -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளியின் ஒளியாய் ஒளித்துக்கொண்டிருந்தது. அது சிவ னின் திருவடியல்லவா? யோகசுவாமிகளது அருளை அள்ளி வழங்கும் உருவத்திருவடியல்லவா அது? அடுத்து திருவடி அமையவிருக்கும் கோயிற் சிறப்பை கூறாதிருக்க முடியாது. சைவ சித்தாந்த கலை கலாச்சாரத்தை எடுத்துக்காட்டும் வித த்தில் மண்டபமும் திருவடி பிரதிஷ்டை செய்யவிருக்கும் கரு வறையும் அமைந்திருந்தன. கருவறையில் சலவைக்கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. தூய்மையே சிறப்பாக பேணப்பட்டிருந் தது. பக்தி பாடல்கள் ஒலி பெருக்கியில் மக்களைக் கூவி யழைப்பது போன்று பாடிக்கொண்டு இருந்தன.

''மன்றுள் வெளிக்காட்டும்
இந்தக்கருத்தை விட்டு
பொய் வந்துழலும் சமயநெறி
புகுத வேண்டாம் முத்தி தரும்
தெய்வ சபையை காண சேர
வாரும் செகத்தீரே''

என்று வானைப்பிளக்க ஓலமிடப்பட்டது போன்ற உணர்வுதான் ஏற்பட்டது. அது புனிதமான மெஞ்ஞான நெறியை தன்னுக்குள்ளே விளக்கிக்காட்டும் வழியை விளக்கும் மேற்படி பாடல் தான் ஞாபகத்திற்கு வந்தது. இப்பாடலில் '' மன்றுள் வெளிக்காட்டுமிந்த கருத்தைவிட்டு பொய் வந்துழலும் சமயநெறி புகுத வேண்டாமென்பது தான் பெருந்தத்துவத்தின் குறியீடாகும். ஒருவன் மெய்யியல் நாட்டமுள்ளவனாய் வைராக்கியமும், அப்பியாசமும் உடைய வனாய், அனுபூதிமானாய் சாதனையில் ஈடுபடும் போது அவன் ஆறு ஆதாரமும் கடந்து துரியாதீத நிலையில் அப்பட்ட மாகவே இறைகாட்சியைக் காணலாமென ஆணையிட்டு கூறுகின்றனர் ஞானிகள். நாங்கள் அந்நெறியைக் காட்டும் சமயநெறியை விட்டு பொய்யான அரைகுறை வழிகளைக் காட்டும் நெறிகளைக் கடைப்பிடித்தல் மனிதப் பண்புடை யோருக்கு பொருந்துமா? குருடும் குருடும் குருட்டாட்டமாடி



குருடும் குருடும் குழிவிழுமாறே என்றல்லவோ முடிந்து விடும். 24 மணித்தியாலத்தில் இறைவனைக் காட்டுகிறோம், என்று பரப்புரை செய்து பணத்தை வாரி வழங்கி பாரம்பரிய கலாசா ரத்தையே படுகுழியில் புதைத்து விட்டு, மாண்புற வாழலா மெனப் போதிக்கும் பேதையர் குளாத்தை நம்பிப்போய் குழி யில் விழவேண்டியது தானே.

''திருத்தி வளர்த்தோர் தேமாங்கனியை
அருத்தமென்றெண்ணி அறையிற்ப்பூட்டிப்
பொருத்தமிலாதோர் புளிமாங்கொப்பேறி
கருத்தறியாதவர் காலற்றவாறே''

பொருத்தமில்லாத புளிமாங்கொப்பேறி கால்களை உடைத் துக்கொள்ளலாமா? சகல படிமுறைகளில் உள்ளவர்க்கும் சகல தெய்வ வழிபாட்டினருக்கும்

''அப்பனை நம்பனை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழிமுதல்வனை
எப்பரிசாயினும் ஏத்துக ஏத்திடின்
அப்பரிசீசன் அருள் பெறலாமே''
- திருமந்திரம் : 36 -

அவரவர் மனோநிலைக்கு குணங்களுக்கு வாசனா நிலை க்கு ஏற்றவாறு வணங்கக்கூடியதாக சிவனே விநாயகராய் முருகனாய் வயிரவராய் நவசக்திகளாய் இன்று இன்னோரன்ன தெய்வங்களாய் காட்சி கொடுக்கின்றான் என் பது பேருண்மை யாகும். ஆகவேதான் திருமூலநாயனார். எப்பரிசாயினும் ஏத் துக ஏத்திடின் அப்பரிசீசன் அருள் பெறலாமே என்று அடித் துக் கூறுகின்றார்.

நாங்கள் எந்தெந்த மனோ நிலையுடன் வணங்கி வாழ்கின் றோமோ அவ்வழிகள் மூலம் இறையருள் பெறலாம். சன்மா ர்க்கத்தை தெரிந்தெடுப்பது அவரவர் விருப்பத்தைப் பொறுத் ததே. அதனை எடுத்துக் காட்டும் பொருட்டு முக்குணங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்பட்டுள்ளன. சாத்துவீதம், ராசதம், தாமதம் என்பன, அவற்றின் உதாரணங்களை இராமகி ருஸ்ண பரமகம்சர் கீழ்க்கண்டவாறு விளக்குகின்றார்.

**முக்குணங்கள்.**

தாமதம் :-

அளவுக்கு மிஞ்சிய சாப்பாடு, குடிபோதை, போகம், அதிக நித்திரை போன்ற தன்மைகளை உடையவராக இருப்பர்.

உதாரணம் :- கும்பகர்ணன்

ராசதம் :-

பட்டுப்பீதாம்பரம் அணிந்து ஆலயம் செல்வர், உருத்திராக் கமாலையில் தங்கக் கவசம் இட்டிருப்பர், பலரும் காணுமாறு சமய வழிபாடுகள் செய்வர் அதாவது அர்ச்சனை, அன்னதா னம், வீடுவாசல்கள் ஒழுங்குபடுத்தி அழகாக வைத்திருப்பர் போன்றவைகளாகும்.

உதாரணம் :- இராவணன்.

சாத்வீதம் :-

அகமுகவணக்கம், படாடோபம் கிடையாது ஒரே உடையை துவைத்துத் துவைத்து அணிவர், ஆரும் அறி யாதிருந்து தியானம் செய்வர், மற்றவர் அறியாதவாறு சமய பணிகளைச் செய்வர், போன்ற இலட்சணங்களை உடைய வராய் குழந்தையைப்போல் வாழ்வர் என்பவையாகும். சாத் வீகக் குணத்தில் வாழ்கின்றார் என்றால் இறை காட்சி எளி தில் கிடைக்கக் கூடிய காலம் வந்துவிட்ட தென்பதாகும்.

உதாரணம் :- விபீஷணன்

காட்டுப் பிரதேசமாக இருந்த காலத்தில் 1950ம் ஆண்ட ளவில் இருந்து கிளிநொச்சி நகர மத்தியில் முகாந்திரம் வெற்றிவேலு விதானையாரால் நிர்மாணிக்கப்பட்ட முருகன் கோவிலில் பூசைக் கடமையில் ஈடுபட்டு வந்த பிராமண வாரீ சைச் சார்ந்த பிரதிஸ்டா குருக்களும் வந்து சேர்ந்துவிட்டார். அபிடேக ஆராதனைக்கான ஏற்பாடுகளெல்லாம் பூர்த்தி



யாகிவிட்டன. கிளிநொச்சி மண்ணின் அன்று தொட்டு இன்று வரை தெய்வீக ஒளிபரப்பிவரும் மையமான மகாதேவ ஆச்சிர மத்தில் வடிவேல் சுவாமிகளின் பிரதம சீடரான ஸ்ரீலஸ்ரீ கணே ஷானந்த மகாதேவா சுவாமிகள் அவ்வாச்சிரமத்திற்குக் கீழ் இயங்கும் சிறுவர்கள் புடைசூழ இடபக் கொடி அசைந்து கொண்டிருக்கும் முச்சக்கர வண்டியில் வந்திறங்கினார்கள். மக்கள் திரண்டு சென்று வரவேற்று திருவடி பிரதிஷ்டை செய் யவிருக்கும் கோயிலுக்கு அழைத்து வந்தனர். அங்கு நற்சிந் தனை விநாயகரவல், சிவபுராணம், பஞ்சபுராணம் ஆகியன பாராயணம் செய்த வண்ணம் பக்தர்குழாம் இருந்தது.

சுபமுகூர்த்த வேளை நெருங்கியது செல்லத்துரை சுவாமி களும் கணேஷானந்த மகாதேவ சுவாமிகளும் திருவடி வைத் திருக்கும், காலஞ் சென்ற திரு .கந்தசாமி ஐயாவின் திருவுரு வப்படம் வைத்திருக்கும் மண்டபத்திற்குச் சென்று, மங்கல இசை ஒலிக்க சிவபுராணம் போன்ற தியானமாலைப் பாடல் கள் இசைக்க செல்லத்துரை சுவாமிகள் தனது குருவின் திருவடியை, சிவனின் திருவடிகளை தனது திருக் கரங்களில் ஏந்திவர ஊர்வலம் ஆரம்பமானது. பக்தர்கள் பரவசமாய் நின்று ஆனந்த கண்ணீர் மல்க அரோகரா ஓலமிட்டவாறு வந்தகாட்சி யாவரையும் புளகாங்கிதம் கொள்ளச் செய்யும். யோக சுவாமிகளை நேரில் தரிசித்து ஆசி பெற்ற ஆன் றோரும் அங்கு இருந்தனர். வழி நெடுகிலும் மலர்கள் தூவிய வண்ணம் திருவடி பவனியாகக் கொண்டு வரப்பட்டது. திரு வடித் தாண்டவம் பாடிக்கொண்டிருக்க மங்கள ஒலி வானைப் பிளப்ப பக்தரின் ஆராதனை ஒலி மேலிட இது சிவன் திருவடியோ, யோக சுவாமிகளின் அருட்த்திருவடியோ என்ற பரவசமேலீட்டோடு அழகாக அமைக்கப்பட்ட கருவறையில் உள்ள பீடத்தில் திருவடியை பிரதிஷ்டை செய்து வைத் தார்கள் மௌனமணிப் பெட்டகமாம் செல்லத்துரை சுவாமி கள். திருவடி என்பது திருவருளின் அடையாளச்சின்னம் என்று அழகுற எடுத்துரைத்தார் சுவாமிகள்.**“THIRUVADI IS THE SYMBOL OF THE FALL OF GRACE OF GOD.”** என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழமான கருத்தை விளக்கும் திருவடித் தீட்சைபெற்ற சமய குரவரில் ஒருவரான சுந்தரரோடு சம்பந்தப்பட்ட சம்பவம் ஒன்றை இங்கு மீட்டுப் பார்ப்போமாக. திருக்கெடில வீரட் டானேஸ்வர ஆலய மண்டபத்தின் வெளிப்புறத்தில் மேற்படி சுந்தரமூர்த்தி சுவாமிகள் நித்திரை செய்ய, மனித உரு எடுத்த இறைவன் கிழப்பிராமண வடிவங்கொண்டு சுவாமி களின் தலையில் தனது திருவடிபடுமாறு படுத்துறங்கினார். இதனையறிந்த சுந்தரர் தான் மறுபக்கம் புரண்டு படுத்தார். அந்தப்ப க்கத்திலும் அவரது சிரசில் படும்படியாக தனது திரு வடியை வைத்துக்கொண்டு நித்திரை செய்தார் அந்தக் கிழப்பிராமணர். சுந்தரர் கோபங் கொண்டு என்ன கிழவா, நீ யாரென்று சினந்தபோது "தம்மானை அறியாத சாதியரு ளரோ" எனக்கூறி மறைந்தருளினார். இறைவனே திருவடித் தீட்சை தந்துள்ளான் என்பதினை திருவருளினால் உணர்ந்து ஆனந்தங் கொண்டார் சுந்தரர். இறைவன் தோழர் அல்லவா? இதனை இங்கு கூறுவது திருவடிச் சிறப்பினை விளக்கும் பொருட்டாகும். யோக சுவாமிகள்

"உன்னடியென் முடிவைத்தினி ஆளுவாய்
ஓங்காரத்துட் பொருளே"
(நற்சிந்தனை 4 - பக்கம் 334)

என்றும் "கைப்போது மலர்கொண்டு தங்க மேதங்கம் கழ லடியைப் போற்றிடவே தங்கமே தங்கம்" (4 - 257 - நற்சிந் தனை) என்றும் ஆதரவாதேய மானவப் பொருளின் பாதார விந்தம் பணிதல் பயனே. (4 - 166 - நற்சிந்தனை) இவ்வாறாக "பெண்ணானாய், ஆணானாய் பேதமென்றும் நீயானாய் என் னானாய் என்னானாய் என்பதல்லால் என்சொல் கேன்" (4 - 123) என்றும் இறை வியாபகத்தை விரித்துக் கூறிப் பார்ப் பதெல்லாம் சிவமாகக் கண்டு பதைப்பற்றிரு நெஞ்சமே என எங்களை ஆற்றுப்படுத்துகின்றார் யோக சுவாமிகள். "ஏடவில் கோதைமாதர் எழில் கண்டு மயங்கா வண்ணம் தாடலை தன்னில் வைத்த சற்குருதாள்கள் வாழ்க" (4 - 50



நற்சிந்தனை)

"ஆணுமாய் பெண்ணுமாகி அன்னையும் பிதாவுமாகி
காணவே என்முன் வந்த கழலடி என்றும் வாழ்க"
(4 - 51 - நற்சிந்தனை)

ஏன் நற்சிந்தனை முதலாவது பாடலிலேயே
"என்னை எனக்கறிவித்தான் எங்கள் குருநாதன்
இணையடியென் தலைவைத்தான் எங்கள் குருநாதன்"

எனப்பாடியது மலபரிபாகம் கிடைத்ததும் அக் கணமே சத்திநிபாதம் கிடைக்கின்றதென்பதனை உணர்த்து கின்றார் அல்லவா.

இவ்வாறு திருவடியின் சிறப்பு சொல்லும் தகையதோ. யோகசுவாமிகள் வேதாகமங்கள் உபநிடதங்கள் யாவற்றை யும் பிழிந்து தெளிந்த தெளிவாக நற்சிந்தனை என்ற தேன் அமுதத்தை வாரி வழங்கியுள்ளார். அதில் முதலாவது பாட லிலே உள்ள முதல் இரண்டு அடிகளும் நற்சிந்தனை நூலின் முழு சாரத்தையும் சுட்டி நிற்கின்றன. "என்னை எனக்கறிவித் தான் எங்கள் குருநாதன் இணையடி யென் தலைவைத்தான் எங்கள் குருநாதன்" தன்னையறிந்ததும் மலபரிபாகம் ஏற்படும் அதேநேரத்தில் திருவருட்சக்தி கிட்டுகின்றது. அதாவது சக் திநிபாதம் ஏற்படுகின்றது என்பதாகும். இந்த நிலை கிட்டுவ தற்கே அத்தனை சாதனை களுமாகும். எங்கள் தமிழர் சொத் தாம் யாழ்ப்பாணத்து யோக சுவாமிகளின் நிலையை எந்தத் தரமென்று எங்களால் கூற முடியுமா?. வாசனாமிர்தம் என் னும் நூலில் "பெரிய பெரிய இரகசியங்களைக் கண்டவர்கள் யாவரும் அவற்றை உள்ளத்தின் பேரமைதியிலேயே கண் டிருக்கிறார்கள் என ரமணமக ரிஷி பகர்ந்துள்ளார். இந்தப் பேரமைதியானது சாதனையாலே கிட்ட வல்லது. அதனை கீழ்வருமாறு வலியுறுத்துகின்றார் யோக சுவாமிகள் "நூதன விவேகியர் நூளைந்துங் காண் கிலர் சாதனையுள்ள சத் துக்கள் காண்பரே" என்பதாகும். அடுத்து "அண்ட சராசர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்லாம் - சிவசிவ அகத்திலே கண்டு தரிசித்துக் கொண்டேன். முண்டக மலர்பாதங் கண்டேன்" (நற்சிந்தனை 4 - 18) என்கின்றார். அதனால் "உருகி உருகி உணர்ந்தேன் சிவசிவ ஒன்றையும் காணாது ஏங்கி நான் நின்றேன்" என்றும், "மருமமிது பெரும் மருமம் மகத்துக்களாலும் சொல்லோணா மருமம்" என்றும், வியந்து கூறிகின்றார். உருகி உருகி உணர்வதையும் ஒன்றையும் காணாது ஏங்கி நிற்பதையும் சுட்டி நிற்பதுதான் எங்கள் தீபாராதனைகள்.

ஊனினை உருக்கி உள்ளொளி பரப்பும் வகையில் அமைந்த நெய் உருகி ஒளிவிடுவது நெய் தீபாரா தனையாகவும் இரண்டறக்கலந்து அத்துவிதமாகும் தன்மையை கற்பூர ஆராதனையும் தெட்டத்தெளிவாக விளக்குகின்றனவல்லவா? கலப்படம் செய்து கற்பூரம் விற்பவனின் நிலைதான் பரிதாபகரமானதாகும். இவன் எதற்காக உருகுகின்றானோ, காலந்தான் பதில் சொல்லும். காமினி காஞ்சனங்களை விட்டவனுக்கே இறை அனுபூதி கிட்டுமென்கிறார் இராம கிருஷ்ண மகரிஷி 1. காமம் - காமினி 2. புவனபோகங்கள் - காஞ்சனம். கலப்படம் செய்து கற்பூரம் விற்று காஞ்சனம் சேர்ப்பவன் பணத்தையா சேர்க்கிறான் ஏழேழு பிறப்புக்கும் வினைமூட்டையையல்லவா கட்டுகின்றான். சுந்தரருக்கு திருவடியை தலையிலே இறைவன் வைத்துள்ளான் என்றால் அது எதனை சுட்டி நிற்கின்றது எனச் சிறிது பார்ப்போம்.

"தச்சன் கட்டாவீட்டிலே எங்கள் குருநாதன் தாவுபரி கட்டென்றான் எங்கள் குருநாதன் என்றார் யோக சுவாமிகள். தச்சன் கட்டாத வீடாகிய இவ்வுடம்பிலே தாவிப்போகும் குதிரையை ஆங்காங்கே கட்டுகின்றார். அதாவது மூலாதாரம் சுவாதிஷ்டானம் மணிபூரகம் போன்ற ஆறு ஆதாரங்களினூடாக சாதனை மூலம் இறை சக்தியை மேலெழச்செய்கின்றதாகும். அதனை யோகநெறி என்னும் பாடலிலே (4-பக் 150) "இடைபிங்கலையென்னும் இருவாசல் அடைத்து விட்டுக்



கடையிற் சுழுமுனையைக் கபாலந்திறந்து கொண்டு தங்கமே காசிதேசம் போவோம் வாராய்" என்கின்றார். இந்த நெறியைத்தான் தாவு பரி என்று குறிப்பிடப்படுகின்றது. இடைபிங்கலையென்ற இரு வாசலையும் அடைத்துவிட்டு சுழுமுனைக்குள் சுவாசத்தை ஏற்று அதாவது இராசவீதி (**ROYAL ROAD**) என்ற சுழுமுனைக்குள் செலுத்தினால் ஆசுகவி மதுரகவி அழகான சித்ரகவி பேசுந் திறனுண்டாகும் தங்கமே - பிராணாயாமம் செய்திடடி என்கிறார். அதே பாடலில் "ஆச்சு தென்று நீ சொல்லி அசட்டை செய்யாதேடி போச்சுதெடி யோகசித்தி" என்கின்றார்.

அதனை திருமூலநாயனார் திருமந்திரத்தில் 564 ஆவது பாடலில்

"ஐவர்க்கு நாயகன் அவ்வூர்த் தலை மகன்
உய்யக் கொண்டேறும் குதிரைமற்றொன்றுண்டு
மெய்யர்க்குப் பற்றுக் கொடுக்கும் கோடாது போய்ப்
பொய்யரைத் துள்ளி விழுத்திடுந்தானே"

என்கிறார்.

சரியான நெறியில் நின்று பிராணாயாமம் செய்யாது விடின் போட்டுடைத்துவிடும் என்பதை பொய்யரைத் துள்ளி விழுத்திடுந்தானே என்கிறார்.

"புறப்பட்டுப் புக்குத்திரிகின்ற வாயுவை
நெறிப்பட உள்ளே நின்மலமாக்கில்
உறுப்புச் சிவக்கும் உரோமம் கறுக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடையானே."

(திருமந்திரம் - 575)

இவ்வாறு பிராணாயாமம் செய்பவனைப் பார்த்தால் அவனது அங்க அழகே பதில் சொல்லும் என்பதாகும். முன்பு கூறியது போன்று அதுவானால், அதுவாகி அதுவே சொல்லும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது விளங்குகின்றதல்லவா. இந்தக் கட்டத்தில் ஒரு சுவாரசியமான சம்பவத்தை கூற விளைகின்றேன். யோக சுவாமியைப் பார்த்து முரட்டுச் சுபாவமுடைய ஒருவன் "கட வுள் எங்கே இருக்கின்றார் கடவுளைக்காட்டுவாயா என்று கேட்டதும் சுவாமிகளும் அவரது தொனியிலே" உன்ரை கவட்டுக்குள்ளே இருக்கின்றார் என்று கூறிவிட்டார். ஞானிக ளின் வாயிலிருந்து வருபவை அனைத்துமே ஆப்த வாக்கியங் களல்லவா. இதனைச் சற்று பார்ப்போம். அவரே தனது பாடலில்

" எண்ணுவார் எண்ணந்தோன்றும்
இடமெனப் பெரியோர் உன்னைத்
திண்ணமாய் சொல்லும் நல்ல
தெய்வமே நமச்சிவாய" என்கிறார்.

அதாவது எண்ணந் தோன்றும் இடந்தான் எங்கே? "மூலாதாரத்து மூண்டெழு கனலை காலால் (காற்றால்) எழுப் பும் கருத்தறிவித்து" என்று ஔவையார் விநாயகர் அகவலில் குறிப்பிடுகின்றார். அந்த மூலாதாரத்தை திருமந்திரத்தில் 584 ஆம் பாடலில்

" எருவிடும் வாசற்கிருவிரன் மேலே
கருவிடும் வாசற்கிருவிரன் கீழே
உருவிடும் சோதியை உள்கவல்லார்க்கு
கருவிடும் சோதி கலந்து நின்றானே"

என்கிறார். அதாவது மலவாசலுக்கு இருவிரல் மேலே சலவாசலுக்கு இருவிரல் கீழே உருவிடும் சோதி என்கிறார் திருமூலநாயனார். அப்போ யோகசுவாமிகள் கூறிய வார்த்தை அபத்தமானதா? தத்துவமானதா? சிந்தித்துத் தெளியுங்கள் இந்த நிலை அதுவல்ல அதுவல்ல என ஆராய்ந்து ஞான நிலை கைகூடியவர்க்கு உச்சந்தலையில் சகஸ்ராரத்திலிரு ந்து உள்நாக்கு வழியாக அமுதம் சொரியும் நிலையை காட் டும். அந்த நிலையில் திருவடி தீட்சை கிடைக்கும் நிலையை



யார்தான் விபரிக்கவல்லார். "என்னை அறிவித்து எனக்கருள் செய்து" என விநாயகர் அகவலில் ஔவையார் கூறுவதும் இதுவே. இந்தக் கட்டந்தான் தன்னை அறியும் நிலை. அந்த நிலையில் அருள் கிட்டுகின்றது. அதாவது சத்தி நிபாதம் கிட்டுகின்ற தென்பதாகும். நான் யார் என்பதை அறிய வைக் கின்றது. என்றவாறாகும். இன்நிலைகளைப் பற்றியெல்லாம் அறியும் ஆர்வமும் சிந்தனையும் கிட்டுவத ற்கும் அவனருள் வேண்டு மென்பதை "அவனருளாலே அவன் தாள் வணங்கி" என்ற சிவபுராண அடிகள் வெள்ளிடைமலை போல் எடுத்தி யம்புகின்றன. இதனைத்தான் "மன்றுள் வெளிக்காட்டும்" இந்தக் கருத்தைவிட்டு பொய்வழி சென்றுழலும் சமய சமய நெறி புகுத வேண்டாம்" என்று தாயுமானவர் நெறிப்படுத்து கின்றார். புனிதப்பிறவியான மானிடர் சிந்தித்துத் தெளிய வல்லவர், ஆகவே தான் சுந்தரமூர்த்தி சுவாமிகள் "சிந்திப் பார்தம் சிந்தையுள்ளானை" என்று சற்று சிந்திக்கத் தூண்டு கின்றார். இவற்றைச் சிந்தித்து தெளிந்து தன்னை பக்குவப் படுத்தும் மார்க்கத்தை தெரிய முடியாதோரின் பரிதாப நிலையை எப்படி எடுத்துச் சொல்வது. மாறாக இச் சமய நெறியை தூற்றி கொச்சைப்படுத்தி இச்சமய நெறி நிற்போரை வசைபாடி, ஆசைகாட்டி, காசுகாட்டி தங்கள் பக்கம் இழுக்கத் துடிக்கும் அபக்குவரை பக்குவப் படுத்து வதையும் அவனே செய்வான். காலம் பதில் சொல்லும். அன்று படையெடுத்து வந்தவர்கள் கோவில்களை இடித்தார்கள், தங்கள் திருச் சபைகளையும், மசூதிகளையும் கட்டினார்கள். இப்பொழுது தான் விடயம் புரிந்து எழுச்சி கொள்கிறார்களோ? அதற்கு ஆதாரம் அயோத்தியாகும். எங்கள் திருக்கோவில்களை இடித்துக் கடலுக்குள் தள்ளியிருக்கிறார்களே! இப்பொழுது அவர்கள் திருச்சபைகளில் வினாயக, முருக ஆலயங்கள் கட்டப்படும் காலம் வந்து விட்டனவோ!

ஏழு வயதில் இஸ்ரவேலைவிட்டு புறப்பட்ட ஏசுநாதர் 29 வயதுவரை இந்தியாவில் இருந்துள்ளார். அங்குதான் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானநிலை அடைந்தார் எனச்சில நூல்களில் படித்தோம். பின் காஷ்மீர் ஸ்ரீநகரில் யூசுப் அசாப் என்ற பெயரில் உள்ள கல்லறை கிறீஸ்த்து நாதரினுடையதென்று அந்த நூலே வெளிப்படுத்துகின்றது. மோசஸ்ஸின் கல்லறையும் பக்கத்தில் இருப்பதாக எடுத்தியம்புகின்றது. இந்த உண்மைகள் எங்கே புதைக்கப்பட்டுவிட்டன. ஆதாரம் **JESUS LIVED IN INDIA BY HOLGER KERSTEN** என்ற நூலாகும். ஒரு மனிதனை புனிதனாக பக்குவப்படுத்தி இறையருளைக் காட்டும் சமயத்தை தூஷிப்பவர் கதிதான் என்னவாகுமோ?

நிற்க, எம்நிலையத்திற்கு திரும்புவோம், செல்லத்துரை சுவாமிகள் மௌனமணிப் பெட்டகமாச்சே பிரதிஷ்டை நடைபெற்றதும், திருவடி அபிடேகம் முறைப்படி சிவாச்சாரி யரால் நடாத்திவைக்கப்பட்டது. ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள், செல்லத்துரை சுவாமிகள் யோகசுவாமிகளின் வழித்தோன்றல் என்பதனை எடுத்து விளக்கி அறிமுகவுரை செய்தார்கள். செல்லத்துரை சுவாமிகள் மேலே கூறப்பட்ட திருவடி சம்பந்தமான விடயங்கள் எல்லாவற்றையும் சுருக்கமாகக் கூறி விளங்கவைத்தார். அதில் மிகவும் முக்கியமானது, திருவடி என்பது திருவருளின் அடையாளம் Symbol of the Grace of God என ஆணித்தரமாக விளக்கினார்கள். தொடர்ந்து தற்பொழுது கரைச்சி துணுக்காய் எங்கும் கலங்கரை விளக்கம் போல் சிறப்புடன் செயலாற்றும். அரச அதிபர் திரு.தி.இராசநாயகம் அவர்களும், கிளிநொச்சி பிரதேச செயலர் பொன் நித்தியானந்தன் அவர்களும் சிறப்பு சொற்பொழிவு செய்தனர். தொடர்ந்து பிரசாதம் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அன்னதானம் இடம்பெற்றது இதில் அநேகமான மக்கள் கலந்துகொண்டது சிறப்பம்சமாக இருந்தது. அவ்வேளை சிவதொண்டர் திரு. சண்முகலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து தமிழ் நாடு பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் எழுதிய யோகசுவாமிகளது வாழ்க்கை வரலாறு தாங்கும்



**2008 ஏப்ரல் 19ம் திகதி அன்று யோக சுவாமிகளின் பிரதம சீடரான தவத்திரு செல்லத்துரை சுவாமிகளால் வன்னேரிக்குளம் முதியோர் இல்லத்தில் திருவடி பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது.**



"திருவருளின் அடையாளச் சின்னம் தான் திருவடி"

"என்னை விலகா இறைவனடி வாழ்க"



**திருவடி பிரதிஷ்டையின் போது முதியோரில்ல நிர்வாகளில் ஒருவரான டாக்டர் முருகானந்தன் உரையாற்றுகின்றார்.**




**முதியோர்களுடனும் நிர்வாக அதிகாரிகளுடனும் செல்லத்துரை சுவாமிகள்**

**முத்திக்கு வழி -**
**வேண்டுதல் வேண்டாமையின்றி என்றும்**
**ஆண்டவன் அடிக்கீழ் அமர்ந்து வாழ்தலே - (நற்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கீதவித்துவான் K.R.நடராஜா அவர்கள் நற்சிந்தனைப் பாடல்களை இசைக்கின்றார்.




உருகி உருகி உணரும் மெய்ஞானிகளின்
திருக்கூட்டஞ் சேரவருள் செய்வாய் பராபரமே.
- நற்சிந்தனை



தவத்திரு செல்லத்துரை சுவாமிகளும் ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகளும் முதியோர் இல்லத்தில் அடியார்களுடன் கூடியிருக்கும் வேளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருவடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பிரதிகளுடன் வந்து சேர்ந்தார். அவற்றை அங்குள்ள யோகசுவாமியின் அன்பர்க்கு செல்லத்துரை சுவாமிகள் வழங்கினார்கள். அன்றைய நிகழ்ச்சிகள் இனிது நிறைவெய்தின. மாலை சுவாமிகள் சிறிது தூரம் நடக்கவிரும்பி அயலில் உள்ள ஐயனார் கோவில்வரை சென்று திரும்பினார்கள். மாலைவேளை பலரும் சுவாமிகளைத் தரிசிப்பதும் தங்கள் மனங்களில் உள்ள சந்தேகங்களை தெளிவதுமாக இரவு 10 மணிவரை பொழுது இறை பணியிலேயே கழிந்தது. யாவர்க்கும் மதுரமான இராப்போசனம் வழங்கப்பட்டது. சுவாமிகளின் நிலையறிந்து அவரது உடல் நிலைக்குகந்த உணவு பரிமாறினார்கள் நிர்வாகத்தில் உள்ளவர்கள். சுவாமிகளைத் தரிசிக்க வந்தவர்கள் அனைவரையும் மனதார வாழ்த்தி மானசீகமாக ஆசீர்வதித்து விடைபெற்று சயனத்துக்கு சென்றார்கள் சுவாமிகள்.

காலை விடிந்தது சுவாமிகள் யாவரையும் பார்த்து எப்படி நித்திரை கொண்டீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு ஆம் சுவாமி நன்றாகத் தூங்கினோம் சுவாமி என்றார்கள். சுவாமி புன்னகை பூத்தவராய் "அந்த நல்லாய் தூங்கினோம் என்று உங்கள் உள்ளத் துக்குள்ளே இருந்து சொன்னவர் யார்" அவரை யார் என்று சொல்ல முடியுமா? அதைச் சொன்னவர்தான் ஆத்மா என விளக்கமளித்தார்கள். அந்த ஆத்மாவும் இறைவனும் ஒன்று என்று தியானம் செய்வதுதான் தியானமெனப்படும். "அதுவே நானெனும் அகலாத் தியானத்தால் மதுவுண்ட வண்டுபோல் ஆயினர் பலரே"

என்று யோகசுவாமிகள் தியானத்தைப்பற்றி விளக்குகின்றார். பூவிலிருக்கும் தேனைக்குடிக்கும் வரை வண்டு ரீங்காரம் செய்தபடி பறந்து திரியும். தேனைக் குடித்து ஆனந்தம் பெற்றதும் அந்த ரீங்காரம் நின்றுவிடும் எனவும் இறையருளைப் பருகியதும் நிலையான இன்ப ஆனந்தநிலை கிட்டிவிடுமென விளக்கமளித்தார் சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்தங்களாடினேன் யாத்தினர செய்தேன்
சித்தம் தெளியவில்லை என்ன நான் செய்வேன்
பார்த்த இடமெங்கும் நீயல்லாதில்லை
பாராமல் நானும் பட்டேன் தொல்லை.
(நற்சிந்தனை 4 - 229)


நிற்க, காலை தேனீர், உணவு முடிந்ததும் ஒழுங்கமைத்த படி வாகனம் வந்தது, யாவரும் சுற்றி நின்று அரோகரா வானைப்பிளக்க வழியனுப்பி வைத்தார்கள். சுவாமிகளும் அன்பு சொரியும் அருட்பார்வையால் ஆசி கூறி விடை பெற்றார்கள்.

**சைவச் சிறுவர் இல்லம் (புதுமுறிப்பு)**

வருகின்ற பாதையில் மகாதேவ ஆசிரமத்தின் பூரண நிர்வாகத்திலியங்கும் சிறுவரில்லத்திற்கு வருகைதருமாறு ஸ்ரீமத் கணேஷானந்தா மகாதேவ சுவாமிகள் கேட்டுக் கொண்ட ஒழுங்கிற்கிணங்க புதுமுறிப்பு கிராமத்தில் அமைந்துள்ள சிறுவர் இல்லத்தை அடைந்தார்கள். அங்கு சிறுவர்களை அன்புடன் அரவணைத்து நடாத்தும் சுவாமி அம்மா, மற்றும் நிர்வாகத்தினர் உட்பட சிறுவர்கள் சைவசமய கோல உடையணிந்து கரங்களினால் பூத்தூவி நற்சிந்தனைப்பாடல் பாராயணமும் "ஓம் நமச்சிவாய" என பஞ்சாட்சர ஒலியும் மேலிட சுவாமிகளை வரவேற்றனர். ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள் சிறுவரில்ல அமைப்பு முறைகளை தெளிவுற விளக்கினார்கள். சிறுவர்கள் விடுதி, பிரார்த்தனை மண்டபம் விவசாயப்பகுதி யாவற்றையும் சுற்றிக்காட்டினார்கள். அங்கு பிரார்த்தனை மண்டபத்தில் வைத்து வணங்கும் பிருதுவிலிங்கம் சுவாமிகளின் உள்ளத்தைக் கவர்ந்து விட்டது போலும்.

அகன்றான் அகலிடம் ஏழும் ஒன்றாகி
இவன்றான் என நின்றெளியனுமல்லன்





மகாதேவா ஆச்சிரமத்தின்கீழ் இயங்கும் புதுமுறிப்பு சைவச்சிறுவர் இல்ல கட்டுமானப் பணி நடைபெறும்போது....

வீண் பாவனையெல்லாம் விலக்க அருள்தாடா
என்றும் மறவா வரமெனக்கு வேணுமடா
குன்றுபோல் நிற்க குருவே அருள்தாடா (நற்.)




நடமாடும் தெய்வங்களாம் சைவச்சிறுவர்கள் அவ்வில்ல
கோவில் குடமுழுக்கு வேளையில்

மூப்பு வந்தடையுமுன்னே தம்பிமரே
முழுதும் அறியவேண்டும் தம்பிமாரே (நற்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமுறிப்பில் உள்ள மகாதேவ ஆச்சிரம சிறுவர் இல்லத்தில் கோயில் அமைத்து விநாயகரைப் பிரதிஷ்டை செய்து எண்ணைக் காப்பு சாத்தும் காட்சி



மூலமூர்த்தி சிவலிங்கத்திற்கு எண்ணைக்காப்பு சாத்தும் காட்சி




சிவத்தை நோக்கித் தெளிவதும் தன்னையே
பவத்தை நீக்கி பணிவதும் தன்னையே.

- நற்சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேற்படி ஆலய குடமுழுக்கின் போது



சிவாச்சாரியார்கள் கும்பத்துடன் வலம்வரும் காட்சி
நியம நிட்டைகள் ஆற்றுதல் இன்பமே - நற்சிந்தனை



விநாயகருக்கு அபிடேகம்
விக்கினம் தீர்க்கும் விநாயகன் அல்லவா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீமத் கனேஷானந்த மகாதேவ சுவாமிகளின் பணியே பணி ..




எல்லாம் ஈசன் செயலெனல் இன்பமே

புதுமுறிப்பு சிறுவர் இல்லத்தில் கோமாதா பூசை நடக்கும் போது..




சைவர்கள் பசுவை பேணும் சிறப்பு
யாவர்க்குமாம் பசுவிற்கு ஓர் வாயுறை - திருமந்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமாதியடைந்த பரமானந்தவல்லி மாதாஜி அம்மா அவர்கள் புதுமுறிப்பு சைவச்சிறுவர் இல்லத்தில் அன்பர்கள், அடியார்களுடன் உரையாடும்போது எடுத்த படம்.



புதுமுறிப்பு சைவச்சிறுவர் இல்லத்தில் காயத்திரி மதாஜி அம்மா அவர்களின் அரவணைப்பில் பிள்ளைகள் பராமரிக்கப்படும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவன்தான் பலபல சீவனுமாகி
நவின்றான் உலகுறு நம்பனுமாமே
- திருமந்திரம் 448 -

சிவன்தான் பலபல சீவனுமாகி நவின்றான் உலகுறு நம்ப னுமாமே என்ற வரிகளில் சுட்டிநிற்கும் நடமாடும் தெய்வங்க ளல்லவா இச்சீவன்கள். அதுவும் சுத்த சைவ போசனத்துடன் சிவநெறியே தம்நெறி என்று வாழும் சிவக்கொழுந்துகளல லவா அவர்கள். அவர்கள் அல்லலுறாதவாறு தாங்கி நிற்பது நம்பணியன்றி வேறு யாரது?

தங்களை ஆதரிக்க யாருமில்லை என்று ஏக்கங் கொள்ள விடாது சிறுவர்களை பராமரிக்கவென்று இறைவனே இறங்கி வந்து விட்டானா என்று எண்ணுமளவிற்கு காயத்திரி மாதாஜி அவர்களின் பணி அளப்பரியதாகும். உருத்திரபுரத்தில் சமாதி யிலிருக்கும் பரமானந்தவல்லி அம்மையாரும் தனது இறுதிக் காலத்தில் சிறுவரில்லத்திலேயே நன்கு பராமரிக்கப்பட்டு வந்துள்ளார். இவர்களின் உற்றார், அயலவர், உறவினர் எனப் பெரிய அடிக்கொடியுண்டு தங்களை இறைபணிக்கென்றே அர்ப்பணித்ததனால் இறுதி மூச்சுவரை வன்னி பெரு நிலப் பரப்பே தஞ்சமெனக்கருதி சீவன் முத்தராய் வாழ்ந்து சமாதிய டைந்துள்ளார் மாதாஜி அவர்கள். சுவாமிகளுக்கும் அவருடன் வருகைதந்த அடியார்களுக்கும் பிரசாதம் வழங்கி ஆராதித் தார்கள். இப்படியான பராமரிப்பு நிலையங்கள் தற்போதைய நிலையில் மிகவும் இன்றியமையாதன. இவை செவ்வனே நடைபெற மக்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் பெரிதும் வேண் டப்படுகின்றது என உணர்ச்சி ததும்ப சுவாமிகள் அறைகூவ லிட்டார்கள். நடமாடும் கோவில்களல்லவா இச்சிறுவர்கள். சைவச் சிறுவர்களாக காலை, மாலை தியானம் செய்வதும், பாடசாலை சென்று படிப்பதும் மறு நேரங்களில் தோட்ட வேலை மற்றும் பிறவேலை செய்வதும் இவர்களது நாளாந் தக் கடமைகளாகும். யோகாசன வல்லுனர் திரு.நாகேஸ்வரன் அவர்கள் கொழும்பிலிருந்து வந்து யோகாசனப் பயிற்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அளித்தார்கள். அவ்வாறாக சிறப்புத் திறமையுள்ளவர்கள் தாமாகவே முன் வந்து உதவிவருவது இச்சைவச் சிறார்களின் முன்னேற்றத்திற்கு பெரிதும் உந்து சக்தியாக அமைந்துள்ளது. ஒரு பிள்ளை அமெரிக்காவில் சிக்காக்கோவில் உயிரோடு மாட்டை யந்திரத்துக்குள் புகுத்தி அதன் ஒவ்வொரு அங்கத்தையும் வெட்டி பதப்படுத்தி புட்டி பண்ணுகிறார்களாமே? அப்படி நடந்து கடைசித்துண்டு இறைச்சி வெட்டி முடிக்கும் வரை மாட்டின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்குதாமே? இவ்வாறாக விசர் பிடித்த மாடுகளையும் வெட்டிச் சாப்பிட்டார்களாமே, அதனால் **BSE** என்ற மாறாத வியாதி மனிதருள் நுளைந்துவிட்டதாமே என்றும், அப்படி அதைச் சாப்பிட்ட மனிதருக்கும் விசரோ என்று வியந்துபோய் கேட்டான். அந்தப் பையன். இந்தப் பிள்ளைக்கு இவ்வளவு விளக்கமுண்டோ என எண்ணி ஆனந்தப்பட்டேன். உணவைப் பொறுத்துத்தான் உடல் வளமும், உள வளமும் ஆகவே வியப்பேதுமுண்டோ?

"உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ண உணர்வார் பெறின்"
- திருக்குறள் -

எங்களது உடலில் ஒரு வெட்டுக்காயம் வந்தவுடன் "தம்பி உதென்ன காலில்" என்று கேட்டதும் வரும் பதில் "புண்" என்பதுதான். எங்கள் உடலில் வந்த காயத்தைப் போலவே மறு உயிர்களின் காயமும் அதுவும் புண் எண்றே அழைப்பர். ஆகவே வேறு ஒரு உயிரின் புண் என்று நினைத்தால் எவ்வளவு அருவருப்பாக இருக்கின்றது. அந்தப் புண் மணக்கத் தொடங்கினால் அருகில் நிற்க முடியுமா? அப்படியான புண்ணைத்தானே சாப்பிடுகிறோம் அல்லவா?

கானுறு கோடி கடிகமழ் சந்தணம்
வானுறு மாமரிலிட்டு வணங்கினும்
ஊனினை நீக்கி உண்பவர்கல்லால்





புதுமுறிப்பு சைவச்சிறுவர் இல்லத்தில் காயத்திரி மாதாஜி அவர்கள் சிறுவர்களைப் பராமரிக்கும் காட்சி.

" நாப்பிழக்க பொய்யுரைத்து தம்பிமாரே
நாட்டில் பொருள் தேடவேண்டாம் தம்பிமாரே "



புதுமுறிப்பு சைவச்சிறுவர்கள் சீருடையில் பாடசாலை செல்லும் காட்சி


" வழுக்கி விழுந்தாலும் தம்பிமாரே
மலரடியைச் சிந்தை செய்வீர் தம்பிமாரே "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகாதேவ ஆச்சிரம நிர்வாகத்தின் கீழ் இயங்கும் புதுமுறிப்பில் 65 சைவச்சிறுவர்களடங்கிய இல்லத்தில் ஸ்ரீ கணேசானந்த மகா சுவாமிகளும், நிர்வாகிகளும்

" நடமாடும் தெய்வங்களல்லவா இவர்கள் "



ஸ்ரீ கணேசானந்த சுவாமிகளின் தலைமையில் சுற்றுலா மேற்கொண்டபோது யாழ்.பல்கலைக்கழக கட்டடத்தை பார்த்துப் பிரமித்துப் போனார்களா?......
தாங்களும் வந்துபடிக்க இடம் கிடைக்குமா? என்று வியக்கின்றார்கள் போலும்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனமர் பூங்குழல் சேரவொண்ணாதே
- திருமந்திரம் -

என்னென்ன மனோரதமான பூசை ஆராதனைகளைச் செய்தாலும் புலால் உண்ணாதவர்க்கல்லால் இறையருள் கிட்டாதென்பதாகும். இதனை

"அவிசொரிந்தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர் செகுத்துண்ணாமை நன்று"
என்கிறார் திருவள்ளுவர்.

கிளிநொச்சி, புதுமுறிப்பிலுள்ள சைவச் சிறுவர் இல்லத்திற்கான விஜயம் முடிவுபெற்றது. மாதாஜி அம்மாவும், சிறுவர்களும், நிர்வாகிகளும், ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகளும், யாவரும் "சிவாய நாம ஓம்" என்ற மந்திரத்தையே வானைப்பிளக்கும் வண்ணம் ஒலித்தனர். அவ்வேளை யோக சுவாமிகள் தம்பிமாருக்குப் படித்த பாடலில் சில வரிகளை ஞாபகப்படுத்தினார் சுவாமிகள்.

**தம்பிமார்க்கு உபதேசம்.**

"வழுக்கி விழுந்தாலும் தம்பிமாரே
மலரடியைச் சிந்தை செய்வீர் தம்பிமாரே
மூப்புவந்து அடைய முன்னே தம்பிமாரே
முழுதும் அறியவேண்டும் தம்பிமாரே
நாப்பிளக்கப் பொய்யுரைத்துத் தம்பிமாரே
நாட்டிற் பொருள் தேடவேண்டாம் தம்பிமாரே
சாதி சமய பேதத் தம்பிமாரே
சங்கற்பமென்றறிவீர் தம்பிமாரே"

அதுவே ஒரு உபதேசமாக அச்சிறுவர்களுக்குக் கிடைத்துவிட்டதல்லவா? சுவாமிகளும் மற்றும் அடியார்களும் வாகனத்தில் ஏறிவிட்டனர். மெல்ல நகர்ந்தது வாகனம். எங்கும் "ஓம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


என்ற நாமமே ஒலித்தது. சுவாமி அடிக்கடி கூறும் ஒரு விடயம் ஞாபகத்துக்கு வந்தது. உலகம் தொடங்கிய பொழுது முத லில் உதித்தது ஒரு சொல்லு. அதுவே இறைவரமுள்ள சொல்லாகும். அது வாயால் எடுத்தியம்ப முடியாதது. அதனை நாயோட்டு மந்திரமென்று அடைமொழியால் கூறுவர். இவ்வாறு நாதந்தான் உலகம் என்பதனை எடுத்துக் காட்டுவது தான் "ஓம்" என்ற நாத ஒலி. ஆகவேதான் ஆன்றோர் வீட்டிலே எந்த விடயத்திற்குக் கூப்பிட்டாலும் ஓம் என்று பதில் கொடுக்கு மாறு ஆக்கிவை த்தார்கள் என்பது பெரும் உண்மையை அடக்கியதாகும்.

ஓங்காரப்பொருளே ஒப்புயர்வில்லோய்
உனையாரறிவார் அருணாசலா-
- (அட்சரமாலை)
ரமணரிஷி 17ம் பருவத்தில் படித்த பாடலிது -

**மாவீரர் துயிலும் இல்லம். (கிளிநொச்சி)**

நிற்க! வாகனம் வலமாக வந்து மாவீரர் துயிலுமில்ல த்திற்கு முன்பாக மிதந்தது சூக்கும உடலுடன் உலாவும் தெய்வக் குழந்தைகள் உறங்குமிடமல்லவா அப்பிரதேசம். இந்தக் கட்டத்தில் ரமணமகாரிஷியின் கருத்தை இங்கு கூற ஆசைப்படுகிறேன். திருவண்ணாமலை ஞான ஒளியாம் ரமண ரிஷியின் வதிவிடமல்லவா? அவர் அடிக்கடி கிரி பிரதட்சணம் செய்வது வழக்கம். இவருடன் அடியார் பெருமளவில் கூடி கிரி வலம் வருவதற்கு செல்வார்கள். அவ்வாறு வலம் வரும்போது ரமணரிஷி அடியார்களைப் பார்த்து ஓரமாக வரும் படி கண்டிப் பாகக் கூறுவாராம். அண்ணாமலையைச் சுற்றியுள்ள முனிவர் களும், ரிஷிகளும் நாளாந்தம் சூக்கும உடலில் வலம் வந்து கொண்டே இருக்கிறார்கள். அவர்களுக்கு இடர் ஏற்படாத வாறு ஒதுங்கி வருமாறு கூறுவார்களாம். இவ்விடயம் அவரது வரலாற்றை தாங்கி வெளிவந்த நூலில் பெறப்பட்ட விடய மாகும். ஆகவே சூக்கும உடலில் எங்கள் தியாகச் செம்மல்






ரமணமகரிஷி அவர்கள் - கோவணத்துடன்

**1. என்னையழித்து இப்போ எனைக்கலக்காவிடில் இதுவோ ஆண்மை அருணாசலா**

**2. ஐம்புலக் கள்வர் அகத்தினில் புகும்போது அகத்தில் நீ இலையோ அருணாசலா**

**3. ஓங்காரப் பொருளே ஒப்புயர்வில்லோய் உனை யார் அறிவார் அருணாசலா?**

**- ரமணரிஷி அட்சரமணமாலை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் உலாவும் இடமல்லவா துயிலும் இல்லங்கள் அவரவர் கர்ம வினைக் கேற்ப அடுத்த கூடு எடுக்கும்வரை வானில் வலம் வந்து கொண்டே இருப்பார்கள் என்பது மகாரிஷியின் கூற்றினால் தெளிவாகின்றதல்லவா? வாகனம் தொடர்ந்து கிளிநொச்சி புதுமுறிப்பு வீதியால் சாதனை வீரர் முன்னாள் அரச அதிபராக, பின் நிரந்தரச் செயலாளராக இருந்து இறைபதமடைந்த திரு. ஸ்ரீகாந்தா ஐயா அவர்கள் முற்றுமுழு தாக யோக சுவாமிகளின் வழிகாட்டலில் ஆரம்பிக்கப்பட்டு உருவாக்கப்பட்ட கனகபுரம் கிராமத்தை அடைந்தது. பாடசா லைகளில் படித்துக் கொண்டிருந்தவரும் படிப்பை முடித்தவர் களுமாக 11 பேர் நடுக்காட்டுக்குள் ஒரு இலட்சியப் பயணத் துக்காக ஆரம்பிக்கப்பட்ட திட்டந்தான் கனகபுரம். 1958 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29ஆம் திகதியன்று ஆரம்பிக்கமுன், ஸ்ரீகாந்தா ஐயா அவர்களால் சுவாமிகளை அணுகி இப்படி யான ஒரு திட்டம் ஆரம்பிக்க எண்ணங் கொண்டிருப்பதாக கூறினார். யோக சுவாமிகள் நூற்றுக் கணக்கில் இளைஞர்கள் வருவார்கள் ஒரு கிராமமே உருவா கப் போகின்றது, அதற்கு கனகபுரம் என்று பெயரிடுமாறும் ஆசி கூறினார்கள். அவ்வா றாக நூற்று முப்பத்தி மூன்று இளைஞர்களினால் உருவாக் கப்பட்ட கிராமந்தான் கனகபுரம். ஸ்ரீகாந்தா ஐயாவும் செல்லத் துரை சுவாமிகளும் மிகவும் இறுக்கமான நண்பர்களாகும். செல்லத்துரை சுவாமிகளின் சரித்திரமோ மிகவும் ஆழமான தும், விரிந்ததுமாகும். 1940ஆம் ஆண்டு தொடக்கம் 1950 வரை ரமணமகரிஷியின் சீடராகவே இருந்துள்ளார். அவரது அணுக்கத்தொண்டராக இருந்து வந்துள்ளார் என்றால் மிகையாகாது. 70 ஆவது வயதில் 1950 ஆம் ஆண்டு மகாச மாதி அடையப் போகிறார்கள் என்ற குறிப்பு இவர்கள் மலை நாட்டில் அப்பொழுது படிப்பிக்கும் காலத்தில் புகையிரதத் தில் பிரயாணம் செய்யும்போது ரமணரிஷி குடையுடன் ஆகா யத்தை நோக்கி செல்வதான காட்சியைக் கண்டார். காட்சி கிடைத்ததும் உடனே திருவண்ணாமலைக்குப் புறப்பட்டு விட்டார். அங்கு சென்று மகரிஷியைப் பார்த்துவிட்டு நிற்கும் போது அவர் சமாதி அடைந்த வேளை 1950 ஏப்பிரல் 14 ஆம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகதி ஒரு சதுரப் பெட்டி போன்ற ஒளி திருவண்ணா மலையை நோக்கிச் சென்றதை தானும் இன்னும் பலரும் கண்ணாரக் கண்டதாக அடிக்கடி கூறுவார். சமாதிக்கு பின்பு வடக்கு நோக்கிப் போய் கேதாரநாத் கோயிலில் தங்கும் வேளை யோக சுவாமிகள் நேரில் காட்சி கொடுத்து **"COME HOME IMMEDIATELY"** என்று நேரில் நின்று உரத்துச் சொல்லப்பட்டதாம். உடனே திரும்பிவிட்டார் ஆசான் செல் லத்துரை, தான் இங்குவர மேலே கூறப்பட்ட வசனம் சொன்ன திகதியிடப்பட்டு நாவற்குளி மகாவித்தியாலய அதிபராக மாற் றக் கடிதம் வந்திருந்ததாம். அதன்படி நாவற்குளிக்கு வந்த வுடனே யோக சுவாமிகளும் காரில் வந்து இறங்கினார்களாம். உடனே காரிலே ஏறச்சொல்லி "உன்னை கொண்டுபோய் கவுட்டுக் கொட்டி விடுகின்றேன்" என்று கூட்டிச் சென்றாராம். அவ்வாறு கொண்டு வந்து கவுட்டுக் கொட்டிய நாள் தொடக் கம் இதுவரை சிவதொண்டன் பணியே நற்பணியென வாழ்ந்து வருகிறார்கள். அப்படியாக யோக சுவாமிகளது அணுக்கத் தொண்டராகவே சுவாமிகள் இருந்து வந்துள்ளார். அவரை ஸ்ரீகாந்தா ஐயா அவர்கள் மிகவும் கௌரவமாகப் பேணி அனு சரித்து வந்துள்ளார்கள். அந்தவகையில் ஸ்ரீகாந்தா ஐயா வினால் உருவாக்கப்பட்ட திட்டத்தைப் பார்க்க வேண்டு மென்ற ஆர்வம் செல்லத்துரை சுவாமிகளுக்கு இயல்பாகவே ஏற்பட்டுள்ளது. அதற்கு தூண்டு கோலாக தற்போது கனக புரம் கிராமசேவையாளராக இருக்கும் திரு.பசுபதிப்பிள்ளை அவர்கள் கனகபுரத்திற்கு வருகை தருமாறு வேண்டி நின்றார் கள். அதற்கிணங்க கனகபுரம் கிராமத்தை நோக்கி சுவாமிக ளின் அருட்பார்வை விழுந்தது. கிட்டத்தட்ட மூன்று மைல்கள் கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்லத்திற்கு வடக்கிலிருந்து புதுமுறிப்பு றோட்டுக்கு வடக்குப் பக்கமாகப் பரந்து வளர்ந் துள்ளது இக்கிராமம். வருடாவருடம் நடக்கும் சிவராத்திரி காலங்களில் மூட்டைக் கணக்கில் மரக்கறி வகைகளும், வாழைப்பழக் குலைகளும், வாழையிலைகள் ஆயிரக்கணக் கிலும் யாழ் சிவதொண்டன் நிலயத்தில் நடக்கும் சிவராத்திரி




**1958ம் ஆண்டு நடுக்காட்டுக்குள் 90அடி நீளத்தில் 40அடி அகலத்தில் தற்காலிக வதிவிடம் அமைத்து இளங்கதிர் குழு வாழ்க்கைப் பண்ணை என்று நாமம் இட்டு தந்தை ம.ஸ்ரீகாந்தா ஐயா அவர்களால் யோகர் சுவாமிகளின் ஆசியுடன் ஆரம்பிக்கப்பட்ட கனகபுர முன்னோடிகளை இங்கே காண்கிறீர்கள்.**

**நூற்றுக்கணக்கான இளைஞர்களை சேருங்கள். ஒரு கிராமமே உருவாகப் போகுது. அதன் பெயர் கனகபுரம் - 1958ல் யோக சுவாமிகளின் வாக்கிது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சியின் வளர்ச்சிக்கு அரும்பாடு பட்ட
ஆன்மீக வள்ளல் காலஞ்சென்ற ம.ஸ்ரீகாந்தா குடும்பம்



கனகபுரத் தந்தையும் நீயே, தாயும் நீயே...


கண்ணைப் போல் அறம் காப்பது வீரமே (நற்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைச்சி துணுக்காய்ப் பகுதி உதவி அரச அதிபராக
சேவையாற்றிய காலஞ்சென்ற
முருகேசம்பிள்ளை அவர்கள் கனகாம்பிகை கோவிலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எங்கள் பலகாலச் சிந்தனையின் பிரதிபலனைக் [illegible]
காணும் சந்தர்ப்பம் இன்று எமக்குக் கிடைத்தது.
[illegible]
[illegible] மகிழ்ச்சியையும் [illegible]
[illegible] உணர்வையும் காணும் பொழுது அவர்களின்
அகத்தின் உறுதியை நன்கு புலப்படுத்துகின்றது.
இவர்களின் [illegible]
[illegible]
செய்யும் என [illegible]. இவர்கள்
உடலும் உள்ளமும் உறுதிபெற்று நல்வா-
ழ்வு பெறவும் இத்திட்டம் நிறைவேறவும்
[illegible] இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
[illegible]
[illegible] ஆசீர்வதித்து வைக்கின்றோம்.

[illegible]

[illegible]

23.2.59

[illegible]

[illegible]



கனகபுரம் பச்சைபோனி
பாக்கியமல்லவா....
சிறுமி பாடசாலை செல்லுமுன்
மிளகாய் பறிக்கும் காட்சி..

சந்திரனாய் சூரியனாய்
சரமசரம் யாவுமாய்
எந்தை பிரான்
இருந்தநிலை
கண்டார்கள் பிறவாரே
-நற்சிந்தனை

தந்தைதாய் மற்றும் தமர் தாரமெல்லாரும்
சந்தையிற் கூட்டமிது தப்பாது - நற்.

கனகபுரத்தில் சிறுமிகள்
" சோ....."
என்று கிளி கலைக்கும்
காட்சி
சீவன் சிவனாச்சுதடி






கனகபுரத்தில் ....
தமிழர் பாரம்பரிய விழாவான
தைப்பொங்கலுக்கு
அடுத்தநாள்
பசுக்குலத்துக்கென
எடுக்கும்
பட்டிப் பொங்கலுக்கு
முன்ஆயத்தமாக பசுவைப்
(இலட்சுமி)பேணும் காட்சி..
“யாவர்க்குமாம்
பசுவிற்கொரு வாயுறை..”
- திருமந்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கனகபுரம் முன்னோடித் திட்டம் பற்றி 1959ம் ஆண்டு பத்திரிகையாளர் ஞானமுத்து அவர்களினால் ரைம்ஸ் பத்திரிகையில் வரையப்பட்ட கட்டுரை கீழே தரப்படுகின்றது.



# Youthful enterprise



A colonist feeds the fowls.



This shack is the colonists' home.

## Seventeen men of Kilinochchi set an example

A short distance from Kilinochchi town, on the Kandy road, one comes upon a big board with the legend:

YOUNG MEN'S GROUP FARMING SOCIETY 220 YARDS
PURE-BRED POULTRY EGGS —30 CENTS EACH

I had set out from Jaffna to visit the young men who had formed this society and to see the results of their enterprises. Interested as I was in the farming ventures of educated young men in the North, I had already made the acquaintance of the Yarl Educated Youth's Co-operative Society and the Vadakachchi Educated Young Farmers. The Kilinochchi young men were next on my list.

A gravelled road, which crossed the railway track, soon brought me to the settlement.

### Unimpressive place

The place was not impressive to look at: a low shack consisting of unplastered concrete brick walls and thatch roof, a few poultry sheds, some plantain trees and vegetable plots, and an uncompleted well.

Nobody seemed to be in sight when I arrived, but it was the luncheon recess, and soon the young men gathered round me, clad in verties and sarongs, their bodies bare above their waists.

They told me the story of their enterprise.

Seventeen of them, from various Rural Development Societies in the Peninsula, had followed a course of 18 days' training at a Rural Development Training Centre in Jaffna. At the end of this period, eleven of them conceived the idea of starting a scheme of poultryfarming, goat-rearing and growing highland crops at some suitable place. This life was considered to be superior to, and productive of more happiness than, all others.

Through the Officer-in-charge they applied for land to the Government Agent, who agreed to give an acre to each, eleven acres in all. Later, on the recommendation of the Government Agent, the Land Commissioner allowed them four acres each, so that they have now altogether fifty-five acres. Their original allotment was high land, with water at a depth of 30—35 feet.

They started their project on August 11th, 1958, and their first President was their Officer-in-charge, Mr. K. Kumaraswamy.

They arrived at the site on August 18th and stayed at the Land Development Department quarters half-a-mile away, for three months, during which period they built their sheds and prepared the land. They felled the trees, burnt the stumps, sank a well, built a fence, acquired some poultry and planted two acres of 'Seenaddy' paddy, which produces a crop in 70 days.

A temporary abode was ready at the end of this period. They moved in and started building their permanent home. They made cement bricks at the Forest Department nursery, as water was available there. Then they made the poultry-sheds, with 2-foot walls, wire-netting and thatch roof.

At the end of another three months, a well ten feet deep had been sunk. It was 18 feet in diameter, and had taken only about ten days to sink. At this stage professional help had to be called in for dynamiting. In the land round the well they grew chilli, bittergourd, snake-gourd and plantain.

CONTINUED

sheds and fences, if required. The four stay behind to feed the poultry and goats, clean the sheds and take the goats to graze.

Then comes the lunch interval after which they rest till 2.30 p.m.

There follows another spell of field work till 5.30, after which they have their bath. A period of recreation follows, which for those who have done manual work takes the form of reading, [illegible] the accounts and [illegible] correspondence. Dinner is at 8.30 and bed at [illegible]

The day-old [illegible] are looked after throughout the night, each of the [illegible] taking in turn a spell [illegible]

A library has been built up, mainly with books contributed by the members themselves, and there are now about 50 books. The embassies of foreign countries have contributed magazines. There are some indoor games, too.

A cultural and religious society has also been formed. Bajana is held on Fridays and religious classes are conducted on Mondays. The members join in co-operate worship on Fridays. Time is also devoted to the study of the Bagavad Geeta.

by

*S. K. GNANAMUTTU*

## Their house

Their house is 67 feet long and 25 feet broad, and took two months to build. The building material cost Rs. 1,836. They occupied it on March 11th, 1959. The Government Agent and his wife visited them and took part in the house-warming. Friends and well-wishers helped them with various gifts. The Asia Foundation has promised to give a water-pump and Senator Nadesan an electric plant when the well is completed. And so, self-help and much good-will and some material support from friends set the young society firmly on its feet.

Of the promised total of Rs. 60,000 that the Government has promised they had received up to May this year Rs. 11,000. They had put in Rs. 3,000 of their own money, and had borrowed Rs. 1,800 from the credit Society and received Rs. 250.00 from the Social Services Relief Fund. Their estimated expenditure is in the region of Rs. 60,000. At the moment they are indebted to the extent of Rs. 5,000.

They made a start with poultry on January 9th last year. They purchased their first batch of 30 birds at Rs. 7.50 each from Kundasale. They exchanged some cockerels for country birds at Rs. 2.50 each. The first batch of chickens hatched out on February 18th. By May they had bought 200 birds. The strength in May this year was 120 birds and 900 chickens. They had sold their bad layers. Their monthly income from poultry-farming is about Rs. 400.00, but living expenses topped this figure by Rs. 100.00. They had also a herd of 55 goats, but from it as also from their land they had not yet begun to get any appreciable income. They had up to then planted 1,000 plantain trees and 520 brinjal plants. In their nurseries they had chilli, brinjal and tomato.

## Future plans

So much for the present; now for the future?

When their plans have been executed they will have $12\frac{1}{2}$ acres under cultivation. Eight acres will be set apart for poultry, and the total strength of their flock will be 5,000 layers. Five acres will be devoted to housing. Their goats will get six acres, and their cattle two acres. Paddy will occupy 22 acres. These allotments add up to the total extent of the land at their disposal.

Their day begins at 6 a.m. All except four do field work till 11.30. This work consists of cultivation of brinjals, chillies, ... preparation of the

## 'Government'

The average age of the colonists is 22 years. Six of them have passed the S.S.C. in the English medium and one has passed it in the Tamil medium, in the first division. They do private study and take up examinations.

The oldest member is the president of their society. A Secretary and a Treasurer are elected. Each colonist holds office in a sort of cabinet. There are for example, a Minister of Culture and another of Justice. They meet once a month. They hope to have a civic centre before long. On the land set apart for this purpose they hope to house a multi-purpose society, and have a playground and a park.

They have received much official and public support and encouragement as evidenced by the articles donated to the society. The Government Agent and the Officer-in-charge of Rural Development Society have been particularly helpful. The society has attracted many visitors. There are at least ten a day, I was informed, including overseas visitors. They proudly showed me their visitors' book.

By the time I had seen everything and had asked all my questions it was time for lunch, and I was invited to join them. I squatted on the floor with them and shared their frugal fare, which consisted of rice and vegetable curries. I was served, in addition, a newly-laid egg.

## An example

I was pleased and heartened by what I saw, for the future of most of the youths in the Peninsula lies in this kind of enterprise. But ventures of this kind are more easily begun than maintained. They have made a good beginning and have received much attention and support. What will happen when neither attention nor support is forthcoming, and when the first fine enthusiasm is dissipated? Will not other walks of life beckon those who have passed the S.S.C?

I expressed my fears, but was instantly assured that nothing would discourage them or tempt them away from the life that they had chosen.

They young men appeared to be of the mettle of which successful colonists are made, and I took my leave of them thanking them for their kind hospitality and wishing them all succ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாவுக்கு கொண்டுபோய் அதில் பங்கெடுத்துத் திரும்புவது வழக்கமாக இருந்தது. இதனை செல்லத்துரை சுவாமிகளே அடிக்கடி நினைவு கூறுவார். இக்கிராமத்தின் பெயர் தாங்கிய ஒரு ஆலயம் இரணைமடு குளத்திற்கு மேற்குத்திசையில் அமைக்க விரும்பி ஸ்ரீகாந்தா ஐயா, T. முருகேசம்பிள்ளை (உதவி அரச அதிபர்) அவர்கள் யோகசுவாமிகளை அணுகி அதற்கான மூலஸ்த்தானத்திற்கு இடமெடுக்க உதவுமாறு கோரினார்கள். அதற்கு யோக சுவாமிகள் நீங்கள் அடிக்கல் நாட்டச் செல்லும் சுபதினத்தன்று உங்கள் வாகன அணிக்கு முன்னால் ஒரு பருந்துப்பறவை தாழப் பறந்து வழி காட்டிச் செல்லும் அந்தப் பறவை இரணைமடுக்குளத்தின் குடதிசை யில் உள்ள ஒரு மரத்தில் அமரும், அந்த மரத்தடி தான் ஆதி மூலத்தின் அடித்தளமாகும் என்றார்கள். அவ்வாறு சுபதினத் தன்று விரதமிருந்து மிகவும் பயபக்தியுடன் திரு.ம.ஸ்ரீகாந்தா ஐயா மற்றும் பிரமுகர்கள் புடைசூழ வாகன அணியில் சென்ற போது ஒரு பருந்து அந்த வாகனத் தொடரணிக்கு முன்னாலே தாழப்பறந்து வழிகாட்டிச் சென்று சுவாமிகள் கூறியவாறு இரணமடுக்குளத்தின் குடதிசையிலுள்ள பாலைமரத்தில் அமர்ந்தது. அம்மரத்தடியே இன்று ஆலயத்தின் மூலஸ்தானம் அமைந்திருக்குமிடமாகும். அத்துடன் அவ்வாலயத்திற்கு கன காம்பிகை அம்பாள் என சுவாமி களே பெயர் சூட்டியிருந்தார்.

கனகபுரம் கிராமமும், கனகாம்பிகை அம்பாள் ஆலயமும் பின்னிப் பிணைந்த தொடர்புடயவையாகும். அதற்கு ஆதார மாக அக்கோயில் பராமரிப்புக்கென கிழமைதோறும் கனகபுர வாசிகள் ஒழுங்கு முறையில் செல்வதற்காக ஒழுங்கு செய்து வந்ததற்கான ஆதாரங்களுண்டு. அத்துடன் அக்கோயில் திருப்பணிகளில் அதிக பங்கு கொண்டுள்ளார்கள் என்பதும் வெள்ளிடைமலையாகும். அது மாத்திரமல்லாது கனகபுரத் திட்ட ஆரம்ப காலங்களில் பல ஞானிகளும் தவசிரேஷ்டர்க ளும் வந்து ஆசிகூறிச் சென்றுள்ளார்கள். அவ்வாறு சுத்தா னந்த பாரதியார் அவர்கள் இக்கிராமம் சார்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பச்சை மேனிப் பாக்கியமே
பரிவு கூறுவாய்
இச் சகத்தில் உழைத்துவாழும்
இன்பமோங்கவே
வறுமைத் துன்பம் நீங்கவே"

என்ற பாடலைப் பாடியருளினார்கள். மேலும் மகாதேவ ஆசிரம தவமுனிவடிவேல் சுவாமி அவர்கள் மேற்படி கிராமத்தில் 18 கிழமைகளுக்கு பகவத் கீதை 18 அத்தியாயத்தையும் ஐயந்திரிபற விளக்கி, பெரும் விரிவுரை வகுப்பு நடாத்தியுள்ளார்கள். குன்றக் குடி அடியார்கள் வருகை தந்தபோது "ஒரு மனிதன் தனது சுயதேவையை பூர்த்தி செய்ய உழைப்பதே நாகரிகம்" என நாகரிகத்திற்கு வரைவிலக்கணம் கூறியிருந்தார்கள். தனது காலிலே நின்று உழைத்து வாழ்வதையே நாகரிகமெனக் கூறியது ஒரு புரட்சிகரமான கூற்றல்லவா? நாங்கள் எதை நாகரிகம் என்று எண்ணுகிறோம் என சிந்தித்து தெளிவோமாக.

## கனகபுரம் ஸ்ரீகாந்தா சனசமூக நிலையத்தில் செல்லத்துரை சுவாமிகள்.

கனகபுரம் படித்த வாலிபத்திட்டத்திலுள்ள ஸ்ரீகாந்தா சன சமூக நிலயத்தை வந்தடைந்தார் சுவாமிகள், அங்கு ஒரு பெருங்கூட்டம் காத்து நின்றது. கனகபுரத்தில் முதன் முதலில் வந்து குடியேறிய முன்னோடிகள், அவர்களது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் ஆகியோர் நின்று அரோகரா ஓசை எழுப்பி சுவாமிகளை வரவேற்றனர். கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர், செயலாளர் மற்றும் நிர்வாக சபையிலுள்ளோர்களும், பொதுமக்களும், பாடசாலை மாணவர்களும் இவ்வாறு பெருங் கூட்டமே சேர்ந்துவிட்டது. தலைமையுரை என்றும் வரவேற்புரை என்றும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. சுவாமிகளை ஏதாவது கூறி மக்களை ஆசீர்வதிக்குமாறு பரிவுடன் வேண்டிக் கொண்டனர். அலையடங்கிய சமுத்திரம் போன்று மக்கள்





கனகபுர வாசிகள்
முறிகண்டிப்
பிள்ளையாருக்குக்
காவடி நேர்த்தி


"எப்பரிசாயினும்
ஏத்துக,
ஏத்திடின்
அப்பரிசீசன்
அருள்பெறலாமே"

ஆக்கக்காவடி அம்மம்மாவடி
ஆன்மா நித்தியமாமடி - நற்



கனகபுர வாரிசுகளிற்
சிலர்....

அவனி அனைத்தும்
பொய் பொய் பொய்
அதனை அறிந்து
உய் உய் உய்



ஸ்ரீகாந்தா சனசமுக
நிலையத்தில் தந்தை
ஸ்ரீகாந்தா அவர்களது
மகள் மாலினி
இராசநாயகத்துக்கு
கனகபுர மக்கள்
வரவேற்பளிக்கும்
நிகழ்வின்
ஒரு பகுதி...

கிட்டாத பொருளென்று - தங்கமே
கீழ்நோக்கிப் பாராதே - (நற்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியாயிருக்க சுவாமிகள் அகமுக மௌனியாகையால் சில கருத்துக்களை இரத்தினச் சுருக்கமாக கூறியருளினார், அன்று சிவராத்திரி காலத்தில் கனகபுரத்தின் பங்குபற்றி ஞாப கப்படுத்தினார்கள். மல்லாகத்திலிருந்து கொழும்புத்துறை வரை பாதயாத்திரை நடைபெற்ற போது கனகபுர மக்கள் பங்குகொண்டு சிறப்பித்தமை கிளிநொச்சிக்கே சிறப்பைக் கொடுத்தது. சுவாமிகள் 1964 ஆம் ஆண்டில் மகா சமாதி யடைந்தபோதும் பங்கு கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். இத்தருணத்தில் ஒரு சிறு சம்பவத்தைக் கூற விளைகின் றேன். இலங்கையின் முதன் முதல் மகாதேசாதிபதியாக இருந்த லோட்சோல்பரியின் மூத்த மகன் சிவதொண்டனில் இருக்கும் வேளை கனகபுர இளைஞர்கள் அவரை அணுகி துளைத்துத் துளைத்துப் பல கேள்விகளைக் கேட்பதுண்டு. அதற்கு அவர் சிரித்த முகத்துடன் பதிலளிப்பதுமுண்டு. அடிக் கடி சுட்டுவிரலை வாயில் வைத்து மௌனமாக இருக்குமாறு எச்சரிப்பார்கள். யோகசுவாமி நோய்வாய்ப்பட்டு வாங்கில் இருக்கும் போது ஒரு நாள் மேற்படி லோட் சோல்பரியின் மகன் தீட்சா நாமம் "சாந்த சுவாமி" யோகசுவாமிக்குக் கிட்டப் போக கிடுகிடென்று நடுங்கியது போலும் பயந்தவராய் அறையில் சுவாமி இருந்த பக்கத்திற்கு எதிர்ப்பக்க மூலை யில் அடங்கி, ஒடுங்கி, கைகட்டியவாறு சுவாமிகளையே பார்த்தவண்ணம் நின்றார்கள். அப்போ அவர்கள் சோல்ப ரியின் மகனான சாந்த சுவாமிகளை பார்த்து **"WHAT DO YOU WANT?"** என்ன வேணும் என்றார்கள். அதற்கு அவர் **WELL SWAMY WHAT IS MEDITATION** ஆத்மீக சாதனை என்றால் என்ன? என்றார்கள். அப்போ சுவாமிகள் **"MEDITA TION IS NOT THINKING OF ANYTHING IT IS REMA INING SUMMAH"** ஆத்மீத சாதனை என்பது எதனையும் சிந்திக்காது, சும்மா இருத்தலே என்றார்கள். இதனையே அருணகிரிநாத சுவாமிகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சும்மா இரு சொல்லற என்றலுமே
அம்மா பொருளொன்று மறிந்திலனே"
- கந்தரனுபூதி-


என்று சும்மா இருக்கும் சுகத்தை விளக்கியுள்ளார்கள். சாந்த சுவாமிகள் மனதில் இருந்த கேள்விக்கு பதில் கிடைத்து விட்டது, ஆனந்தமாய் தலையசைத்தார்கள். இது யோக சுவா மிகளின் இறுதிக்காலத்தில் நடந்த சம்பவம். மேற்படி சாந்த சுவாமிகளே யோக சுவாமிகள் பாடியருளிய நற்சிந்தனைப் பாடலனைத்தையும் செல்லத்துரை சுவாமிகளின் உதவியு டன் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்கள். அவர் ஒரு பிரபுக்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். யோக சுவாமிகள் வழிகாட்டலுக்கமைய லண்டனிலேயே சென்று வாழ்ந்து வரு கிறார்கள். முப்புத் தட்டி நிற்கின்றது. 90 வயதாகிவிட்டது. யோக சுவாமிகளின் தாள்களையே பற்றி நிற்கின்றார்.

நிற்க, அங்கு வந்தோருக்கெல்லாம் சிற்றுண்டி வழங்கப் பட்டது. இறுதியில் சுவாமிகளிடமிருந்து விபூதிப் பிரசாதம் வாங்க யாவரும் முன்டியடித்துக் கொண்டு நின்றார்கள். மந்திர மாவது நீறு என்ற திருநீற்றுப் பதிகம் பாடிக்கொண் டிருக்க நிரையில் வந்து சுவாமிகளின் பாதங்களைத் தொட்டு வணங்கி விபூதிப் பிரசாதம் பெற்றுச் சென்றார்கள்.


"வேதத்திலுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந்தருவது நீறு"

இவ்வாறாக திருநீற்றின் மகிமையை எடுத்தியம்ப எம்மால் முடியுமா?

இது ஒரு பக்தி பரவசமான நிகழ்வாக இருந்தது, மறக்க முடியாத ஒன்றாகும். இந்நிகழ்வு முடிந்ததும் யாவரும் இரு மருங்கிலும் திரண்டு நின்று அரோகரா ஒலி வானைப் பிழக்க சுவாமிகள் அக மகிழ்வுடன் யாவரையும் உற்றுப் பார்த்து



இரணைமடுக் குளத்தை
3அடி உயர்திக்கட்டிய
பெருமை உயர்திரு
சிறிகாந்தா ஐயா
அவர்களைச்சாரும்.
அக்குளத்தின் சிறப்பினைப்
பார்த்து பெருமிதமடையும்
மகள் திருமதி.மாலினி
இராசநாயகம் அவர்கள்...
சில கனகபுர வாசிகளுடன்.




யோகசுவாமிகளின்
ஆசியுடன் பருந்துப்பறவை
வழிகாட்ட, இரணைமடுக்
குளத்தின் குடதிசையில்
காலஞ்சென்ற சிறிகாந்தா
ஐயா அவர்களால்
தாபிக்கப்பட்ட
ஸ்ரீ கனகாம்பிகை அம்பாள்
ஆலயத்தின் எழில்மிகு தோற்றம்.
அங்கு
மகள் மாலினி இராசநாயகம்,
மற்றும் ஆலய அடியார்களுடன்...



அன்று அப்பனின் ஏற்பாட்டில்
கரைச்சி-துனுக்காய் பிரிவு
மக்கள் ஒன்றுகூடி 1008
பானைகள் வைத்து
பொங்கல் விழா
செய்தார்கள். இன்று அவரது
மகள் மாலினி இராசநாயகத்துக்கு
அம்பாள் அன்னமிடுகின்றாள்..
" கனகபுரத்திற்கும்
கனகாம்பிகைக்கும்
உள்ள தொடர்புதான்
என்ன?....."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யோகசுவாமிகள் ஸ்ரீகாந்தா ஐயா அவர்களுக்கு கூறிய வாக்குக்கு அமைய பருந்து தாழப்பறந்து வழிகாட்டிச் சென்று இரணைமடுக் குளத்திற்கு குடதிசையில் உள்ள பாலைமரத்தில் அமர்ந்தது. அந்த பாலைமரத்தடியிலேயே ஸ்ரீ கனகாம்பிகை அம்பாள் ஆலய கற்பக்கிரகம் அமைந்துள்ளது. அந்த கற்பக்கிரக கருவறையில் கற்சிலையாய் அமர்ந்திருக்கும் உலக மகாசக்தியாகிய கனகாம்பிகை அம்பாளையும் அவ்ஆலய முகப்புத் தோற்றத்தையும் இங்கே காண்கிறீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடைபெற்று, மீண்டும் குறிப்பிட்ட வாகனத்தில் ஏறி அமர்ந்து கொண்டார்கள். இந்த முன்னோடித் திட்டத்தின் தந்தையும் தாயுமென காலஞ்சென்ற ம.ஸ்ரீகாந்தா ஐயா அவர்களையும் காலஞ்சென்ற T.முருகேசம்பிள்ளை ஐயா அவர்களையும் கனகபுரவாசிகள் போற்றித்தரிசிக்கத் தவறுவதில்லை. அது மாத்திரமல்லாது கிளிநொச்சி எழுச்சி பெற்றது இவர்கள் இருவரது காலத்திலே என்பது மறக்கமுடியாததொன்றாகும்.

வாகனம் புது முறிப்பு வீதி வழியாகவும், ஏ-9 வீதி வழியாகவும் பருந்து தாழப் பறந்து வழிகாட்டிச் சென்ற சேவிஸ் றோட்டின் வழியாக கனகாம்பிகைக் குளத்தை அடைந்தது. அங்கு சிவதொண்டன் நிலையத்துக்கென பதினைந்து ஏக்கர் நிலம் காலஞ் சென்ற ம. ஸ்ரீகாந்தா அவர்களின் உதவியினால் பெறப்பட்டு வயல் செய்த நிலமுண்டு. அதனை சிறிது காலம் சர்வோதயம் குத்தகை அடிப்படையில் பிரயோசனப் படுத்தியது. இப்பொழுது வேறு பாவனையில் உள்ளது. அந்த இடத்தில் ஒரு சில நேரம் தாமதித்து இடத்தைப் பார்வையிட்டார் சுவாமிகள். அங்கு இப்பொழுது இருக்கும் பிள்ளைகள் குளிர்பானம் வழங்கி சுவாமிகளை உபசரித்தனர். மீண்டும் பிரயாணம் ஆரம்பமானது.

இரணைமடுக் குளக் கட்டுமானப்பணி நடக்கும்வேளை அப்பொழுது பொறியிலாளராக இருந்தவர் பிறவுணி என்பவராவார். அவர் ஒரு ஆங்கிலேயர். அக்காலத்தில் குளக்கட்டுமானப் பணியின்போது களஞ்சியப் பொறுப்பாளராக இருந்தவர்தான் எங்கள் தவமுனி யோக சுவாமிகளாகும். அவரை மேற்படி பிறவுணி பொறியியலாளர் **YOU ARE A GOD MAN** நிர் ஒரு தெய்வமனிதன் என்று அழைப்பார்களாம். அக்காலத்தில் கிளிநொச்சி காக்கா கடைச்சந்தியிலிருந்த முகாந்திரம் வெற்றிவேலு விதானையாரின் வளவுக்குள் ஒரு தனிக்கொட்டிலில் இவர் குடியிருந்து வந்துள்ளார். இவர் தனது ஆத்மீக சாதனையின் போது இரவில் பலத்த சத்தம் போடுவாராம். விதானையார் வந்து பார்த்தால் தியானத்திலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருப்பதைக் கண்டதாகவும் அந்நேரத்திலேதான் தன்னையறி யாமலே இறைவனோடு பேசுவாராம். "என்ன தம்பி என்ன சத் தம் என்று கேட்டபோது" அது ஒன்றுமில்லை என்று கூறுவா ராம். அக்காலத்திலேயே இப்போ நாம் திருவடி நிலையம் அமைக்க இருக்குமிடத்தில் மாமரத்தையும் நாட்டியுள்ளார்.

இப்படி யோகசுவாமிகளின் திருவடி பட்ட இடந்தான் இரணைமடு குளப்பகுதி. அங்குதான் எல்லோரும் அதிசயிக்க த்தக்கதாக சிறியதான விமானத்தில் தத்துவாசிரியரான அன் ரன் பாலசிங்கமவர்கள் கிளிநொச்சியை வந்தடைந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இரணைமடுக்குளத்திற்கு மேற்குக் கரையில் எழுந்தருளியிருக்கும் கனகாம்பிகை அம்பாளின் திருவுருவம் பிரதிஷ்டை செய்யுங்கால உற்சவத்தின் போது 1008 பானைகளில் கோவிலைச் சுற்றிப் பொங்கல் பொங்கிய காட்சியை எப்படி வர்ணிப்பது. கரைச்சி துணுக்காய் பிரிவு மக்கள் எல்லோரும் கடலலைபோலத் திரண்டுவந்து பொங் கல் விழாவில் கலந்துகொண்டு கண்டுகளித்தனர். கருங்கல் லால் உருவமைக்கப்பட்ட அம்பாள், கருவறையில் இருந்து கருணை பொழிந்த வண்ணமிருக்கின்றாள். உடனே உங்கள் எல்லோர் மனதிலும் நட்ட கல்லைத் தெய்வமென்று தொழு கின்றார்களே என்று ஒரு கேள்வி எழலாம். அந்தப் பருந்து தாழப் பறந்து வழிகாட்டிவந்து அமர்ந்து காட்டிய இடந்தான் இந்த அம்பாள் குடிகொண்டிருக்கும் கருவறை.

நிற்க, இந்தியாவிலே தஞ்சைப் பெருங்கோயிலிலே கல் லாலான நந்தி வளர்ந்த வண்ணமுள்ளது. அது வளர்ந்து முகட்டை முட்டும் நிலை வருவதைக்கண்ட தெய்வ சீலர்கள் அதனில் ஒரு கொத்து கொத்தி கறை ஏற்படுத்தி விட்டனர். அதன் பின் வளர்ச்சியில்லை என்பது தற்காலத்தில் அறிந்த உண்மையாகும். அத்துடன் அமாவாசைத் திதியன்று இரவு 12 மணிக்கு எந்தப் பாரிய கல்லையும் பிளக்கக்கூடிய ஒரு மூலிகை உண்டு. அதைக் கொண்டு தேவையான மாதிரி





வளர்ந்து கொண்டிருக்கும் நந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடிட்டு எப்பாரிய கல்லையும் பிளக்கலாம் என சுவாமிகளே அடிக்கடி கூறுவார்கள், அந்த மூலிகை எது என சிற்பாசாரி கட்குத் தெரியும் என்பார். அத்துடன் அக்கல்லிலே ஆண் கல் லென்றும், பெண் கல்லென்றும் உண்டு என்றும், அவற்றில் ஆண்கல்லை இனங்கண்டுதான் சிலைகள் வடிப்பதற்கு தெரிந்தெடுப்பார்களென அறியக் கிடைக்கின்றது. இதனின்று கல்லும் வளருகின்றது. அதற்கும் உயிர் உண்டென்பது புல னாகின்றதல்லவா? கல்லும் அசைகின்றதே.
eg:- எறும்பூரக் கற்குழியும்.

யான் அறிந்த ஒரு சிறு கதையையும் இவ்விடத்தில் கூற விரும்புகின்றேன். அதாவது ஒட்டுசுட்டான் தான் தோன்றீஸ் வரர் ஆலயத்தில் நடந்த சம்பவமது. படையினரின் அட்டகா சம், போக்குவரத்து துண்டிக்கப்பட்டிருந்தது, சாப்பாட்டுக்குத் திண்டாடும்__காலமது. அவ்வாலயப் பூசகரின் நிலையோ பரிதாபகரமாகவிருந்தது. கோயில் நிர்வாகம் அர்ச்சனைச் சீட் டில்லாமல் அர்ச்சனை எதுவும் செய்யக் கூடாதென்று கண்டிப் பான கட்டளை. ஐயருக்கு காசுக்கோ பெருந்தட்டுப்பாடு அவ ருக்கு யார்தான் தஞ்சம். ஒட்டுசுட வெளிப்பட்ட தான் தோன் றீஸ்வரர் அல்லவா? ஐயர் மனதில் அந்த ஆலய நந்தியம் பெருமானுக்கு முன்னால் ஒரு பிடி அறுகம்புல்லைக் கட்டி வைத்துவிட்டு அவரையே இரந்து நிற்க விரும்பிவிட்டார். நந்தியாயிருப்பவர் இடபமல்லவா? ஆகவே தான் அறுகம் புல்லை ஐயர் தெரிந்தெடுத்துவிட்டார் போலும். அவ்வாறு அறுகம்புல்லை நந்தியம் பெருமானுக்கு முன்னால் வைத்து விட்டு இறைவனை மன்றாடிக் கொண்டு முன்னாலே அமர்ந்து விட்டார். அந்த வேளை ஒரு இராணுவ அதிகாரி கெடுபிடிகள் புடைசூழ அவ்விடத்துக்கு வந்து ஐயரைக் கூப்பிட்டார். பயத் துடன் அருகில் சென்றதும் ஒரு தொகைப் பணத்தைக் கொடுத்து அர்சனை செய்யுமாறு பணித்துள்ளார். அதற்கு அவர் அர்ச்சனைச் சீட்டு பெறவேண்டுமென்றார். அப்படி யொன்றும் பெற முடியாது நீங்களே காசை வைத்திருந்து உடனே அர்ச்சனை செய்யுமாறு கேட்டுக் கொண்டான். அவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரும் மறுக்க முடியாது அர்ச்சனை செய்து பிரசாதம் வழங்கி னார். ஐயரின் இடரும் தீர்ந்தது. இது உண்மையாகவே நடந்த கதையென்பதை நான் நன்கு அறிவேன். கல்லும் கரையாதா? எப்பரிசாயினும் ஏத்துக - ஏத்திடின் - அப்பரிசீசன் அருள் பெற லாமே என்பது பொய்யா?

"மண்ணானாய் விண் ணானாய் மதியானாய் ரவியானாய்
கண்ணானாய் ஒளியானாய் காட்சியெல்லாம் நீயானாய்
பெண்ணானாய் ஆணானாய் பேதமென்றும் நீயானாய்
என்னானாய் என்னானாய் என்பதல்லால் என்சொல்கேன்"
(நற்சிந்தனை 4 - 123)

இவ்வாறு எந்தெந்த உருவத்திலும் இறையருள் கிட்டு வதை யோகசுவாமிகள் மேற்படி பாடலில் விளக்கமாக இறை வனைக் கூறும் வகையென்னே என்று விழித்துக் கூறுகின்றார். கனகாம்பிகை அம்பாள் ஆலய முன்றலை அடைந்ததும் ஆலய நிர்வாகிகள் சிலரும் பொதுமக்களுமாக சுவாமிகளை வரவேற்று உபசரித்தனர். பூசை நடைபெற்றது. தீபாராதனை கண்டதும் கோயிலை வலம் வந்து இரணைமடு குளக்கரை யையும் கலிங்கப் பகுதியையும் பார்வையிட்டுக் கொண்டு வட் டக்கச்சியிலுள்ள கண்ணன் கோயிலுக்கு வருகை தருமாறு கிளிநொச்சி பிரதேச செயலாளர் வேண்டிக்கொண்டதற்கிண ங்க அங்கு புறப்பட்டார் சுவாமிகள். அப்பிரயாணத்தின் போது ஒரு அதிசயக் கதையை சுவாமிகள் கூறினார்கள். அதாவது ஒரு மனிதன் ஒரு நாளைக்கு 21,600 தரம் உட்சுவாசம் நிட்சு வாசம் செய்கிறான், என்றும் அதனை எடுத்துக் காட்டும் பொருட்டு இந்தியாவிலே சிதம்பரத்தில் சோழமகாராஜன் கன கசபையை 21,600 தங்க ஓடுகளால் வேய்ந்துள்ளான். ஆகவே தான் கனகசபை என்று பெயர் வரலாயிற்று (கனகம் - பொன்) இன்றும் காணக் கூடியதாக உள்ளது, எல்லாம் இறையரு ளல்லவா? ஒருவனது தூல உடம்பின் மறு வடிவமே கோயி லாகும். உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பாலயம் வள் ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல் என்னும் திருமந்திப் பாடல் இதனை அணி செய்கின்றது.



அடுத்து, கண்ணன் கோயிலை அடைந்துவிட்டோம். அதன் எழில் மிகு காட்சியை எப்படித்தான் வர்ணிப்பது, உழவர் வாழும் உத்தம பூமியில் அழகுறக்கட்டி ஆராதிக்கின்றனர் அவ்வூர் மக்கள். பூசையும் கற்பூர ஆராதனைகளும் நடைபெற்றன. ஞானச் சுவாலையில் மனமும் எரிந்து ஒழி வதே கற்பூர தீபாராதனையின் தத்துவ விளக்கமாகும் என்பது ஞானிகளின் வாக்காகும். மக்கள் கூடினர். சிறிது நேரம் பஜனை நடைபெற்றது, எங்கும் "ஓம் நமோ நாராயணா" நாமம் ஒலித்தது. யோக சுவாமிகள் பாடலில்

"ஓம் நமோ நாராயணா உத்தமனே ஸ்ரீராமா
நாம் வேறோ நீ வேறோ நல்வாக்குத் தாராயோ
எந்த வேளையுமுன்னை ஏத்திநீநானே யென்று
சிந்திக்க வரந்தாராய் சீமானே ஸ்ரீராமா"
- நற்சிந்தனை 4 - 304 -

எந்த வேளையுமுன்னை ஏத்தி நீநானேயென்று என்ற கட் டந்தான் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய ஒன்றாகும். "அதுவே நாமென்ற அகலாத்தியானம்" ஞாபகத்திற்கு வருகின்றதல் லவா? இச்சிந்தனையே நாமெல்லோரையும் ஊக்கிவிக்க வல்லதாகும். ஆலய தரிசனம் முடிந்ததும் யாவரும் அரோகரா ஒலி எழுப்ப சுவாமிகள் வாகனத்திலேறிப் புறப்பட்டு விட்டார். மீண்டும் வடிவேல் சுவாமிகளின் சமாதிக் கோயிலை நோக்கி யதாகும். அன்பர்கள், அடியார்கள் வேண்டிக்கொள்ள அவர் செய்யும் ஒழுங்குகளுக்கெல்லாம் இசைந்து எல்லா இடங்க ளுக்கும் ஆலயங்களுக்கும் வருகை தந்தது கிளிநொச்சி வாழ் மக்கள் மத்தியில் ஒரு பேரெழுச்சியைக் கொடுத்துள் ளது. ஞானிகள் தங்கள் நிலைகளை அடையாளங்காட்ட மாட் டார்கள். திருவருளின் பார்வை கிட்டியதும் குருவருள் கிட்டு மென்பது ஆப்த வாக்கியமாகும். அவர்கள் பேயரா?

1. பாலராய்
2. பேயராய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பித்தராய்
4. பிசாசராய்

மக்கள் மத்தியில் உலாவருவர்.

உதாரணமாக யோக சுவாமிகளது குருதேவரான செல்லப்பா சுவாமிகள் பாதத்தைத் தொட்டு கும்பிட யாராவது வருகிறார்கள் என்பதை கண்டதும் ஓடிப்போய் சலங்களிக் குமிடத்தில் நின்றிடுவாராம். ஆனால் அவர் பார்வைபட்டாலோ அல்லது அவரது சந்நிதி மகிமையினாலோ அவரை நாடி வருபவர்களின் இடர்கள் தீர்ந்து விடும் இதனை யோக சுவாமிகள்

தேர் முட்டி படிமேலே - கிளியே
செல்லப்பன் என்ற சீமான் - கிட்ட
நெருங்கையிலே கிளியே கிடுகிடென்று
நடுங்குதடி முட்டாளைப் போலவே
அவன் முகமும் விளங்குதடி - கிளியே
பித்தனைப் பல பேரும் - கிளியே
பேசி இகழ்வார்கள்.

(நற்சிந்தனை 4 - 81)

என்ற பாடலிலே ஞானிகளின் நிலை பற்றி விளக்குகிறார். அவர்கள் குழந்தையைப் போல இருப்பார்கள், பேயன் மாதிரித் திரிவார்கள், விசரன் போலத் திரிவார்கள், பேய் பிடித்தவன் போல் உலாவருவார்கள். இவர்களை இனங் காணுவதென்பது மிகவும் அரிதிலும் அரிது. உதாரணமாக குடைச் சுவாமி என்ற கந்தையாச் சுவாமிகள் குடையையும் சரித்து மறைத்துப் பிடித்தவாறு துப்பிக்கொண்டு றோட்டோர மாய் பிதற்றிக்கொண்டு திரிவார்கள், இடையிடையே சாணி எருக்கு வியலுக்குள் முடங்கிக் கொண்டு படுத்திருப்பார்கள், மணலில் உருண்டு புரண்டுவிட்டு குளித்துவிட்டதாக துவாயை உதறிக் கொண்டு வெளிக்கிடுவார்கள், இவ்வாறு அவர் களைப் பார்க்கும் போது சணப்பித்தம், சணவாதம் எனத்தான் எண்ணவரும். ஆனால் அவர்கள் அகலாத் தியானத்தில் ஆழ்ந்து போன பழவடியார்களல்லவா? தன்நிலையிலே மாறாதவர்கள்.






யாழ்ப்பாணம் - கந்தர்மடத்திலுள்ள
மணற்தறை அம்பாளின்
அருட்பார்வை
எங்கும் உளது...



மணற்தறை அம்பாளின் அருட்பிரவாகத்தை வெளிப்படுத்தும்
மணற்தறை அம்மன் என்ற நூல் வெளியீட்டு விழாவின்போது
நீதிபதி திருநாவுக்கரசு அவர்கள் உரையாற்றுகின்றார்....
தவத்திரு செல்லத்துரை சுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த பரமாச்சர்ய
சுவாமிகள், விரிவுரையாளர் சிவமகாலிங்கம் அவர்கள், பேராசிரியர்
நாச்சியார் செல்வநாயகம் ஆகியோர் சமூகமளித்துள்ளனர்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகேஸ்வர பூசை



அடியார்களை மகேஸ்வரனாக
பாவித்து அவர்களுக்கு அமுது
வழங்கியதை மேற்பார்வை
செய்கின்றார் மணல்தரை அம்மன்

யாவர்க்குமாம் உண்ணும்போது
ஒரு கைப்பிடி- திருமந்திரம்



ஒருவர் மணி அடிக்க
இன்னொருவர் நீரால் அர்ச்சிக்க
அடுத்தவர் அடியார் சிரசில்
பூ வைக்க மற்றவர் தீபாராதனை
காட்டிவரும் காட்சி
மகேஸ்வரனாக பாவனை செய்து
அடியார்க்கு அமுதூட்டுவது
சைவ மக்களின் மாண்புமிகு
மரபு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்க, இக்கட்டத்தில் ஒரு சிறு சம்பவத்தைக் கூறவேண்டியுள்ளது. ஒரு நாள் யோக சுவாமிகள் யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலயத்துக்கு முன்னால் நின்றார்கள். அவ்வழியாலே வந்த குடைச் சுவாமிகள் மெள்ள சுவாமிக்குக் கிட்ட வந்து "ஆசீர்வாதம் வேண்டும்" என்றார்களாம். அதற்கு யோக சுவாமிகள் "ஆசீர்வாதம் எல்லாரோடும் இருக்கிறான், போட்டு வாரும்" என்றார்களாம். இது நிற்க, இன்னுமொரு அதிசயச் சம்பவம் குடைச் சுவாமிகள் சமாதியாவதற்கு ஆறு மணித்தியாலயங்களுக்கு முன் மேற்படி மகாதேவா ஆசிரமத்திற்கு உரும்பிராய் கந்தையா பத்தரின் காரில் வந்து வடிவேல் சுவாமிகளுடன் சிறிது அளவளாவி விட்டு இன்னும் ஆறு மணித்தியாலங்கள் இருக்கின்றன என்றாராம். பக்தரின் காரில் ஏறிச் செல்லும்போது ஆனையிறவுப் பகுதியில் வயிற்றைக் கலக்கி வந்ததினால் இறங்கி மலங்களித்து துப்பரவு செய்ததும், விரைவாக கிழக்குக் கோண்டாவில் சந்தியில் அவரது உறவினரின் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டார். ஆறு மணித்தியாலம் முடிய அவரும் சமாதியடைந்த கதை யாவரையும் பரபரப்படையச் செய்தது. இவர் சம்பந்தமாக இன்னுமொரு சிறு சம்பவத்தை குறிப்பிட விரும்புகிறேன். மணல்த்தறை அம்மன் என்று இப்போ அழைக்கப்படும் இறை சித்துக் கைவரப்பெற்ற அம்மா கயிலாய பிள்ளையார் கோயிலடியில் தனது ஆலயத்திற்கு பூசை செய்து கொண்டிருக்கும் வேளை குடைச்சுவாமிகள் காரில் அவ்வாலய முன்றலில் சென்று நிறுத்திவிட்டார்கள். இதனை அறிந்த மணல்தறை அம்மா இரு கைகளிலும் பூவுடன் சுவாமியின் காரடிக்குச் சென்றார்கள். குடைச் சுவாமி நிஷ்டையில் ஆழ்ந்துவிட்டார், சிறிது நேரம் நின்று பார்த்துவிட்டு பூக்களை பாதத்தில் போட்டு வணங்கிவிட்டு ஆலயத்திற்கு திரும்பினார்கள். அம்மா திரும்பியதும் சுவாமி நிஷ்டை கலைந்து பார்த்துள்ளார்கள், இதனை அறிந்த அம்மா இரு கையிலும் கற்கண்டு கொண்டு சுவாமிக்கு அருகிற் சென்ற போது மீண்டும் இருவிழிகளும் மூடியபடி தியானத்தில் அமிழ்ந்துவிட்டார்கள். மணல்தறை அம்மா நின்று பார்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு கற்கண்டை அவர்களது இரு கைகளிலும் வைத்து விட்டு மீண்டும் ஆலயத்திற்கு வந்துவிட்டார்கள். குடைச் சுவாமி விழித்து வந்த காரியம் வெற்றி காரைத் திருப்பென்று கூறிச்சென்று விட்டாராம். இச்செயல்களை எப்படிச் சொல் வது. பாம்பின் காலை பாம்புதான் அறியுமல்லவா கற்கண் டுக்காகவா வந்தார்? எமக்கென்ன தெரியும்.

குழந்தையைப் போல உலாவுவர், பேயரைப் போலத் திரிவர், பித்தராய் வலம் வருவர், பிசாசு போலத் திரிவர் இவ்வாறு கோலங் கொண்டு திரியும் ஞானிகளை இனங்காண ஊனக் கண்ணால் உலகையாள நினைக்கும் எமக்கு எப்படிப் புலப்படும். இக்கோலத்தில் திரிபவரை சிறு குழந்தைகள் தொடக்கம் வயோதிபர் வரை அசட்டை பண்ணி ஏழனஞ் செய்வதும் ஏன் கல்லால் எறிந்து விரட்டுவதைக் கூட நாம் காணக் கூடியதாக இருக்கின்றது. இதில் அசல் எது நகல் எது என்பதை புரிந்து கொள்வதற்கும் ஒரு பக்குவம் வேண்டு மல்லவா, இப்படியாக ஞானிகளுக்கும், யோகிகளுக்கும், சீவன் முத்தர்களுக்கும், சிவனடியார்களுக்கும் சுருங்கக் கூறின் நாம் காணும் எவருக்கும் இம்சை செய்யாதிருப்பதும் ஒரு இறை சாதனையாகும்.

### குருநிந்தனை.

திருமூலர் திருமந்திரத்தில் குரு நிந்தனையையும் அதன் பெறுபேறு பற்றியும் விளக்கிப் பாடியுள்ளார்.

பத்தின பக்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங்கலங்க சிதைவுகள் செய்தவர்
அத்தமும் ஆவியும் ஆண்டொண்றில் மாண்டிடும்
சத்தியம் ஈதுசதாநந்தி ஆணையே
(- திருமந்திரம் - 532)

ஈசனடியார் இதயங்கலங்கிட தேசமும்
நாடுஞ்சிறப்பும் அழிந்திடும்
வாசவன் பீடமும் மாமன்னர் பீடமும்



நாசமதாகுமே நந்நந்தியாணையே
(- திருமந்திரம் - 534)

பக்தர்கள் தத்துவ ஞானிகள் சித்தங்கலங்க அவர்களை நிந்தித்தால் வாழ்வும் உயிரும் ஓராண்டில் அழிந்து விடும் என்றும், ஈசனடியார்கள் இதயம் கலங்கினால் தேசத்துக்கும் ஆட்சிப் பீடத்திற்கும் நாசமேற்படும் என்றும் அறுதியிட்டுக் கூறுகின்றார். நாம் அறிந்தது சொற்பம் அறியாதது உலகளவு ஆகவே இதனை யார் அறிவார்? இறையடியார்கள் மனங் கலங்கத்தக்கவாறு இம்சை செய்யாதிருப்போமாக

நிற்க, சுவாமிகள் மீண்டும் மகாதேவா ஆசிரமத்தை அடைந்தார்கள். அடியார்கள் அவரைச் சூழ்ந்து ஆசிபெறும் பொருட்டு வந்துகொண்டிருந்தனர். சுவாமிகளின் கைகால் அசைவதாகவில்லை. அவரது பார்வையே ஆசியை அள்ளி வழங் கியவாறு இருந்தது. மோன நிலையல்லவா அவர் கொண்டிருக்கும் வேடம். அவரது வாயிலிருந்து உதிரும் வாக் கியத்தில் ஒன்று

"காரியம் கைகூடும் வரை வழியில் தங்கிவிடாதே"

**KEEP AWAKE, STOP NOT, TILL THE GOAL IS REACHED.**

என்பதாகும். தனித்திரு, பசித்திரு, விழித்திரு என்பவை ஆத்ம சாதகர்கள் ஒரு கட்டம்வரை கடைப்பிடிக்க வேண்டிய சாதனைகளல்லவா? ஆகவே அதனை சுட்டி நின்றார் போலும்.

வடிவேல் சுவாமிகளது சமாதியை பார்க்க வேண்டுமென ஆர்வமிக்கவராக சுவாமிகள் விளங்கினார். வடிவேல் சுவாமி களைப் பற்றி சொல்வதென்றால் நிறைய நிறைய எழுதிக் கொண்டே போகலாம். 1958 ஆம் ஆண்டில்த்தான் கிளி நொச்சி முன்னோடித் திட்டத்தில் வந்திருந்தேன். அதற்கு முன்னமே 1952 ஆம் ஆண்டு தொடக்கம் ஆசிரமம் அமைத்து கரைச்சி துணுக்காய்ப் பகுதியெங்கும் தெய்வப் பணியாற்றி வந்துள்ளார் சுவாமிகள். அவர்களது திருப்பாதம் படாத ஆல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யங்களோ, சமய அமைப்புக்களோ கிடையாது. கிளிநொச்சி நகரமையமே அடர்ந்த பெருங்காடாக இருந்த காலம், காட்டு யானைகளும், கரடிகளும், சிறுத்தைகளும், பாம்புகளும் இன்னோரன்ன மிருகங்கள் மத்தியில் வாழ்ந்து சமயப்பணி ஆற்றியுள்ளார் வடிவேல் சுவாமிகள். அவர் உருத் திரபுர சிவாலயத்தில் அயராத அன்புள்ளவராய் திருப்பள்ளி எழுச்சி பாடல் 10 பாடியுள்ளார். அதில் ஒரு பாடலை இங்கு தருகின்றோம்.

"பூமியிற் கொண்ட நற் கோலங்கண்டுய்ய
புண்ணிய முனிவரும் புகளுடைத்தேவரும்
சாமி நின் சரணடி சாரவந்துள்ளார் சாந்த
மளித்தருள் சற்குருநாதா நேமியம் படையுடை
நெடுமால் பிரமன் தேடியுங்காணா நிமலாவேனவிப்
பூமியிலுருத்திர புரப்பதியாயெனப் புலம்புகின்றார்
பள்ளியெழுந்தருளாயே"

இவ்வாறு பல செய்யுள்கள் ஆக்கியுள்ளார்கள். உலகில் எந்தப் பாகத்திலிருந்தும் வருகின்ற சாதுக்கள், ஞானிகள் மற்றுமுள்ள சமயப் பெரியார்களனைவரும் கிளிநொச்சியில் வடிவேல் சுவாமிகளைத் தரிசிக்கத்தவறுவதில்லை. சொல்ல முடியாத இடர்கள் வந்துற்ற போதும் தாங்கிநின்று இறை பணியே தம்பணியென உறக்கமின்றி அயராது பாடுபட்டார்கள். யுத்த காலத்திலும் இளைஞர்களின் நலனில் அக்கறையுள்ளவராய் அவர்களது புனிதப் பணிக்கு இறையாசி வேண்டி இரட்சாபந்தணம் நூற்றுக்கணக்கானோர்க்கு அணிவித்த காட்சியை வர்ணிக்க முடியாது. அவர்களது கண்களிலிருந்து தாரை தாரையாக கண்ணீர் சொரிய அவரது பாதத்தைத் தொட்டு வீழ்ந்து வணங்கும் இளைஞர்களையெல்லாம் பார்த்து சகிக்க முடியாதவராய் காணப்பட்டார். முன்பு கூறிய மணல்த்தறை அம்மாவினிடம் பெற்று வந்த மேற்படி ரட்சாபந்தணங்களை வரிசைக்கிரமத்தில் வந்து சுவாமிகளைக் கொண்டு தங்கள் கைகளில் கட்டிச் சென்ற காட்சி காண்போர் மனதைப் புல்லரிக்கச் செய்யும். அந்நிகழ்



**மகாதேவ ஆச்சிரமத்தில் நடைபெற்ற வைகுண்ட ஏகாதசி தினத்தன்று அடியார்களும் சிறப்பு விருந்தினர்களாக நாட்டுச் சேவையில் உள்ளவர்களும் மகேஸ்வர பூசையில் கலந்து கொண்ட காட்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் ஒரு வைகுந்த ஏகாதசியன்று இடம் பெற்ற நிகழ்வாகும். அவ்வேளையில் இப்பொழுது வடிவேல் சுவாமிகளின் வாரிசாக விளங்கும் ஸ்ரீ கணேஷானந்த மகாதேவ சுவாமிகள், சாமாதியடைந்த பரமானந்தவல்லி மாதாஜி அம்மா ஆகியோரின் அர்ப்பணிப்பான செயற்பாடுகள் குறிப்பிடத்தக்கவையாகும். அது சம்பந்தமான படம் ஒன்று இங்கே தருகின்றோம்.

## சமாதிக்கிரியை முறை.

வடிவேல் சுவாமிகள் சிறிதுகாலம் நோயுற்றிருக்கும் வேளை முற்று முழுதாக தன்னை அர்ப்பணித்து இறுதிவரை குருவருட் தொண்டாற்றியவர்கள்தான் தற்போது இருக்கும் ஸ்ரீ கணேஷானந்த மகாதேவ சுவாமிகளாகும். வடிவேல் சுவாமிகள் சமாதியானதும் அவரை சமாதி வைப்பதற்கான கிரியா மார்க்கங்களில் ஈடுபடலானார்.அபிசேக ஆராதனைகள் சுவாமிகளை பத்மாசனத்தில் இருத்தியவாறு நடைபெற்றன. சமாதிக் கிடங்குக், குகையின் அளவுகளை திருமூலநாயனார் கீழ்க் காணுமாறு கூறுகின்றார்.

நவமிகுசாணாலே நல்லாழஞ் செய்து
குவை மிகு சுழவைஞ்சாணாகக் கோட்டித்
தவமிகு குகை முக்கோணமுச் சாணாக்கிப்
பவமாறு நற்குகை பத்மாசனமே.

- திருமந்திரம் 1914 -

நற்குகை நால்வட்டம் பஞ்சாங்க பாதமாய்
நிற்கின்ற பாத நவபாத நேர்விழப்
பொற்பமரோசமும் மூன்றுக்கு மூன்றணி
நிற்பவர் தாஞ்செய்யும் நேர்மையதாமே.

- திருமந்திரம் 1916

சமாதிக்கிடங்கு அமையுமிடம் :-
தன்மனைசாலை குளங்கரை யாற்றிடை
நன்மலர்ச் சோலை நகரினற் பூமி
உன்னருங்கானம் உயர்ந்த மலைச்சாரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலந்தான் குகைக் கெய்தும் இடங்களே.

- திருமந்திரம் 1915 -

சமாதிக் கிடங்கு வெட்டியதும் மூன்றடி முக்கோணத்தில் ஒன்பதடி ஆழத்தில் கட்டப்படல் வேண்டும். அத்துடன் தன் மனை, குளக்கரை, ஆற்றங்கரை, மலர்ச் சோலை, நகரத்தில் நல்ல நிலத்தில், காட்டில், மலைச் சாரலில், இச் சமாதி அமையலாமெனக் கூறப்படுகின்றது. அதன் பின் தைக்கப் பட்ட குப்பாயத்தில் முக்கோண வேப்பம் பலகையில் தெற் பைப் புல்லாசனமிட்டு, மாந்தோல் விரித்து பட்டுவிரித்து அதன் மேல் பத்மாசனத்திலமர்ந்த ஞானியை இருந்தபடி இருத்தல் வேண்டும். குப்பாயத்துள் விபூதி, சந்தணம், ஐம் பொன், வாசனைத்திரவியங்கள் ஆகியன பொலிவித்து நெல்லு, கற்பூரம் (பத்துக்கிலோவுக்குக் குறையாது), உப்பு ஆகியவற்றால் குப்பாயத்தை நிறைத்து குகைக்குள் இறக்கு தல் வேண்டும். குப்பாயத்துக்கும் கிடங்கின் வெற்றிடத்திற்கு மிடையில் செங்கல்லுத் தூளினால் நிரப்பலாம்.

குகையின் கட்டுமானம் செங்கற்களால் கட்டுதல் வேண் டும். இந்த ஒழுங்கு முறையில் குகைக்குள் வடிவேல் சுவாமி களை இறக்கியபின் அவரது சிரசுக்கு நேரே ஒரு துவாரமிட்ட முக்கோண கொங்கிறீற் பலகையினால் மூடப்பட்டது. அந்தக் கட்டத்தில் அன்பர்கள், அடியார்கள், ஏன் கிளிநொச்சி வாழ் சைவ மக்கள் அனைவரும் சிவாய நம ஓம் என ஒலித்து ஆர வாரித்தனர். ஒரு புறம் அரோகரா என்ற ஒலி வானைப் பிளந் தது. கண்ணீர் மல்கி கதறியழுதவர் எத்தனைபேர்.

“பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி”

என்ற திருப்புகழைப் பாடும்போது அவரது கண்களிலிருந்து கண்ணீர் சொரியும். அந்த முகத்தை எங்கே பார்க்க முடியும் என விம்மி விம்மி அழுதவர் எத்தனை. இக் கட்டத்தில் அடியேனும் சமூகமாயிருந்து உதவியதை மீண்டும் நினைவு



கூருகின்றேன். இக் காட்சியானது கண்ணை விட்டகலாது அல்லவா?

முகத்தில் கண்டுகொண்டு காண்கின்ற மூடர்கள்
அகத்தில் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்
மகட்குத் தாய்தன் மணாளனோடாடிய
சுகத்தைச் சொல்லென்றால் சொல்லுமாறெங்கனே

- திருமந்திரம் 2944

ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகள் தன்னை அணுகிய மற்றுமுள்ளோர்க்கும் காட்டிய சைவநெறியையும், அதனால் ஏற்பட்ட அமைதியையும் எவ்வாறு இயம்ப முடியும். கணவன் மனைவியோடு கூடி அனுபவித்த சுகத்தை மகட்கு எப்படிச் சொல்வது. அவ்வாறே அக நோக்கத்தில் சிந்தித்து சிந்தித்து தெளிந்த சுகமே ஆனந்தமாகும் என்று விளக்குகின்றார்கள் திருமூலர் நாயனார். அடுத்து அவர்

“மரத்தை மறைத்தது மாமதயானை
மரத்தில் மறைந்தது மாமதயானை
பரத்தை மறைத்தது பார்முதற்பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே”

- திருமந்திரம் 2290 -

மரத்தினாலே ஒரு மதம் பிடித்த யானையை பாவையாகச் செய்ததும் மரமென்ற பெயர் மாறி யாணை என்றாகிவிட்டது. ஆகவே மரத்தை மறைத்துவிட்டது. யானையானது மரத்தி னால் பாவையானதும் மரத்துள் மறைந்து விட்டதல்லவா? அவ்வாறு இறையருளை மறைக்கின்றது இந்த ஐம்பூதங்களி னால் ஆன அண்ட சராசரங்களெல்லாம். ஆனால் இந்த அண்ட சராசரம் எல்லாம் இறையருளுக் குட்பட்டதே என விளக்குகின்றார் திருமூலநாயனார். ஆகவேதான் இந்த உலக உபாதைகளெல்லாம் எங்களை திருவருளுக்குக் கிட்டச் செல்லாது மறைக்கின்றன. அந்த மறைப்பை (அஞ்ஞா னத்தை) வெளிக் கொணர்வதையே மாணிக்கவாசகப் பெருந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகை "அஞ்ஞானந்தன்னை அகல் விக்கும் நல்லறிவே" என்று சிவபுராணத்தில் சுட்டிக் காட்டுகின்றார். இந்தக் கருத்தை செல்லத்துரை சுவாமிகள் அடிக்கடி அடியார்களிடையே கூறு வதைக் காண்கின்றோம்.

நிற்க, செல்லத்துரை சுவாமிகளை ஸ்ரீ கணேஷானந்த மகா தேவ சுவாமிகள் கூட்டிச் சென்று மேற்படி இலட்சணங்களில் அமைக்கப்பட்ட சமாதிக் கோயிலைக் காண்பித்தார்கள், அத ற்கு செல்லத்துரை சுவாமிகள் மலர்தூவி கற்பூர தீபங் காட்டி ஆராதித்தார்கள்.

நிற்க, மேலே கூறப்பட்ட சமாதியின் மீது துவாரமிட்டதன் காரணத்தை அறிய யாவரும் விரும்பினர். ஒவ்வொரு மனிதனி லும் இயங்குவது தச வாயுக்களாகும். உயிர் பிரிந்ததும் எல்லா வாயுக்களும் விட்டுப் பிரிந்துவிடும், தனஞ்சயன் என்ற வாயு இறுதியில் வெளியேறுவார். மனிதனில் ஆறு ஆதாரங் கள் உள்ளன, அவை பின்வருமாறு . அதாவது

0. மூலாதாரம் :- இதற்கு ஆதாரமான கோயில் - திருவாரூர்
1. சுவாதிஷ்டானம் :- திருவானைக்கா - தொப்புளுக்குக் கீழ்
2. மானிபூரகம் :- திருவெண்ணாமலைத் தொப்புளுக்கு மேல்
3. அனாகதம் :- சிதம்பரம் - இருதயம்
4. விசுத்தி :- திருக்காளத்தி - கண்டம்
5. ஆஞ்ஞை :- காசி - புருவமத்தி
6. சகஸ்ராரம் :- கயிலாயம் - பிரமந்திரத்தலம் - தலை உச்சி

இவ்வாறு ஆறு ஆதாரமும் தாண்டி ஏழாவது படி சகஸ்ராரம் கபால உச்சி அதனையே பிரமந்திரத்தலம் எனப்பட்டது. அதனூடாக யோகியர் ஞானியர்களுக்கு மேலே குறிப்பிட்ட தனஞ்செயன் வாயு வெளியேறும் இடமே சமாதியின் முகட் டில் விடப்பட்ட துவாரமாகும். மூலாதாரத்திலிருந்து மூண்டெ ழுகனல் சகஸ்ரத்தில் வெண்ணெய் உருகியது போல் உருகி அமுதமாக உள்நாக்குமூலம் சொரிகின்றது. அந்த அமுதத்



தையுண்டு பலகாலம் உயிருடன் இருக்கலாம் என்பது தத்து வமாகும்.

அடுத்து அங்கு சேவையில் ஈடுபட்ட சிறுவர்களோடு சிறுவ னாக சுவாமிகள் அளவளாவிக் கொண்டிருந்ததைப் பார்க்க அற்புதமாயிருந்தது. பிரார்த்தனை நடைபெற்றது, சிவதொண் டன் நிலையத்தில் நாளாந்தம் பாராயணம் செய்யுமாப்போல் ஆசிரமத்திலும் வினாயகரகவல் எல்லாச் சிறுவர்களது மனதி லும் மனப்பாடமாயிருப்பது பேருவகையளிக்கின்றது. அவர்க ளில் சிலர் வினாயகரகவலைப் படித்துப் படித்து ஆனந்த நடனமாடுவார்கள், அதுவும் ஒரு தனிச் சிறப்பே. குடித்துப் போட்டு பைலா அடிக்கும் காலத்தில் விநாயகரகவலுக்கு நட னம் ஆடுவது விசித்திரந்தான். ஏன் இராமகிருஷ்ண பரமகம்ச ரும் தனது அடியார்களுடன் கூடி பக்திமேலீட்டினால் ஆனந் தக் கூத்தாடியதாக நாம் படித்துள்ளோம். அது பக்தி பரவச கிளர்ச்சியினால் நடக்கும் சம்பவம்.

ஒவ்வொரு கணமும் பல அடியார்கள் சுவாமிகளைத் தரி சிக்க நாடி வந்து கொண்டிருந்தார்கள். அவர்களுடன் உரை யாடுவதில் அதிக நேரம் சென்றுவிட்டது. இரவு கவிந்தது. மழையிருட்டும், மின்னலும், இடிமுழக்கமும் அதிகரித்தன. சோனாவாரியாக மழை பொழிந்தது. செல்லவேண்டிய இடங்க ளெல்லாம் சென்று பார்த்தபின் வர்ணபகவான் சுவாமிகளை ஆராதிக்குமாப்போல் மழையை பொழிந்தான். இதுவும் குருநா தன் யோகசுவாமிகளின் திருவிளையாட்டேயென பேருவகை யடைந்தார் சுவாமிகள். முற்றாக அழிந்த நிலையிலிருந்த ஆசிரமக் கட்டங்கள் புணரமைக்கும் வேளையது. ஆசிரமம் பூராகவும் ஒழுக்கும் வெள்ளக் காடாகவும் இருந்தது. போசன வேளை வந்தது. சுவாமிகளுக்கு இரண்டு மூன்று குரக்கன்மா, இடியப்பம், பால், ஒரு வாழைப்பழம் இப்படியான ஒரு ஒழுங்கு முறையான சாப்பாடு சிறுவர்களால் பரிமாறப்பட்டது. ஏனை யோருக்கு போதிய உணவு வகை வழங்கப்பட்டன. அக்கட் டத்தில் சிறுவர்கள் பண்புடனும் புனிதமாகவும் அடக்க ஒடுக்க மாகவும் நடந்துகொண்டமை யாவரையும் பிரமிக்கச் செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோர் வாயிலும் ஓம் சிவாயநமவென்ற மகாமந்திரம் ஒலித்தவண்ணமிருந்தது.

ஒரே குளிராக இருந்தது. செல்லத்துரை சுவாமிகளுக்கு ஒரு ஒதுக்குப்புறமாக படுக்கை ஒழுங்கு செய்யப்பட்டது. கணேஷானந்த மகாதேவ சுவாமிகளும் 60, 70 வருடங்களாகப் பழக்கப்பட்டவரல்லவா ஏதோ ஒரு புறத்தில் ஒதுங்கிக் கொண்டார். ஏனையோர் ஒழுக்கில்லாத மண்டபமொன்றில் படுத்துக் கொண்டனர். இப்போ இறையருளினால் கட்டுமானப் பணி முடியும் தறுவாயில் உள்ளது. கிளிநொச்சி மத்தியில் இப்படி ஒரு ஆசிரமம் அமைந்து தெய்வ ஒளிபரப்பிவருவது எங்கள் பாக்கிய மென்றே கூறவேண்டும்.

ஞான நெறிநிற்கும் மௌனமணிப் பெட்டகமாம் செல்லத்துரை சுவாமிகள் யோக சுவாமிகளின் ஆத்மார்த்த அனுசரணையுடன் செய்த இந்த ஆன்மீக யாத்திரை யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி வன்னேரிக்குளம் முதியோர் இல்லம் வரை சென்று மகாதேவா ஆசிரமம், கனகபுரம், இரணைமடுக்குளம், உருத்திரபுரம், வட்டக்கச்சி, கனகாம்பிகைக்குளம் போன்ற இடங்களுக்கெல்லாம் சென்று அருட் பார்வையால் யாவரையும் மெய்யியல் நாட்டத்திற்கு இட்டுச் செல்லும் கருணையின் சிறப்பினைக் கூற எங்களிடம் வார்த் தைகளில்லை. சாட்சாத் யோக சுவாமிகளே சூக்குமாக செல்லத்துரை சுவாமிகளை அழைத்துவந்து அருள் மழை பொழிந்துள்ளார்களென்றே கூறவேண்டும். செல்லத்துரை சுவாமிகளின் அருட் பாடல்கள் அநேகம் சிவதொண்டன் மாத வெளியீடுகளில் அடிக்கடி வந்துள்ளன. அவையெல்லாம் யோகசுவாமிகளது நற்சிந்தனை, மற்றும் வேதாந்த சித்தாந்த சாஸ்த்திரங்கள், இராமகிருஷ்ண, ரமணரிஷி ஆகியோரின் மகாவாக்கியங்கள், உபநிசதங்கள் ஆகியவற்றிலிருந்து பிழிந்தெடுத்த ரசமாக கருத்தாழமுள்ளவையாக உள்ளன. சுவாமிகள் அடிக்கடி கூறும் நாயோட்டு மந்திரம் பற்றி திருமூல நாயனார் கீழ்க் காணுமாறு கூறுகின்றார்.



நாயோட்டு மந்திரம் நான்மறை வேதம்
நாயோட்டு மந்திரம் நாதனிருப்பிடம்
நாயோட்டு மந்திரம் நாதாந்தா சோதி
நாயோட்டு மந்திரம் நாமறியோமே
(திருமந்திரம் 3055)

நாங்கள் வீடுகளில் நாயைத் துரத்தும்போது 'சீநாயே' என்று கலைப்பதைக் காணலாம். இதற்குள் அடங்குகின்றது அந்த ஓரெழுத்து முன்பு கூறியதை நினைவு கூர்ந்தால் "AT THE BEGINING THERE WAS ONE WORD" என்பார். அந்த முதலெழுத்தே மேலே கூறப்பட்ட முதலெழுத்தாகும். பக்குவமுள்ள ஒரு ஆன்மா உடம்பைவிடும் தறுவாயில் தன் உதடுகள் அந்த ஓரெழுத்தை உச்சரிக்குமானால் அந்தப் பேறே பேறு. ஒருவன் இறக்கும் போது என்ன சிந்தனையோடு உயிர் பிரிகின்றதோ அதே கோலத்தில் பிராரத்த வினையின் பாற்பட்டு மீண்டும் பிறப்பெடுக்கும் போது பிறப்பான் என்பது சுருதி யுக்தி அனுபவங்களால் உணரற்பாலது. ஆகவே நம்மை நாமே பக்குவப்படுத்திக் கொள்ளுவோமாக இதற்கு உதாரணமாக மகாத்மாகாந்தியவர்கள் தனது ஆத்மா பிரியும் போது தனது உதடுகள் 'ராம் ராம்' என்று சொல்லிக் கொண்டிருக்குமாயின் என்னை 'மகாத்மா' என்று உலகத்துக்கு அறிவிக்குமாறு தனது சோதரி விஜயலக்சுமி பண்டிற்றிடம் கூறியுள்ளார். அதேபோன்று துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கிடக்கும் வேளையிலும் அவரது உதடுகள் 'ராம் ராம்' என்று உச்சரித்த வண்ணம் இருந்துள்ளன. அதற்கிணங்க அவர் உலக மக்கள் மனதில் இன்றும் மகாத்மாவாக விளங்குகின்றார். இதற்கு மேலே கூறியவாறு வைராக்கியமும் அப்பியாசமும் சாதனை வீரனாக்கியுள்ளதென்பது தெட்டத் தெளிவு. பக்குவப்பட்ட ஆன்மா மேற்கூறிய நாயோட்டு மந்திரத்தின் மகிமை அறிந்து அந்த முதலெழுத்தே தனது தாரக மந்திரமாகக் கொள்வான் என்பது இதனால் விளங்குகின்றது.

அண்மையில் பத்திரிகையில் வந்த செய்தி ஒன்றில் இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையுடன் குழந்தை பிறந்துள்ளதாகவும், அதில் ஒரு வாய் பிரெஞ்சு மொழியும், மற்றவாய் ஆங்கில மொழியும் பேசுகின்ற தென யாவரும் வாசித்தோம். அது விட்டகுறை தொட்டகுறை என்பதல்லாது வேறு என்ன?

எனவே, வில்லியம் வேட்ஸ் வேத் என்ற ஆங்கிலக் கவி ஞன் கூறியதைப் போன்று 'உலகமே ஒரு நாடகமேடை அதில் நாமெல்லோரும் நடிகர்கள்' (**ALL THE WORLDS A STAGE, ALL THE MEN AND WOMEN ARE MERELY, PLAYERS,** ) ஆங்கிலக் கவிஞன் இப்படிச் சொல்லியுள்ளான் என்றால் நம்மவர் மத்தியில் ஒரு கவர்ச்சி ஏற்படுகின்றதல்லவா? எங்கள் ஞானிகள் இப்படி எத்தனை எத்தனையோ மக்கள் உய்யும் பொருட்டு வாரி வழங்கியுள் ளார்கள். இந்தப்பாடலை ஒரு முறை பாருங்கள்

"நந்தவனத்திலோராண்டி
நாலாறு மாதமாய் குயவனை வேண்டி
கொண்டுவந்தான் ஒரு தோண்டி அதைக்
கூத்தாடிக் கூத்தாடி போட்டுடைத்தாண்டி"

இறைவன் என்னமாதிரி ஒரு ஐம்பூதத்திலான மர்மமான உடலைத் தந்துள்ளான். அதற்குள் எத்தனை செயற்பாடுகள், அவற்றைத் தனித்தனியாக விளக்க காலமும் இடமும் போதாது. நாம் என்ன செய்கின்றோம் ஆடாத ஆட்டமெல்லாம் ஆடிப்போட்டுடைக் கின்றோமல்லவா? சுருக்கமாகச் சொல்வ தானால் அரசன் முதலாக ஆண்டியீறாக கடைப்பிடிக்க வேண் டிய கடமைகள் எங்கள் வேத வாக்கியங்களில் எடுத்தியம் பப்பட்டுள்ளன

" திறத்தரு முத்தியும் செல்வமும் வேண்டின்
மறந்தும் அறநெறியே ஆற்றல் வேண்டும்
சிறந்த நீர் ஞாலம் செய் தொழில் யாவையும்



அறைந்திடின் வேந்தனுக்கு ஆறிலொன்றாமே"

- திருமந்திரம் 244 -

மறந்தும் அறநெறியே செய்திடல் வேண்டும், நீர், பூமி, தொழில் இப்படியான இன்னோரன்ன வழிகளிலெல்லாம் அர சன் ஆறில் ஒரு பங்கு வரி பெற உரித்துடையன் என அறுத் துறுத்துக் கூறுகின்றார் திருமூலநாயனார். ஆனால் நாட்டில் நடப்பதென்ன நூற்றுக்கு 50 வீதம் வரி செலுத்தும் கட்டங்க ளும் இருக்கின்றதே.

## வைத்தியம் :-

மனிதனின் உடம்புக்கு தேவையான வைத்தியம் ஒன்று கூறுகின்றார்.

" காலையில் இஞ்சி கடும்பகற் சுக்கு
மாலையில் கடுக்காய் மண்டலம் கொண்டால்
கோலையூன்றிக் குறுகி நடப்பவனும்
கோலை வீசிக் குலாவி நடப்பனே"

- திருமந்திரம் -

என்ற பாடலில் காலையில் வெறு வயிற்றில் ஒரு இஞ்சித் துண்டு சாப்பிட்டால் வாயு மண்டலங்களை சரியான முறை யில் அடக்கி வைத்திருக்கும், மதியபோசனத்திற்கு முன் சுக் குச் சேர்ந்த பானம் குடித்துவிட்டுச் சாப்பிட்டால் சாப்பாட்டைச் ஜீரணிக்க உதவும் என்பதாகும். பின்பு இரவு சாப்பிட்டதன் பின் படுக்கைக்குப் போகமுன் ஒரு கடுக்காயின் விதையை நீக்கி மற்றவற்றைச் சாப்பிட்டுப் படுத்தால் மறுநாட் காலை எழும்பியதும் வயிறு சுத்தப்படுத்தப்பட்டுச் சுகமாக இருக்கும் அவ்வாறு ஒரு மண்டலம் (42 நாட்கள்) சாப்பிட்டு வந்தால் தள்ளாடித் தள்ளாடி ஊன்று கோலின் உதவியுடன் நடப்பவ னும் அதனை வீசிவிட்டு உசாராக நடப்பான் எனக் கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மருந்துஎன வேண்டா யாக்கைக்கு
அருந்தியது அற்றது போற்றி எனில்"
- திருக்குறள் -

என்று வள்ளுவர் கூறியவாறும் திருமூலர் கூறியவாறும் நடந்து கொண்டால் இளமையுடன் வாழலாம் என்பது அனுபவ ரீதியான உண்மையாகும்.

## தியானம் :-

நாசிக்கதோ முகம் பன்னிரண்டங்குலம்
நீ சித்தம் வைத்து நினைய வல்லையேல்
மாசித்தி மாயோகம் வந்து தலைப் பெய்தும்
தேகத்திற் கென்றும் சிதைவில்லையாமே.

மூக்கில் இருந்து கீழே 12 அங்குலத்தில் மார் பெலும்புக்கு இடப்பக்கத்தில் இருப்பது தூலமான உடம்புக்குரிய இருதயம். அதேமாதிரி வலப்புறத்தில் மார்பெலும்புக்கு இரண்டு விரலுக்கு அடுத்து தெய்வீக இருதயம் சூக்குமமாக (**SPIRIT UAL HEART**) இருக்கின்றதென கூறப்படுகின்றது.

அந்த இடத்தில் மனம் வைத்து வணங்கிவரின் அட்டமா சித்திகளும் கைகூடும் என்றவாறு கூறப்படுகின்றது. உடம்பினை நல்ல முறையில் பேணுதல் வேண்டுமென

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெஞ்ஞானம் சேரவுமாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே.
- திருமந்திரம் 724 -

உடம்பினை ஒழுங்கு முறையில் வளர்த்து "நான் யார்" என்ற கேள்விக்கு நாளாந்தம் சிந்தித்துச் சிந்தித்து அதுவல்ல அதுவல்ல என்ற ஆய்வினை மேற்கொண்டு மெய்ஞ்ஞான நிலையை அடைவோமாக



செல்லத்துரை சுவாமிகள் சாட் சாத் யோக சுவாமிகளே யாத்திரையாக வந்தது போன்று கரைச்சி துணுக்காய் பிரிவு மக்கள் உய்யும் பொருட்டு உலா வந்துள்ளார்கள். சுவாமிகளது யாத்திரையானது வெறுமனே ஒரு தவயோகி வந்தார் போனார் என்றில்லாது எங்கள் உள்ளங்களில் "நான் யார்" என்ற எழுச்சி மிக்க அனுபூதி வார்த்தைக்கு விடை காணும் பொருட்டு நாமனை வரும் ஓர் ஆன்மீக யாத்திரையை அகத்திலே தொடங்குவோமாக. அக்கேள்விக்கு விடை காணும் உபாயத்திற்கு மேலே கூறப்பட்ட பாடல்களும் எடுத்துக்காட்டல்களும் உறுதுணையாக இருக்கலாம் என்பது துணிவு. ஆகவே

திருவடி ஞானஞ் சிவமாக்குவிக்கும்
திருவடி ஞானஞ் சிவலோகஞ் சேர்க்கும்
திருவடி ஞானஞ் சிறைமலநீக்கும்
திருவடி ஞானமே திண் சித்திமுத்தியே
- திருமந்திரம் 3051 -

நாம் அனைவரும் செய்யும் செயல், சிந்திக்கும் சிந்தனை, காணும் காட்சிகள் யாவும் ஈசனர்ப்பணமாக, நாம் அனைவரும் ஆட்டிவிக்கும் பொம்மைகள் என்ற திடசித்தத்துடன் திருவடி தொண்டெனச் செய்துவரின் எங்களைச் சிறைப்படுத்தியிருக்கும் அஞ்ஞான மலம் நீங்கி முக்தி சித்திக்கும் என்பது உறுதி படக் கூறப்படும் உபாயமாகும்.

"பார்ப்பதெல்லாம் சிவமாகவே கண்டு
பதைப் பற்றிரு நெஞ்சமே"

என்ற யோக சுவாமிகளது ஆப்த வாக்கியத்தை ஆதாரமாகக் கொண்டு உய்த்திடுவோமாக.

இறையருளே இப்படியான முயற்சிக்குத் தூண்டியுள்ளது. ஆகவேதான் இவ்விடயமாக எழுத இருந்ததும் எல்லா விடயங்களும் மனதிற்கு வந்து சேர்ந்த வண்ணமிருந்தன. இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாத்திரையை ஆரம்பித்த நீங்கள் உண்மை ஆன்மீகம் நிறைந்தவர்கள் ஏதாவது சொற்பிழை பொருட் பிழை வேறு எவ்வகையான பிழைகள் காணப்படினும் அவற்றை உயர்ந்த மனத்துடன் பொறுத்தருளுவீர்களாகுக.


கல்லாப்பிழையும் கருத்தாப்பிழையும்
கசிந்துருகி நில்லாப்பிழையும் நினையாப்பிழையும்
நின் ஐந்தெழுத்தைச் சொல்லாப்பிழையும்.
- தொழாப்பிழையும் துதியாப்பிழையும்
எல்லாப்பிழையும் பொறுத்தருள்வாய் கச்சி ஏகம்பனே.

**மங்களம் ஜெய மங்களம்**

அப்பனுக்கும் அம்மைக்கும் மங்களம்
அத்துவித வஸ்த்துவுக்கு மங்களம்
ஒப்பில்குரு நாதனுக்கு மங்களம்
உத்தம பத்தருக்கு மங்களம்
முப்பொழுதுந் தொழுவார்க்கு மங்களம்
மூவாசை வென்றவர்க்கு மங்களம்
முப்பத்து முக்கோடி தேவர்க்கு மங்களம்
முனிவர்க்கும் இருடிகட்கும் மங்களம்
தன்னைத்தன்னாலறிந்தவர்க்கு மங்களம்
ஐயமிட்டுண்பவர்க்கு மங்களம்
ஐயமில்லாச் சாதுக்கட்கு மங்களம்
ஆதியந்த மில்லாத ஆன்மாவுக்கு மங்களம்
சீகாழித் தேவருக்கு மங்களம்
திருநாவுக் கரசருக்கு மங்களம்
சீர்பெருகு சுந்தரர்க்கு மங்களம்
திவ்விய மாணிக்கர்க்கு மங்களம்
எங்குந்தங்கும் உயிர்களுக்கு மங்களம்
மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

இப்படிக்கு.
ஒரு சிவதொண்டன்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யோகசுவாமிகள் பாடியருளிய நற்சிந்தனைப் பாடல்கள் சில....

### தன்னை அறிந்தால் தவம்வேறில்லை.

தன்னை அறிந்தால் தவம்வே றில்லைத்
தன்னை அறிந்தால் தான்வே றில்லைத்
தன்னை அறியச் சகலமு மில்லைத்
தன்னை அறிந்தவர் தாபத ராமே...

பொன்னை யன்றிப் பொற்பணி யில்லை
என்னை யன்றி ஈசன்வே றில்லைத்
தன்னை யன்றிச் சகம்வே றில்லைத்
தன்னை அறிந்தவர் தத்துவா தீதரே...

ஆதியும் இல்லை அந்தமும் இல்லை
நீதியும் இல்லை நெறியும் இல்லை
சாதியும் இல்லைச் சமயமும் இல்லை
ஓதி உணர்ந்தவர் உறுதி மொழியே...

நன்மையுந் தீமையும் நங்கட் கில்லைத்
தொன்மையும் புதுமையும் தூயோர்க் கில்லை
அன்னையுந் தந்தையும் ஆன்மாவுக் கில்லைச்
சொன்ன சுருதியின் துணிபிது வாமே...

காலமு மில்லைக் கட்டு மில்லை
மூலமு மில்லை முடிபு மில்லை
ஞாலமு மில்லை நமனு மில்லைச்
சால அறிந்த தவத்தி னோர்க்கே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்பம் முப்பது

வேத சாத்திரங் கற்றிடல் இன்பமே
வீணர் நட்பினை விட்டிடல் இன்பமே
மாதம் மும்மழை பெய்திடல் இன்பமே
மாத ராசையை நீக்கிடல் இன்பமே
நாதன் நாமத்தை ஓதுதல் இன்பமே
நாம்சி வமென நாடுதல் இன்பமே
பேதம் யாவையும் நீங்கு பெரியவா!
பெருமை சேர்குரு புங்கவ சிங்கமே!

எங்கும் ஈசனைக் காணுதல் இன்பமே
ஏதி லார்பால் இரங்குதல் இன்பமே
பொங்கு கோபத்தைப் போக்குதல் இன்பமே
புவியின் ஆசையை நீக்குதல் இன்பமே
தங்கும் யோகத் தமருதல் இன்பமே
தானே தானாய்த் தழைத்திடல் இன்பமே
இங்கெ னக்கின்பம் எளிதில் விளக்கிய
என்கு ருபர புங்கவ சிங்கமே!

அஞ்செ ழுத்தினை யோதுதல் இன்பமே
அறிவால் அஞ்சையும் வென்றிடல் இன்பமே
நெஞ்சில் வஞ்சகம் நீங்குதல் இன்பமே
நியம நிட்டைகள் ஆற்றுதல் இன்பமே
தஞ்ச மென்றடி சாருதல் இன்பமே
தன்னைப் போற்பிறர் பாலனன்பில் இன்பமே
அஞ்சல் அஞ்சலென் றருளிய ஐயனே!
ஆண்மை சேர்குரு புங்கவ சிங்கமே!

ஒன்றி லொன்றி யிருந்திடல் இன்பமே
ஓம்சி வாய நமவெனல் இன்பமே
என்றும் வாழக் கருதுதல் இன்பமே
எல்லாம் ஈசன் செயலெனல் இன்பமே
நன்று தீதை யகற்றுதல் இன்பமே
நல்லோர் பாதத்தை நண்ணுதல் இன்பமே



ஒன்றும் நீயலை யென்றெனக் கோதிய
உண்மை சேர்குரு புங்கவ சிங்கமே!

சுழிமு னைக்குள் ஒடுங்குதல் இன்பமே
சோதி ரூபத்தைக் காணுதல் இன்பமே
பழியும் பாவமும் நீக்குதல் இன்பமே
பதியி லேயிளைப் பாறுதல் இன்பமே
வெளியி லேயொளி காணுதல் இன்பமே
விண்ணைப் போல விளங்குதல் இன்பமே
ஒழிக உன்பவம் என்ன உரைத்திட்ட
ஒருமை சேர்குரு புங்கவ சிங்கமே!

## சிவத்தைக் கண்டிடர் தீர்வது வீரமே
## கலி விருத்தம்.

சிவத்தைக் கண்டிடர் தீர்வது வீரமே
பவத்தை நீக்கிப் பணிவது வீரமே
தவத்தைச் செய்து சலிப்பறல் வீரமே
உவத்தல் காய்தல் ஒறுத்திடல் வீரமே
பொறுமை யைப்புறங் காப்பது வீரமே
வறுமை வந்தால் மகிழ்வது வீரமே
சிறுமை நீக்கிச் சிறந்திடல் வீரமே
மறுமை இன்பத்தை நாடுதல் வீரமே

ஐம்பொ றியைய டக்கிடல் வீரமே
வெம்ப கையை விடுவது வீரமே
நம்பன் பாதத்தை நண்ணுதல் வீரமே
தம்மைத் தம்மால் அறிவது வீரமே

கண்ணைப் போலறங் காப்பது வீரமே
மண்ணைப் பெண்ணை மறப்பது வீரமே
விண்ணைப் போல விளங்குதல் வீரமே
எண்ணம் யாவும் இறப்பது வீரமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதி யோதி யுணர்வது வீரமே
சாதி பேதந் தவிர்ப்பது வீரமே
நீதி நூல்வழி நிற்பது வீரமே
ஆதி பாதம் அணைவது வீரமே

@@@@

## தேறித் தேறித் தெளிவதுந் தன்னையே

ஓதி யோதி யுணர்வதுந் தன்னையே
நீதி பேசி நினைவதுந் தன்னையே
சாதி பேசிச் சலிப்பதுந் தன்னையே
ஆதி யாதியென் றாய்வதுந் தன்னையே
ஆறி யாறி அறிவதுந் தன்னையே
தேறித் தேறித் தெளிவதுந் தன்னையே
மாறி மாறி நினைவதுந் தன்னையே
கூறிக் கூறிக் குறிப்பதுந் தன்னையே

சிவத்தை நோக்கித் தெளிவதுந் தன்னையே
பவத்தை நீக்கிப் பணிவதுந் தன்னையே
தவத்தை யாற்றி யறிவதுந் தன்னையே
உவத்தல் காய்த லொழிப்பதுந் தன்னையே

வாதம் பேசி மதிப்பதுந் தன்னையே
காத மோடியுங் காண்பதுந் தன்னையே
பூத மைந்தனுட் போற்றலுந் தன்னையே
நாதம் விந்தென நவில்வதுந் தன்னையே

ஓடி யோடி உவப்பதுந் தன்னையே
தேடித் தேடித் தெளிவதுந் தன்னையே
நாடி நாடி நகைப்பதுந் தன்னையே
கூடிக் கூடிக் குறிப்பதுந் தன்னையே



## ஒரு சொல்லா லுளந்தூய்மை யாச்சே
## ஆனந்தக் களிப்பு

தானா தனா தந்தனான - தனதன
தானா தனா தந்தனான தந்தனான

ஒருசொல்லா லுளந்தூய்மை யாச்சே - சிவசிவ
ஒன்றிரண் டென்றிடும் பேதமும் போச்சே
இருவினை என்பதும் பேச்சே
என்னை அறிந்தேன் இடரற்றுப் போச்சேஎல்லாமென்
கைவச மாச்சே - சிவசிவ
எடுத்த பிறப்பின் பயன்சித்தி யாச்சே
உல்லாச மாய்த்திரிவ தாச்சே
உலகெலா மெனக்குற வாகிப் போச்சே

சொல்லாலே வாய்ந்த சுகத்தை - சிவசிவ
சுகிப்பதே அல்லாமற் சொல்லவொண் ணாதே
கல்லாதே யாவுங்கற் றேனே
காயத்தையும் என்றன் கைக்குள்வைத் தேனே

அண்ட சராசர மெல்லாம் - சிவசிவ
அகத்திலே கண்டு தரிசித்துக் கொண்டேன்
முண்டக மலர்ப்பாதங் கண்டேன்
மூவருந் தேவரும் முளைத்ததுங் கண்டேன்

உருகி உருகி உணர்ந்தேன் - சிவசிவ
ஒன்றையுங் காணாம லேங்கிநான் நின்றேன்
மரும மிதுபெரும் மருமம்
மகத்துக்க ளாலும் சொல்லொணா மருமம்

@@@@@



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டோர்க்குங் குறையுண்டோ

**எண்சீரடியாசிரிய விருத்தம்**

போற்றியொரு பொல்லாப்பு மில்லை யென்ற
பூங்கழல்க ளவைபோற்றி புவியுள் ளோர்கள்
ஏற்றுகின்ற திருவடிக ளென்றும் போற்றி
எளியேனை யாண்டுகொண்ட கருணை போற்றி
சாற்றரிய மலர்ச்சோலை தயங்கு கின்ற
தண்புனல்சேர் நல்லூரிற் குருவாய் வந்து
வீற்றிருந்தென் வினைதீர்த்த விமலா வுன்னை
வேறாக எண்ணுதற்கு விதியு முண்டோ...

உண்டோதா னுனைப்போல ஒருவ ரிந்த
உலகத்தில் உறுதிதந்தோ ருணர்ந்து பார்க்கில்
எண்டோள னாவாய்நீ என்னை யுன்னை
எவர்பிரித்துச் சொல்லவல்லார் எந்தாய்! எந்தாய்!
வண்டோதை குறையாத வளஞ்சேர் நல்லைக்
குருமணியே! மவுனத்தின் வைப்பே! யுன்னைக்
கண்டோர்க்குங் குறையுண்டோ கலந்து கொண்டேன்
கள்ளுண்ட வண்டுபோ லாயி னேனே...

ஆயுநான் மறைதேடி யறியா வுன்னை
யாரறிவா ரரும்பொன்னே மணியே முத்தே
மாயவுட லுண்மையென மதித்து வாடி
மயங்காம லடியேனை நல்லூர் தன்னில்
தோயுமருட் குருவாகிச் சொரூபங் காட்டிச்
சுகம்பெறவே யிருத்தி வைத்தா யினியெனக்கு
வாயுமுண்டோ வணங்குதற்கு வழிவே றுண்டோ
வள்ளலே யுள்ளதைநீ வழுத்து வாயே...



# முத்திக்கு வழி

**ஆசிரியப்பா**

முத்திக்கு வழியை மொழியக் கேண்மோ!
சத்தியம் பொறுமை சாந்த மடக்கம்
நித்தியா நித்திய வத்து விவேகம்
பத்திசெ யடியரைப் பணிதல் பகலவன்
எழுமுன் எழுதல் இரும்புன லாடல்
வழுவிலைந் தெழுத்தும் வரன்முறை பயிலல்
குருபதம் பணிதல் கோலநீ றணிதல்
வரும்பசிக் குண்ணல் வாயுற வாழ்த்தல்
சாத்திரம் பயிறல், தன்போற் பிறரையும்
பார்த்தல் பணப்பற் றொழித்தல் பண்புடன்
வார்த்தை யாடல் வாதனை தீர்த்தல்
கோத்திரங் குலமெனுங் கோட்பா டொழித்தல்
எட்டுணை யேனும்
வேண்டுதல் வேண்டாமை யின்றி யென்றும்
ஆண்டவ னடிக்கீ ழமர்ந்து வாழ்தலே

# உனைக்கூறும் வகையென்னே

பொன்னானாய் மணியானாய் பொருளானாய் பிறவானாய்
என்னானா யென்னானா யிறையானா யெனப்பலவாய்ச்
சொன்னாரன் றியின்னான் எனச்சொன்னா ரிலையுலகில்
அன்னாயுன் னையன்றி யினிப்பின்னார் துணைபேசே

நீரானாய் நிலனானாய் வளியானாய் விசும்பானாய்
காரானாய் கடலானாய் மதியானாய் கதிரானாய்
ஊரானா யுடலானாய் உலகானாய் பலவானாய்
பேராயி ரம்மானாய் எனப்பேசார் பிறர்தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிதானாய் சிறிதானாய் பிழையானாய் பித்தானாய்
அரியானாய் அயனானாய் அருளானாய் மருளானாய்
எரியானாய் இரவானாய் பகலானாய் எல்லாமாய்த்
தெரியாதே நின்றாயே யுனைக்கூறும் வகையென்னே

மண்ணானாய் விண்ணானாய் மதியானாய் ரவியானாய்
கண்ணானாய் ஒளியானாய் காட்சியெல்லாம் நீயானாய்
பெண்ணானாய் ஆணானாய் பேதமென்றும் நீயானாய்
என்னானாய் என்னானாய் என்பதல்லால் என்சொல்கேன்.

## ஒழுக்கம் விழுப்பந்தரும் தம்பிமாரே.

ஒழுக்கம் விழுப்பந்தரும் தம்பிமாரே
ஓமென்று சிந்தைசெய்வீர் தம்பிமாரே
அழுக்கா றவாவெகுளி தம்பிமாரே
ஆன்மாவைப் பந்திக்குந் தம்பிமாரே
வழுக்கி விழுந்தாலுந் தம்பிமாரே
மலரடியைச் சிந்தைசெய்வீர் தம்பிமாரே
பழுத்த வடியருடன் தம்பிமாரே
பாடிப் பணியவேண்டும் தம்பிமாரே
மூப்புவந் தடையமுன்னே தம்பிமாரே
முழுதும் அறியவேண்டுந் தம்பிமாரே
நாப்பிளக்கப் பொய்யுரைத்துத் தம்பிமாரே
நாட்டிற்பொருள் தேடவேண்டாந் தம்பிமாரே
ஆதியந்தம் நமக்கில்லைத் தம்பிமாரே
ஆன்மாவே நாங்கள்காணும் தம்பிமாரே
ஓதி யுணரவேண்டுந் தம்பிமாரே
உய்யவழி யதுகாணுந் தம்பிமாரே
சாதி சமயபேதந் தம்பிமாரே
சங்கற்ப மென்றறிவீர் தம்பிமாரே
வாழிவாழி சிவன்நாமந் தம்பிமாரேமனசாரச்
சொல்லுங்கள் தம்பிமாரே



வாழிசிவ னடியார்கள் தம்பிமாரே
மன்னவனுஞ் செங்கோலுந் தம்பிமாரே...

@@@@@

## எல்லாம் சிவன்செயல்

சூரியன் வருவது யாராலே தூமதி தவழ்வது யாராலே
விண்மீன் மிளிர்வது யாராலே வெய்யி லெறிப்பது யாராலே
கண்ணிணை காண்பது யாராலே காற்று மடிப்பது யாராலே
தண்ணீர் பெருகுதல் யாராலே தக்கோர் புகழ்வது யாராலே
பூமி சுழல்வது யாராலே பூக்கள் மலர்வது யாராலே
கால்க ணடப்பது யாராலே கைக ளெடுப்பது யாராலே
எண்ணிப் பார்நீ யறிவாயே எல்லாஞ் சிவன்செயல் குறியாயே
சொல்லு சுதந்திரம் பெறுவாயே சுவாமி வாக்கிது தெரிவாயே

## அத்துவிதப் பொருள் காப்பாம்

அத்துவி தப்பொருள் காப்பாம் - எனக்
கடியார்க ளென்றென்றுங் காப்பாம்
சித்தருந் தேவரும் காப்பாம் - என்றன்
சித்தத் திலங்குந் திருவருள் காப்பாம்
அட்ட வசுக்களுங் காப்பாம் - எனக்
கானந்த மான பராபரன் காப்பாம்
எட்டுத் திசைகளுங் காப்பாம் - எனக்
கெங்கும் நிறைந்த சிவசக்தி காப்பாம்

பிராண னபானனுங் காப்பாம் - என்னைப்
பிரியா திருக்கும் பிரணவங் காப்பாம்
அராவணி வேணியன் காப்பாம் - எனக்
கருளை யளிக்குங் குருபரன் காப்பாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சப் புலன்களுங் காப்பாம் - என்னைப்
பரவு மடியவ ரனுதினங் காப்பாம்
குஞ்சர முகத்தவன் காப்பாம் - நல்ல
குழந்தை வடிவேலன் என்றென்றுங் காப்பாம்

சந்திர சூரியர் காப்பாம் - எங்குந்
தங்கு முயிர்க ளனைத்துமென் காப்பாம்
மந்திரந் தந்திரங் காப்பாம் - நான்கு
மறைகள் சிவாகமம் மாநிலம் காப்பாம்

## உத்தம இரகசியம்

நாங்களெல்லாம் ஒரே சமயத்தையும் ஒரே சாதியையும் சார்ந்தவர்கள்; எங்களுக்குள் ஒருமாறுதலும் இல்லை நாங்கள் பரிசுத்தரும், தெய்வத்துவத்துள் வைக்கப்பட்டவர்களாகவும் இருக்கின்றோம். வித்தியாசம் வித்தியாசமான மாறுதல்கள் யாவும் உண்மைச் சுபாவத்தின் சிறப்புக்களாக இருக்கின்றன. இவைகளை மாயை எனப் பெரியோர் சொல்வர். ஒழுக்கத்தினால் வசீகரப்படுத்தப்பட்டோர்க்கன்றி மற்றையோர்க்கு இவ்வுண்மை புலப்படாது அதுபற்றியே தன்னுயிர் போல் மன்னுயிர் யாவையும் நேசித்தல் வேண்டுமென்று மகத்துக்களால் திரும்பத்திரும்ப வற்புறுத்தப்பட்டு வருகின்றது. ஆகையால் யாவும் ஒழுக்கத்திலேயே தங்கியிருக்கின்றன. இவ்வொழுக்க வழியில் நின்று எல்லாம் நாம் என்று பாவனை செய்து, வரவர அற்புதமான அநுபவங்கள் மூலமாக நாங்கள் சடப்பொருள் அல்ல. சித்துப் பொருளென்று தெளியலாகும்.

## காசியிலிருந்து எழுதிய கடிதம்.

தேடித்திரிந்து காசிக்கு வந்து கண்டேன் விசுவநாதனை என்னுள். வாடித்திரிந்து வருந்த வேண்டாம். தேடிய பூடு காலுக்குள்ளே என்ற தெவிட்டா வாசகமொன்றுண்டு. இவ்விடத்திலும் மனிதர்களெல்லாம் எங்களைப்போலே



தானிருக்கிறார்கள்; நூதனமான காரணமொன்றும் பூதலமீதிலில்லவே இல்லை. இருந்த இருக்கின்ற இருக்கும் யாழ்ப்பாணத்தாரெல்லாருக்குமாகக் கருமாதிகளெல்லாஞ் செய்து முடிந்து விட்டன. இனிமேலுங்களுக்கியைந்தபடி அன்பாக உலகில் நடந்து ஆண்டவன் அடிக்கீழ் அமர்ந்து வாழ்க.

30 - 11 - 40

## காயத்திரி மந்திரமும் அதன் பத விளக்கமும்

**ஓம் பூர் புவ ஸ்வ:**
**ஓம் தத் ஸவிதுார் வரேண்யம்**
**பர்கோ தேவஸ்ய தீமஹி**
**தியோ யோனப் பிரசோதயாத்**

**இம்மந்திரத்தின் சொற்பொருள் மேல்வருவது:**

**ஓம்:-** பிரணவம்; பீஜமந்திரம். எங்கும் நிறைந்த எல்லாம் வல்ல ஏகப்பரம்பொருளை உணர்த்தும் சொல்.

**பூ:-** சத்; தானே தானாயிருக்கும் முடிந்த உண்மை. எல்லாப் பொருள்களுக்கும், ஆற்றல்களுக்கும் ஆதாரமான இடம்.

**புவ:-** சித்; உயிர்த்துடிப்பு, பூரண அறிவு, இயமானன், எல்லா இடையூறுகளையும் நீக்குவது.

**ஸ்வ:-** ஆனந்தம்; பேரின்பத்தை அளிப்பது.

**தத் :-** பரம்; நேரே அனுபூதியில் அறிவதன்றி ஏதுக்களாலும், எடுத்தமொழியாலும் அறியப்படாதது. மனித புத்திக்கும், சத்திக்கும் அப்பாலானது. பந்தத்தின் நீங்கிய ஆன்மா மட்டும் அதனைத் தரிசித்தல் கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஸவிது**:- மூலகாரணம்; அனைத்தையும் ஆக்கி அழிப்பது, எமது புத்தியை இயக்கும் சூரியனுமாம்.

**வரேண்யம்**:- வணங்கத்தக்கது; வியப்புடன் அன்புகொள்ளுதற்குரியது; பேரெழிலுடையது. என்றும் புதுவதாய் புனிதமாய் உளது.

**பர்கோ**:- தேவன்; பேரின்பம், மோட்சம், தெய்வீகஒளி, வெற்றி முதலியவற்றை எமக்கருளும் தேவன். தீமஹி:- தியானம்; பூரண சரணாகதியுடன் தியானிப்போம்.

**ஞ**:- எங்களது

**ய**:- எவர்

**தியா**:- புத்தியை (அறிவை)

**பிரசோதயாத்**:- ஒளியினால் எம்மை ஒளிகாணச் செய்பவர்

இதன் சுருக்கமான பொழிப்புரையும் விளக்கவுரையும் மேல் வருவன.

யார் நம்அறிவைத் தூண்டுகிறாரோ அந்தச் சுடர்க் கடவுளின் மேலான ஒளியைத் தியானிப்போமாக.

எங்கும் நிறைந்து எல்லாமாகி யாவற்றையும் பாது காத்துத் தானே தானாய் விளங்குவதும், உயிருக்குயிராகிச் சத்தியமாய் சுயஞ்சோதியாய் இன்னல் யாவற்றையும் களை யவல்ல தாய் பரிபூரணானந்தமாகி ஆதியந்தம் கடந்த நித்தி யானந்த சோதியாய் விளங்குவதுமான பிரமத்தை,

பராவாசம் செய்வதும், அற்புதானந்தமானதும், சோதிப் பிரகாச மானதும், வெற்றியுடையதுமான பரம்பொருளை,

எங்கள் புத்தியானது இடையறாது மாற்றமுறும் இவ் வுலகிலே தீநெறிப்பட்டு பந்தபாசங்களில் மயங்காவண்ண மும், என்றும் ஒளியுடைய திகழொளியில் தங்கியிருக்கும் வண்ணமும் தியானிப்போமாக.



(சிவதொண்டன் மலர் 22 இதழ் 1 மறுபிரசுரம்)

# சிவதொண்டரும் சிறுத்தொண்டரும்

சிறுத்தொண்டன் அன்றொருநாள் சிவதொண்டன் ஆச்சிர மத்துக்கு வந்திருந்தான். அப்போது சிவதொண்டன் சித்தத் தில் எழுந்த சில எண்ணங்களைச் சிறுத்தொண்டனோடு கலந்து பேசிய வண்ணமாகவிருந்தார். கொஞ்சம் எழுந்து உலாவிக்கொண்டும் பின் உட்கார்ந்து கொண்டும் எதிர்காலத் தில் வரப்போகிற சிவதொண்டன் ஆச்சிரமத்தினுடைய செய்கை முறைகளைப் பற்றியும் விதி நியமனங்களைப் பற்றி யும் இருவரும் மேல்வருமாறு உரையாடினர்.

சிவதொண்டன்: கிளிநொச்சியில் ஓர் அளவு விசாலமான கமம் பெறவேண்டும். சாதுக்கள் வாசம் பண்ணுவதற்கு உரிய இடமாக அது அமையவேண்டும். ஆன்மலாப சாதனைகளுக் குரிய சிறந்த நிலையமாகவும், அறிவை விருத்தி செய்வதற் குரிய கழகமாகவும் அதனை ஆக்க வேண்டும் என்பதே நமது உள்ளக்கிடக்கை, இவ்விடத் திருந்து உற்பத்தியாகிற சக்தி வெள்ளமானது உலகனைத்திலும் பெருகி மக்களுடைய வாழ்க்கையை நல்ல வழியிலே செலுத்தும், ஞானம், பக்தி, யோகம், கருமம் என்னும் இவற்றைச் சமரசப்படுத்துகின்ற உயர்ந்த கொள்கைகள் இவ்விடத்திலிருந்து உற்பத்தியாகும். ஒன்றோ இரண்டோ என்கின்ற சந்தேகம் தெளிந்து "ஓம் சிவா ய நம" என்ற உண்மை முதிரவேண்டும். இந்த ஆச்சிரமவாசி கள் நினைத்த மாத்திரத்தே இங்கிருந்து உலகின் மிகத் தூர மான பாகங்களுக்கெல்லாம் உயிர்க்கு உறுதி பயக்கும் வலிமை பரவிச் செல்லும். காலகதியிலே ஆத்ம சம்பத்தை அடையத் தேடுவார் அனைவரும் இவ்விடத்திற்கு வந்து கூடு வார்கள். இப்பொழுது எழும் இவ்வெண்ணங்கள் கோடியு மல்ல, அதிலும் அதிகமாகும்.

அவ்வாச்சிரமத்தில் இலக்கணம். தத்துவ சாஸ்திரம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞான சாஸ்திரம், காவியம், அலங்காரம், சுருதி, பக்தி சாஸ்திரம், ஆங்கிலம் என்னுமிவற்றைக் கற்பதற்குரிய ஓர் கல்விக்கழகமும் அமைக்கப்படும். இத்தகைய வித்தியாலயம் முன்னாளிலிருந்த குருகுல பாடசாலைகளைப் போல் அமைக் கப்படும். இளமையிலிருந்தே பிரமச்சரியத்தை அனுட்டித்த சிறுவர்கள் இங்கு வசித்துச் சமய சாஸ்திரங்களை ஆராய் வார்கள். அவர்களுக்கு வேண்டிய உணவும் உடையும் அவர் உடலுழைப்பாலேயே சம்பாதித்துக் கொள்ளவேண்டும். ஐந்து வருஷம் பிரமச்சரிய வாழ்க்கையிற் பயின்ற பின்னர் அவர்கள் விரும்பினால் தங்களது இல்லத்துக்குச் சென்று இல்வாழ் க்கை நடத்தலாம். ஆச்சிரமத்திலுள்ள பெரியோர்களுடைய அநுமதியைப் பெற்றுத் துறவு பூணினும் பூணலாம், ஒழுக்கம் தவறி நடக்கிற பிரமச்சாரிகளை உடனே வெளியில் அனுப்பி விடுவது ஆச்சிரமத்து அலுவலாளர்களுடைய கடமையாகும். சாதி சமய வேறுபாடின்றி அங்கே அனைவருக்கும் கல்வி கற்பிக்கட் படும். இதற்குத் தடைகூறுவோர் உட்புகுவதற்கு அனுமதிபெறார். தங்களுடைய சாதிக்கியைந்த கொள்கைக ளைப் பாதுகாக்க விரும்பினோர் உணவு முதலியவற்றிற்கு வேறாகிய ஏற்பாட்டைத் தாமாகவே செய்துகொள்ளுதல் வேண்டும். அவர்கள் மற்றவர்களோடு பாடம் படித்தற்கு மாத் திரம் உரிமை உடையவராவர். ஆச்சிரம நிர்வாகிகள் இவர் கள் ஒழுக்கத்தையும் விழிப்பாகப் பார்த்துவருவார்கள். இங்கு பயிற்றப்பட்டவர் மாத்திரமே சந்நியாசம் பெறுவதற்கு உரிமை யுடையவராவர். படிப்படியாக இவ்வாச்சிரமமானது இத்தகைய கைங்கரியத்தைச் செய்யுமாயின் இது மிகநன்றாகுமல்லவா?

சிறுத்தொண்டர்: குருவின் மனையிலே பிரமச்சரிய வாழ் க்கை நடத்துகிற பழைய முறையை மீட்டும் இந்நாட்டில் நிறுவுவது தேவரீரின் திருவுளம் போலும்?

சிவத்தாண்டன்: ஆம் அப்படியே, தற்காலக் கல்விமுறை யானது சிவஞானத்தை அடைவதற்குரிய வசதிகளைத் தரு கின்றதில்லை முன்னாளிற்போலப் பிரமச்சரிய ஆச்சிரமங் களை நாம் ஏற்படுத்த வேண்டும். ஆனாலும் அவற்றிற்குச் சிறிது விரிவாக அடிகோலிக் கொள்ள வேண்டும். அ∴தாவது தற்காலத்துக்கியைந்த வண்ணம் பலதிறப்பட்ட மாறுதல்க ளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். இதைப்பற்றிப் பின் சொல்லுகிறேன்.



முதன்முதல் ஆச்சிரமத்தில் ஓர் அன்னசத்திரத்தை ஆரம் பிப்போம். ஆண்டவனுக்குச் செய்யும் சேவைபோல மிகுந்த வறுமையினால் துன்புறுவோருக்குச் சேவைசெய்ய அவ்வி டத்தில் ஏற்பாடு பண்ணுவோம். முதலில் வருகின்ற வருவா யிக்குத் தக்கபடி அதனது முயற்சியை அளவுபடுத்திக் கொள் ளலாம். இருவர் மூவரோடு ஆரம்பிக்கலாம். இவ்வன்னசத்தி ரத்தை நடத்துதற்கு நல்ல ஆற்றல் வாயிந்த பிரமச்சரிகளை நாம் பயிற்றுதல் வேண்டும். அதனை விடாது நடத்துவதற்காக வேண்டிய பொருளை அவர்கள் உழைப்பின் வருவாயிலிரு ந்து பெறமுடியாத விடத்து சீகாழிச் சிற்றம்பலத்தடிகளும் சிஷ்யர்களும் செய்தவண்ணம் இரந்தாகிலும் சேகரிக்க வேண்டும். இத்தகைய சேவாச்சிரமத்தில் ஐந்து வருஷம் பயிற்சி பெற்றபின்பே பிரமச்சாரிகள் வித்தியாலயத்தைச் சேர அனுமதி செய்வார்கள. சேவாச்சிரமத்தில் ஐந்தும் வித்தியா லயத்தில் ஐந்தும் ஆகப்பத்து வருஷம் கழிந்த பின்னரே ஆச் சமையப் பெரியோர்களிடத்தில் தீட்சை பெற்று பிரமச்சாரிகள் சந்நியாச ஆச்சிரமத்தில் உட்புகுவார்கள். சந்நியாச ஆச்சிர மத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்னும் விருப்பமுடை யோர்க்கே ஆச்சிரமப் பெரியோர்கள் தகுதியாராய்ந்து தீட்சை செய்துவைப்பார்கள். இவ்விதியைக் கடந்த கால எல்லை யின்றி மிகத் தகுதியுள்ளவர்களாகக் காணப்படுகின்ற பிரம் மச்சாரிகளுக்குச் சந்நியாசம் கொடுக்கும் உரிமை ஆச்சிரமத் தலைவருக்குண்டு.

சிறுத்தொண்டர்: தேவ! தாங்கள் கூறியது போல ஆச்சிர மத்தில் மூன்று வகையான அங்கங்களை ஏற்படுத்துவதன் நோக்கமென்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவதொண்டர்: நான் சொன்னது புலப்படவில்லையா? முதலில் அன்னதானம், அதற்கடுத்தது வித்தியாதானம், இவையாவற்றிலும் மேம்பட்டது ஞானதானம். இம்மூன்றினையும் இவ்வாச்சிரமத்தில் நாம் சமசரப்படுத்த வேண்டும். பிரமச்சாரிகள் அன்னதான கைங்கரியத்திலே தொடர்சிசயாக ஈடுபடுவதனால் அவர்களுடைய உள்ளத்திலே பிறர் நலத்துக்காக உழைக்க வேண்டு மென்னும் கருத்தும் சீவர்களுக்குத் தொண்டு புரிவது சிவனுக்குச் செய்யும் தொண்டாகும் என்னும் எண்ணமும் உறுதியாக நிலைபெறும். இத்தகைய கைங்கரியத்தினால் அவர்கள் சித்தம்சுத்தியடைந்து பரிசுத்தமாகிய சாத்வீக எண்ணங்களை வெளிப்படுத்தும். இதனால் காலகதியில் சிவஞானத்தை அடைவதற்கு தகுதியுள்ளவராகிய பிரமச்சாரிகள் சந்நியாச ஆச்சிரமத்தைப் பெறுவதற்கு உரிமையுடையவராவர்.

சிறுத்தொண்டர்: தேவரீரின் திருவாக்குப்படி ஞானதானமே மிகவுயர்ந்ததாயின் அன்னதான வித்தியாதானத்தை ஆரம்பிக்க வேண்டியது ஏதற்கு?

சிவதொண்டர்: இதனை இதுவரையும் நீ தெரிந்து கொள்ளவில்லையா? கேட்பாயாக:- பஞ்சமாக இருக்கின்ற இந்தநாட்களிலே நீ தன்னலமற்ற தொண்டு செய்யும் வழியிலே நின்று இரந்தோ, பிறிது உழைப்பினாலோ கொஞ்சம் உணவுப் பொருள்களைச் சம்பாதித்து அவற்றை வறுமையினாலே துன்புறுபவர்களுக்குக் கொடுத்தால் அது உனக்கும் உலகத்துக்கும் நன்மையைச் செய்வது மாத்திரத்தோடமையாது இந்த நன் முயற்சிக்கு எல்லாருடைய அனுதாபத்தையும் பெறுகின்ற வழியுமாகும். காமசஞ்சனத்திலே கட்டுப்பட்டுக் கிடக்கின்ற லௌகீக புத்தியுள்ள மனிதர் இந்தக் காருண்யத் தொண்டினுக்காக உன்னிடத்தில் நம்பிக்கை வைத்து உனக்கு உதவி செய்ய முன்வருவார்கள். வித்தியாதானத்தினாலும் ஞானதானத்தினாலும் கவரப்படுகின்ற மனிதரைப் பார்க்கிலும் ஆயிரமடங்கு அதியமானவர்கள் கேளாமற் செய்கின்ற உதவியாகிய இவ்வன்னதானத்திலே கவரப்படுவார்கள்.



இதனாற் பெறுகின்ற அனுதாபத்தைப் போல மற்றெவ்வித கைங்கரியத்திலும் பெறுதல் இயலாது. உண்மையிலேயே உயர்ந்த நோக்கமுடைய தொண்டினாலே மனிதர் மாத்திரமல்ல ஆண்டவன் தானும் தொண்டாற்றுபவனுக்கு நண்பாதல் கூடும். இவ்வண்ணம் சனங்கள் கவரப்பட்ட பின்னர் வித்தையினாலும் ஞானத்தினாலும் அவர்களுக்கு விருப்பமுண்டாகுதல் எளிதாகும். ஆதலினாலே அன்னதானம் முதலாவதாக வைத்தெண்ணப்படுவ தாகின்றது.

சிறுத்தொண்டர்: இப்படியாக அன்ன சத்திரங்கள் ஆரம்பிக்க இடம், பொருள் கட்டடம் பணம் எல்லாம் எங்கிருந்து வரும்?

சிவதொண்டர்: உண்மையான உள்ளத்துடன் உடனே சிறு தொண்டினைச் செய்யத்துவங்கு. இடைவிடாமற் சில நாட்களுக்கு இவற்றைத் தொடர்ந்து செய்வாயானால் எத்தனையோபேர் பெருந்தொகையான பணத்தோடு உனக்கு உதவிசெய்ய வருவதைக் காண்பாய் "நற்கருமங்களைச் செய்பவன் ஒருபோதும் துன்பமடைவதில்லை" எனக்கீதை கூறுகின்றது.

சிறுத்தொண்டர்: ஆம் உண்மைதான். ஆனால் இத்தகைய இடையீடில்லாத முயற்றி, ஈற்றிலே பந்தத்துக்கு வாயிலாகாதா,

சிவதொண்டர்: நீ கருமத்தினால் எய்துகின்ற பயனை விரும்பாமல் எல்லாவகையாகிய தன்னல விருப்பத்தையும் கடந்து அப்பாற் செல்கின்ற ஊக்கத்தோடு இருப்பாயானால் அந்த நற்கருமங்களனைத்தும் உன்னுடைய பாசத்தளையை ஒடிப்பதற்கு உதவியாகும் என நான் உனக்குச் சொல்லுகின்றேன். இத்தகைய நன் முயற்சி பந்தத்துக்கு ஏதுவாகுமென ஆராயாது கூறினாய். தன்னலங்கருதிச் செய்கின்ற முயற்சி பந்தத்துக்கு ஏற்பட்ட கர்மபந்தத்தை விடுவிப்பதற்குப் பயன் கருதாத முயற்சி மாத்திரமே வழியாக ஏற்பட்டிருக்கிறது. "வேறு வழியில்லை".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுத்தொண்டர்: தேவரீருக்கு இத்தகைய விருப்பம் இருப்பதால் அது காலகதியிலே தொழிற்படுமென்பது நிச்சயம். இவ்வாறுரைக்க அதனைக் கேட்டுச் சிவதொண்டன் சிறிது பொழுது அசைவற்று ஆழ்ந்து அகநோக்குடையரானார். பின்பு பொலிவெய்திய திருமுகத்தொடு சிறுத்தொண்டனை நோக்கிப் பின்வருமாறு கூறுகிறார்:-

“உறங்குகின்ற சிங்கம் யாரிடத்தில் விழித்துக்கொள்ளும் என்பதையும் எப்பொழுது விழிக்கும் என்பதையும் யார் அறிவார்? உங்களில் ஒருவரிடத்திலே அன்னை தன் அக்கினிப் பிழம்பாகிய ஆற்றலை வைத்துவிடுவாளாயின் நூற்றுக் கணக்கான ஆச்சிரமங்கள் ஏற்படுதல் கூடும். ஞானம், வலிமை, பக்தி என்னும் இவையெல்லாம் எல்லாப் பிராணிகளிடத்திலும் பூரணமாக அமைந்திருக்கின்றன. தோற்ற வெளிப்பாட்டின் ஏற்றத் தாழ்ச்சியை நாம் கண்டு ஒருவரைப் பெரியவரெனவும் மற்றோருவரைச் சிறியவரெனவும் சொல்லுகிறோம். எல்லாப் பிராணிகளுடைய உள்ளத்திலும் பரிபூரண நிலையை மறைக்கின்ற ஒரு திரை இருக்கிறது. அது அகன்ற உடனேயாவும் செவ்விதாகும். உனக்கு எது வேண்டுமோ எதனை விரும்புகிறாயோ அது சித்திக்கும்.

கடவுளுக்குச் சித்தமானால் இவ்வாச்சிரமத்தை நாம் பெரிய சமய நிலையம் ஆக்குவோம். பிராமணர் முதல் பறையர் ஈறாக எல்லா வகுப்பார்களும் எல்லா மதத்தவர்களும் இவ்விடத்துக்கு வந்து தத்தம் உயர்ந்த கொள்கைகள் இவ்விடத்தில் விளங்கு வதைக்காணும்படி செய்தல் வேண்டும். சாத்திரங்களை வெறுமனே வாசிப்பதனால் ஆகின்றபயனென்ன? சுத்த அத்வைதத்தின் உண்மைகளை வாழ்க்கையிலே அத்தாட்சிப்படுத்திக்காட்ட வேண்டும். இவ்வத்வைத ஞானத்தை மக்கள் தொழில் செய்து சீவிக்கின்ற இடங்களிலும் சங்கங்களிலும் பரப்பவேண்டும். இல்லங்களிலும் உறைவிடங்களிலும், பசும் புற்றரைகளிலும் சோலைகளிலும், மலைகளிலும், சமநிலங்களிலும் அத்வைத சிங்கத்தின் கர்ச்சனை யானது முழங்குதல் வேண்டும். நீவிர்யாவரும் எமக்குதவியாக வந்து இந்த முயற்சியிலே சேர்ந்து உழைப்பீர்களாக.




நாடும் ஈழத்து நற்தமிழ் நாட்டு

# ஞானப் பொங்கிசங்களில்

குறிப்பிடத்தக்க சிலர்

## கடையிற் சுவாமிகள்



கடையிற், சுவாமிகள் தென்னிந்தியாவிலுள்ள பெங்களூரில் ஒரு நீதவானாக இருந்தார். ஒரு கொலை வழக்கில் குற்றவாளிக்குத் தூக்குத்தண்டனை விதிக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டபோது சுவாமிகளுக்கு மறித்துணர்வு தோன்றிவிட்டது. இவனார் நானார்? இவனுக்குத் தூக்குத் தண்டனை விதிக்க நானார்? என்று விசாரணை எழுந்து விட்டது. அவ் விசாரணை யானது “நானார் உன்னுள்ளமார் ஞானங்களார்” என்ற விசாரணையைக் கிளப்பிவிடவே அவர் அந்நிலையிலிருந்து விலகிமெய்யுணர்ந்து குருவருள் பெற்றுச் சீவன்முத்தராய்த் திகழ்ந்தார். இந்திய பூமியில் நிரைத்திருந்த ஒரு குரு பரம்பரையிலிருந்து. மூன்று மகான்கள் ஈழத்திற்கு வந்து சேர்ந்தனர். அவர்கள் சுவாமி சின்மயானந்தர், சுவாமி முக்தியானந்தர், சுவாமி நிரஞ்சனானந்தர் என்று அழைக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றனர். அவருள் முக்தியானந்தரே கடையிற் சுவாமிகள் எனப்பெயர் பெற்றார்.


காந்தங்கண்ட இரும்புத்துண்டுகள் போல நாற்றிசை யிலுள்ள சிவபுண்ணியப் பேறுள்ளோர் பலர் சுவாமிகளை அடைந்து அவர்பால் தீக்ஷையும் உபதேசமும் பெற்றுப் பக்கு வராய்த் திகழ்ந்தார்கள். சுவாமிகளிடத்திலே பயபக்தி பூண்ட வர்கள் கடையான் என்ற பெயர்களாலும், ஆராமை, அன்பு காரணமாகப் பித்தன், பாலன் என்ற பெயர்களாலும் வழங்கு வர். எனினும் கடையோடு சார்ந்து வரும் பெயரே பலரும் அறிந்த பெயராகும். வண்ணார்பண்ணையில் என்றுஞ் சனப் புழக்கம் மிகுந்துள்ள சந்தைநிலையமாகிய பெரியகடையிலே சுவாமிகளைப் பெரும்பாலும் பலருங்கண்டு வழிபடக்கூடிய தாக இருந்தது. அது பற்றியே கடையிற்சுவாமிகள் என்ற பெயர் அவருக்கு வழங்கலாயிற்று. இவரது சித்த லீலை களோ எண்ணிலடங்கா. இவர்களைப் பற்றி குழந்தைவேற் சுவாமிகள் பாடிய தியானப்ப பாடலில் பின்வருமாறு பாடி யுள்ளார்.

“பெரியகடை நாதன் பித்தன் திருக்கோலம்
கரிய வர்ணச் சீலை கருந்தோலன சால்வை”

சுவாமிகளின் சிவப்பேறு 1891 புரட்டாதித் திங்கள் சதய நாளாகும்.



## செல்லப்பா சுவாமிகள்



வேதத்திலுள்ள மகா வாக்கியங்கள் போல தமிழில் யோக சுவாமிகளுக்கு உபதேசித்த ஞான தேசிகன் செல் லப்பா சுவாமிகளின் . மகா மந்திரங்களாவன:-

1) முழுவதும் உண்மை.
2) ஒரு பொல்லாப்புமில்லை.
3) எப்பவோ முடிந்த காரியம்.
4) நாமறியோம்.

சிவபெருமானே செல்லப்பா மூர்த்தமாய் நல்லூர் தேர் முட்டிப் படியிலிருந்து அளித்த அருளாடலையெல்லாம் சிவ யோக சுவாமிகள் நன்கு அனுபவித்தவர். குருபக்தியே பெரும் பேறு எனவும் குருநெறியே குருநாதன் உணர்த்திய பெருநெறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகவும் கொண்டார். குருமீதுள்ள காதலாற் நிறையப் பாடல் கள் பாடியுள்ளார். அவையெல்லாம் "நற்சிந்தனை" என்னும் நூலில் வெளிவந்துள்ளன. நற்சிந்தனை என்னும் நல்லமுதை பருக விளைபவர் முதலில் குரு தோத்திரங்களைப் பாடி தெளி வாராக. செல்லப்பா சுவாமிகளது சமாதி நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் தென்கிழக்கு மூலையில் உள்ளது. அவரது தந்தையார் பெயர் வல்லிபுரம். தாய் பெயர் பொன் னார். 1860ம் ஆண்டளவில் இவரை பெற்றெடுத்துள்ளார்கள் எனவும் அறியக்கிடக்கின்றது.

கடையிற்சுவாமிகளை அவரிருக்குமிடத்திற் சென்று காண வேண்டுமென விரும்பி, செல்லப்பர் பெரியகடைக்குச் சென் றார். செல்லப்பரைக் கண்டதும் கடையிற் சுவாமிகள் பக்கத் திலேயிருந்த கடலைக்காரி ஒருத்தியிடம் முழுரூபா ஒன்று வாங்கி அதனை ஒரு வெற்றிலையில் வைத்து மடித்து அவர் கையிற் கொடுத்தார். அவர் தலைமேல் ஒரு குடையையும் அசைத்துத் தம் கைகளைத் தட்டி ஓடடா என்று சொல்லி விட்டார். அந்தக் கணமே பூமி பூலோகந்தெரியாத நிலை செல்லப்பருக்குண்டாயிற்று. அந்நிலை பதினைந்து நாட்கள் வரை நீடித்தது. அதன்மேல் அவர் உலகம் போற்றும் உத்தம ஞானியாகத் திகழ்ந்தார். கொழும்புத்துறையில் விளங்கும் யோக சுவாமிகளின் குருவே குறித்த செல்லப்பாச்சுவாமி ஆவார். இவரது மேற்படி கோலத்தைக் கண்டு வீட்டிலுள்ளோர் கட்டிப் போட்டனர். அவ்வேளையில் நல்லூர் வீதியால் வந்த கடையிற் சுவாமிகள் கட்டிக் கிடந்த செல்லப்பரை உற்று நோக்கி விட்டு "முற்றிவிட்டது, அவிட்டு விடுங்கள்" என்றார். பரிகாரத்திற்கு அப்பாற்பட்ட பயித்தியம் என படியில் அமர்ந்து கொண்டார். உன்மத்தரான இவரை விசரன் என்போரும் பயித் தியக்கரன் என்பொரும் சிலர். யோக சுவாமிகளின் உள்ளத் தில் ஞான தேசிகனாகப்பட்டார். விபரமாக பின்வருமாறு நற்சிந்தனையில் கூறியுள்ளார்.



"சிரித்து நல்லூர் தெருவிற் திரிபவன்
வெறித்த பார்வையர் வேடம் விரும்பிலர்
கறுத்த மேனியர் கந்தைத் துணியினர்
எரித்தனர் பாவம் இனி எனக் கில்லையே"

என்றும்

"பாதிச் சாமத்தின் பின்பள்ளி கொள்பவன்
வீதியிற் செல்லும் வீணர்கள் தங்களை
பேதிக்கும் படி வேண்டியே பேசுவார்
சோதித்தே என்னை சும்மா இருத்தினார்"

என்றும்


" இந்த ஆன்மா நித்தியமென்ற
அந்த வாக்கு பொய்த்துப் போமோ
ஆசான் நல்லூர் வீதியிலருளிய
அந்த வாக்கும் பொய்த்துப் போமோ"

மெய்ப்பொருளானது செல்லப்ப வேடம் தாங்கி, ஏறக் குறைய 55வது வயது வரை உலகிலே நடமாடி வெம்பந்தம் நீக்கும் வேதாந்த விளக்கை ஏற்றி வைத்த பின்னர், தனது வேடத்தைக் கலைத்துக்கொள்ளத் தீர்மானித்து, செல்லப்ப தேசிகர் தன்னுடன் இரவிலே உறங்கவரும் அயலவரொருவரி டம் "இன்று இரவு இங்கு பெரும் புதினம் நடக்கும்; நீ வருவியோ?" எனக் கேட்டார். அந்த அயலவருக்கு அன்றிரவு செல்லமுடியவில்லை. அவர் அடுத்த நாட்காலையில் சென்று பார்த்த பொழுது செல்லப்ப வேடமானது சிறு குழந்தையைப் போன்று விரலொன்றை வாயில் வைத்தவண்ணம் காலொன்று மடிந்து நடராச பாவத்தில் இருந்து விறைத்துக் கிடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவயோக சுவாமிகள்



**யோக சுவாமிகள் பற்றி கிடைத்த விபரங்கள் வருமாறு.**

பூவுலகில் தோன்றிய நாள் :

ஆங்கிலத்திகதி:- 1872 ஆண்டு மே மாதம் 29ம் திகதி.

தமிழ் திகதி :- ஆங்கீரச வருடம் வைகாசி மாதம் 18ம் திகதி புதன்கிழமை காலை அவிட்ட நட்சத்திரம் 4ம் பாதமாகும்.

தந்தை பெயர் :- அம்பலவாணர்.
தாயார் பெயர் :- சின்னாச்சிப்பிள்ளை
பிறந்த இடம் :- மாவிட்டபுரம்.

அம்பலவாணரின் சோதரி முத்துப்பிள்ளை அம்மை யாருடன் சிறுபிராயத்தில் வாழ்ந்து வந்துள்ளார்.



கல்வி கற்ற பாடசாலை :-

கொழும்புத்துறையில் இருந்த பாதிரிமாதின் நிறுவனத்திலும் பின் யாழ்ப்பாணம் சம்பத்திரியார் கலாசாலையிலும் படித்துள்ளார்.

கிளிநொச்சியில் நீர்ப்பாசன இலாகாவில் பண்டகசாலைப் பொறுப்பாளராக பணிபுரியும் காலத்தில் வைதித்த பிரமசரிய விரதம் பூண்டவராக காணப்பட்டார். சுவாமிகள் பணிபுரியும் அலுவலகத் தலைவராகப் பதவிவகித்த பிறௌனி எனும் ஆங்கிலேயர் இவரை ஒரு தெய்வீக மனிதர் என அழைக்கலானார். இதனை யோக சுவாமிகளே தனக்குத் தெரிவித்ததாக செல்லத்துரை சுவாமிகள் எழுதிய "யோக சுவாமிகள் வாழ்க்கையும் வழிகாட்டலும் என்ற 396 பக்கங்களைக் கொண்ட நூலில் எழுதியுள்ளார். அதில் யோக சுவாமிகளின் முழுச் சரித்திரமுமே அடங்கியுள்ளது. யாழ் சிவதொண்டன் நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

யோக சுவாமிகள் ஞான நிலையில் வேதாந்த சித்தாந்த சாரம் எனப் போற்றிப்படும் நற்சிந்தனைப் பாடல்களை உலகுக்கு வழங்கியுள்ளார். இவரை அறியாதார் அறியாதாரே. ஈளப்பிறவி நீக்கும் எழிலறிந்த செல்லப்பதேசிகர் இவருக்கு சற்குருவாயமைந்தார். ஆரடா நீ, தேரடா உள், தீரடா பற்று, பாரடா வெளியிற் என்ற வண்ணம் வாசக தீக்கையளித்தார். அவரது திவ்விய பார்வையாலே பலர் ஜென்ம மலமெல்லாம் தீர்த்தனர். நல்லூர் வெளியிலே தன்கரத்தினாற் தொட்டு வெட்டவெளியில் விட்டார். சதுர்வித உபாயத்தினாற் தொட்டு வெட்டவெளியில் விட்டார். சதுர்வித உபாயத்தால் சீடரைத் தானாகச் செய்தனர். சீடரும் ஆசானருளால் ஆசானாயினார். 1935 ஆண்டு தொடக்கம் சிவதொண்டன் ஏட்டைத் தொடக்கி வைத்தார். 1954 ஆண்டில் யாழ்ப்பாணம், கே.கே.எஸ் றோட், வண்ணார்பண்ணையில் மௌனமாயிருந்து இளைப்பாறவல்ல சிவதொண்டன் நிலையத்தை ஆரம்பித்து வைத்தார். அவர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளித்த ஞான நாடகத்தின் பெருமையை யார்தான் அறியவல்லார். அவர் திருவடி பூசை கொண்டாடி வந்த பங்குனித் திங்களில் 1964 ஆண்டு திருவடிக் கலப்புற்றார். இவர் அன்றும், இன்றும் என்றும் இருக்கும் சீரை அறிவார். அவரை மனமார நினைத்து வேண்டிக்கொண்டால் எப்போதும் காட்சி தருவார்.

யோக சுவாமிகளை நேரில் சந்தித்து ஆசி பெற்ற சுசங்க வீரப்பெரும என்ற சிங்களப் பேரறிஞர் லண்டனில் இருந்து வெளியிட்ட **HOMAGE TO YOGASWAMI** சிறு நூலில் சிறுபகுதிகளை இங்கே தருகின்றோம்.

"Our conversation which was taking an interesting turn was interrupted by a man who walked into the hut. This person was apparently an ardent devotee of yogaswami. He lit a candle, placed a few jasmine flowers on the floor and finally prostrated himself on the cold cement floor before kissing Yogaswami's feet. "Bloody fool" yelled Yogaswami, "this is not an altar! Are you worshiping yourself? Why worship another ?" The poor man withdrew into a corner of the hut with reverence and trembling. "Do you think", went on Yogaswami, "that you can find God by worshipping another? You do such silly, stupid things - offering flowers and lighting candles! Do you think that you can find God by giving bribes?"

There was a question that I had hesitated to ask but it was important one for me at that time: how does one overcome depression? No sooner had I formulated this question in my mind than yogasmini this question in my mind than yogaswami answered it instantaneously . "Now, what is depression? You mean Pessimism, don't you? Pessimism and optimism are the same. They are two sides of the same coin. You are no better off when you are pessimistic than when you are optimistic than when you are pessimistic. Optimism and pessimism as reflected in joy and sorrow are different angles from which you view life. But life is neither one nor the other. If you look at life exactly as it is ant not from any angle, free from this duality, then life is neither pessimistic nor optimistic". As he was discoursing there walked in an elderly American lady who quickly removed her sandals and joined our company on the floor.

(continued to ..Page 100)



## மார்க்கண்டு சுவாமிகள், கைதடி



இவர் வேடமொன்றும் விரும்பாதவர். தாளமேள மில்லா மலே வளர்ந்த சிவதொண்டர். சிவயோகர் என்னும் பெருங்கருணைப் பேராற்றில் மிதந்து செல்லும் சிறுதுரும்பெனவே தன்னை மதிக்கும் தாழ்மையாந்தன்மை வாய்ந்த சைவர். தேன்குடிக்கும் பொது சத்தம் பொடாத வண்டினைப்போன்று தமது அநுபூதியை வெளிக்காட்டிக் கொள்ளாத மௌனி. அந்த மௌன முனிவரே மார்க்கண்டு சுவாமிகள்.

மார்க்கண்டு சுவாமிகள் குடியிருக்கப்போகும் கொட்டில் பல வாருடங்களுக்கு முன்னரே யோகமுனியின் சித்தத் தில் தெரிந்தது. 1938ம் ஆண்டில் யோகமுனி சொற்படி கைதடியிலே ஆசிரமம் அமைக்கும் வேலை ஆரம்பமாயிற்று. 1940ம் ஆண்டு மகா சிவராத்திரியின் பின் நாவற்குழி புகையிரத நிலையத்தில் நிற்கும்போது சுவாமி கைதடிக்குப் போக வேண்டுமென அருளினார். இவ்வருள் வாக்கின் தூண்டுதலால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைகள் துரிதமாக நடைபெற்று அவ்வாண்டு வைகாசி மாதத்தில் ஒரு வெள்ளிக்கிழமையன்று காலை 6.00 - 7.00 மணியளவில் பால் காய்ச்சப்பட்டது. அன்றுதொட்டு கைதடி அருட்பேறு பெற்ற ஊராக மாறிவிட்டது.

அவ் வீட்டில் வசித்த ஆசிரியர் விசுவலிங்கம் குறைந்தது ஒரு கிழமைக்கொருமுறையாவது யோக சுவாமிகளைத் தரிசிக்கச் செல்வார்கள். 25-12-1950 அன்று கொழும்புத்துறை ஆச்சிரமத்திற்குச் சென்று அவர்கள் அங்கு நின்ற பொழுது பிற்பகல் 2 மணியளவில் சுவாமிகள் வந்து உடனே சென்று உங்கள் கொட்டிலைத் திருத்தஞ்செய், உனக்கு ஒரு நல்ல சினேகிதனைத் தருகிறேன். அவன் போகும் போது எல்லாம் உங்களுக்குத் தந்துவிட்டுப் போவான், என்று சொல்லிவிட்டுப் பின், நின்று அடுத்தநாள் போகலாம் எனக் கூறினார். அதன்படி அடுத்தநாள் சென்று அவர் துப்பரவு செய்து வைத்தார். 27-12-50 செவ்வாய்க்கிழமை வருவோமெனக் கூறிச் சென்றார்கள். ஒருதினம் முன்னரே 26-12-50 வியாழக்கிழமை கார் ஒன்றிலே மார்க்கண்டு சுவாமிகளுடன் யோகசுவாமிகள் கட்டில் மெத்தை என்பவற்றுடன் வந்தார்கள். இன்று நல்ல நாள் எனச் சொல்லிக் கொட்டிலில் கொண்டு வந்தவற்றைக் இறக்கி வைத்தார்கள். அந்த நாள் முதல் கைதடி விசுவலிங்க மாஸ்ர ருடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது.

குளிப்பு முழுக்கு முதலியவற்றைக் கைவிட்டதோடு, உணவையும் வெகுவாகச் சுருக்கிக் கொண்டார்கள். அவர் தளர்ச்சியடைந்திருந்த போது வைத்திய கலாநிதி ஒருவரை அழைத்தார்கள். சுவாமிகள் அவர்களைப் பார்வையிட அனும திக்கவில்லை. அவருக்கு நோய் இருந்ததாகத் தெரிய வில்லை. அவர் சும்மா இருந்து இரத்தாஷி வருடம் வைகாசி மாதம் 16ம் நாள் செவ்வாய்க்கிழமை (29.05.84) நண்பகல் 12.00மணிக்கு கார்த்திகை நட்சத்திரத்தில் பரசுகத்தைப் பெற் றார். சாந்த சுவாமிகளும் சில காலம் மார்க்கண்டு சுவாமியு டன் இவ்வாச்சிரமத்தில் அவரது தொண்டராகவும் தோழராக வும் இருந்துவந்துள்ளார்.



## குடைச்சுவாமிகள்
## கோண்டாவில் கந்தையா சுவாமிகள்)



இவரது வாயிலிருந்து உதிரும் வாக்கியங்களுள் "அருள் தெரியுது பார்" என்பது முக்கியமானதாகும். இவருக்கும் யோக சுவாமிகளுக்குமிடையில் நல்ல உறவு இருந்துள்ளது. ஒரு நாள் கொழும்புத்துறை முருகன் கோவிலில் கந்தபுரா ணம் படிக்கும் போது அதில் மெய்மறந்த கந்தையா சுவாமிகள் உணர்வு வசப்பட்டு யோக சுவாமிகளின் காலில் கிள்ளினார். "எடடா கையை, என்னடா சேட்டை" என்று பேசி கையால் அடித்துவிட்டார். உடனே கந்தையா சுவாமிகள் "இப்படியும் அடிப்பதோ" என்று யோக சுவாமிகளைப் பார்த் துக் கேட்ட ருசிகரமான கதையை செல்லத்துரை சுவாமிகள் அடிக்கடி கூறுவார். இன்னுமொரு சம்பவம், அதாவது கந் தையா சுவாமிகள் கே.கே.எஸ் வீதிவழியாக சிவதொண்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையத்தை அண்மித்தார். அங்கு யோக சுவாமிகள் வாசலில் நிற்பது கண்டு அவருக்கு அருகில் சென்று “ஆசீர்வாதம் வேண்டும், ஆசீர்வாதம் வேண்டும்” என்றார். அதற்கு யோக சுவாமிகள் “ஆசீர்வாதம் உன்னோடு இருக்கு, போ” என்றார். அத்தோடு கந்தையா சுவாமிகள் சந்தோசத்துடன் திரும்பி விட்டாராம். இது “எனக்குள்ளே நீயிருக்கும் எழிலைத்தான் காட்டுதடா” என்பதன் கருத்தை விளக்கி விட்டதுவோ?. மேலும் கந்தையா சுவாமிக ளெனப்படும் குடைச் சுவாமிகள் மணல்தறை அம்மனிடம் வந்து இருதடவை ஆசீர்வாதம் பெற்றுச் சென்றுள்ளார். இறுதியில் கிளிநொச்சிக்கு சென்று வடிவேல் சுவாமிகளுடன் அளவளாவி விட்டு இன்னும் ஆறு மணித்தியாலங்கள் தான் இருக்கின்றன என்று உரும்பிராய் கந்தையாப் பத்தரிடம் கூற அக்கால எல்லைக்குள் கிளிநொச்சியிலிருந்து கொண்டாவிலுக்கு கொண்டு வந்து சேர்க்க ஆறு மணித்தியாலங்களும் முடிவுற்றன. கோண்டாவில் அன்னுங்கை எனும் ஊரில் பிறந்த இவருக்கு கோண்டாவில் சந்தியிலுள்ள பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் சமாதிக் கோவில் கட்டப்பட்டுள்ளது.

**(continued from ..Page 96)**

The familiar manner with which she smiled with everyone present and the affectionate way in which she greeted yogaswami indicated that she probably a frequent visitor to the hut.

"what have you been up to?" Yogeswami asked her rather playfully.

"I' ve been to the Hindu temple in the neighborhood. It was so peaceful there".


"You mean that stone temple?" asked Yogaswami laughingly. "You went to worship the stone gods in the stone temple! There is only one temple and that is the temple of yourself. And to find God you have to know this temple of yourself. There is no other temple. No one can save you!"

"what about Christ and Buddha? Can they not help us?" interjected the American lady. From her demeanour it clear that her question was not

(continued to ..Page 102)



## வடிவேல் சுவாமிகள்



இவர் யாழ்ப்பாணம் இணுவில் பதியில் 24.05.1906ம் ஆண்டு பிறந்தார். அவருக்கு இணுவையூர் கந்தர் சன்னாசியார் என்ற ஞானி சூட்டிய பெயர்தான் வடிவேல் என்ற பெயராகும். இவர் பன்னிரு திருமுறைகளையும் பண்ணோடு பாடக் கூடிய ஆற்றல் பெற்றிருந்தார். யாழ்ப்பாணம் குமாரசுவாமி வீதியிலுள்ள வேதாந்த மடத்திற்கு போகுமாறு யோக சுவாமிகள் பணிக்க அங்குஅவ்வாறு சென்று மகாதேவா சுவாமிகளிடமிருந்து உபதேசம் பெற்றார். மேலும் “போடா கிளிநொச்சிக்கு உனக்கு அங்கு வேலையிருக்கு என்று யோகசுவாமிகள் வழிகாட்டியதன் பிரகாரம் 1952ம் ஆண்டு கிளிநொச்சி ஜெயந்தி நகரில் தனது குரு மகாதேவா சுவாமிகளின் பெயரால் ஒரு ஆச்சிரமம் அமைத்து கரைச்சி துணுக்காய் பகுதியெங்கும் ஞான ஒளி பரப்பி 2/6/1990ம் திகதி ஆயிலிய நட்சத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரத்தன்று சமாதியடைந்தார். அவரது சமாதிக்கோவில் ஜெயந்திநகர், கிளிநொச்சியில் மகாதேவா ஆச்சிரமத்திலுள்ளது. இவரது ஆசிரமத்திற்கு இந்தியாவிலிருந்து வருகை தரும் ஞானிகள், தபசுகள், சமயப் பெரியார்கள் அனேகம். அவர்களில் சுவாமி அத்வையானந்த சரஸ்வதி, சுத்தானந்த பாரதியார், குன்றக்குடி அடிகளார். போன்றோர் குறிப்பிடத் தக்கவர்கள் ஆவர். ஈழத்து சோதி சுவாமிகளும் நீண்ட காலம் இவ்வாசிரமத்திற்கு வருகை தந்து தங்கிச் செல்வது வழமை.

வடிவேல் சுவாமிகளது வாரிசாக ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள் மேற்படி ஜெயந்தி நகரிலுள்ள ஆசிரம பிரதம குருவாக இருந்து செயற்கரிய அருள் ஆற்றி வருகின்றார்கள். அவற்றை கணக்கிட்டுக் கூற முடியா. அவற்றிற் சில முன்பு கூறப்பட்டுள்ளன. அர்ப்பணிப்பான சைவத் தொண்டர்களே தற்போதைய தேவையாகும்.

**(continued from ..Page 100)**

motivated by a desire to elicit information but was rather the reaction to her wounded religious susceptibilities arising from Yogaswami's remarks.

"The Buddha and Christ saved themselves through their own efforts. Afterwards the priests got hold of the rubbish and propagated it. The priests played the fool. Each man for himself in this spiritual business. Don't believe anyone who promises to help you. No one will help because no one can. Another may point the path but you have to do the walking".


As Yogaswami continued to talk we listened to him with rapt attention, devouring every word and treasuring every moment spent in that dingy hut. Several persons were now standing at the narrow entrance to the hut which was fast becoming crowded.

Yogaswami dissuaded persons from adoring him as a sacred object on an alter. What was more important for him was that we should sincerely look within ourselves. Indeed 'look within' were words that he frequently uttered. What does looking within involve? It involves the honest uncovering of those hidden conflicts in the unconscious that stand in the way of pure

(continued to ..Page 106)



## செல்லத்துரை சுவாமிகள்



**செல்லத்துரை சுவாமிகள் தனது குரு முன்னிலையில் நற்சிந்தனையை ரசித்துக்கொண்டு காலில் வேதனையிருந்தும் வகுப்பு நடாத்தும் காட்சி.**

யாழ்ப்பாண மாவட்டத்தில் சரசாலை என்னும் கிராமத்தில் சைவக் குடும்பத்தில் அருணாசலம் - நல்ல பிள்ளை என்ற தம்பதிகட்கு சிரேஷ்ட புத்திரனாக 1941ம் ஆண்டு வைகாசித்திங்கள் (தமிழ்) 1ம் திகதியன்று அவதரித்தார். பின் நீர்வேலியில் வளர்ந்து பண்டிதர் பள்ளிக்கூடத்தில் இளமைக்கல்வி பயின்று கோப்பாய் கிறிஸ்ரியன் கல்லூரியில் உயர்வகுப்புக் கல்வி ஆங்கிலத்தில் பயின்று மாணவர் தலைவராக இருந்து முதன்மை மாணாக்கராக விளங்கினார். இவ்வாறு தற்போது நடமாடுந்தெய்வங்களாகப் பலர் இப்பூமியில் அவதரித்து ஞன ஒளிபரப்பி வருகின்றனர். அவர்களைத் தரிச்சித்து அவர்களது போதனைகளை கேட்டு சந்தேக விபரீதங்களை அகற்றி உண்மைப் பொருளையறியும் ஆற்றலை வளர்ப்போமாக.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் 02.09.1940 திகதி தொடக்கம் ஆசிரிய நியமனம் பெற்று கொழும்பு மாளிகாவத்தையில் படிப்பித்தார். இக்காலத்தில் ஒவ்வொரு பாடசாலை விடுமுறைக்கும் இந்தியாவிலுள்ள சிதம்பரத்திற்கும், திருவண்ணாமலைக்கும் சென்று வருவதுடன் இலங்கையில் கதிர்காமத்திற்கும் சென்று வருவது வழக்கம். அவ்வாறு திருவண்ணாமலையில் தங்குங்காலத்தில் பகவானை நேருக்கு நேர் சந்தித்ததும் பகவானது திருநோக்கு உடலை ஊடுருவியதை உணர்ந்து புளகாங்கிதம் கொண்டு மெய் மறந்து விட்டார். மனிதரை மனிதன் விழுந்து வணங்குவதை விரும்பாதவராகவும் இருந்தார். ஆனால் மேற்படி தரிசனம் அந்தத் தடிப்பான எண்ணத்தை மாற்றியமைத்துவிட்டது. மேலும் இலங்கை திரும்பி 1950 ஆண்டு அளவில் தனது பாடசாலையிலிருந்து புகையிரத மூலம் கொழும்பு செல்லும் வேளையில் றம்புக்கனை புகையிரத நிலையத்தில் தனக்கு முன்னே குடையுடன் பகவான் மேலே போகும் காட்சி வெளிப்படையாக தென்பட்டதனால் அக்காட்சி பகவான் சமாதியை குறிப்பிடுகிறதென்று உணர்ந்து திருவெண்ணாமலை விரைந்தார். 4,5 நாட்களில் பகவான் சமாதியடைந்து விட்டார். அதன்பின் ஆத்மஜோதி ஆசிரியர் திரு. முத்தையா அவர்களுடன் வடநாடு சென்று திருக்கேதாரத்தில் ஐஸ்கட்டியை உடைத்து சிவலிங்க தரிசனம் செய்தபோது தனது உடல் காற்றில் மிதப்பது போன்று உணர்ச்சி மேலிட்டதனால் அங்கு தங்குவதற்கு திட்டமிட்டிருந்தார். நித்திரைக்குப் போகும்போது கட்டிலுக்கு ஒரு மெத்தை, ஆளுக்கு மேலே ஒரு மெத்தை போட்டுத்தான் படுப்பதுண்டு. அப்படியிருந்தும் நித்திரை வராதிருந்தது. அப்போ வாசலில் யோக சுவாமிகள் பிரத்தியட்சமாகத் தோன்றி "Come home immediately" என்று உரத்த குரலில் ஆணையிட்டுவிட்டு மறைந்து விட்டார். தான் இலங்கைக்குத் திரும்பி வந்து தனது ராகலை பாடசாலைக்குப் போன போது யாழ்ப்பாணத்திற்கான மாற்றக் கடிதம் கிடைத்தது. யாழ் வந்து நாவற்குழி மகாவித்தியாலய அதிபராக கடமை ஏற்றார்.



**யோக சுவாமிகள் திருவாய் மலர்ந்த ஞானப்பாடல்கள் அடங்கிய நற்சிந்தனைக்கு விளக்கமளிக்க வல்ல அவரது அணுக்கத் தொண்டர் செல்லத்துரை சுவாமிகளால் அன்றி வேறு யாரால் முடியும். நற்சிந்தனை வகுப்பு நடக்கும் காட்சி**




**நான் தானாய் விளங்குகின்றான் எங்கள் குருநாதன்**



**1. வறுமை வந்தால் மகிழ்வது வீரமே.**
**2. தம்மைத் தம்மால் அறிவது வீரமே**
**- நற்சிந்தனை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அத்துவிதப் பொருள்காப்பான் - எனக்
கடியார்கள் என்றென்றும் காப்பான்.



பட்டால் பாவாடைசெய்து பதிபசு பாசமென்னும்
மொட்டாக்கைப் போட்டுக்கொண்டேன் - தங்கமே
முழுவதும் உண்மையடி.

- நற்சிந்தனை.

பொட்டுக்குள்ளாலே நாயை உள்ளேவிடாதே
அதுஉள்ளே வந்து விட்டால்
தன் இஷ்டப்படி எல்லா விளையாட்டும் செய்யும்.
தீய எண்ணம் தோன்றும் இடத்து நிறுத்திக் கொள்.

-செல்லத்துரை சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2,3 நாட்களில் யோகசுவாமிகள் காரில் அங்குவந்து தெருவிலே நின்றபடி "ஏறு காரில் உன்னை கொண்டுபோய் கவிழ்த்துக் கொட்டிவிடுகிறேன்" என்று கூறவும் தானும் காரில் ஏறிவிட்டதாகவும், யாரிடம் திறப்புக்கொடுத்தது என்று ஞாப கமே இருக்கவில்லை என்றும் கார் கைதடி மார்க்கண்டு சுவாமிகள் இருக்குமிடத்திற்குச் சென்றது, அப்போ காருக்குள் "உனக்க ஒரு உபதேசம் சொல்லப்போகின்றேன் அதை மறவாது உச்சாடனம் பண்ணவேண்டும். மறந்தாலும் சட்டைப் பைக்குள் எழுதிவைத்து ஞாபகப்படுத்திக் கொள்" என்று கூறியுள்ளார். அந்த உபதேச மொழிதான் "**நாம் என்றும் உள்ளோம்**" என்பதாகும். மார்க்கண்டு சுவாமிகளைத் தரிச் சித்த பின் அப்படியே கூட்டிவந்து யாழ்ப்பாணம் K.K.S றோட் டிலுள்ள சிவதொண்டன் நிலையத்தில் இறக்கி விட்டுவிட்டார். அன்று தொட்டு இன்று வரை யாழ்ப்பாணம் மட்டக்களப்பு செங்கலடி சிவதொண்டன் நிலையங்களின் தலைவராக தெய்வப்பணி புரிந்து வருவதுடன் சிவதொண்டன் சபையால் வெளியிடப்படும் "சிவதொண்டன்" பத்திரிகை ஆசிரியருமாவர். செல்லத்துரை சுவாமிகளால் அருளப்படும் ஞானப்பாடல்கள் இடையிடையே சிவதொண்டன் பத்திரிகையில் பிரசுரமா வதுண்டு. தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் நடமாடும் மௌனமணிப் பெட்டகமான ஞானகுரவரை ஆத்மவிசார தாகம் கொண்டவர்கள் புரிந்து கொள்ள முடியும்.

மேலும் யோக சுவாமிகளால் அவரது காலப் பகுதியி லேயே வகுத்து கொள்ளப்பட்ட நடைமுறை ஒழுங்குகளைக் கடைப்பிடி யாது தன்னிச்சையாக சுயநல நோக்கங்களோடு கூடிய தப்புச் செய்யும் பேர்வழிகளை களை பிடுங்கிவிட்டு உண்மையான விசுவாசமான தனது அடியார்களை கொண்டு வந்து புகுத்திவிடுவது யோக சுவாமிகளது அற்புதச் செயலா கும். மேற்படி செல்லத்துரை சுவாமிகளை கூட்டி வந்து விழுத் திய கதையும் அவ்வாறானதே. எப்பவோ முடிந்த காரியம் என்றவாறு வருங்காலத்துக் குரியவர்களையும் யோக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகள் தீர்மானித்துவிட்டார் போலும். அதற்கான அறிகுறிகள் சில அடியார்களின் ஞானத்திரையில் காட்சியாக காட்டியுள்ளார் என்று அறியப்படுகின்றது. இவர் மணல்த்தறை அம்மன் ஆற்றும் பணி பற்றி அடிக்கடி விசாரிப்பார். இனி மௌன தியானத்திலிருந்து அடுத்த நிலைக்கு போகவேண்டும் என்று கூறுவார். அத்துடன் சிவதொண்டன் நிலையத்தில் நடைபெறும் யாகபூசையன்று படையல், பிரசாதம், மணல்தறை அம்மனுக்கு கொண்டுபோய் கொடுக்க மனமுவந்து அனுமதி வழங்குவார். அம்மா இக்கால கட்டத்தில் மக்களுக்கு ஆற்றும் பணியை கேட்டுப் பூரிப்படைவார். பாம்பின் காலை பாம்பு தான் அறிய முடியுமல்லவா? யோகசுவாமிகளின் அருட் பிரவாகத்தில் பாடப்பட்ட பாடல்களே நற்சிந்தனையில் வெளிவந்தவையாகும். அவற்றிற்கு கருத்தும் விளக்கமும் தரவல்லவர் அநுபூதி நிறைந்த, அருள் நிறைந்த ஞானியரல்லாது மற்றோருக்கு எளிதன்று. இந்நிலையில் குரு அருளினால் விளக்கங்களை வாரிவழங்கி வருகின்றார். செல்லத்துரை சுவாமிகள். அத்தருணத்தை தவறவிடாது நாடி நலம் பெறுவோமாக.

**(continued from ..Page 102)**

consciousness. It involves the silent and passive observation of all one's fears, hopes, aspirations, joys, frustrations and the like any more. Real meditation is no other than the silent discovery of oneself. One has to watch the various tricks that the mind likes to play. Through the perception of these tricks one begins to dissolve those prejudices and deceptions that obstruct clarity. With the cleansing of the mind and the heart there is pure consciousness. One is than qualified to receive something which according to the sages is indescribable but which may, nevertheless, be named as grace or God.


Meditation is not thinking of anything it is remaining summa.

- Yogaswami



## சாந்த சுவாமிகள்

(இலங்கை முன்னாள் மகாதேசாதிபதி லோட் சோல்பரியின் மூத்த மகன்)



சாந்தசுவாமிகள் சிலகாலம் மார்க்கண்டு சுவாமிகளின் தொண்டராகவும் தோழராகவும் வாழும்பேறு கிடைக்கப் பெற்றார். தொடர்ந்து செங்கலடி சிவதொண்டன் நிலையத்தில் அருட்பணியாற்றினார். இப்போ லண்டன் மாநகரில் ஆசிரமம் அமைத்து தெய்வப்பணியாற்றி வருகின்றார். அவர்களது பெரு முயற்சியினால் செல்லத்துரை சுவாமிகளது துணை கொண்டு நற்சிந்தனைப் பாடல்கள் அனைத்தையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உதவியுள்ளார். எந்த வேளையும் யோக சுவாமிகளது அருட்பார்வை தன்னில் விழவேண்டுமென்று கைகட்டிவாய் புதைத்து மௌனியாக சுவாமிகள் முன் நின்ற காட்சி காண்போரை மெய்சிலிர்க்க வைக்கும். அவ்வாறு நிற்கும்வேளை ஒரு நாள் யோகசுவாமிகள் சாந்த சுவாமியைப் பார்த்து What do you want (என்னவேணும் என்றார்) அதற்கு சாந்த சுவாமி What is meditation? என்று வினவினார் அதற்கு யோகசுவாமிகள் "Meditation is not thin Kcing of anything it is merely remaining summa" அதாவது சும்மா இருத்தலே தியானம் என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுப்பிரமுனிய சுவாமிகள்

(அமேரிக்கா – ஹவாய்)



இவர் முதலில் யாழ்/அளவெட்டியில் யோகசுவாமிகள் ஆச்சிரம் அமைத்து பின் மேற்படி காவாயில் யோகசுவாமிகள் ஆசிரமம் அமைத்து சுவாமிகளின் ஞான ஒளியைப் பரப்பி வருகின்றார். இவர் இற்றைக்கு ஒரு மாதத்திற்கு முன் ஐக்கிய நாடுகள் சபையில் சர்வமத மாகாநாடு ஒன்றிக்கு இந்து சமய சார்பில் யாழ்யோக சுவாமிகளின் சீஷ்யனாக பங்கேற்று பேசி யுள்ளார். யோகசுவாமிகள் இவரது முதுகில் தட்டி இது அங்கே கேட்குமென்றார். அவ்வாறு சுவாமிகளின் ஐம்பொன் னாலான சிலைசெய்து பலநாடுகளுக்கும் எடுத்துச் செல்கின் றார். யோக சுவாமிகளது ஞானஒளி உலகெங்கும் பரவ இவர் சாட்சியாய் இருந்து வருகின்றார். இவர் சமாதியடைந்து விட் டார்.

"நூதன விவேகியர் நுழைந்தும் காண்கிலர்
சாதனையுள்ள சத்துக்கள் காண்பரே"



## மௌனம்

1. எப்போதும் நன்றாம் மௌனம் அதனுள்ளும்
வெறுப்பொடு வெகுளி கௌவும் வேளை.

2. உணர்ச்சிகள் உருத்தெழும் வேளை மௌனம்
உடன்நின்று உறுதுணையாய் உதவும்.

3. ஒன்றாகப் பற்றுக மௌனத்தை அஃதென்றும்
உறுதுணையாய் நிற்கும் உனக்கு.

4. காக்க பொருளாள் மௌனத்தை ஒருவற்கு
உற்றதுணை அஃதொப்பதொன்றில்.

5. குற்றம் களையும் கொடிய இடர்போக்கும் மௌனம்
கற்றறிந்தார் நாடும் கருவி.

6. எற்றென்று இடருற்று எழும்சோகம் தவிர்ப்பானேல்
மற்றொன்றாய்ப்பற்றுக மௌனம்.

7. உள்ளத்தில் உண்மையொளி உண்டாக்கும் மொனம்
கள்ளத்தின் கறள் முற்றும் களைந்து.

8. மௌனத்தின் மானம் மலைவிளக்காய்த் தோன்றும்
தவனம் உடையோர்க்குத்தான்.

9. என்றும் இடும்பை ஒடுக்கும் இகல் ஒழிக்கும்
நன்றாம் மௌனம் நமக்கு.

10. ஆன்ற பொருளாம் அடக்கத்தை மௌனத்தால்
தோன்றாத் துணையாக்கிக் கொள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KRISHNAMURTI'S THOUGHTS

01. Is it not possible to live in this world without ambition, just being what your are? I think one can live in this world anonymously, completely unknown, without being famous, ambitious, cruel. One can live very happily when no importance is given to the self.

02. It is comparison that makes men miserable.

03. Happy is the man who is nothing.

04. There is happiness only when you don't seek it.

05. Where these is desire there must be conflict, competition struggle.

06. To Seek ful fill ment is to invite frustration.

07. Pride in any form is brutal and leads to disaster.

08. To die rich is to have lived in vain. Understanding is peace.

09. If you have not built an image of yourself, as good or anything at all, then no one can hurt you by contradicting that image.

10. Accept the fact that you are nothing. That is the truth. Man is afraid to be nothing. He wants to be something. He wants recognition, fame, power, wealth, and all the rest of it. So there is endless conflict and so there is endless misery and sorrow.

11. When there is no image in relationship there is no conflict.



12. It is only a shallow mind that wants an achievement, a result.

13. Success in any form - political, religious, art, employment, and business is ruthlessness.

14. Adversity is a boom from the Gods.

15. The moment you have a grudge, the moment you hate somebody, it harms you far more than the person you dislike, because that feeling is like a wound inside you that is festering.

16. We have to maintain goodwill and love in your hearts, regardless of however badly we are treated by others.

17. The man who is clear and simple does not choose. What is, is.

18. Until I. in my relationship to you, understand myself, I am the cause of chaos, misery, destruction, fear and brutality.

19. A religious person is not one who worships a God, an image made by the hand or by the mind but the one who is really inquiring into what truth is, what God is.

20. There is a lovely pure and open sky and people are quarrelling about the small cloud that's driven by the blind wind.

21. "I am citizen, not of Athens, or Greece but of the world", So said Socrates. This is a fact.

22. An intelligent mind is one which is constantly learning, never concluding.

23. Contentment comes with the understanding of what is.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. Every word has a verbal and nervous reaction which sets a wave going. Do not allow others word to rect upon you.

25. Be what you are

26. All things are impermanent, why should we worry on small petty things.

27. Suffering and humiliation are inevitable ingredients of life and they contribute to make better man.

28. It is love that can destroy the sense of inferior and the superior.

29. There is a problem only when we do not accept a thing as it is and wish to transform it.

30. One of the greatest stumbling blocks in life is this constant struggle to reach, to achieve to acquire.

31. Goodness shows itself in behaviour and action and in relationship. Good behaviour in essence is the absence of the self. the me. It shows itself in politeness, in consideration for others, yielding without losing integrity.

32. Why people cling to life which is so much misery, so transient. Everything passes away, because you know nothing else. You cling to your house, you cling to your books, your job, you cling to your ideals, Gods, conclusions, your attachments, your sorrows because, you have nothing else and all that you do brings unhappiness. To find out if there is anything else you must let go what you cling to.

33. Psychological fear is caused by thinking, and thinking is becoming. Becoming with its fear of not becoming is the root of all fear. so long as you want something there is bound to be fear and fear cripples the mind, so that you cannot be free.



34. Truth is a pathless land, one has to understand it through the understanding of the contents of his own mind, through observation. Truth which is made manifest by an other or described by another or told by another, however wise, however intelligent is not truth. You have to find it. you have to understand it.

35. Nobody else can bring about order in our life - a saviour, a master, a spiritual teacher - which is absolutely absurd. It is only through our own clarity, investigation, awareness, attention, that we begin to learn about ourselves and out of learning, out of that understanding of ourselves come freedom and order and therefore virtue.

36. A man who is living richly - not with money and the rest of it but inwardly a man who sees things as they are and is content with what he has is not confused; he is clear. There fore he does not ask the purpose of life. For him the very living is the beginning and the end. Life is relationship, life is all we know and that it should be therefore be understood fully and completely. Love cannot be cultivated. You will find love only in relationship. When there is love which is its own eternity, then there is no search for God, <u>because love is God.</u>

37. Both Buddha and Krishnsmurti emphzasized the importance of awareness- watching the thought precess without distortion as the only means of liberation. both showed that compassion alone will solve all human problems.

R. Krishnapillai
25.4.95



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினமலர் என்ற இந்தியப் பத்திரிகையில் இந்திய ஜனாதிபதி மாண்புமிகு ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்கள் பற்றி பிரசுரமான வாழ்க்கைக் குறிப்பு

**அறிவியல் வானில் பிரகாசித்த நட்சத்திரம்!**

இந்திய அறிவியல் வானில் பிரகாசித்த நட்சத்திரமான விஞ்ஞானி அவுல் பக்கீர் ஜெயினுலாப்தீன் அப்துல் கலாம் ஓய்வு பெற்று விட்டார். இவரது பணியை தொடர ஒருவர் இனி நமக்கு கிடைப்பாரானால் அது ஆச்சரியம்தான். தன்னுடைய பணியையே வாழ்க்கை யாக கொண்டு வாழ்ந்த அவர் உலக அரங்கில் இந்தியாவின் பெருமையை உயர்த்தியவர்.



ஏவுகணை தொழில்நுட்பத்தால் இந்தி யாவை வலிமை மிகுந்த நாடாக் கியவர். பாதுகாப்பு அமைச்சரின் அறிவியல் ஆலோசகரான அப்துல் கலாம், ஏவுகணை நுட்பத்தை நவீனப் படுத்துவதற் காக பாதுகாப்புத்துறை, கல்வி நிறுவனங்கள், மற்றும் ஆய்வு கூடங்களில் விஞ்ஞானிகளை ஒன்றுதிரட்டி நாட்டின் வெற்றிகர மான ஒருங்கிணைந்த செலுத்து ஏவுகணை வளர்ச்சித் திட்டத்தை (ஐ.ஜீ.எம்.டி.பி) உருவாக்கியவர்.

தன்னிறைவு பெறுவது மூலமே நாட்டின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் பெற முடியும் என்று கலாம் கருதுகிறார். இல குரக போர் விமானம் (எல்.சி.ஏ) அர்ஜுன் பீரங்கி ஆகியன இவ ரது ஆர்வமிகு திட்டங்களாகும்.

அஸ்திரங்கள் பற்றி விபரிக்கும் புராணங்களில் இருந்து அக்னி, பிருத்வி, நாக், பினாக் மற்றும் திரிசூல் என்று



ஏவுகணைகளுக்குப் பெயரிட்டார். இவையாவும் அழிவுக் கடவு ளான சிவபெருமானின் ஆயுதங்கள்.

1931ல் அக்டோபர் 15 ராமேஸ்வரத்தில் பிறந்த கலாம். ராம நாதபுரத்தில் உள்ள ஷ்வார்ட்ஸ் மிஷனரி உயர்நிலைப் பள் ளியில் தமிழைப் பாடமாகக் கொண்டு பயின்றார். ஆங்கிலம் ஒருமொழிப் பாடமாக கற்பிக்கப்பட்டது. திருச்சி செயிண்ட் ஜோசப்பில் கல்லூரிப் படிப்பை முடித்த அவர் மெட்ராஸ் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜியில் விமான இயலில் டிப் ளோமா பெற்றார். வெளிநாட்டு நிறுவனங்களில் பயிற்சி பெற வாய்ப்பின்றி முழுக்க முழுக்க உள்நாட்டிலேயே உருவான வர். பின்னாளில் தேடி வந்த வாய்ப்புக்களையும் உதறி தாய்மண்ணின் பெருமையை உயர்த்தியவர்.

**பன்முக விஞ்ஞானி:** 1958ல் டி.ஆர்.டி.ஓ.வில் பணியாற்றத் தொடங்கிய கலாம், 1962ல் இஸ்ரோவில் (இந்திய செயற் கைக்கோள் ஆராய்ச்சி அமைப்பு) திட்ட இயக்குநராகச் சேர்ந் தார். ரோகிணி செயற்கைக்கோளை விண்வெளியில் கொண்டு செலுத்திய எஸ்.எல்.வி.3 ஏவுகணையை உருவாக்கினார். ஏவு கணை வடிவமைப்பு, மேம்பாடு, கட்டுமானம் ஆகியவற்றைக் கவனித்தார். பின் 1982ல் டி.ஆர்.டி.ஓ.வில் மீண்டும் சேர்ந்து ஐதராபாத்தில் உள்ள பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம் பாட்டு ஆய்வுக்கூடத்தின் (டி.ஆர்.டி.எல்) இயக்குனரானார். ஏவு கணைகளை உள்நாட்டிலேயே தயாரிக்க ஒருங்கிணைந்த செலுத்து ஏவுகணைகளை உள்நாட்டிலேயே உருவாக்கும் திட்டம் வகுத்தார்.

ஒருநாளைக்கு 18 மணிநேரம் உழைக்கக்கூடிய கலாம் அறிவியல் தொழில்நுட்பத்தையே காதலித்தார். மீதி நேர த்தை தமிழ் இலக்கியத்திலும், வீணை மீட்டுவதிலும் செலவ ழித்தார். இவர் திருமணமே செய்து கொள்ளவில்லை. **சைவ உணவுப் பழக்கம் உள்ளவர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாதுகாப்பு சக்தி:** இவருடைய நண்பர்கள் இவருடைய எளிமையையும் உயர் அளவிலான சிந்தனையையும் போற்று கிறார்கள். இன்றும் அவரது இல்லத்தில் ஒரு அறையில் மட்டுமே அவர் தங்கியுள்ளார். இவரது சகாக்களும் எப்போதும் அவரை அணுகும் விதமாக அவருடைய இல்லம் எப்போதும் திறந்தே இருக்கும். இவரது திறமையிலும் ஆர்வத்திலும் நம்பிக்கையுடைய அனைவரும் டி.ஆர்.டி.ஓ.வில் இவர் திறமுடனே செயல்படுவார் என்று எதிர்பார்த்தனர். அதே போல் ஒருங்கிணைந்த செலுத்து ஏவுகணை மேம்பாட்டுத் திட்டம் துவங்கி 7 ஆண்டுகளில் தரையிலிருந்து விண்ணைத் தாக்கும் திரிசூல், தரையிலிருந்து தரையைத் தாக்கும் பிருத்வி, நடுத்தர வேக ஆகாஷ் ஏவுகணை, பீரங்கியை எதிர்த்துத் தாக்கும் நாக் ஆகிய பாதுகாப்பு சக்திகள் மேம்படுத்தப் பட்டன. அதன் பின் 1989ல் வெற்றிகரமாக சோதித்தறியப் பட்ட அக்னி, வெளியுலகுக்கு இந்தியாவின் பெருமையை உணர்த்தியது. அக்னி எஸ்.எல்.வி.3 ராக்கெட்டின் மறுவடிவமேயாகும்.

இந்தியா சொந்த முயற்சியிலேயே முன்னேற வேண்டும் என்று கருதிய அவர் இந்திய விஞ்ஞானிகள் எந்தவொரு விஞ்ஞானிகளுக்கும் சளைத்தவரல்லர் என்று கூறுகிறார். 60க்கும் மேற்பட்ட கல்வி, ஆராய்ச்சி அமைப்புக்களை ஒருங்கிணைத்து வெற்றி கண்டதன் அடிப்படையில் இதனை கலாம் கூறியிருக்கலாம்.

ஐ.ஜி.எம்.டி.பி மூலம் கலாம் பல்வேறு தொழில்நுட்ப மையங்களை ஏற்படுத்தினார். உந்துவிசை, செலுத்து அமைப்பு, உயரிய உலோகக் கலவைகள் ஆகியவற்றை டி.ஆர்.டி.ஓ வின் தொழில்நுட்ப இயக்குநரகம் கவனித்தது. 3 ஆயிரம் டிகிரி சென்டிகிரேட் வெப்பநிலையிலும் உருகாத உலோகப் பொருட்களை காம்ப்ரோக் என்னும் மையம் உருவாக்கியது. இது ஏவுகணைகள் தீப்பிடித்து எரிந்து விடாமல் இருக்கப் பயன்பட்டது.



அக்னியின் திண்ம உந்து விசை எரிபொருள் இஸ்ரோ-எஸ்.எல்.வி.3 பயன்படுத்தியதாகும். திரவ எரிபொருள் குறித்த ஆய்வு அக்னியின் 2 ஆவது கட்டத்துக்கு பயன்பட்டது. பிருத்வி திரவ எரிபொருளால் உந்தப்படுகிறது. எனவே இந்திய தொழில்நுட்பத்தைக் கொண்டே கலாம் பாதுகாப்பு சக்திகளுக்கு வலுவூட்டினார்.

டி.ஆர்.டி.ஓ வில் தலைமை இயக்குனராக இவர் பதவி வகித்த போதே இந்தியா மீண்டும் ஒரு சாதனையை நிகழ்த்தியது. 2 முறையாக ராஜஸ்தானில் உள்ள போக்ரானில் அணுகுண்டுச் சோதனையை நிகழ்த்தியது. இந்திய அணு சக்தி துறை (டி.ஏ.இ.) டி.ஆர்.டி.ஓ மற்றும் இஸ்ரோ ஆகிய அமைப்புக்கள் இணைந்து இச்சோதனையை நிகழ்த்தின. டி.ஆர்.டி.ஓ வின் சார்பில் முழுவீச்சில் சோதனையில் கலாம் ஈடுபட்டார்.

டி.ஆர்.டி.ஓ.வின் ஒரு ஆய்வுகூடம் நிரூபிக்கப்பட்ட வடிவமைப்பை ஆயுதமாக்கும் பணியை செயல்படுத்தியது. வெடிப்பைத் தோற்றுவிக்கும் கருவிகள், அதிக மின்சாரத்தைத் தூண்டும் கருவிகள் ஆகியவற்றை ராணுவத்தின் தேவைகளுக்கு ஏற்றவாறு வடிவமைத்து, சோதனை செய்து உற்பத்தி செய்வது இந்த ஆய்வுகூடத்தின் பணியாக இருந்தது. வளி இயக்கம் இயற்பியல், படைக்கலன், பிளப்பு, பாதுகாப்பு, பறப்பு சோதனைகள் ஆகியவற்றில் மேலும் மூன்று ஆய்வுகூடங்கள் பணியாற்றின.

**அணு ஆயுத சோதனை:** டி.ஆர்.டி.ஓ.தொடரான சோதனை நடத்தி தேவையான செயற்பாட்டுத் தடைகளை அகற்றின. இதோடு டி.ஆர்.டி.ஓ.டி.ஏ.இ.யுடன் சேர்ந்து 5 சோதனைகள் நடத்துவதில் உள்ள பொறுப்பை பகிர்ந்து கொண்டது. நாடு எதிர்நோக்கியிருந்த அணு ஆயுத அபாயத்தை அகற்றும் வகையில் தகுந்த நடவடிக்கையில் இறங்குவதற்காக இரு அமைப்புக்களும் தங்களுடைய தொழில் நுட்பத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரஸ்பரம் பகிர்ந்து கொண்டன. இந்த அணு ஆயுதச் சோதனையில் அணுசக்தித் துறையிலிருந்து ஆர்.சிதம்பரம் முக்கிய பங்காற்றினார். அவருக்கு இணையாக டி.ஆர்.டி.ஓ. வில் அப்துல்கலாம் பங்காற்றினார். பாதுகாப்பு அமைச்சரின் பாராட்டுக்களையும் பெற்றார்.

**விருதுகள்:** தேசிய வடிவமைப்பு விருதுகள், டாக்டர் பிரேன் ராய் விண்வெளி விருது, ம.பி.அரசின் தேசிய நேரு விருது, 1994ல் இந்திய வானியல் சங்கம் வழங்கிய ஆர்யப்பட்டா விருது, 1996ல் பேராசிரியர் ஓய். நாயுடம்மா நினைவு தங்கப் பதக்கம், ஜி.எம்.மோடி அறிவியல் விருது, அறிவியல் மற்றும் தொழில் நுட்ப உன்னதத்துக்கான எச்.கே.பிரோடியோ விருது உட்பட பற்பல விருதுகளை அப்துல் கலாம் பெற்றுள்ளார். 1981ல் பத்மபூசன் விருதும் பெற்ற அப்துல் கலாம் 1997 டிசம்பரில் நாட்டின் உயரிய விருதான பாரத ரத்னா விருதையும் பெற்றார்.

இந்திய வானியல் சங்கத்தின் துணைத்தலைவராகவும், இந்திய தேசிய பொறியியல் அக்காடமி பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் அக்காடமி, மின்னணு மற்றும் தொலைத் தகவல் தொடர்புக் கழகத்தின் ஆய்வாளராகவும் அப்துல் கலாம் திகழ்கிறார்.


இந்தியா 2020, பொற்காலத்தை நோக்கி ஒரு பார்வை என்ற புத்தகத்தை இஸ்ரோவின் செயல் இயக்குநர் வி.எஸ். ராஜனுடனும் இணைந்து எழுதியுள்ளார். இவரது சுயசரிதையை நெருப்பின் சிறகுகள் என்ற தலைப்பில் எழுதியுள்ளார். இரண்டுமே ஆங்கிலத்தில் வெளிவந்தவை.

**தெய்வீகத் தீ:** முதல் நூலை எழுதத் தூண்டியதன் காரணமாக, தேசிய பாதுகாப்பு, பொருளாதாரம், வளர்ச்சி, உணவு, சுகாதாரம் மற்றும் தன்னிறைவில் இந்தியா சிறந்து விளங்க, வளர்ந்த நாடாக வேண்டும் என்ற கனவை குறிப்பிடுகிறார்.



1857லிலேயே இதற்கான முயற்சி நடந்து விட்டது. அந்த போராட்டத்தின் விளைவாக 1947ல் சுதந்திரம் பெற்றோம். இது இரண்டாவது கட்ட பார்வை என்றார் அப்துல் கலாம். அருண் திவாரியுடன் இணைந்து எழுதிய இவர் சுயசரிதை நான்கு பாகங்களைக் கொண்டது. ஆரம்ப கட்ட வாழ்க்கை, கல்வி, அறிவியலில் இவரது பணி மற்றும் சாதனைகள் ஆகியவற்றை இப்புத்தகங்கள் விவரிக்கின்றன. **கடவுளின் அருளாலே நான் இந்த நிலைக்கு உயர முடிந்தது.** நாம் அனைவரும் தெய்வீகத் தீயுடனே பிறந்துள்ளோம்.

நமது முயற்சிகள் எல்லாம் அந்த தீயிற்கு சிறகுகளைக் கொடுத்து உலகத்தை நற்செயல்களால் நிரப்ப வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். அப்துல் கலாம் ஓய்வு பெற்று விட்டாலும் அவருக்கு சிறப்பு அந்தஸ்துக்களை வழங்கி அவருடைய திறமையை பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதே நம் விருப்பம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழ்மனத் தியானத்தில் இருந்தவேளை உண்டான உள்ளுணர்வு மூலமே கண்டுபிடிப்பைச் செய்தேன்.

பாங்கொக் சத்தியசாயி பல்கலைக்கழகத்தின் தலைவரும் நாஸா விஞ்ஞானியுமாகிய கலாநிதி ஆர்ற் ஒங் ஜூம் சாய் இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு யாழ்ப் பாணம் வந்திருந்தார். அப்போது அவர் உதயனுக்கென அளித்த விசேட செவ்வி யின் பகுதி இது. (01.07.2004)



### வாழ்வு மாற்றமடைவதில்லை

**கேள்வி:** எமது தமிழ் தத்துவஞானியான திருவள்ளுவர் ஏழு பிறப்புக்கள் பற்றி எப்பொழுதோ கூறியி ருக்கிறார். சுவாமியும் தாம் சீரடி பாபாவின் மறு அவதாரம் என்றும் இதற்குப் பின்னரும் தாம் ஓர் அவதாரம் எடுப்பார் என வும் தெரிவித்திருக்கிறார். ஒரு விஞ்ஞானி என்ற வகையில் மறுபிறவி அல்லது அவதார விடயத்தை எவ்வாறு பார்க்கி றீர்கள்.

**பதில்:** விஞ்ஞானத்தில் எதுவும் எந்தக் காலத்திலும் அழிக்கப்பட முடியாதது என்று கூறப்படுகின்றது. அவற்றில் சில கட்டங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். இந்தப் பிரபஞ் சத்திலுள்ள மொத்த சக்தி மாற்றமடையாமல் இருக்கும். இதை அழித்துவிட முடியாது. ஆனால் அவை அவ்வப்போது ஓர் உருவத்திலிருந்து இன்னோர் உருவத்துக்கு மாறலாம். மீண்டும் முன்னைய உருவத்திற்கு இன்னுமொரு வடிவில் மாற்றமடையலாம். விஞ்ஞானத்தின் பிரகாரம் நிலை (State) மாற்றம் தொடர்ச்சியாக எல்லாக் காலங்களிலும் நிகழ்கிறது. அதே போல வாழ்வும் மாற்றமடைவதில்லை. வாழ்க்கை நிலையே மாற்றமடைகிறது. ஆகவே, விஞ்ஞானத்திலும் இதே கோட்பாடு தான்.



**கேள்வி:** ஏக காலத்தில் பல்வேறு இடங்களில் பிரசன் னமாக இருக்கக் கூடிய சக்தி பாபாவுக்கு உண்டு எனக் கூறப் படுகிறது. சென்ற நூற்றாண்டில் இங்கு வாழ்ந்த யாழ்ப்பா ணத்து யோகர் சுவாமிகளும் இந்த சக்தியை கொண்டிருந்தார் என நம்பப்படுகிறது. ஒரு விஞ்ஞானி என்ற வகையில் இது விஞ்ஞான ரீதியில் ஏற்றுக் கொள்ளக்கூடியதா என்பது பற்றி தங்கள் கருத்து...?

**பதில்:** சாயிபாபா தாம் மட்டும் அவ்வாறு சக்தியுள்ளவ ரென்று கூறவில்லை. அந்த ஆற்றல் நம் எல்லோரிடமும் உள் ளது. எமது தெய்வீகத்தை நாம் உணரலாம். உண்மையில் ஜன்ஸ்ரீன் போன்ற விஞ்ஞானியைப் பற்றிப் பார்த்தோமானால் அவர் உள்ளுணர்வு (Intuition) மூலம் புதியவை பலவற்றை ஒரு மின்னல் போன்ற (Flash) உணர்வில் சடுதியாகத் தெரி ந்து கண்டுபிடித்தமையைக் கூறலாம்.

என்னைப் பொறுத்த வரையில் அவ்வாறான அனுபவமே உள்ளது. நான் அதிகளவு தியானத்தில் ஈடுபட்டு வந்துள் ளேன். செவ்வாய்க் கிரகத்தில் மனிதகுல வரலாற்றில் தரையி றங்கிய "வைக்கிங்" விண்கலத்தை (Viking Space Craft) உருவாக்கியதில் நான் பெரிதாக உதவியதாக எண்ண வில்லை. **கலிபோர்ணிய மலை உச்சியில் இருந்த போது அது ஆழ்மனத்தியானத்தில்** (Meditation) **பெற்ற உள்ளுணர்வு மூலமே செயற்படுத்தப்பட்டது. அதன் மூலமே இந்த விண்கலத் தின் தானியங்கி தரையிறங்கும் பொறியை என்னால் உருவாக்க முடிந்தது.**

**கேள்வி:** சாயிபாபாவின் சக்திகளை மனித சக்திக்கும் விஞ் ஞான ஆராய்ச்சிக்கும் அப்பாற்பட்டவை எனக் கருதலாமா?

**பதில்:** ஆம். எம் எல்லோருக்கும் அவ்வாறு செயற்படும் ஆற்றல் உள்ளது. நாம் எல்லோரும் தெய்வீகத்தில் இணைந்து கொள்ளலாம். விஞ்ஞான ரீதியில் பார்த்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்களும் அந்த முடிவில்லாத Super Concisence mind என்று கூறப்படுகின்ற அதியுயர் உணர்வில் இணைந்து கொள்ள லாம். அப்படிச் செய்தால் எங்கும் நிறைந்துள்ள அளவிட முடியாத (Infinite Knowledge) அறிவுக்குள் இணைந்து கொள்ளலாம்.

### சுயமாற்றம் தேவை

**கேள்வி:** இலங்கையைப் பொறுத்தவரையில் ஜே.ஆர். ஜெயவர்த்தனா, ரணில் விக்கிரமசிங்க, அனுரா பண்டாரநா யக்க போன்ற பல அரசியல்வாதிகள் சாயிபாபா பக்தர்களாக உள்ளனர். எனினும், தமது அரசியல் வாழ்வில் மனிதப் பெறுமதியை (Human Value) மதித்து நடப்பதில்லை. ஓர் அரசியல்வாதி என்ற வகையில் இத்தகையோரின் மனங்க ளில் எப்படி இவற்றை மதித்து நடக்கும் மனப்பான்மையை வளர்க்கலாம் எனக் கருதுகிறீர்கள்?

**பதில்:** இந்த நாட்டின் அரசியல் பற்றி எனக்கு அதிகம் பரிச்சயமில்லை. பிரதான விடயம் என்னவெனில், சுவாமியின் போதனைகளைத் தெரிந்து கொள்வது மட்டும் போதாது. அவற்றின் படி நடக்க வேண்டும். அப்படிச் செய்வதற்கு ஒரு சுயமாற்றம் (Self Transformation) தேவை. சுயமாற்றம் இருக் குமேயானால் ஒருவர் வர்த்தகராகவோ அரசியல்வாதியா கவோ, ஆசிரியராகவோ அல்லது வேறெந்த துறை சாந்தவரா கவோ இருப்பினும் சகலமும் நேர்த்தியானதாக இருக்கும். அப்பொழுது ஒரு நேர்த்தியான சமாதானம் நிறைந்த சமூகம் உருவாகும்.

**கேள்வி:** தங்களது யாழ்ப்பாண விஜயம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:** நான் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளேன். இங்குள்ள வர்கள் எமக்கு சிறப்பான வரவேற்பையும் உபசரிப்பையும் வழங்கியுள்ளனர். இங்கு வந்து சேர்ந்த பின்னர் நான் என்னை யாழ்ப்பாணத்தின் ஓர் அங்கமாகவே கருதுகிறேன்.




# ஆன்ம விசாரத் துணுக்கு

## நான் யார்???

நான் யார் என்பதை அறிவதே அடிப்படைத் தத்துவமாக அமைந்துள்ளதாகையால், அதுவல்ல, அதுவல்ல என்ற நீதி நியா யத்தை பிரயோகித்து இத்துணுக்கு அறிமுகமாகின்றது. இது யாவர்க்கும் பொருந்தும்.

### படம் 1



**உபாத்தியாயர்:-** நான், நான் என்று எதற்கும் சொல்லிக் கொள் ளும் நீ யார் என்று எனக்கு காட்ட முடியுமா?

**மாணவன்:-** ஏன் முடியாது? இங்கே பாருங்களேன் தலையை அதுவும் நான் என்றதன் ஓர் அங்கமல்லவா.

**உபாத்தியாயர்:-** தலை, கண், காது, வாய், மூக்கு போன்றவை ஞானேந்திரியம் என்றழைக்கும் உறுப்புக்கள் அல்லவா? அது எப்படி நானாக இருக்க முடியும். இல்லவே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படம் 2



**மாணவன்:-** அப்போ இந்தக் கையா?

**உபாத்தியாயர்:-** அதுவும் இல்லை, நான் யார் என்பதைக் காட்டு?

**மாணவன்:-** என்ன சேர், திகைக்க வைக்கிறீர்களே?

## படம் 3



**உபாத்தியாயர்:-** நன்கு சிந்தித்து பதிலைச் சொல்லு. நான் யார்?


**மாணவன்:-** அம்மாவுடனான தொடர்பு இறுதிவரை இருந்த தொப்புழ் பகுதி உள்ள வயிறு இல்லையா?

**உபாத்தியாயர்:-** அதுவா இடும்பை கூர் வயிறல்லவா?

**மாணவன்:-** என்ன சொல்லுகிறீர்கள், அப்ப எது?



## படம் 4



**உபாத்தியாயர்:-** தம்பி ஏதோ உன் மனதில் சிந்தனை கிளம்பி விட்டது என்று தெரிகிறது. நீ யார்? நான் யார்? கோபப்படாதே சொல்லு?


**மாணவன்:-** ஒன்றையும் இல்லை இல்லை என்றால் ஆத்திரம் வராமல் என்ன செய்யும். அப்போ இங்கே பாருங்கோ. இதுவும் இல்லையா?

**உபாத்தியார்:-** இதுவா உலகலாம் அளக்கும் உனது கால் அல்லவா?

"எனக்கும் உனக்கும் பேதம் ஏனோ
எடுத்துச் சொன்னால் போதம் போமோ"

\- நற்சிந்தனை

## படம் 5






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாணவன்:-** இந்த பாதமா?

**உபாத்தியார்:-** என்ன தம்பி, திரும்பத் திரும்ப, உனது காலுக்கு ஆதாரமான பாதம் இல்லாமல் நடக்க முடியுமா? அது கால் பாதம்.

**மாணவன்:-** என் உடல் உறுப்புக்கள் எல்லாவற்றையும் சுட்டிக் காட்டினேன். ஒன்றும் நான் யார் என்றதற்கு பதிலாகவில்லை என்று விட்டீர்கள். சரி ......!

**படம் 6**



**உபாத்தியார்:-** என்ன தம்பி கையை நெஞ்சிலே வைத்திருக்கிறாய். அங்கு இடது புறத்தில் உடம்புடனான இருதயம் உண்டு வலது புறத்தில் சூக்குமமாக இயங்கும் இருதயத்தை அறிவீரா?

**மாணவன்:-** என்ன ஐயா? ஒரு இதயம் தானே, அதுவும் இடப் பக்கத்தில் அடிக்கின்றதே.

**உபாத்தியாயர்:-** அது சரி, நீர் ஒருவருடன் கதைக்கும் போது நான் யார் என்று தெரியுமா என்று நெஞ்சிலே கையை வைத்து காட்டுகின்றீரே? அப்படி காட்டுமிடம் வலப்பக்கம் அல்லவா?

**மாணவன்:-** அப்ப எங்களுக்கு இரண்டு இருதயம் உண்டா?

**உபாத்தியாயர்:-** ஆம்.




1. உடம்புடனான இருதயம் (Physical heart)
2. தெய்வீக இருதயம் (Spiritual heart).

தாவித் தாவிச் செல்லும் மனதை தம்பி கேளடா
கூவிக் கூவி அழைத்து குடி இருத்தடா.

- நற்சிந்தனை

**படம் 7**



**மாணவன் :-** சரி எனக்கு நேரம் போகுது, உங்களுக்கு பதில் சொல்லிக் கொண்டிருக்க நேரம் இல்லை. கடைசியாக இதோ பாருங்களேன் இந்த உடம்பு முழுவதும் நான் இல்லையா?

**உபாத்தியாயர்:-** இல்லவே இல்லை தம்பி.

தவவழிச் செல்லும் குரு மொழி கொள்வோம்
தன்னைத் தான் அறிவோம்.

- நற்சிந்தனை

**உபாத்தியார்:-** ஐம்பூதங்களினால் ஆனது.(Five Elements). இவ் உடம்பு அந்த ஐம்பூதங்களும் உருமாறுமே அன்றி அழிவன அல்ல என்று நாசா விஞ்ஞானியான கலாநிதி ஆர்ற் ஓங் ஜும் சாய் கூறியுள்ளாரே. இதனையே எங்கள் சைவ தத்துவங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று தொட்டு கூறி வருகின்றன. புல்லாகி, பூடாகி, புழுவாய் மரமாகி என்ற சிவபுராண வரி களைப் பார்க்கவும்.


**மாணவன்:-** அப்ப நான் என்ற ஒரு சாமான் இல்லையா? இது என்ன விந்தை!

**குரு: -** கவலைப்படாதே,

நூதன விவேகியர் நுழைந்தும் காண்கிலர்.
சாதனை உள்ள சத்துக்கள் காண்பரே.

- நற்சிந்தனை.

## படம் 8




**சீடன்:-** என்ன சுவாமி இங்கே பாருங்கோ, மேலே கூறிய உறுப்புக்கள் எல்லாம் அப்படியே இருக்கின்றன. முருகப்பா இறந்து விட்டார் என்றும் பெட்டிக்குள் பிணமாக இருக்கின்றார் என்றும் அவருக்கு கிட்ட வர யோசிக்கிறார்களே. என்ன விந்தை இது.

**குரு:-** இங்கே தான் விடயம் வெளிக்கப் போகின்றது. இதுவரை நான் நான் என்று சொல்லி ஆடி ஓடித்



திரிந்த சாமான் என்ன, எங்கே போய்விட்டது.

**சீடன்:-** இடப்பக்கமே இறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந்தாரே

- திருமந்திரம்

**குரு:-** பத்தும் புகுந்து பிறந்து வளர்ந்து பட்டாடை சுற்றி
முத்தும் பவளமும் பூண்டு ஓடி ஆடி முடிந்த பின்பு
செத்துக் கிடக்கும் பிணத்தருகே **இனிச்சாம் பிணங்கள்**
கத்தும் கணக்கென்ன காண் கயிலாய புரிக் காளத்தியே.

- பட்டினத்தார்

**குரு:-** ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டு
பேரினை நீக்கி பிணமென்று பேரிட்டு
சூரையன் காட்டினுள் கொண்டுபோய்ச் சுட்டுட்டு
நீரினுள் மூழ்கி நினைப்பொழிந்தார்களே.

- திருமந்திரம்

**சீடன் :-** சுடலையாலே வந்து வேப்பிலை சப்பி உலைக்கை கடந்து உள்ளே வந்து குளித்துத் தோய்ந்ததும் ஞானம் போய்விட்டது. இதைத் தானோ, சுடலை ஞானம் என்பர்?

**குரு:-** ஆமாம், சரியாகச் சொன்னீர்.

அக்கக்காவடி அம்மம்மாவடி ஆன்மா நித்தியமாமடி என்ற நிலையில் மனதை நிறுத்திக்கொண்டால் கவலை ஏன் வரப் போகின்றது.

மூடிய குடத்துக்குள் காற்று இருக்கிறது. குடத்தை உடைத்து விட்டால் என்ன ஆகிறது.

**சீடன்:-** அந்தக்காற்று அண்ட வெளியுடன் சேர்ந்து விடுகிறது.

**குரு:-** புரிகின்றதா மகனே!, உடம்பொரு குடமடா, சிந்தித்துக் கொள்.

**குரு:-** அதோ மேலே பார். மேலே அசைந்து செல்லும் ஒளி தெரிகின்றதா?

**சீடன்:-** ஒன்றும் தெரியவில்லையே, எங்கே, என்ன, என்ன சாமான்? (விபரத்தை படம் 10 இல் பார்க்கவும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படம் 9**



**குரு:-** படம் 6 இல் உள்ள விளக்கத்தைப் பார்த்தாயா? இந்தப் படத்தில் இடப்பக்கத்தில் ஒரு இருதயம் தெரிகின்றது. அதனை விட சாதனையாளரின் வலது கை வைத்திருக்கும் இடம் தான் அந்த சூக்கும தெய்வீக இருதயம் இருக்கும் இடம்.

**சீடன்:** ஆம், ஆரம்ப நிலையில் யோகாசனங்கள் ஒரு சாதகனுக்கு துணையாக இருக்கின்றன என்கிறார்களே. அது சரியா.

**குரு:-** ஆம், ஒரு ஆசனத்தில் அமர்ந்து அதாவது பூமியின் ஆகர்ண சக்தி சாதகனது உடம்பில் பாய்ச்ச விடாது தடுக்கும் ஒரு ஆசனத்தில் (மான் தோல், புலித்தோல் போன்றவற்றில்) அமர்ந்து உனது சாதனையை நாளாந்தம் விதிமுறை தவறாது செய்து வா. பேதித்து நம்மை வளர்த்தெடுப்பான் அவ்விறை.

**சீடன்:-** சாதகன் தன்னை தயார்ப்படுத்தும் வழிவகைகள் ஏதும் உண்டா?

**குரு:-** ஆம், அப்படி பல படிமுறைகள் ஆன்றோரால் வகுக்கப் பட்டுள்ளன. அவை நாலடியார், கொன்றை வேந்தன் மற்றும் புராண இதிகாசங்கள் ஆகியவற்றுடன் மிகவும் போற்றத்தக்க ஒன்றாக திருக்குறள் இருக்கின்றதே.



அது ஒன்றே போதும். அடுத்து நற்சிந்தனையில் யோக நெறி என்ற பாடலைப் படித்துப் பார். உம்மை தக்க நெறியில் இட்டுச்செல்லும்.

ஒன்றாய் இரண்டாய் ஒரு மூன்றாய்
நான்கைந்தாய் நின்ற பராபரத்தை - தங்கமே
நீயென்று உணர்ந்திடடி

- நற்சிந்தனை

**படம் 10**



**சீடன்:-** சாதனையாளர் முகத்தில் ஒரு ஒளிப்பிரகாசம் தெரிகின்றதே. அது என்ன?

**குரு:** நிட்டை கைகூடும் நிலை அது.

1. உருவேறவே செபித்து ஓங்காரக் கம்பத்திலே
   திருவேறவே நின்றிடடி - தங்கமே
   சீவன் சிவனாச்சுதடி

   - நற்சிற்தனை
2. முதலில் நெஞ்சிலே தூய ஒளியை நிலை நிறுத்தி சாதனை செய். அது படிப்படியாக வழிநடத்தும். மானைக் காட்டி மானைப்பிடிக்கும் உபாயமது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. முகத்தில் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள்
அகத்தில் கண்கொண்டு பார்ப்பதே ஆனந்தம்.
- திருமந்திரம்

4. புறப்பட்டு புக்கு திரிகின்ற வாயுவை
நெறிப்பட உள்ளே நிர்மலமாக்கில்
உறுப்புச் சிவக்கும் உரோமம் கறுக்கும்
புறப்பட்டு போகான் புரிசடையானே.

**சீடன்:-** இந்நிலையில் முகத்தில் தேஜஸ் பற்றிய விளக்கம் தெரிகின்றது.

தீர்த்தங்கள் ஆடினேன். யாத்திரை செய்தேன்
சித்தம் தெளியவில்லை. என்ன நான் செய்வேன்.
- நற்சிந்தனை


வேடிக்கை செய்கிறானே பரமபிதா
வேடிக்கை செய்கிறானே
வேடிக்கை செய்கிறான் கூட இருக்கிறான்
வேறாய் இருப்பது போல்
பாசாங்கு பண்ணுகிறான்.
- நற்சிந்தனை

**குரு:-** அதுவே நான் என்னும் அகலாத் தியானத்தில் ஆழமாக ஈடுபடு. - நற்சிந்தனை

We all are born
with a Devine Fire
நாங்கள் எல்லோரும் எங்களுக்குள்ளே ஒரு
தெய்வீக ஒளியுடன் பிறந்துள்ளோம்
- அப்துல் கலாம் அவர்கள்.



**படம் 11**




| | | |
|---|---|---|
| **0 - மூலாதாரம் -** | **எருவிடு வாசற்கிரு விரல் மேலே** |
| | **கருவிடு வாசற்கிரு விரல்** |
| | **உருவிடும் சோதி** |
| **1 - சுவாதிஷ்டானம் -** | **தொப்புளுக்கு கீழ்** |
| **2 - மணிபூரகம் -** | **தொப்புளுக்கு மேல்** |
| **3 - அனாகதம் -** | **இருதயம்** |
| **4 - விசுத்தி -** | **கண்டம்** |
| **5 - ஆஞ்ஞை -** | **புருவமத்தி** |
| **6 - சகஸ்ராரம் -** | **தலை உச்சி** |

**குரு:-** விதைப்புக்கு முன் வயலை தயார் படுத்துவது போன்று பண்படுத்தப்பட்ட உள்ளம் பத்மாசனத்தில் அமர்ந்து விட்டது. அங்கே பார். அகலாத் தியானத்தில் ஆழமாக மனதைப் பறிகொடுத்து விட்டான்.

கட்டுப்படாத மனதைக் கட்டி
காலாலே (காற்று) கனல் வீசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிட்டையிலே நான் இருந்தேன்
நீ நான் அங்கில்லையடி

- நற்சிந்தனை

(மனதைக் கட்டுப்படுத்தி உட்சுவாச, நிற்சுவாசத்தினால் குண்டலினியை எழுப்பி நிட்டையிலே இருந்து விட்டால் நீ நான் அங்கு இல்லை என்கின்றார்)

மூலாதாரத்து மூண்டெழு கனலை
காலால் எழுப்பும் கருத்தறிவித்து

- ஔவையார் விநாயகர் அகவலில்

மேற்படி கருத்தை விளக்கமாக கூறுகின்றார். குண்டலினி மேலெழும் யோக நெறி ஆரம்பமாகின்றது. அது இரு வாசல்களை அடைத்து விட்டதும் இராச வீதி வழியாக (சுழுமுனை வழியாக) மேலெழுகின்றது. ஆங்காங்கே ஆறு ஆதாரங்களிலும் இடைத் தங்கலிட்டு அதற்கான குணங்குறிகளை காட்டிநிற்கும். அதனையே யோக சுவாமிகள் "தச்சன் கட்டா வீட்டிலே)
தாவுபரி கட்டெண்றார்."

**சீடன்:** சுவாமி, தாவுபரி என்றால் என்ன?

**குரு:** நற்சிந்தனையில் யோகநெறி என்ற பாடலிலே இவ்விடயம் விளக்கமாக கூறப்படுகின்றது. " வாசிக் குதிரையேறி தங்கமே
மாறி மாறிச் சிமிட்டாக் கொடு"

என்கின்றார். அதாவது சுவாசமூச்சு என்ற குதிரையில் ஏறி இடைபின்கலை என்ற நாசிச் துவாரமூடாக மாறி மாறி உட்சுவாசம் நிட்சுவாசம் செய்து விதிமுறையில் அடக்கி ஆளுமாறு கூறுகின் றார். அதனை அழகாக சிமிட்டாக் கொடு என்ற வார்த்தைகளால் விபரிக்கின்றார். இவ்வாறு சாதனை பண்ணிவர பதினோராம் படத் தில் காட்டப்பட்டவாறு மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை, சகஸ்ராரம் ஆகிய ஆதாரங்களை யும் தாண்டிச் செல்வதையே தாவுபரி என்று சிறப்பாக கூறியுள்ளார்.

ஆறுபடி தாண்டிவிட்டால் அப்பாலே வெள்ளிப்படி
அதுவும் தாண்டி விட்டால் தங்கமே - தங்கமே
யாருனக்கு நிகராவார்.



என்று காட்சி கொடுக்கும் நிலையை விபரிக்கின் றார். ஆறுபடி தாண்டினால் அப்பாலே பாராகாய வெளியையே வெள்ளிப்படி என்று கூறப்படுகின்றது. அது ஒளிமயமான நிலை. இதனை

ஓம் என்று எழுப்பிய உத்தம நந்தியை
நாம் என்று எழுப்ப நடு எழு தீபத்தை
ஆம் என்று எழுப்பி அவ்வாறு அறிவார்கள்
மாமன்று கண்டு மகிழ்ந்திருந்தாரே

- திருமந்திரம்

மன்று - சகஸ்ராரம்

இவ்வாறு திருமூலநாயனார் மன்றில் வெளிக்காட்டும் இக் கருத்தை விளக்கியருளுகின்றார்.

**சீடன்:** அந்தோ! எங்கும் சிவமயம் எல்லாம் சிவமயம் எங்கும் பேரொளி. "எல்லாம் என் கைவசம் ஆச்சே சிவ சிவ எடுத்த பிறப்பின் பயன் சித்தி ஆச்சே"

உருகி உருகி உணர்ந்தேன் சிவ சிவ
ஒன்றையும் காணாமல் ஏங்கினான் நின்றேன்.
மர்மம் இது பெரும் மர்மம்
மகத்துக்களாலும் சொல்லொணா மர்மம்.
காண்பானும் காட்சியும் காட்சிப் பொருளும்
கடந்த நிலை

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

ஓம் பூர்ணமதஹ் பூர்ணமிதம்
பூர்ணாத் பூர்ணமுதச்சியதே
பூர்ணஸ்ய பூர்ண மாதாய
பூர்ண மேவா வசிஷ்யதே
ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி

(அது பூர்ணம். இதுவும் பூர்ணம். பூர்ணத்தில்
இருந்து பூர்ணம் உதயமாகிறது. பூர்ணத்தினின்று
பூர்ணத்தையெடுத்தும் பூர்ணமே மிஞ்சி நிற்கின்றது.
உ+ம் நெருப்பு)

## புஷ்பாஞ்சலி

யோவாம் புஷ்பம் வேத புஷ்ப்பவான்
ப்ரஜாவான் பசுமான் பவதி ....
சந்த்ரமாவா அவாம் புஷ்பம்
புஷ்ப்பவான் ப்ரஜாவான் பசுமான் பவதி ....
யஹ் ஏவம் வேத
யோவாம் ஆயதனம் வேத
ஆயதனவான் பவதி .....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சற்குரு தரிசனம்

இராகம் - சாமா                    தாளம் - ஆதி

**பல்லவி**

சற்குரு தரிசனம் சகலபாக்கிய சுகம்
தாளிணை பணிநீ தினம்

**அநுபல்லவி**

தாந்தன்னை யறியுமே
சாந்தமுஞ் செறியுமே (சற்குரு)

**சரணங்கள்**

பேரன்பு பெருகிடும் பேதமை கருகிடும்
பிரியாப் பிரியமெல்லாம் பேசாம லகன்றிடும் (சற்குரு)

ஆகம விதிமுறை அகத்தினில் பொருந்திடும்
ஆசாபாச மகலும் நேசானு பூதிவரும் (சற்குரு)

தேவாதி தேவர்களுஞ் செய்வார் பணிவந்து
சீவன் சிவனென்னுந் தெளிவுமுண் டாகுமே (சற்குரு)


## ஆனந்தக் களிப்பு

சங்கர சங்கர சம்பு - சிவ
சங்கர சங்கர சங்கர சம்பு

ஒருபொல் லாப்பு மில்லையெனவே - முன்னாள்
ஓதினான் உண்மை முழுது மெனவே (சங்கர)
பருவத்தில் மழைபெய்தாற் போல - ஐயன்
பந்தத்தை நீக்கி வளர்த்தானன் பாலே (சங்கர)
அருவமு முருவமு மானான் - என்னை
ஆட்கொள்ள வந்தான் நல்லூரிற் றானாய் (சங்கர)
கருவிக ரணங்க ளெல்லாம் - தத்தம்
கருமத்தை விட்டுக் காவலுக்குள்ளாய் (சங்கர)
வருவதும் போவது மின்றித் - தூய
மௌன நிலையில் நிலைத்தது தானே (சங்கர)
ஆரு மறியா ரெனவே - அப்பன்
அப்படி யுள்ளதென் றானறி வாயே (சங்கர)

**- நற்சிந்தனை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இன்பமே சூழ்க
எல்லோரும் வாழ்க

# நன்றி



# வணக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யோகசுவாமிகள் யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் ஆன்மீக வாழ்வு நடாத்திய (புனரமைக்கப்பட்ட) குடிலும்,
அவர் பாவனையிலிருந்த EN 1371 இலக்கமுடைய மொறிஸ்மைனர் காரும்.

Smart Prints - 717, K.K.S. Road, Jaffna
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org